# மருவக் காதல் கொண்டேன்

உமா பாலகுமார்



# மருவக் காதல் கொண்டேன்!

## 1

பொன் அந்தி வாடைக்காற்று, கிளைகளை மென் காதலுடன் ஸ்பரிசிக்க, அந்தக் குளிரில் சிலிர்த்து மலர்களை பூமியில் சிதற விட்டன... விருட்சங்கள்!

ஆதவன் மறைந்ததால், வான நதியில் மும்முரமாய் நீச்சல் பழகிக் கொண்டிருந்த முழு நிலவு... இருள் முழுவதும் ஆக்ரமிக்காததால், வெளிறித் தெரிந்தது.

ஒரு கோட்டையைப் போன்ற அமைப்புடன் பரந்து விரிந்து தெரிந்த அந்த மாளிகை வீட்டின் முன்னால், அந்த வெளிநாட்டுக் கார் கம்பீரமாக வந்து நின்றது.

உடனே, ஒரு காவலாளி வேகமாக ஓடி வந்து பணிவுடன் சல்யூட் அடித்து கேட்டைத் திறந்தான்.

அந்தக் கார் ஒரு வெண்மேகத்தைப் போல் மிதந்து உள்ளே சென்று போர்டிகோவில் தன் பயணத்தை நிறுத்தியது.

அதிலிருந்து, ஆறடிக்கும் மேலான உயரத்தில்... கம்பீரமாக... என்றுமில்லாத துள்ளல் நடையுடன் உள்ளே சென்ற அருள் வேந்தனிடமிருந்து, ப்ரீப் கேஸை பணிவுடன் பெற்றுக் கொண்டான் ஒரு பணியாள்!

முகத்தில் புதிதான ஒரு விகசிப்புடன் தாயின் அறைக்குள் நுழைந்தவனை வேலையாட்களின் விழிகள் வியப்புடன் தொடர்ந்தன.

என்றுமே, முகத்தில் ஒரு விதக் கடுமையும் இறுக்கமுமாக வீட்டிற்கு வருபவன், இன்று மகிழ்ச்சித் துள்ளலுடன் ஏஜ் வாலிபனைப் போல் தெரிந்தது... அனைவருக்குமே விசித்திரமாய்!

அவனோ... கனவுலகில் மிதந்து செல்பவனைப் போல் தாயின் அறைக்குள் நுழைந்தான்.

என்றுமில்லாத மகிழ்ச்சியும், துள்ளல் நடையுமாய் அவனைக் கண்டதும் மனம் முழுவதும் பரவசமாகிவிட கையை நீட்டி அவனை வரவேற்க முயன்றார் சொர்ணம்!

அப்போது தான் அவருக்கு தன் நிலையே நினைவுக்கு வருவதாய்!

ஆறுமாதங்களுக்கு முன்பு தாக்கிய பராலிஸிஸ் ஸ்ட்ரோக்கால், தனது ஒரு கையும் காலும் செயலிழந்து விட்டதை, இன்று ஒரு கணம் மறந்து விட்டவர், உடனே நிமிர்ந்தார்.

"என்னப்பா விஷயம்... இத்தனை சந்தோஷம் முகத்திலே...?"

ஆசை மகனை [illegible] கேட்டார்.

இத்தனை உற்சாகமாய்.. துடிப்பாய் அவனை அவர் கண்டது, அவனது கல்லூரிக்காலங்களில் தான்!

மருத்துவப் படிப்பு முடிந்து, 'எம் சி ஹெச்'சுடன் இதய சம்பந்தமான மேற்படிப்பும் முடித்து, இப்போது சென்னையில் தலை சிறந்த கார்டியாக் சர்ஜனாய் செயல்பட்டு வருகிறான் அருள் வேந்தன்!

சமீப காலங்களில், ஆபரேஷன்... மருத்துவமனை... நோயாளிகள் இதைத் தவிர வேறு சிந்தனையை அவனிடம் அவர் கண்டதேயில்லை!

* * *

அவனுடைய தந்தை வில்வநாதன் ஆரம்பித்து நடத்தி வந்த அந்த மருத்துவமனையையும், மருத்துவக் கல்லூரியையும் திறம்பட இயக்கி வருபவனிடம் இன்று ஏதோ ஒரு புதிய மாற்றம் தெரிவது போல்!

"அருள்... என்னப்பா யோசனை...? நான் கேட்டதுக்கு பதிலே காணோம்?"

உதட்டோரம் சிறு குறுகுறுப்புடன், ஏதோ ஒரு வித யோசனையுடன் தன்னை மறந்து அமர்ந்திருந்தவனை உலுக்கியது... அந்தக் கேள்வி!

"என்னம்மா கேட்டீங்க...?" கனவுலகிலிருந்து கலைந்து நிமிர்ந்தான் அவன்.

"என் மகன் இவ்வளவு துறுதுறுப்பா.. உற்சாகமா இருந்து பாத்து வருஷக் கணக்காச்சே... அதான் கேட்டேன்.. என்ன காரணம்னு எனக்கு சொல்லக் கூடாதா அருள்?"

வாஞ்சையும் ஏக்கமுமாய் வினவிய தாயைப் பரிவுடன் ஏறிட்டவன், "ம்.. அம்மா... நான் உங்களுக்கு ஒரு சந்தோஷமான நியூஸ் சொல்லப் போறேன்...!" என்றான் குறும்புடன்!

"இரு... இரு! நான் கண்டுபிடிக்கிறேன்!"

சிறு குழந்தையாய் ஆர்ப்பரித்தபடி அவனுடைய முகத்தையே உற்று நோக்கியவரின் விழிகளிரண்டும், மெல்லக் கனிந்தன.

"நீ யாரையோ விரும்பறே? இத்தனை நாளா கல்யாணம்னாலே விலகி ஓடற நீ, இப்ப கல்யாணம் செய்ய முடிவெடுத்திருக்கே... சரியா?"

கூர்மையுடன் அவர் கேட்டபோது அவன் விழிகள் வியப்பிலும், ஆச்சர்யத்திலும் விரிந்தன.

"அம்மா! எப்படி கண்டு பிடிச்சீங்க? கரெக்டா சொல்றீங்க?" அவன் குரலில் சிறு அதிர்ச்சி தெரிவதாய்!

"ம்.. என் மகனைப் பற்றி எனக்குத் தெரியாதா? முதன் முதலா உன் முகத்தில் ஒரு இளக்கம்... கண்கள்லே வெடிச்சி சிதறுற குறும்பு... புதுசா ஒரு மென்மை.. அதோட இன்னிக்கு உன் கையைப் பிடிச்சவுடனே அதுல தெரிஞ்ச மாறுதல்!

"எப்பவுமே இரும்பா இருக்கற அந்த விரல்கள் இன்னிக்கு ரொம்ப மிருதுவா மென்மையா மாறி இருந்தது.. என் யூகம் சரிதானே?" வேகத்துடன் கேட்டார்.

அவனுக்குள் பூஞ்சாரலாய் சில நினைவுகள்!

"ம்...." மெல்லத் தலையசைத்தான் அருள்!



உடனே அவரிடமும் பெரும் உற்சாகம் தெரிய "நம்ம வீட்டுக்கு வரப்போற அந்த மகாலெஷ்மி யாருப்பா?" சொர்ணம் ஆர்வத்துடன் கேட்டார்.

"ம்.. பெயர்தான் தெரியலைம்மா... ஆனா, கட்டாயம் உங்க மருமக அவதான்! அதிலே எந்த மாற்றமுமில்லை... எனக்கு ஒரு மனைவி வரதா இருந்தா, அது அவ மட்டும் தான்!" அருள் உறுதியாக முடித்தான்.

"என்னப்பா சொல்றே? பெயர் தான் தெரியாது...! எந்த ஊரு... வீடு எங்கே... பெத்தவங்க யாரு அப்படின்னாவது தெரியுமா?"

தன் மருமகளைப் பற்றி முழுதாக அறிந்து கொள்ளத் துடிக்கும் ஆவல், அவரிடம் அதிகமாய்!

"இல்லைம்மா... தெரியாது! ரெண்டு மூணு தடவை அவளைப் பார்த்திருக்கேன் அவ்வளவு தான்! ஆனா என் உள் மனசு சொல்லுது... இவதான் உனக்காகப் பிறந்தவன்னு!

ஒரு வித லயிப்புடன் முடித்தவனை வியப்புடன் ஏறிட்டார் அவர்.

"என்னம்மா? குழப்பமா இருக்கா? உங்களுக்கு இதிலே சம்மதம் தானே?" மெதுவாகக் கேட்டான்.

"எனக்கு இதை விட வேறென்ன சந்தோஷம் இந்த உலகத்தில் இருக்கப் போவுது அருள்? இப்பவாவது, உனக்கு கல்யாணம் செஞ்சுக்கணும்னு ஆசை வந்ததே அதுவே எனக்குப் போதும்ப்பா!" பனித்த விழிகளுடன் மொழிந்தார்!

சிறு முறுவலுடன் அவருடைய கையைப் பிடித்து வாஞ்சையுடன் அழுத்தினான் அவன்!

''அவளை எப்படிக் கண்டுபிடிப்பே அருள்? உன் மனசைக் கவர்ந்தவளை நான் எப்ப பாக்கப் போறேன்..? இந்த வீட்டுக்கு விளக்கேத்த அவளை எப்போ அழைச்சிட்டு வரப்போறே...?'' படபடவெனப் பொரிந்தார் சொர்ணம்.''

அவன் உதடுகளிலோ.. சிறு சுழிப்பும் ஒரு வித கர்வப் புன்னகையும்!

''அம்மா! கொஞ்சம் பொறுங்க.. ரொம்ப எக்ஸைட் ஆகாதீங்க... நாளைக்கு மலேஷியா போறேன் இல்லையா? அங்கே நம்ம டீ எஸ்டேட் மீட்டிங்கை முடிச்சிட்டு வந்தவுடனே அவளைத் தேடி புடிச்சி அழைச்சிட்டு வந்து உங்ககிட்டே ஒப்படைக்கிறதுதான் என் வேலையே! ஓகேயா?'' கண்கள் இடுங்க வினவினான்.

''ம்.. நீ போய்ட்டு திரும்பி வரதுக்கு எப்படியும் நாலஞ்சு நாளாவது ஆகும்... அது வரைக்கும் நான் காத்திட்டிருக்கணுமா?''

ஒரு பெருமூச்சுடன் திரும்பிக் கொண்டவரை இதமாய் அணைத்துக் கொண்டான் அவன்.

''என்னம்மா... இத்தனை நாள் வெயிட் பண்ணினீங்க... இன்னும் ஒரு வாரம் தானே?'' மௌனச் சிரிப்பில் குலுங்கி அதிர்ந்தது அவன் உருவம்!

''சரி... வீடு நிறைய பேரக் குழந்தைகளோட கடைசி காலத்தைக் கழிக்கணும்னு நான் கனவு கண்டுட்டு இருக்கறது உனக்கு எங்கே புரியப்போகுது.''

ஆதங்கத்துடன் மொழிந்து விட்டுப் படுக்கையில் சாய்ந்து கொண்டார் அவர்.

''ம்... வீடு நிறைய பேரக் குழந்தைகளா? நான் ஒரு டாக்டர்.. நானே கவர்ன்மெண்ட் ரூல்ஸை பாலோ



பண்ணலைன்னா எப்படி? ஒரு குடும்பம்... ஒரு வாரிசுதான் இப்பல்லாம்...?''

குறும்புடன் ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்தபடி எழுந்தான் அருள்.

''அதெல்லாம் முடியாது.. நீ ஒத்தைப் பிள்ளையாப் போனதால நான் பட்ட கஷ்டத்தை என் மருமக படக் கூடாது... அதனால மினிமம் மூணு குழந்தைகளாச்சும் வேணும்!''

முடிவாகக் கூறிவிட்டு உடனே அருகிலிருந்த இண்டர்காமை அழுத்தி, மேனேஜரை அழைத்தார் சொர்ணம்.

* * *

மறுகணமே அறைக்கதவை மெலிதாகத் தட்டி விட்டு அவர் உள்ளே வந்தார்.

''நல்லசிவம்... இந்த மாசத்துலருந்து நம்ம வீட்டுல எல்லாருக்கும் சம்பள உயர்வுன்னு சொல்லிடுங்க. ஒரு மாச சம்பளத்தை போனஸாவும் குடுத்திடுங்க'' உற்சாகத்துடன் ஆர்ப்பரித்தார்.

அதைக் கேட்டதும், சிறு முறுவலுடன் தோளைக் குலுக்கியபடி எழுந்து சென்ற அருளை மேனேஜரின் விழிகள் யோசனையுடன் தொடர்ந்தன.

ஆனால், காரணம் புரியாமல் அவர் தலையசைக்க, அப்போதுதான் அருள் திருமணத்திற்கு சம்மதித்து விட்டதாகத் தெரிவித்தார் சொர்ணம்.

முகமெல்லாம் பிரகாசமாகி மனம் துள்ளிக் குதிக்க, நிமிர்ந்தார் நல்லசிவம்!

JUN 12 2010

"ரொம்ப சந்தோஷம்மா!" என்றபடி வெளியேறிவர், அவனுடைய தந்தை வில்வநாதன் காலத்திலிருந்தே அங்கு வேலை செய்பவர்...

அந்தக் குடும்பத்திடம் ஆரம்பித்திலிருந்தே விசுவாசத்துடன் இருந்து அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றவர்!

தமிழ்நாட்டின் தலை சிறந்த ஒரு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியின் தாளாளர்... மலேஷியாவிலிருக்கும் தேயிலை எஸ்டேட்டிற்கு சொந்தக்காரர்... பல தொழில்களில் முதலீடுகள் செய்து வாழ்க்கையில் சிறந்து விளங்கிய வில்வநாதன் காலத்திலேயே அவருடைய வலது கையாக இருந்தவர் நல்லசிவம்!

அந்த வீட்டின் அவுட் ஹவுசில், பின்புறம்தான் குடியிருக்கிறார்... அவருடைய மகள் கிருஷ்ணவேணி தான், அருளை வளர்த்ததே!

இப்போது கிருஷ்ணவேணியும் ஒரு டாக்டரென்பதால் பக்கத்து தெருவில் வீடு எடுத்து அதிலேயே க்ளினிக்கும் நடத்தி வருகிறார்!

அதைத் தவிர வேறு ஒரு பெரிய மருத்துவமனையிலும் பணிபுரிகிறார்.

"அம்மா! நான் வேணியக்கா வீட்டுக்கு போயிட்டு வந்திடறேன்" உற்சாகத்துடன் கூறிவிட்டு அருள் காரை எடுத்தான்.

அவருடைய வீட்டிற்கு சென்ற போது, எப்போதும் போல் வாஞ்சையுடன் அவனை வரவேற்றார் வேணி!

அவனுடைய துள்ளலும் உற்சாகமும், அவரை யோசிக்க வைக்க, அவனே எல்லாவற்றையும் கூறிவிட்டான்.



தாங்க முடியாத மகிழ்ச்சியில் அவர் விழிகளில் சாரலாய் பெருகியது ஆனந்தக் கண்ணீர்!

"அருள்... கங்கிராட்ஸ்! எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? எங்கே.. உன் மனசுக்குப் பிடிச்ச ஒரு பொண்ணை நீ சந்திக்காமலே போயிடுவியோன்னு நான் பயந்துட்டே இருந்தேன்.

"எந்தக் கோவில் போனாலும் இதே வேண்டுதல் தான்! கடவுள் கண்ணைத் திறந்திட்டாரு!" உணர்ச்சித் ததும்பல்கள் அந்த குரலில்!


அவருடைய வற்புறுத்தலுக்கு இணங்கி சீக்கிரமே அவளைத் தேடிப் பிடித்து அழைத்து வருவதாகக் கூறி விடைபெற்றான் அருள்.

மிகப்பெரிய தொழில் குடும்பத்தின் தலைவராக இருந்தும், முப்பது வயதை நெருங்குகின்ற தருணத்திலும் திருமணத்தில் ஆர்வம் காட்டாமல் அருள் இருந்தது, அவரையும் மனதளவில் புண்படுத்திக் கொண்டிருந்த ஒரு விஷயம்தான்!

ஆனால், இன்றுதான் பெரும் நிம்மதியாய்!

சொர்ணமும், கணவர் இறந்த பிறகு, கடந்த சில வருடங்களாக எல்லாக் கோவில்களுக்கும் நன்கொடை அளிப்பது... அனாதை இல்லங்களுக்கு உதவி செய்வது என தன் மகன் திருமணத்தை வேண்டி பல நல்ல காரியங்கள் செய்து வருவது நினைவிற்கு வந்தது.

தன் தந்தை வில்வநாதன் பெயரில் ஒரு ட்ரஸ்ட் அமைத்து அந்தப் பெயரில் ஒரு அனாதை ஆசிரமமும் நடத்தி வந்தது... அந்தக் குடு...



## 2

வீட்டிற்கு வந்து, மாடிப்படிகளில் உற்சாகத்துடன் துள்ளியபடி ஏறுகின்ற முதலாளியை அனைவரும் பிரமிப்புடன் நோக்க, அருணோ கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான்.

தன் அறைக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்ததுமே அவனுடைய எண்ணக் கதவுகளும் வேகமாய்த் திறந்தன.

மலைக் காற்றாய் சிலிர்ப்புடன் பரவின... அவள் ஞாப கங்கள்!

அவளை எங்கு முதன் முதலாய்ப் பார்த்தோம்.. நினைவுகள் பூஞ்சிதறலாய் அவனை இனிதே நனைக்க ஆரம்பித்தன.

அன்று... ஒரு ஹார்ட் ட்ரான்ஸ்ப்ளாண்டேஷனை நடத்தும் முன்பு தன்னுடைய சீனியர் டாக்டர் ஒருவரிடம் ஆலோசனைக்காக அந்த மருத்துவமனைக்கு சென்றிருந் தான் அவன்!

லிப்டில் ஏறி பட்டனைத் தட்ட, லிப்டின் கதவுகள் மூடுகின்ற சமயத்தில் தான், பனிச்சாரலாய்... வெண் மலர்க் கூட்டமாய் உள்ளே நுழைந்தாள் அந்தப் பெண்!

ஏனோ பார்த்த முதல் கணமே, அவனுடைய இதயத் திலும் அவள் புகுந்து விட்டதைப் புலன்கள் அவனுக்கு மெல்ல அறிவித்தன.

வெண்ணிற சுடிதாரில் ஒரு அழகுப்புறாவாய்... சமாதான தேவதையாய்த் தோன்றியது அவளைப் பார்த்த போது!



பெண்கள்... அவன் வசீகரத்தால் ஈர்க்கப்பட்டு அவனை ஒரு கணம் அதிகமாகவே நோக்கும் போதெல் லாம், அலட்சியமாக தோளைக் குலுக்கிச் செல்பவன், ஏனோ முதன்முதலாக அந்தப் பெண்ணிடம் தன்னை இழந்து நின்றான்.

அவளோ இவன் புறம் திரும்பவேயில்லை!

தன் கையில் அழகிய பூங்கொத்தும், முகத்தில் புன் னகையுமாய், "மெடர்னிடி வார்டுக்கு எந்த ப்ளோர்க்கு போகணும்?" குழலாய் கசிந்த குரலில் லிப்ட் ஆபரேட் டரிடம் கேட்டாள்.

"இதுதாம்மா நீங்க போக வேண்டிய ப்ளோர்."

அவன் கூறியதுமே லிஃப்ட் திறக்க, மெல்லிய புன் னகையுடன் நன்றி கூறி விடை பெற்று, அவள் வெளியே கால் பதித்தாள்.

அவள் பின்னோடு சென்று போகுமிடத்தை அறிய வேண்டும் போல்!

ஆனால், கடமை அழைக்க அவன் இறுகிப்போய் நின்றபோது கதவுகள் மூடி லிஃப்ட் மேலே உயரத் துவங் கியது.

முதன் முறையாக பார்த்தவுடனே எப்படி இதயம் கவர்ந்தாள் அவள்...

மனதிற்குள் வானவில்லின் வர்ணங்களை அறிமுகப் படுத்தி விட்டு வெண் பனிச்சாரலாய் நீங்கிச் சென்ற வளை மறக்க இயலாமல் தவித்தது இதயம்!

இத்தனை வருடங்களில் அவன் எத்தனையோ ஆயிரம் பெண்களை சந்தித்திருக்கிறான். இவள் மீது மட்டும் பார்த்த முதல் கண[illegible]ப்பய ஒரு [illegible]ன்...?

JUN 12 2010

விடைதெரியாமல் குழம்பியவனுக்குள், பல வினாக்கள்!

யாரிந்த தேவதை... இத்தனை அழகாய்... மென்மையானவளாய்... எளிமையாய்!

ஒரு குழந்தையே இன்னொரு குழந்தையைப் பார்க்கச் செல்கிறதே என்று நினைக்கும் போதே அவன் போக வேண்டிய ஃப்ளோரில் லிஃப்ட் நின்றது.

அந்த எழில் முகம் மட்டும் மனதில் பதிந்து போக, யாரவள் என்ற கேள்வி மட்டும் விடை தெரியாமலே அவனுடன் பயணித்தது!

''இதுவே, தனது மருத்துவமனையாக இருந்தால், ஜாதகத்தையே தெரிந்து கொண்டிருக்கலாமே.''

ஏதோ ஒரு தோற்றுப் போன உணர்வு அவனிடம்!

பிறகு அவன் வந்த வேலை முடிந்து திரும்பியபோது அவளின் சுவடே அங்கு மாயமாய்!

எந்தப் பெண்ணும் தன்னை இந்த அளவு ஈர்த்ததில்லையே என்ற தவிப்பில் நாட்கள் இறகு கட்டிப் பறந்தன.

கனவுகளில் அந்த முகமும் குரலும் நீங்காது தடம் பதிக்க, உறக்கம் கூட சில நேரங்களில் தள்ளுபடி செய்யப்பட்டது.

அவளுடைய புகைப்படம் கூடத் தன்னிடம் இல்லையே.. இருந்தாலாவது.. ஏதாவது டிடெக்டிவ் ஏஜென்சியில் அளித்து தேடச் சொல்லலாம்... பல வித எண்ணங்களுடன் நாட்கள் நகர்ந்தன.

* * *

அப்போதுதான், ஒரு ஞாயிறன்று, தன்னுடைய பால்ய நண்பனின் கடைதிறப்பு விழாவிற்கு கிளம்பிச் சென்றான் அருள்.



அது பெரிய ஷாப்பிங் பிளாசா என்பதால், அவனுடைய சிநேகிதன் ஹரி ஆரம்பிக்கவிருக்கும் ''மென்ஸ் கார்னர்'' என்ற கடைக்குச் செல்ல எண்ணி லிஃப்டிற்குள் நுழைந்தான்.

எதேச்சையாக நிமிர்ந்தால், அங்கே அவனுடைய தேவதை... அவன் கனவின் நாயகி பேபி பிங்க் நிறத்தில் லாங் ஸ்கர்ட்டும் டாப்சும் அணிந்த படி நிற்க, இமைக்க மறந்து ஒரு கணம் சிலையானான் அருள்.

ஒரு கணம்தான்... தன் கண்களையே நம்ப முடியாமல் மீண்டும் பார்க்க, லிஃப்ட் இரண்டாவது ஃப்ளோருக்கு வந்து விட்டது.

கதவு திறந்து வெளியேறும்போதே என்ன ஏதென்று அவன் யூகிப்பதற்குள், அவள் தன் அருகிலிருந்தவனுடைய செல்போனைப் பிடுங்கி விட்டாள்.

அவன் சுதாரிப்பதற்குள், அவள் ''மாணிக்கம் அங்கிள்'' என்று குரல் கொடுக்க, அவனருகில் நின்றிருந்த வயதான மனிதர் பவ்யத்துடன் அருகில் ஓடினார்.

''என்னம்மா?''

பணிவுடன் அவர் வினவ ''இந்த செல் எவ்வளவுன்னு விலையைக் கேட்டு பணத்தைக் குடுத்துடுங்க'' என்றவள் அந்த இளைஞனிடம் திரும்பினாள்.

''தனக்கு சொந்தமில்லாத எந்தப் பொருள் மேலயும் உரிமை கொண்டாடறது தப்புன்னு உங்களுக்குத் தெரியாதா மிஸ்டர்?''

இன்று... புயலின் சீற்றம் அந்தக் குரலில்!

''இப்படி நாகரிகமில்லா[illegible] ஒரு பொண்ணை அவளுக்குத் தெரியாம செல்லிலே



JUN 12 2010

போட்டோ எடுக்கறது எவ்வளவு அநாகரிகமான செயல்னு உங்க பேரண்ட்ஸ் சொல்லிக் குடுக்கலையா?

"இது மாதிரி நேர்மை இல்லாத செயல் ஒரு ஆணுக்கு அழகில்லை சார்! உங்க சிஸ்டர் மாதிரி சொல்றேன்.. இனிமே இதுமாதிரி செய்யாதீங்க!"

அடிக்குரலில் சீறி விட்டு ஒரு வித நிமிர்வுடன் அவள் விலகிச் செல்ல, தோளில் பதிந்த கரம் அவனைக் கலைத்தது.

"வா வா! என்ன ப்ராப்ளம் அருள்?" ஹரிதான் அவனைத் தேடி வந்து வரவேற்றான்.

"ஒன்னுமில்லை ஹரி... இங்கே நான் ஒரு..."

அவளை தன் நண்பனுக்கு அறிமுகப்படுத்தி விடும் வேகத்துடன் திரும்பினால், அந்த மக்கள் சமுத்திரத்தில் அதற்குள் அவள் மாயமாய் மறைந்திருந்தாள்.

"சே!" என்றபடி அவன் பார்வையை சுழற்ற, "என்ன அருள்...? எவனாவது உன்கிட்டே ஏதாவது ப்ரச்சனை பண்ணினானா?" ஒரு வித வேகத்துடன் வினவினான் ஹரி.

"ப்ச்... அதெல்லாம் இல்லை... வா... கடைக்குப் போகலாம்."

சிறு சலிப்புடன் அவன் முன் செல்ல யோசனையாகத் தொடர்ந்தான் ஹரி.

வழியில் அவளிடம் திட்டு வாங்கியவன், கையில் பணத்துடன் உறைந்து நிற்க, அவனிடமும் எதுவும் அறிய முடியவில்லை.

* * *



பொதுவாக, எல்லாப் பெண்களும் கோபமென்றால் ஓங்கி அறைவார்கள்.... இல்லை என்றால், போலீசில் பிடித்துக் கொடுப்பார்கள் என்பது தான் அவனறிந்த நிஜம்!

ஆனால், இவளோ அறிவுரை மழை பொழிந்து, செல்லையும் பிடுங்கிக் கொண்டு, அதற்கான தொகையையும் அளித்து விட்டுச் சென்றது. புதிதாய்!

நெஞ்சம்... அவளைப் பற்றிய உணர்வுகளை ஓவியமாய்த் தீட்ட சிலிர்த்துப் போனான் அருள்!

ஒரு கார்டியாக் சர்ஜனுக்குள்... இதயத்தையே அறுவை சிகிச்சையில் மாற்றுபவனுக்குள்... பனிக்காற்றாய்... வர்ணச் சிதறலாய் புகுந்து மாயம் செய்ய ஆரம்பித்திருந்தாள் அந்த தேவதை!

"இவள் என் தேவதையேதான்.. இவள்தான் என் மனைவி... அது மட்டும் நிச்சயம்!

இந்த ப்ரபஞ்சவெளியில்... என் கண்ணில் பட்டதும் மின்மினியாய் மறைபவளே... உன்னைக் கண்டு பிடிப்பேன்... என்னுடையவளாய் உனை ஏந்திக் கொள்வேன்" இதயம் சவால் விட்டது.

திடீரென்று, எதுவோ அவனை உசுப்ப, ஹரிதான் அவனைப் பற்றி உலுக்கிக் கொண்டிருந்தான்.

"என்னாச்சு அருள்? ஒரு மாதிரி ஃப்ரீஸ் ஆகி நின்னுட்டே! ஹாஸ்பிடல்லே ஏதும் ப்ராப்ளமான்னு கேக்க முடியலை.. முகத்துல சந்தோஷமும் உற்சாகமும் நிரம்பி வழியுது! ஏய் ஆர் யூ இன் லவ் மேன்?"

காதோரம் குனிந்து கடைசியாக அவன் கேட்ட கேள்விக்கு சட்டென்று ஒரு [illegible]ன்

JUN 12 2010

தலையசைத்தவனை, வியப்புடன் அணைத்துக் கொண் டான் ஹரி!

பிறகு அவனுடைய கடையை சுற்றிப் பார்த்து விட்டு, இரண்டு செட் உடைகளை வாங்கிக் கொண்டு வெளியே வரும் போதுதான் அவளை இங்கு சந்தித்ததைப் பற்றி நண்பனிடம் கூறினான் அருள்.

"ஏய்! அப்பவே சொல்லி இருந்தா உடனே தேடிக் கண்டு பிடிச்சிருக்கலாமே! வா.. இப்பவாவது தேடிப் பார்க்கலாம்!"

இருவரும், சல்லடை போட்டு அலசினாலும் அவள் இருந்த சுவடே தெரியாமல் மாயமாக மறைந்திருந்தாள்.



## 3



வாழ்க்கை... அறுவை சிகிச்சை... மருத்துவ சம்மந்தமான மாநாடு என்று இயந்திரத் தனமாய் சென்று கொண்டிருந்த போதுதான் அவளை மீண்டும் இன்று சந்தித்தான் அவன்.

அந்த ஐந்து நட்சத்திர ஓட்டலில் இன்று ஒரு கான்ப்ரன்ஸிற்காகச் சென்றிருந்தான், அருள்!

சுற்றிலும் பார்க்கும் படி கண்ணாடிக் கூடாய் தெரிந்த லிஃப்டிற்குள் ஏறி மேலே கான்ப்ரன்ஸ் நடக்கும் ஃப்ளோருக்கு அவன் பயணிக்கும் போதுதான் எதேச்சையாக எதிரே தெரிந்த அந்த லிஃப்டைப் பார்த்தான்.



அதற்குள்... தடாகத்தில் பூத்த ஒற்றைத் தாமரையாய் அந்த தேவதை!

அந்த வானுலக தேவதையே பூமியை ஆசிர்வதிக்கக் கீழிறங்கிச் செல்வதைப் போல், லிஃப்டில் கீழ்த் தளத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தாள் அவள்.

அவன் தவித்து நிற்கும் போதே, லிஃப்டிலிருந்து இறங்கி, வெளியேறவும் ஆரம்பித்தாள்.

அதே நிமிடம், மூன்றாவது ஃப்ளோரில் லிஃப்ட் நிற்க, இறங்காமல் மீண்டும் கீழ் நோக்கிப் பயணிக்க ஆரம்பித் தான் அவன்.

ஆனால், அவன் வெளியே வந்து தேடியபோது, எப்போதும் போல் அவள் மறைந்து விட்டிருந்தாள்.

'இது என்ன கோ-இன்சிடென்ஸ்? ஒவ்வொரு முறையும் அவளை லிஃப்டிலேயே சந்திக்கிறேன்?'

மனம் கேள்வி கேட்டாலும் அவள் யாரென்ற வினா மனதைக் குடைந்தது.

கான்பரன்ஸ் முடிந்து வீட்டிற்கு வந்தவன், ஒரு முடிவுடன் இன்று தன் தாயிடம் அவளைப் பற்றிக் கூறிவிட்டான்.

மலேஷியாவிற்குச் சென்று திரும்பியதும் நிச்சயம் அவளைத் தேடி கண்டுபிடிக்க வேண்டும் என்ற உறுதியுடன் அறுவை சிகிச்சை பற்றிய புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

* * *

அந்த வாரமே, வேணியக்காவை சந்தித்து மலேசியா செல்வதை சொல்லச் சென்ற [illegible] யோசனையைக் கூறினார்.

JUN 12 2010

"அருள்! எப்படியாவது அந்தப் பொண்ணை உன் செல்லில ஒரு போட்டோ எடுத்துடு... அப்புறம் எனக்குத் தெரிஞ்ச ஒரு டிடெக்டிவ் ஏஜென்சியில அதைக் குடுத்து அவளைப் பத்தி எப்படியாவது விசாரிச்சி கண்டுபிடிச்சிடலாம்!"

அவர் கூறியதும் அவன் தாங்க முடியாமல் சிரித்ததும், வேணி என்னவென்று விசாரித்தார்.

அன்று லிஃப்டில் ஒருவன் அவளைப் போட்டோ எடுத்தபோது நடந்த நிகழ்வை அவன் ஞாபகப்படுத்த, அவருக்குமே சிரிப்பாய்!

"பரவாயில்லை அருள்! வேற வழி இல்லை... ஆபத்துக்கு பாவமில்லை! தெரியாம எடுத்துடு! அப்புறம் எப்படி அவ யாருன்னு கண்டு பிடிக்கிறதாம்?"

அவனுக்கு தைரியமும், யோசனையும் கூறி அவனை அனுப்பி வைத்தார்!

* * *

மறு வாரம்... மலேஷியா செல்ல ஏர்போர்ட்டிற்குள் நுழைந்தான், அருள்.

நான்கைந்து நாட்கள்... எந்த வித வேலையுமின்றி ஓய்வெடுத்து விட்டு, கடைசியாக டீ எஸ்டேட் அதிபர்களின் மீட்டிங்கில் கலந்து கொள்ள முடிவெடுத்திருந்தான்.

மலேஷியா என்றதுமே பல நினைவுகள் வந்து மனதை உரச, சீட் பெல்ட்டை மாட்டிக் கொண்டு கண்களை மூடி சாய்ந்து கொண்டான், அவன்!

மலேஷியா என்றதுமே.. மனதிற்குள் மழைத்தூறலாய், அவனுடைய பெரியம்மா அருள்மொழியின் நினைவு!



முன்பெல்லாம் ஒவ்வொரு முறையும் அவன் வரும் போதும் அவரைப் பார்க்க அவன் தவறுவதில்லை!

கடந்த சில வருடங்களாக.. அதுவும் அவன் தொழிலில் பொறுப்பேற்று வருகையில், அவர் உயிருடன் இல்லை!

அவனுடைய தந்தை இறந்த ஒரு மாதத்திலேயே நோய்வாய்ப்பட்டு அவரும் இறந்து விட்டார்.

அந்த நேரம் அவனுக்கு "சிக்கன் பாக்ஸ்" அம்மை போட்டிருந்ததால் இறுதிச் சடங்கிற்குக் கூட அவனால் மலேஷியாவிற்குச் செல்ல இயலவில்லை!

அவருடைய விருப்பப்படியே எஸ்டேட்டில் புதைக்கப்பட்டு சமாதியாய் இன்றும் அவன் கண் முன்னால் புகைப்படமாய் புன்னகையுடன் நிறைந்திருப்பவர்!

அவருடைய வாழ்க்கையே ஒரு புதிர்தான்!

அவனுக்கு, அருள்மொழி தன் பெரியம்மாவென்பதும், தன் மேல் உயிராய் அவர் இருப்பதும் மட்டுமே தெரியும்!

ஆனால், அந்த உறவுக்கான அர்த்தத்தை, அவனுடைய கல்லூரிப் படிப்பின் முடிவில் ஒருநாள் வில்வநாதன் குற்றவுணர்வுடன் தெரிவித்த போதுதான் அவன் அதிர்ந்து போனான.

அவருடைய மலரும் நினைவுகள் அவனுக்குத் தான் வாடிய ஒன்றாய்!

அப்போது வில்வநாதனும், அருள்மொழியும் மருத்துவக் கல்லூரியில் ஒன்றாகப் பயின்று வந்தனர். எம்.பி.பி.எஸ். இரண்டாவது வருடத்திலிருந்தே இருவரும் மனப்பூர்வமாக ஒருவரை ஒருவர் விரும்பி இறுதி வருடத்தில் பிறர் அறியாமல் திருமணமும் செய்து கொண்டு விட்டிருந்தனர்.

JUN 12 2010

சாதிப் பிரச்சனைக்கு பயந்து இந்த முடிவை எடுத்து, ஒரு வீட்டை வாடகைக்கு பிடித்து இருவரும் கணவன் மனைவியாய் வாழ்ந்த தருணம் அது!

இருவரும், ஹவுஸ் சர்ஜன் பயற்சியில் இருந்தனர்.

அருள்மொழியின் தந்தை மலேஷியாவில் வேலை பார்த்து வந்தார். குடும்பம் மட்டும் தூத்துக்குடிக்கருகில் ஒரு கிராமத்தில் இருந்தனர்.

அவருடைய அண்ணன் விநாயகம் தொழிற்சாலை ஒன்றை நடத்தி வர, அம்மாவும் அவருடனே இருந்து வந்தார்.

படிப்பை முழுதாக முடித்தவுடன் அவர்களிடம் சொல்லி விடலாமென்று முடிவு செய்திருந்தார் அருள் மொழி!

அப்போதுதான், ஒரு நாள் ஊரிலிருந்து தந்தைக்கு உடல் நலம் சரியில்லை என்று வில்வநாதனுக்கு தந்தி வந்தது.

உடனே பதறிப்போய் தன் சொந்த ஊரான காரைக் காலுக்குச் சென்றவர், ஒரு இக்கட்டான சூழ்நிலையில் தந்தையின் இறுதிக் கோரிக்கைக்காக அவருடைய தங்கை மகள் சொர்ணத்தை மணக்கும்படியாயிற்று!

மரணப்படுக்கையில் கோரிய தந்தையின் வேண்டு கோளை அவரால் நிராகரிக்க முடியவில்லை. அவருடைய மரண விருப்பமாய் வில்வநாதனின் திருமணம்.

ஆனால், மறுநாளே அவர் தந்தையும் இறந்து விட காரியங்கள் முடிந்ததும், தன் மனைவி சொர்ணத்திடம் அவர் மனம் விட்டுப் பேசினார்.



முதலில் அதிர்ந்து வெகுவாய் அழுது ஆர்ப்பாட்டம் செய்த சொர்ணத்திற்கும், தீர யோசித்த பிறகு அவருடைய இயலாமையும், பரிதவிப்பும் விளங்கின.

தந்தை சொல்லுக்கு கட்டுப்பட்டு, அவருடைய இறுதிக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக தன் வாழ்வையே பலியிட்ட அவருடைய தியாக உணர்வும், இரு பக்கமும் அடி வாங்கிய மத்தள நிலையும் புரிந்தன!

* * *

அவர் ஊருக்குக் கிளம்புவதற்கு முன்பு, ஒருநாள் கணவனிடம் இதுபற்றிப் பேசினார் சொர்ணம்!

அருள்மொழியையும் இங்கு அழைத்து வந்து, ஊரறியத் திருமணம் செய்து கொள்வதில் தனக்கு ஆட்சேபணை ஏதுமில்லை என்றார்.

ஆனால், ஊர் திரும்பிய வில்வநாதன் கூறிய விஷயங் களைக் கேட்டதும், அவருடைய தந்தையின் இழப்புக்கு ஆறுதல் கூறவும் மறந்து ரௌத்ரமாகிப் போனார் அருள்மொழி!

வில்வநாதன் செய்த நம்பிக்கை துரோகத்தை அவரால் தாங்கவே இயலவில்லை!

தன்னுடன் ஒரு வருட காலமாக வாழ்ந்து விட்டு அதை மறந்து வேறு ஒருத்தியை அவர் மணந்தது மன்னிக்க முடியாத துரோகமாய் பட உடனே வில்வநாதனின் வாழ்க்கையிலிருந்து விலகினார் அருள்மொழி!

மறு வருடமே அவருடை[illegible]தையும் இ[illegible] விட, மலேஷியாவிற்கும் புலம் பெயர்ந்தார் அவர்.

தன் தந்தை வாங்கியிருந்த

JUN 12 2010

தொழிலைப் பன் மடங்கு பெருக்கி எஸ்டேட்டையும் தனி ஒருத்தியாகவே தைரியமாக, விஸ்தரிக்க ஆரம்பித்தாள்.

வில்வநாதன், மனதளவில் குறுகிப் போனாலும், சொர்ணத்துடன் அவர் வாழ்ந்த வாழ்க்கைக்குப் பரிசாய் ஒரு மகன் பிறந்தான்.

தனக்கு வாழ்வளித்த மூத்தவரின் நினைவாக சொர்ணமே மகனுக்கு 'அருள் வேந்தன்' என்று பெயரிட்டார்.

வில்வநாதனும், அருள்மொழியை எப்படியாவது மாற்றிவிடலாம் என்ற நப்பாசையில் அவருக்கு பக்கத்து எஸ்டேட்டையே விலைக்கு வாங்கினார்.

அங்கு பொறுப்பாய் ஒருவரை மேனேஜராய் நியமித்து விட்டு மருத்துவமனையில் அவர் கவனத்தை செலுத்தினாலும், கணக்கு வழக்குகளைப் பார்க்கவென்று வருடம் ஒருமுறையாவது அவர் மலேஷியா செல்ல வேண்டியிருந்தது.

ஆனாலும் கடைசி வரை அருள்மொழி மாறவும் இல்லை... அவரை மன்னிக்கவும் மறுத்துவிட்டார்.

ஆனால், ஒரு வயதுக் குழந்தையாக அருள் வேந்தனை அழைத்துச் சென்ற சொர்ணம் அவரிடம் வாழ்க்கையைப் பறித்துக் கொண்டதற்காக மன்னிப்புக் கேட்டபோது, மூத்தவர் உருகிப் போனது தான் நிஜமாய்!



## 4



அன்றிலிருந்து அருளை தன் குழந்தையாகவே பாவிக்கத் துவங்கியவர், அவனிடம் ஒரு தாயாகவே மாறிப்போனார்.



அவன் பள்ளியில் படிக்கும்போது கூட விடுமுறைக் காலங்களில் அங்கு செல்லும்போது அவனை மடியில் வைத்து சின்னக் குழந்தையாய்க் கொஞ்சுவார்.

அப்படி ஒரு முறை சென்றிருந்தபோதுதான் அங்கு ஒரு சிறு பெண் குழந்தையைக் கண்டான் அவன்.

அருள்மொழி, அவளைத் தன் அண்ணன் மகளென்றும் அவளைத் தானே வளர்ப்பதாகவும் கூறினார்.

அந்த தபஸ்யாவின் தாய் அவள் பிறந்தவுடனே இறந்து விட்டதால் தன்னுடனே இருப்பதாக கூறினார்.

பிறகு செல்லும் போதெல்லாம் அந்த தபஸ்யாவை, சிறு பெண்ணாய் அவன் ஓரிரு முறை பார்த்தது தான்!

அவன் விடுமுறைக்கு ஒவ்வொரு முறை மலேஷியா போகும் போதும், அவள் இந்தியா சென்றிருப்பதாக அருள்மொழி கூறுவார்.

அப்போதெல்லாம் அவன், அருள்மொழியை சொர்ணத்தின் சகோதரி என்றே எண்ணியிருந்தான்!

ஒருநாள் கூட அவர்களுடன் வில்வநாதன் அருள்மொழியின் வீட்டிற்கு வந்ததில்லை. சொர்ணமும், அவனும் மட்டுமே அங்கு சென்று வருவார்கள்.

அவனைக் கண்டதும் சொர்க்கத்தையே கண்ட உற்சாகம் வந்து விடும் அருள்மொழிக்கு!

மருத்துவமனை வேலைகளை ஒதுக்கி விட்டு சிறு குழந்தையாய் அவனுடன் நாட்களை செலவிடுவார்.

அவனுக்கும் அருள்மொழி பெரியம்மாவென்றால் உயிர்! இனம்புரியா ஒரு தாய்மை உணர்வு அவரிடம் புலப்படுவது போல்!

ஆனால், அவரோ இந்தியா[illegible] வந்[illegible]!

JUN 12 2010

அருள் வேந்தனின் பட்டமளிப்பு விழாவிற்கு வருவதாக அவர் உறுதியளித்திருந்த நேரத்தில் தான் வில்வநாதன் படுக்கையில் விழுந்தார்.

அப்போதுதான் அவனுக்கு அந்த உண்மை தெரிய வந்தது.

எல்லா நிஜங்களும் தெரிந்த போது அருள்மொழியின் மீது மரியாதையும் பிரியமும் அதிகரித்துப் போயின!

அவரிடம் நேரில் சென்று அப்பாவின் சார்பில் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று எண்ணியிருந்த போதுதான், ஒரு நாள் திடீரென்று வில்வநாதன் இறந்து போனார்.

ஆனால், கணவரின் இறப்புக்குக் கூட அருள்மொழி வரவில்லை.

கணவரின் மரணம் வரையிலும் கூட அவர் தன் மனதை மாற்றிக் கொள்ளாதது... அவரிடம் மேலும் மதிப்பையே ஈட்டித் தருவதாய்!

ஆனால், ஒரே மாதத்தில் உடல் நலம் பாதிக்கப்பட்டு அருள் மொழியும் இறந்து விட, அப்போதுதான் அவர் மனதாலேயே வில்வநாதனுடன் வாழ்ந்திருப்பது அருளுக்குப் புரிய வந்தது!

அந்த நேரம், அவனுக்கு 'சிக்கன் பாக்ஸ்' என்பதால், அவனால் அவருடைய இறுதிக் காரியங்களில் பங்கேற்கக் கூட இயலவில்லை.

அவனுக்கு உண்மை தெரிந்த வாரமே வில்வநாதனும் இறந்து, அருள்மொழியிடம் பேசலாம் என்று நினைக்கும் போதே அவரும் இறந்தது அவனுக்கு ஆறாத ரணமாய்!

அவருடைய காரியங்கள் முடிந்த போதுதான், மனம் திறந்து தன் தாயிடம் பேசினான் அவன்.



''அம்மா! பெரியம்மா எப்படி ஒரு அதிசயப்பிறவி பாருங்க.... அப்பா மேல எவ்வளவு அன்பு வெச்சிருந்தா ஒரே மாசத்துல அவங்களும் இறந்திருப்பாங்க!''

சொல்ல முடியாத உணர்ச்சிகள் அவனிடம் விரவித் தெரிந்தன!

''ஆமாம்ப்பா! நானும் சக்களத்தின்ற மனோபாவம் இல்லாம, ஒரு சகோதரியா அவங்களை உன் அப்பாவோட சேர்த்து வைக்க எவ்வளவோ முயற்சி செஞ்சேன் தெரியுமா? எல்லாமே பயனில்லாமப் போச்சு!''

ஒரு பெருமூச்சுடன் முடித்தவரையே வாஞ்சையுடன் ஏறிட்டான் அவன்.

''எனக்கு கொஞ்சம் முன்னாடி தெரிஞ்சிருந்தாக் கூட, ரெண்டு பேரையும் நான் சேர்த்து வெச்சிருந்திருப்பேன்.. ப்ச்... கடைசி நேரத்துல தான் அப்பாவுக்கு என்கிட்டே எல்லா உண்மையும் சொல்லணும்னு தோணியிருக்கு!''

விரக்தியுடன் பகர்ந்தவனை சமாதானப்படுத்தினார் சொர்ணம்!

''நானும் எவ்வளவோ முயற்சி செஞ்சு பாத்தேன் அருள்! அது அவங்க சொந்தக்காரங்களுக்கே தெரியும்! அப்பாவும் கடைசி வரைக்கும் காத்திருந்தாங்க.. ஆனா, உன் பெரியம்மாதான், தன் தவத்தை கலைக்கவேயில்லை!''

''ஏம்மா... என்கிட்ட நீங்களாவது முன்னாடியே சொல்லியிருக்கலாமே! நான் சொன்னா பெரியம்மாவால மறுக்க முடியாதே!'' ஆதங்கத்துடன் வினவினான் அருள்!

''ம்.. உங்கப்பா தான் எதுவும் சொல்லக் [illegible] ணுட்டாரு! உன் மேல அரு[illegible] காக்கு [illegible]

JUN 12 2010

ப்ரியம்! நீ உன் அப்பா மாதிரியே இருக்கியா? அதே ஆறடி உயரம், மாதிறம்... திருத்தமான முகம்.. கர்வமும் கம்பீரமும் நிறைஞ்ச உருவம்னு!

"நீ அவங்க வயத்துல பிறக்கலையேன்னு அவங்க வருத்தப்பட்டப்ப, நான் கூட உன்னை அவங்களுக்கே தத்து குடுக்கறதா சொன்னேன்!"

"ஆனா, அக்கா தீவிரமா மறுத்துட்டாங்க... நெருங்கின உறவுகளைப் பிரியற வலி எப்படின்னு தனக்குத் தெரியும்... அதை எனக்கும் தர தனக்கு விருப்பமில்லைன்னு உறுதியா முடியாதுன்னாட்டாங்க. எனக்கு வாழ்க்கை குடுத்த தெய்வம் அவங்க!"

அதைக் கேட்டதும் அவரின் உயர்ந்த மனம் புரிந்து, அவரை தெய்வமாகவே கொண்டாட ஆரம்பித்து விட்டான் அருள்.

* * *

இன்றும்... அவனுடைய வீட்டு பூஜையறையில் வில்வநாதனின் புகைப்படமும் அருள்மொழியின் படமும், அருகருகில் தங்க பிரேமிட்டு மாட்டப்பட்டுள்ளன.

இன்று வரை தினமும் அவரை அவன் வணங்கத் தவறுவதில்லை!

மலேஷியாவிற்கு கிளம்பும் போது கூட, அவரிடம் விடைபெற்று தன் மனதிலிருக்கும் காதலைப் பற்றி மானசீகமாகப் பேசிவிட்டுதான் வந்திருக்கிறான் அவன்!

அவர் அவனுக்கு நிச்சயமாக உதவுவாரென்ற நம்பிக்கையும் அவனிடம் உறுதியாய்!



ஏனென்றால் இதுவரை அவரிடம் அருள் எதுவுமே கேட்டதில்லை... முதன் முறையாக தன் காதலுக்கு துணை புரியுமாறு கோரியிருக்கிறான்.

பெரியம்மாவின் நினைவுடன் அந்தப் பெயரறியாப் பெண்ணின் ஞாபகங்களும் கைகோர்க்க மெல்ல மெல்ல ஆழ்ந்த உறக்கத்திற்குள் பயணித்தான் அருள்.

## 5

திடீரென்று யாரோ உசுப்பி எழுப்ப சோம்பலாக விழிகளைத் திறந்தால், அங்கு ஏர்ஹோஸ்டஸ் புன்னகையுடன் நின்றிருந்தாள்.

அவள் நீட்டிய சாப்பாடு ட்ரேயை வாங்கிக் கொண்டு திரும்பியபோதுதான், அவன் இதயம் ஒரு கணம் உறைந்து ஸ்தம்பித்தது.

அவனுடைய பின் சீட்டில் அந்தக் கனவு தேவதை அமர்ந்திருந்தாள்.

யாரிவள்... எப்போதுமே தரையிலிருந்து நான் அந்தரத்தில் பயணிக்கும் போதெல்லாம் என்னுடன் வந்து எண்ணங்களில் கலந்து நொடிப் பொழுதில் மாயமாய் மறைந்து போகும் இந்த இந்திரலோகப் பெண் யார்?

உள்ளம், காற்றை விடவும் அதிவேகத்தில் பயணிக்க, நம்பிக்கைத் தளிர்கள் உள்ளே அசுர வளர்ச்சியுடன் துளிர்த்தன.

சலனமின்றிக் கண்களை மூடிப் பயணித்தவளை மெல்ல வருடியது அவன் பார்வை!

JUN 12 2010

ஒரு பூக்குவியலாய் அமர்ந்திருந்தாள் அவள்!

எதனாலோ, சட்டென்று திறந்த அவளின் விழிகளில், ஒரு வேகச் சடசடப்பு!

மெல்லத் திரும்பி சாப்பிட ஆரம்பித்த அருளுக்குள் ஒரு மர்மப் புன்னகையும், சிறு வெற்றிக் களிப்பும் மையம் கொண்டிருந்தன.

சாப்பிட்டு விட்டு மீண்டும் மெல்லத் திரும்பிய போது, அவளிடம் சலனமில்லாத உறக்க நிலை!

உடனே அருள் அவளுக்குத் தெரியாமல், செல்லில் படம் எடுத்து விட்டான்.

நினைவுகள் அவளுடன் சுயம்வரம் நடத்த மலைச் சிகரத்தில் ஏறி நின்று, வானத்து விளிம்பைத் தொட்டு விட்ட பரவசம் அவனிடம்!

அதே உணர்வுடன் கண்ணாடி ஜன்னால் வழியே பார்வையை பதித்தபோது, வானப் பின்னணியில் மேகங் களின் வரவின்றி எந்த சப்தமும் இல்லாமல், எதிரில் கடந்து செல்ல எதுமின்றி, அந்தரத்தில் அசையாமல் நிற்பது போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்தியது... அருகில் தெரிந்த அந்த அலுமினியப் பறவையின் ஒற்றைச் சிறகு!

சிறுமுறுவலுடன் திரும்பியவனுக்குள், தாள லயத் துடன் பரவியது அவள் உருவம்!

பிறகு சீட் பெல்ட்டைப் போடும்படி, விமானப் பணிப்பெண் கூறும்போதுதான், மலேஷியா வந்து விட் டதையே உணர்ந்தான் அவன்!

உடனே திரும்பியபோது, அவளும் உறக்கம் கலைந்து பெல்ட்டை மாட்ட முனைவது தெரிந்தது.



இவள்தான் எவ்வளவு வித்தியாசமானவள்.. மெல்ல முறுவலித்தவனுக்குள் மெலிதாய் உதிர்ந்தன அந்தப் பாடல் வரிகள்!

**''எந்தப் பெண்ணிலும் இல்லாத ஒன்று...**

**ஏதோ... அடி ஏதோ உன்னிடம் இருக்கிறது!**

**அதை அறியாமல் விடமாட்டேன்...**

**அதுவரை உன்னைத் தொடமாட்டேன்!''**

மென்மையாக முணுமுணுத்தது இதயம்!

சொர்ணம் கூறியதைப் போல் பாறையாய் இருந்தவன், சமீப காலங்களாக... அவளைப் பார்த்ததிலிருந்து இலவம்பஞ்சாய் மாறி இருக்கிறான்!

மெதுவாக எழுந்தவன், அந்தக் கூட்டத்தில் கலந்து அந்த தெய்வீக அழகை ரசித்தபடி அவளைப் பின் தொடர்ந்தான்.

இன்று, ஜீன்ஸும், குர்த்தாவுமாக இருப்பவள் புடவை கட்டினால் எப்படியிருக்கும்.. செல்லமாய் கற்பனை உலகில் நுழைந்தான்.

அவன், தனது ட்ராலி கேஸை எடுத்துக் கொண்டு வெளியே வந்த போதுதான், அவளை ஒரு குடும்பமே வரவேற்று அரவணைப்பது தெரிந்தது.

தன்னிடம் தாவுகின்ற குழந்தையை அவள் மகிழ்ச்சி யுடன் ஏந்தி முத்தமிட, அவன் மனமோ வேறு கற்பனை யில் மிதந்தது.

சட்டென்று அவனைக் கலைத்தது.. எஸ்டேட் மேனே ஜர் ராமின் குரல்!

''வெல்கம் அருள்!'' பெரும் பரபரப்பும் உற்சாகமுமாய் அவனை வரவேற்றார் அவர்.

JUN 12 2010

''ம்... எப்படி இருக்கீங்க சார்?'' ஆர்வத்துடன் விசாரித்தவனது விழிகள் தன் உறவுகளுடன் செல்லும் அவளிடமே பதிந்து விலகின.

''ஃபைன் அருள்! என்ன.. சமீபகாலமா பெரியம்மா இறந்தப்புறம் மலேஷியா வரப்ப, இவ்வளவு உற்சாகமா நீங்க இருந்ததே இல்லை! ரொம்ப சந்தோஷம் அருள்! உங்களை இவ்வளவு சியர் ஃபுல்லா மாத்தினது எதுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

அவனுடைய தந்தையின் வயதுடையவர்.. அவன் மேல் மாறா அன்பு கொண்டவர்... சிறு வயதிலிருந்தே அவர்களிடம் பணிபுரிபவர் என்ற உரிமையில் அவர் கேட்டு விட்டார்.

உள்ளூற ஒருவித இனம்புரியா உணர்வு சிலிர்ப்பாய் பரவ.. ''ம்... எது காரணம்கிறதை விட யார் காரணம்கிற கேள்விதான் கரெக்டா இருக்குள் அங்கிள்! அதுக்கு பதில் அங்கே இருக்கு!'' வேகமாகத் திரும்பினான்.

ஆனால், அந்த லாபியே அவளின் முகவரி மட்டு மின்றி வெறிச்சோடியிருக்க, கூட்டமோ அலை மோதிக் கொண்டிருந்தது.

''யார் தம்பி...?''

ராம் ஆவலுடன் விசாரிக்க, ''ப்ச்... இன்னிக்கும் கோட்டை விட்டுட்டேன் அங்கிள்! பாப்போம்... அவளைப் பார்க்காமலா போயிடப் போறேன்!'' ஒரு வித சலிப்புடன் பதிலளித்தான்.

* * *

கடந்த ஏழு வருடங்களாகத்தான், அவன் தொழில் முறையில் வருடம் இருமுறையாவது இங்கு வருகிறான்!



அதற்கு முன்பு, அம்மாவுடன் பெரியம்மாவைப் பார்க்கவென்று இரு வருடங்களுக்கு ஒரு தரம் கோடைவிடுமுறையில் மட்டும் கட்டாயம் வருவது வழக்கம்!

''தம்பி! இனிமே தபஸ்யாதான் உங்க பெரியம்மா வோட சொத்துக்களை நிர்வாகம் பண்ணப் போகுதாம்! அவங்க மேனேஜர் சொன்னாரு!''

ராமின் குரலில் அவனுடைய எண்ணங்கள் சிதைந்தன.

தன்னுடைய சொத்துக்களை எல்லாம் தன் அண்ணன் மகள் பெயரில் மாற்றி எழுதி இருந்தார், அருள்மொழி.

''ஓ! அந்த சின்னப் பொண்ணு அவ்வளவு பெரியவ ளாயிட்டாளா?''

வியப்புடன் கேட்டவனுக்கு, ஆர்வத்துடன் பதில் கூற ஆரம்பித்தார் ராம்.

''ஆமாம் அருள்! அங்கே சென்னையில அண்ணா யுனிவர்சிட்டியில தான் அந்தப் பொண்ணு பி.டெக். முடிச்சு தாம்! இந்த தடவை டீ எஸ்டேட் அதிபர்கள் மீட்டிங்குல கூட அதுதான் அட்டெண்ட் பண்ணப் போறதா அவங்க மேனேஜர் சொன்னாரு! இந்த தடவை தான் முதலாளிகள் கட்டாயம் கலந்துக்கணும்னு சொல்லியிருக்காங்களே!''

''அப்படியா...? சின்னக் குழந்தையா இருக்கறப்ப அவளைப் பார்த்தது...! நான் லீவுக்கு வரப்பல்லாம் அவ இந்தியாவுக்கு போயிடுவா.. அதனால பார்க்க முடிஞ்ச தில்லை!''

சிறு முறுவலுடன் கூறியவனின் விழிகள் தன் [illegible] கவர்ந்தவளை மீண்டும் அந்[illegible]ட்டத்தில் [illegible] துவங்கின!

பிறகு ட்ராலி கேஸைத் தள்ளியபடி அவர் உடன் வர, காரில் ஏறிப் பயணித்த போதும், அவனால் அவளை மறக்கவே இயலவில்லை!



## 6



காரில், எஸ்டேட் தொடர்பாக இருவரும் பேசிக் கொண்டே வரவும், "அருள் நிவாஸ்" என்ற பொன்னிற எழுத்துகள் பதிக்கப்பட்ட அந்த பங்களாவின் முன் கார் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

அன்று முழுவதும் ரெஸ்ட் எடுத்த அருள் மறுநாளி விருந்து எஸ்டேட் கணக்கு வழக்குகளைப் பார்க்கத் தொடங்கினான்.

ராமின் அக்கௌண்ட்ஸ் மெயின்டெனன்ஸும், ஆடிட் டரின் உதவியும் சேர, இரு நாட்களிலேயே வேலை முடிந்து போனது!

மறுநாள் இருவருமாகக் கிளம்பி கோலாலம்பூரை சுற்றிப்பார்க்க முடிவு செய்தனர்.

காலையிலேயே தயாராகி மலேஷியா மாரியம்மனை தரிசித்துவிட்டு, பத்து கேவ்ஸ் மலைக்கு சென்றனர்.

நூறடிக்கும் மேல் உயரத்தில் தங்க நிறத்தில் தகதகத்த முருகனை விட்டு விழிகளை அகற்றவும் மனமின்றி ஒரு கணம் தவித்துத்தான் போனான் அருள்!

அந்த அழகும், கம்பீரமும் ஆகிருதியும் இதயத்தைக் கொள்ளை கொண்டன.



மலையின் மேலேறிச் சென்று அந்த அற்புதக் குகைக் கோவிலில் வேல் வடிவமாய் வீற்றிருக்கும் முருகனை தரிசித்த போது, எப்போதும் போல் நெஞ்சம் நிறைந்து போனது!

அந்த மலைக் கோவிலின் அழகும், அமைதியும், குளிர்ச்சியும், வித்தியாசமான குகை அழகும், சிலிர்ப்பாய் உள்ளே பரவின.

எப்போதுமே, இங்கு வந்து முருகனை தரிசிப்ப தென்றால் அருளுக்கு மிகவும் பிடிக்கும்!

முன்பெல்லாம், சொர்ணமும் முடியாவிட்டாலும் ஏறி வந்து விடுவார்..அருள் மொழி கூட ஒரு முறை அவர்களோடு வந்திருக்கிறார்!

பழைய நினைவுகளுடன் கைகோர்த்தபடி மேலும் படிகளில் ஏறி முருகனின் திருவுருவை தரிசித்த போது, முதன் முறையாகத் தன் காதலுக்கு கடவுளின் துணை வேண்டியது, இதயம்!

அவளைத் தன்னுடன் இணைத்து வைக்கும்படி அவன் ப்ரார்த்திக்க, அமைதியாகப் புன்னகைத்தார் அந்த மலைக் குகன்!

தரிசனம் முடிந்து இருவரும் படிகளில் இறங்கி அடிவாரத்திற்கு வந்தபோதுதான், எதிர்பாராமல் அவளை சந்தித்தான் அருள்.

அழகிய சில்க் காட்டன் புடவையணிந்து சில உறவுப் பெண்களுடன், உற்சவத்து சிற்பமாய் மேலே ஏற ஆரம் பித்திருந்தாள் அவள்.

மகிழ்ச்சியிலும், வியப்பிலும் அவன் உறைந்து [illegible] அவளையே கவனிக்க... கீ[illegible] அவனை அழைப்பது கேட்டது.

JUN 12 2010

கனவுலகிலிருந்து மீண்டும் திரும்பினால், அவளும் அதே நேரம் திரும்பி அவனை ஒரு பார்வை பார்த்து விட்டு, மேலே ஏறத் துவங்கினாள்.

விழியோடு விழி கோர்த்த அந்த முதல் ஸ்பரிசம், அவனுக்குள் பெரும் பரவசமாய் கலப்பதாய்!

இது நான்தானா...? ஒரு பெரிய இதய நோய் நிபுணன்... பல தொழில் சாம்ராஜ்யங்களின் தலைவன்.. சிறு டீன் ஏஜ் பையனைப் போல் ஏன் இப்படி உணர்ச்சி வசப்படு கிறேன்!

ஒரு பெண்ணால், என்னை இந்த அளவு சலனப் படுத்தி சரிப்பது சாத்தியமாகியிருக்கிறதே!

அவனுடைய எண்ணப் பந்தல்கள் பெரிதாய் தன் கரம் விரிக்க, அன்றும் அவளை ராமிற்கு அறிமுகம் செய்ய மறந்து போனான்.

பிறகு எதிரிலிருந்த இந்தியன் ரெஸ்டாரண்டிற்கு சென்று சாப்பிட்டு விட்டு வீடு திரும்பிய போதும் அவள் நினைவுகளே அவனுக்குள் ஆர்ட் பீசியன் ஊற்றாய் பீறிட்டுக் கொண்டிருந்தன.

அவளிடம் என்ன சொல்லி தன்னை அறிமுகப் படுத்திக் கொள்வது...? புதிராய் பல வினாக்கள்!

பார்வையில் பட்ட மறுகணமே மின்னலாய் அவள் மறைந்து விட்ட தருணங்கள் மாயப் பொழுதுகளாய்த் தோன்றின.

இன்றுதான், அவள் தன்னை முதன் முதலாகக் கவனித்தது பெரும் சிலிர்ப்பாய்!



"கண்கள் இரண்டால்.. உன் கண்களிரண்டால்...
என்னைக் கட்டி இழுத்தாய்.. இழுத்தாய்!
போதாதென... கள்ளச் சிரிப்பில் உன்சின்னச் சிரிப்பில்
எனைத் தள்ளிவிட்டு தள்ளிவிட்டு மூடி மறைத்தாய்!"

உதடுகள் மெல்ல முணுமுணுத்தன!

வான உத்தரத்தில், மேகத்தை பலகையாக்கி, வான வில் சங்கிலி கோர்த்து, ஊஞ்சலாடுவதைப் போன்ற ஒரு விநோத உணர்வு!

* * *

மறுநாளே, கோலாலம்பூரின் உயர்ந்த ரெட்டை கோபுர மாகிய 'பெட்ரோனஸ் டவரு'க்கு ஷாப்பிங் சென்றிருந் தான் அருள்!

ஒரு தமிழரினால் கட்டி முடிக்கப் பட்டதென்ற பெருமையுடன் வானுயர்ந்து நின்றிருந்த அந்த இரு கட்டடங்களும், அழகிய நீல நிற ஒளி வெள்ளத்தில் மிதந்து ஆகாயத்தை தொட முயன்று கொண்டிருந்தன!

ஒவ்வொரு முறை இங்கு அவன் வரும்போதும்.. பிரமித்துத்தான் போயிருக்கிறான்.

இன்றும் சிலிர்ப்புடன் நிமிர்ந்தபோது இங்கும் தன் னுடைய ப்ரியசகி வரமாட்டாளாவென்ற ஏக்கமும் தவிப்பும் அவனிடம்!

ஆனால், தன்னுடைய விருப்பம் எல்லா நேரமும் நிறைவேறாது என்பதை உணர்த்தியது அவள் பிரிவு!

அன்று முழுவதும், அவனுக்குத் தேவையானவற்றை வாங்குவதிலும், சுற்றிப் பார்த்திலுமே நேரம் சிறகு கட்டிப் பறந்தது!

* * *

மறுநாள்.... மதியம்... எஸ்டேட் அதிபர்களின் கான்ஃப ரென்ஸ்! அடுத்த நாள் ஊருக்குக் கிளம்ப வேண்டும்.

JUN 12 2010

காலையில் எழுந்ததும், ஏனோ பெரியம்மாவின் எஸ்டேட்டிற்குச் சென்று பார்த்து வர வேண்டும் போல்!

இன்று தபஸ்யாவுடன் அங்கு, கேர் டேக்கரும் இருப்பாரென்பதால் காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.


ஏழு வருடங்களுக்கு முன்பு பெரியம்மா இறந்த பிறகு வந்தவன்!

அவருடைய இறப்புக்கு வர இயலாமல், உடல் நிலை சரியான பிறகு வந்த போதுதான், தபஸ்யா சென்னையிலேயே படிப்பைத் தொடர்வது தெரிந்தது.

அதன் பிறகு அவன் மேற்படிப்பிலும், மருத்துவ சேவையிலும் ஆழ்ந்து விட, எப்போதாவது மலேஷியா வரும்போதும் யாருமில்லாத வீட்டைப் பார்க்க மனமின்றி அவருடைய சமாதிக்கு மட்டும் சென்று பூக்களை வைத்து விட்டு திரும்பிச் சென்று விடுவான்!

சொர்ணம் மட்டும் ஒரிரு முறை தபஸ்யா தங்கியிருக்கும் பள்ளி ஹாஸ்டலுக்குச் சென்று பார்த்து விட்டு வந்தது, இன்று ஞாபகம் வருவதாய்!

முதலில், அருள்மொழியின் சமாதிக்குச் சென்று வணங்கியவன், தன் கோரிக்கையை மௌனமாய் செலுத்தி விட்டுக் கிளம்பினான்.



## 7

காரை பங்களாவிற்குள் செலுத்தி போர்டிகோவில் நிறுத்தியபோது, கேர் டேக்கர் பத்மநாபன் ஓடி வந்து வரவேற்றார்.

''வாங்க தம்பி! வாங்க...எவ்வளவு வருஷமாச்சு உங்களைப் பாத்து! அம்மா இல்லாம நீங்க இங்கே வரதையே மறந்திட்டீங்க!''



உற்சாகத்துடன் அழைத்துச் சென்று ஹாலில் அமர வைத்து விட்டு, வேகமாக உள்ளே சென்றார் அவர்.

அந்த வரவேற்பறையில் பார்வையை சுழற்றிய போது அருள்மொழியின் பெரிய புகைப்படம் மாலையிடப்பட்டு கருணைப் பார்வையுடன் அவனை வரவேற்றது!

இயல்பான பிரியத்துடன் அருகில் சென்று நோக்கியவனை, ஒரு அழுத்தமான குரல் கலைத்தது!

''என்ன பத்மநாபன் அங்கிள்? இவர் எதுக்காக இங்கே வந்திருக்காரு... இவங்கப்பா ஏமாத்தி புறக்கணிச்சும் கம்பீரமா வாழ்ந்து காட்டின எங்க அத்தை இறந்தப்ப கூட வராதவரு இப்ப ஏன் வரணும்?''

கூரிய அம்பாய் வார்த்தைகள் தைத்த மறுகணமே வேகமாகத் திரும்பியவன் ஒரு கணம் உறைந்து போனான்!

அவன் காலடியின் கீழ் பூமி பிளந்து அவனை உள் வாங்கியது போல்!

அங்கு சீற்றப் பார்வையுடன் நின்றிருந்தாள் அவனுடைய கனவு நாயகி!

''இவள் யார்.. இங்கு இவள் எப்படி...? அப்படியென்றால்...''

அவன் யூகிக்கும் முன்பே, பத்மநாபன் பதட்டத்துடன் அவளைத் தடுத்தார்.

''தபஸ்யா! அம்மாவோட செல்லப் பிள்ளைம்மா அருள்... இப்படி நீங்க பேசறதை அவங்க ஆத்மாவே விரும்பாது! அம்மா இறந்தப்ப அவருக்கு சிக்கன் பாக்ஸ்... அதான் வரலை!''

அவனுக்குப் பரிந்து வந்தவரை, அவள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை!

''அதெல்லாம் எனக்கு தெரிய வேண்டாம்! அத்தை இறந்தப்புறம் உறவைப் புதுப்பிக்க நினைச்சி யாரும் இங்கே வரவேண்டாம்... அதை நான் விரும்பவும் இல்லைன்னு சொல்லிடுங்க... எனக்கு ஷாப்பிங்குக்கு லேட்டாகுது அங்கிள்! நான் கிளம்பறேன்!''

''ப்ளீஸ் தபும்மா! அவரும் இந்த வீட்டுக்கு உரிமை யுள்ளவருதான்! அதனால...!''

அவரை அலட்சியமாக இடைமறித்தது அவள் குரல்!

''அதனால! அவரை ஆரத்தி எடுத்து வரவேற்க சொல்லறீங்களா? என்னால முடியாது! அவங்கப்பாவால எங்க அத்தை எப்படி புறக்கணிக்கப்பட்டாங்க.. நினைச் சாலே உடம்பெல்லாம் நடுங்குது! என்னால எதையும் மறக்க முடியாது...

''உறவைப் புதுப்பிச்சிக்கலாம்கிற நினைப்போட இனிமே யாரும் இந்த வீட்டுல நுழைய வேண்டாம்! அவரை முதல்லே வெளியே போகச் சொல்லுங்க....''

தபு, அடிபட்ட நாகமாய் சீறிவிட்டு, அவனைத் திரும்பியும் பார்க்காமல் வேகமாக வெளியே சென்றாள்.

அவனைப் பேசவே விடாமல் இருவரும் வாதிட்டு முடிக்க, அவனுக்குள்ளோ பிரளயமே நிகழ்ந்து கொண் டிருந்தது.

கடவுளே... தபஸ்யாவா என் இதய தேவதை? தவறு செய்து விட்டேனோ? நடக்காத ஒன்றிற்காக என் மனதில் பெரும் நம்பிக்கையையும் காதலையும் வளர்த்து



விருட்சமாக்கி விட்டேனே?' ஒரு கணம் இதயம் உலர்ந்து சருகாகியது!

''சாரி தம்பி! அவங்களை தப்பா நினைச்சிக்காதீங்க! அம்மா அனுபவிச்ச தனிமையும், ஐயாவை விட்டுப் பிரிஞ்சு அவங்க தனியா ஜெயிச்சிக் காட்டினதும் தபஸ்யா மனசுல ஆழமாப் பதிஞ்சிடுச்சி! அதான்!''

தர்மசங்கடத்துடன் அவர் கூற, ''ஹூம்! எனக்கும் அவ உணர்வுகள் புரியுது அங்கிள்! அம்மா என்கிட்டே எல்லாம் சொல்லி இருக்காங்க! ஆனா, அப்பா செஞ்ச தப்புக்கு நான் என்ன செய்ய முடியும்? நான் கிளம்பறேன் அங்கிள்!''

அதற்கு மேல் அங்கு தாமதிக்க முடியாமல் கிளம்பி விட்டான்!

மனதிற்குள்... அவன் கட்டியிருந்த காதல் கோட்டை... கடலலைகளின் சீற்றத்தில் சரிந்த மணல் கோட்டையாய் சரியத் துவங்கியது.

தன் இதயம் கவர்ந்த... தன்னை சரித்து வீழ்த்திய அந்த அழகுப் பெண்... தபஸ்யாவாக இருப்பாளென்று அவன் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை!

* * *

அருள், வீடு திரும்ப மனமின்றி, கோலாலம்பூரிலுள்ள ஸ்கை டவருக்குச் சென்றான்.

பல அடி உயரத்தில் அவன் கண்ணாடிச் சுவர்களுக்குப் பின்னால் நின்றிருக்க கீழே அழகிய சொர்க்கமாய் தெரிந்தது மலேஷியா!

உயர்ந்து பறக்கும் ஒரு பறவையின் பார்வையில் பதி யும் உலகத் திரை போல் காட்சிகள் கண் முன் விரிந்தன!

JUN 12 2010

ஒரு ஹெட்போனை மாட்டியபடி அவர்கள் கூறிய வர்ணனைகளுடன் பார்வையைக் கீழே பதித்தும் நெஞ்சம் எங்கோ சென்றது!

* * *

அப்போது, அவன் மருத்துவக் கல்லூரியில் இறுதி வருடம் முடிந்து ஹவுஸ் சர்ஜன் பயிற்சியில் இருந்தான்.

ஒரு நாளிரவு, உறக்கம் வராமல் அவன் பங்களாவிற்கு வெளியே வந்த போதுதான், அங்கு சொர்ணம் தோட்டத்தில் நின்றிருப்பது தெரிந்தது.

சப்தமில்லாமல் அருகில் சென்று ''அம்மா...'' வென்று அழைத்தபோது திடுக்கிட்டு, திரும்பியவரின் விழிகளிலோ, அருவியாய் கண்ணீர்!

அவனைக் கண்டதும் அவர் பதறித் துடைக்க, ''என்னம்மா? ஏன் அழறீங்க?'' கவலையுடன் கேட்டான் அருள்.

தன் தந்தையின் நினைவோ வென்ற கவலை உடனே வந்தது.

''ம்... ஒண்ணுமில்லையப்பா! நீ போய் படு!'' மெதுவாக விலகி உள்ளே செல்ல ஆரம்பித்தார் அவர்.

உடனே அவரைப் பிடித்து நிறுத்தியவன், ''ஏம்மா! என்னாச்சு? சாயந்திரம் பெரியம்மாவோட அண்ணன் வந்திட்டுப் போனதிலிருந்து நீங்க சரியில்லை... நானாவது கூட இருந்திருக்கலாம்... அழற அளவுக்கு என்ன ப்ரச்னை? என்கிட்டே சொல்லக் கூடாதா?'' பரிவுடன் வினவினான்!

''ம்... பழைய நினைவுகள்!''



பெருமூச்சுடன் அவர் கூற, ''அப்பாவை நினைச்சிங்களா?'' என்றான் பரிவுடன்!

''இல்லைப்பா... அன்னிக்கு அக்காகிட்டே ஒரு வரம் கேட்டேன்...ஆனா அவங்க மறுத்துட்டாங்க! அதை நினைச்சேன்.''

ஓய்ந்த குரலில் பதிலளித்தார் சொர்ணம்!

''அப்படி என்னம்மா கேட்டீங்க...?''

அமர்ந்த குரலில் யோசனையுடன் வினவியவனிடம், தன் மனதிலிருந்தவற்றை மடைதிறந்த வெள்ளமாய் கொட்ட ஆரம்பித்தார் அவர்.

''இந்த முறை நான் அவங்களை வரச் சொல்லிக் கேக்கலைப்பா... அவங்க வளக்கிற மக தபஸ்யாவைத்தான் நம்ம வீட்டுக்கு மருமகளா தரச் சொல்லிக் கேட்டேன்.''

அவர் நிறுத்தியதும் கூர்மையுடன் இடுங்கிய விழிகளுடன் அதிர்ந்து நின்றுவிட்டான் அவன்!

அவனை கவனிக்காமலே தொடர்ந்தார் சொர்ணம்!

''அக்கா எனக்கு ஒரே ஒரு ஆசை! நீங்க தான் வந்து எங்களோட இல்லை... எனக்காக இதையாவது செய்வீங்களான்னு கேட்டேன்!''

''உங்களுக்காக இல்லேன்னாலும், அருளுக்காக நான் என்ன வேணா செய்வேன்னாங்க அக்கா! அப்பதான் தைரியமா கேட்டேன்...''

''நம்ம அருளுக்கு உங்க அண்ணன் மகளை குடுத்துடுங்களேன்... உங்களைத்தான் எங்களோட வச்சிக்க முடியலை... அவளையாவது தங்கத் தட்டில வச்சி தாங்கணும் போலருக்கு!''

JUN 12 2010

''நீங்க வளர்க்கிற பெண்தானே! உங்க அண்ணன் நீங்க சொன்னா கேக்காமப் போயிடுவாரா என்னன்னு சொன்னேன். அதுக்கு அவங்க சொன்ன பதில் தான் என்னைக் கலங்க வச்சிது!''

''அவ ரொம்ப சின்னப் பொண்ணு சொர்ணம்... பதினாலு வயசுதான் ஆகுது... இப்பதான் வயசுக்கே வந்திருக்கா! அருளை விட எட்டு வயசு சின்னவ!'' தயக்கத்துடன் நிறுத்தினார்.

''நான் இப்ப கேக்கலையே... இன்னும் அஞ்சாறு வருஷம் போகட்டும்க்கா! தபுவும் படிப்பை முடிக்கட்டும்! அதுக்குள்ளே அருளும் இதய சம்பந்தமான படிப்பை முடிச்சி சர்ஜனாயிடுவான்! அப்ப கல்யாணத்தை வச்சிக்கலாம்!''

விழிகள் மின்ன ஆர்வத்துடன் அவர் யாசித்தபோது, அருள்மொழி கூறிய பதில் இடியாய் அவர் மேல் இறங்கியது.

* * *

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு அருள்மொழி பேச ஆரம்பித்தார்.

''அதில்லை சொர்ணம்! எப்படிச் சொல்றதுன்னே தெரியலை! என் வாழ்க்கை... இப்படியானதுக்கு நீங்கதான் காரணம்னு உங்க மேல அவளுக்கு இனம்புரியா வெறுப்பு வந்திருக்கு! அது எனக்கு சமீபத்துல தான் தெரிய வந்தது!

''அவ வயசுக்கு வந்தப்ப, உங்களை எல்லாம் அழைச்சி சீர் செய்யணும்னு நான் ரொம்ப ஆசைப்பட்டேன்... அப்ப அவ அதை வன்மையாத் தடுத்தா... அப்பதான் அவ மனசே எனக்குப் புரிஞ்சுது!''



''உடனே அதை மறுத்து உங்க ரெண்டு பேரையும் பத்தி நான் பேசினதிலிருந்து, உன் மேல கொஞ்சம் மரியாதை உண்டு!

''ஆனா, அருள் என்று சொன்னாலே போதும் ரொம்ப கோபப்படுவா! அப்பா மாதிரியேதான் பிள்ளையும் இருப்பாரு, யாரையும் மாத்த முடியாதுன்னு என்கிட்ட கோபப்படுவா! அதுவும் உருவத்துல அருள், அவர் மாதிரியே இருக்கானே!''

''அவளை, எவ்வளவோ முயற்சி செஞ்சும் என்னால மாத்த முடியலை! ஒரு விஷயம் கவனிச்சிருக்கியா?

''நீங்க வருவதா இருந்தா, அப்பாவைப் பாத்துட்டு வரேன்னு இந்தியா கிளம்பிடுவா! முன்னாடி எல்லாம் லீவுக்கு போறான்னு நான் நினைப்பேன்!

''அவ சொன்னப்புறம்தான் உண்மைக் காரணமே எனக்குப் புரிஞ்சுது! இதைப் பத்தி நானும் ரொம்பவே யோசிச்சிருக்கேன்!

''எனக்கு உன்னைப் பத்தியும் அருளைப் பத்தியும் நல்லாத் தெரியுமே! அவளை ஒரு பூ மாதிரித் தாங்குவீங்கன்ற நம்பிக்கை எனக்கு இருக்கு...

''எனக்கும் ரொம்ப ஆசைதான்... வயசு வித்தியாசம் என்ன பெரிசு! அருள் என் பிள்ளையாச்சே!

''தபுவோட மனசை என்னால மாத்த முடியும். ஆனா அவளோட பிடிவாதமும் கோபமும் எனக்கு மட்டும் தான் தெரியும்!

''அதோட, பிடிக்காத ஒருத்தியோட இணைச்சி வச்சி அருளோட வாழ்க்கை பாழாகறதையும் என்னால அனுமதிக்க முடியாது!

JUN 12 2010

"பாப்போம்... காலம் இதுக்கு ஒரு நல்ல பதிலைத் தரட்டும்..அவனுக்கும் பக்குவம் மன முதிர்ச்சி வந்தா, உண்மை புரிஞ்சி அவனும் மாறலாம்."

ஒரு பெருமூச்சுடன் அருள்மொழி முடித்துவிட, சொர்ணத்திற்குதான் எதிலோ தோற்ற உணர்வு!

தாயையே பார்த்துக் கொண்டிருந்த அருளோ, தடை நீங்கினாற்போல் அன்று சிரித்தான்!

"ஏம்மா.. இதுக்குப் போயா அழறீங்க? எனக்கு என்ன வயசாயிடுச்சின்னு இப்ப பொண்ணு தேடறீங்க! அதோட அவ ஒரு குழந்தை!

"ப்ச்... நான் நிறைய படிக்கணும்.. சாதிக்கணும்! முப்பது வயசுக்கு குறைஞ்சி என்னால கல்யாணம்கிற வார்த்தையையே நினைச்சிப் பார்க்க முடியாது."

"இனிமே இதைப் பத்திப் பேசி என்னை நீங்க தொந்தரவு செய்யக் கூடாது! புரியுதா! வாங்க உள்ளே போகலாம்."

அவருடைய தோளைப் பற்றி ஆதரவாக உள்ளே அழைத்துச் சென்றான் அவன்.

## 8

அன்று நடந்த அந்த நிகழ்வுகள்.. நேற்று நடந்ததைப்போல், மன வானில் உலா வர, நினைவுகள் மெல்லத் தரையிறங்கின.

சிலையாய் உறைந்து போய் பழைய ஞாபகங்களில் ஆழ்ந்திருந்தவன், மெதுவாக உயிர்த்து அங்கிருந்து வெளியேறி லிஃப்டில் இறங்க ஆரம்பித்தான்.



பிறகு பங்களாவிற்குத் திரும்பியும், காலையில் நடந்ததை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

'பெரியம்மா, அம்மாவின் ஆழ் மன விருப்பப்படியே, தான் தபுவை விரும்பியிருக்க, அவளோ இது எதையுமே அறியாமல் தன்னைக் காரணமின்றி வெறுக்கிறாளே?

'சிறு வயதிலிருந்து விதையாய் ஊன்றப்பட்டு இப்போது விருட்சமாகியிருக்கும் அந்த வெறுப்பு மாறுமா.. இல்லை, தான் அவளை மறக்கத்தான் வேண்டுமா?'

அப்படி நினைத்ததுமே, தன் உயிரையே வேரோடு பிடுங்கி யாரோ வெளியே வீசியதைப் போல் அவனுக்குள் வலிக்க ஆரம்பிப்பதாய்!

"கடவுளே... என் தந்தை செய்த தவறுக்கு என்னை பலிகடாவாக்கி விடாதே... நான் முதன் முதலாக ஒரு பெண்ணை என் இணையாக மனதில் வரித்திருக்கிறேன்.. என்னை ஏமாற்றி விடாதே!"

இதயம் மௌனமாய் இறைஞ்சியது.

மதியம் சாப்பிடக் கூட மனமின்றி படுக்கையில் சாய்ந்தவன் அப்படியே உறங்கிப் போனான்!

வானைத் தொடும் உயர்ந்த மலைச் சிகரம்... சாரலாய் பனிப்பொழிவு... பல வண்ண மலர்களின் வர்ணஜாலம்... இதயத்தையும் வருடும் மெல்லிய தென்றல் காற்று... அங்கே சென்று யாரையோ தேடுகிறான் அவன்!

மெலிதாய் பரவிய பனிச்சாரலுக்கு நடுவே மிதந்து வருகிறது. தபஸ்யாவின் உருவம்...!

ஆனால் அவனைக் கண்டதும் கோபத்துடன் அவள் விலகிச் செல்ல, துரத்தி ஓடுகிறான் அவன்!

"தயா..." அவனுடைய ஒற்றை அழைப்பு தீனமாய்...



JUN 12 2010

சட்டென்ற விழிப்பு வர எழுந்தபோது, அவனுடைய செல் அழைக்க ஆரம்பித்திருந்தது.

எடுத்தால், மேனேஜர் ராம் தான் பேசினார்!

''அருள்... கிளம்பியாச்சா? இன்னும் அரை மணி நேரத்துல கான்ஃப்ரன்ஸ்! நான் உங்களுக்காக அங்கே வெயிட் பண்றேன்!'' என்றார்.

உடனே, பதறி எழுந்தவன் வேகமாகக் கிளம்பி காரை எடுத்து கொண்டு விரைந்த போது தான், தான் கிளம்பத் தாமதமாகி விட்டது உறைத்தது.

பசி வேறு வயற்றில் பாண்டி விளையாட, ஓய்ந் திருந்தான் அவன்.

லாபியில் காத்திருந்த ராமிடம் சாரி சொல்லிவிட்டு மீட்டிங் நடக்கின்ற ஹாலுக்குள் சென்றபோது, ஒருவர் பேச ஆரம்பித்திருந்தார்.

இருக்கையில் அமர்ந்து அமைதியைத் தருவித்தபடி சுற்றிலும் பார்த்தபோது, முன் புற வரிசையில் அமர்ந்திருந் தாள் தபஸ்யா!

அழகிய ஆர்கன்ஸா புடவையில் உயிரோவியமாய் அமர்ந்திருந்தாள்!

காலையில் அவள் சிதற விட்ட வார்த்தைகள் வேகமாய் செவியிலறைந்தன.

தலையைக் குலுக்கி தன்னை சீர்ப்படுத்தியவன் பிறர் பேசுவதை கவனித்துக் குறித்துக் கொண்டான்!

* * *

பிறகு வில்வநாதன் குழுமங்களின் நிர்வாக இயக்குனர் என்ற முறையில் அவன் பேச அழைக்கப்பட்டான்.



''குட் ஈவினிங் எவ்ரிபடி...!'' என்றழைத்து அழகிய ஆங்கிலத்தில் மிக எளிமையாய், மிடுக்காய், ஆனால் வெகு கம்பீரத்துடன் பேசத் துவங்கினான்.

வயதுக்கு மீறிய நிர்வாகத்திறனும், புத்திசாலித்தனமும் அவனிடம் மேலோங்கி இருப்பதை அங்குள்ள அனை வருமே உணர, தபஸ்யாவோ திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனுடைய அழகும், கம்பீரமும், ஆண்மையும் முதன் முதலாக மனதில் பதிய, அவன் பேச்சும் வேறு அதற்கு சுதி சேர்த்தது.

தலையை சிலுப்பி அந்த ஆளுமையிலிருந்து தன்னை அவள் விடுவிக்கும் போதே, அருள்மொழி அத்தைக்கு அவன் தந்தை செய்த துரோகம் நினைவுக்கு வருவதாய்!

மனம் நிறைய வெறுப்பும் காழ்ப்புணர்ச்சியும் வன்மத் துடன் நிறைய, இப்போது அவனைக் கண்டாலே வெறுப்பும் தகிப்புமாய்!

அவளைச் சுற்றி, தீ ஜ்வாலைகளாய் பழைய ஞாப கங்கள்!

அதே நேரம், அவளுடைய செல் அழைக்க எடுத்துப் பேசியவளுக்கு, மறுகணமே முகம் வெளுத்து கண்கள் கலங்கிப் போயின!

உடனே, பதட்டத்துடன் எழுந்தவள், அருகிலிருந்த வரிடம் 'சாரி...' சொல்லிவிட்டு வெளியேற ஆரம்பித் தாள்.

ஆனால், அவளிடம் அசைவை உணர்ந்து கவனித்த வனின் முகமோ பாறையாய் இறுகிப் போனது...

அவனுடைய பேச்சின் நடுவே, அலட்சியமாக அவள் எழுந்து வெளியே சென்றது... அவனுக்குள் எரிதழலாய்!

அதுவரை துவண்டிருந்த உள்ளம், அந்த அலட்சியத்திலும், புறக்கணிப்பிலும் சிலிர்த்து வலிமையாய் மாற, அவளை எப்படியாவது சரித்து வீழ்த்த வேண்டும் என்ற உறுதியும் வேட்கையும் வந்தன.

ஆழ்மனதிலிருந்த காதல், வன்மையுடன் மேலெழும்பி ரௌத்ரமாய்... வெறியாய் மாறியது!

அன்று முழுவதும் அந்த மனநிலையே தொடர, வெகு வாய் இறுகிப் போயிருந்தவன், மறு நாள் காலையில் கிளம்பிய போது ஒரு முடிவிற்கு வந்திருந்தான்.

ஊருக்குச் சென்றபிறகு, உடனே அம்மாவிடமும், வேணியக்காவிடமும் பேசிவிட்டு, தபஸ்யாவின் தந்தையை தொடர்பு கொண்டு பேச வேண்டுமென்ற முடிவு அவனுள் உறுதியாய் இறுகியது.

* * *

மறுநாள் காலையிலேயே கிளம்பியவன், மதியம் சென்னைக்கு வந்து சேர்ந்த போது மனம் தீவிர யோசனையிலிருந்தது.

அவனை ஆவலுடன் வரவேற்ற சொர்ணத்திற்கோ, அந்த முகம் பெரும் வேதனையைத் தருவதாய்!

''என்னப்பா? ட்ரிப் நல்லாயிருந்ததா? ஏன் டல்லா, டென்ஷனா இருக்கே? மலேஷியாவில் எஸ்டேட்டில ஏதாவது பிரச்சனையா?'' கவலையுடன் வினவினார்.

மலேஷியாவிற்கு செல்லும் முன்பு அவனிடமிருந்த துள்ளல், உற்சாகமெல்லாம் இன்று வடிந்து காணாமல் போயிருப்பதைப் போல்!



''ஊஹூம்'' என்றபடி அவரருகில் வந்து அமர்ந்தவனிடம், பழைய இறுக்கமும், நாணேற்றிய வில்லின் விரைப்பும் இணைந்து தடம் பதித்திருந்தன!

''பின்னே ஏன் இப்படி இருக்கே அருள்? நான் என் மருமகளுக்காக ஆசையோடக் காத்திட்டிருக்கேன்... எப்போ அந்த தேவதையைக் கண்டுபிடிச்சி அழைச்சிட்டு வந்து என் மருமகளாக்கப் போறே?'' ஆவலுடன் கேட்டார்.

''ம்... அவளைக் கண்டுபிடிச்சிட்டேம்மா!'' அவன் குரல் சுரத்தின்றி வந்தது, அவருக்கு பெரும் வியப்பாய்!

''அருள்! அதை ஏன் இப்படி சலிப்பா சொல்றே? துள்ளிக் குதிச்சி சொல்ல வேண்டிய விஷயம் இது!

''எப்ப இந்த வீட்டுக்கு விளக்கேத்த அந்த மகாலெஷ்மியை அழைச்சிட்டு வரப் போறே...? அவ பேரென்ன? அவ போட்டோ இருக்கா?''

படபடவெனப் பொரிந்து ஆர்ப்பரித்தவரை யோசனையுடன் ஊடுருவியபடி மௌனமாக இருந்தான் அருள்.

''என்ன அருள் பேசாம இருக்கே? என் அவசரமும் ஆனந்தமும் புரியாம..? அவ பேரென்னப்பா?''

வாஞ்சையுடன் வினவிய அவர் குரலை சட்டென்று இடைமறித்தான் அவன்.

''அம்மா! ரொம்ப சந்தோஷப்படாதீங்க.. அவ பேரு தபஸ்யா! அவ.. வேற யாருமில்லை.. பெரியம்மாவோட அண்ணன் பொண்ணு.. அவங்க வளர்த்த தபுதான் அவ!''

அவன் கூறியதும் அவர் முகத்தில் கோடி மின்னல் ஒன்றாய் தெறித்த பிரகாசம்!

''கடவுளே! என் வேண்டுதல் நிறைவேறிடுச்சி! இதைத்தானே இத்தனை நாள் வேண்டினேன்!'' என்றவர் உடனே இண்டர்காமை இயக்கினார்.

JUN 12 2010

"நல்ல சிவம்! இங்கே வாங்க..." என்று வைத்ததும் பதட்டத்துடன் வேகமாய் ஓடிவந்தார் அவர்.

"என்னம்மா? அவசரமா கூப்பிட்டீங்க" பயத்துடன் வினவினார்.

"திருத்தணிக்கு சிறப்பு, ஆராதனைக்கு உடனே ஏற்பாடு செய்யுங்க! இன்னிக்கு நம்ம மருத்துவமனையில பிறக்குற குழந்தைங்களுக்கு தங்க மோதிரம் பரிசாக் குடுங்க... திருப்பதிக்கு கல்யாண சேவைக்கு நாள் கேட்டு புக் பண்ணுங்க!"

அவர் தொடர, "அம்மா.."வென்று ஓங்கி அதட்டி அடக்கியது அருளின் குரல்!

முகம் சுருங்கி விட நல்லசிவத்திடம் திரும்பியவர், "நான் சொன்னதெல்லாம் ஏற்பாடு செய்யுங்க!" என்று அவரை அனுப்பினார்.

"அம்மா! நடக்கவே முடியாத ஒரு விஷயத்துக்காக ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம்?" கடும் சினத்துடன் சீறினான் அவன்.

அவர் முகத்திலோ... குழப்ப ரேகைகள் அதிகமாய்!

"ஏம்பா நடக்காது... அதெல்லாம் நடக்கும்! தபுதான் நம்ம வீட்டு மருமகள்... முன்னாடியே நாங்க முடிவெடுத்ததுதான் இப்ப நடந்திருக்கு."

உச்சகட்ட சந்தோஷத்திலிருந்தார் சொர்ணம்!

அவருக்கு என்ன பதில் சொல்வதென்றும் புரியாமல், அவருடைய சந்தோஷத்தையும் கலைக்க மனமின்றி அவன் திகைத்து அமர்ந்திருந்த போதே செல் இசையாய் சிணுங்கி அழைத்தது!



எடுத்தவுடனே, ஸ்கிரீன் சேவரில் கண்மூடித் தெரிந்த தபஸ்யாவின் முகம்... இன்று அவனுள் சினத்தைப் படரச் செய்வதாய்!

"ஹலோ.. அருள் ஹியர்!" என்றதும் கேட்ட செய்தியில் பூமியே தன் சுழற்சியை நிறுத்தியதைப் போல்!

"டாக்டர்! விநாயகம் இண்டஸ்ட்ரீஸ் விநாயக பெருமாள், நேத்து செகண்ட் அட்டாக் வந்து நம்ம ஹாஸ்பிடல்லே தான் அட்மிட் ஆகியிருக்காரு!

"இப்ப பரவாயில்லை! ஆனா, அவர் உடனே உங்களை பார்க்கணும்கிறாரு!"

அவனுடைய அசிஸ்டெண்ட், தாஸ் போனில் கூற, ஏதோ யோசனையில் புருவங்கள் நெறிந்தன.

பேசி முடித்த உடனே, சொர்ணத்திடம் கூறிவிட்டு குளித்து தயாராகிக் கிளம்பினான்.

## 9

மருத்துவமனையில், விநாயகம் ஐ.சி.யூ.விலிருக்க, வெளியே காரிடாரில் அமர்ந்திருந்தாள் தபஸ்யா!

மனம் முழுவதும், தந்தையைப் பற்றிய பயமும், கவலையுமே நிறைந்திருந்தன.

இது அவருக்கு இரண்டாவது அட்டாக் என்பதால், உடனே ஆபரேஷன் செய்ய வேண்டுமென்று டாக்டர்கள் கூறி விட்டனர்.

JUN 12 2010

இன்று சீஃப் சர்ஜன் வந்து விடுவாரென்றும், அவருடன் கலந்து முடிவு செய்வோம் என்றும் சொல்லியிருந்தனர்.

மலேஷியாவிற்கு சென்றதிலிருந்தே, அவளுக்கு நேரம் சரியில்லாதது போல்!

அங்கு கான்ஃப்ரென்ஸிற்கு சென்றதும், ஏர்போர்ட்டில் வரவேற்ற தந்தையின் நண்பருடைய குடும்பத்துடன் உற்சாகமாகத்தான் சென்றாள்... பிறகும் ஜாலியாகத்தான் ஊரைச் சுற்றினாள்!

ஆனால், நேற்று காலையில்தான் பிடித்தது சனி!

ஷாப்பிங் கிளம்பிக் கொண்டிருந்தவளிடம், பத்மநாபன் வந்து அந்த செய்தியைக் கூறினார்.

வெகு காலமாக... பாராமலே மிகவும் வெறுத்து வந்த அருள் வந்திருக்கிறான் என்று அறிந்த போது, அவள் உடலே அனலாய் தகிக்க ஆரம்பித்தது.

அவளுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே, அருள்மொழி அத்தையின் வாழ்க்கை ஒரு புதிராய்!

பிறகு, அவளுடைய தந்தை கூறியதும், வேலைக்காரர்களிடமிருந்து அவள் அறிந்த விபரங்களும் அவளை எரிமலையாக்கின.

அவளுடைய அத்தையை ஏமாற்றி விட்டு வேறு ஒருவரை மணந்த வில்வநாதனின் மேல் வெறுப்புச் சதவீதம் அவளறியாமலே அதிகரித்தது.

அது அவர் குடும்பத்தின் மீதும் தொடர்கதையாக, அருள் என்ற பெயரே கசப்பாய்!

அவள் வயதுக்கு வந்தபோது, அவர்களை அழைக்க வேண்டும் என்று அத்தை கூற, பிடிவாதமாக மறுத்து விட்டாள்.



ஆனால், சொர்ணத்தைப் பற்றி அவர் கூறியது மனதை சிறிது இளகச் செய்தாலும், அருள் என்றாலே அவளுக்கு வெறுப்பாய்!

அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

ஒன்று.. அவன் வில்வநாதனின் மகன்.. அவருடைய குணம் அவனிடமும் பதிந்திருக்கும் என்ற காழ்ப்புணர்ச்சி!

இரண்டாவது.. தன் அருமை அத்தை, தனக்கு ஈடாக அவனிடம் அன்பு செலுத்தி, எப்போதுமே அவனை உயர்த்திப் பேசியது வேறு.அவன் மீது இனம் புரியா துவேஷத்தையும் பொறாமையையும் வரவழைத்திருந்தன!

மொத்தத்தில்... அவன் முகம் பாராமலே 'அருள் வேந்தன்' என்ற பெயரை அருவெறுப்புடன் ஒதுக்கி வந்தவளுக்கு, நேற்று அவனைக் கண்டதும் சீற்றமும், வேகமும் அதிகரித்ததுதான் உண்மையாய்!

அதனாலேயே.. வார்த்தைகள் அவன் மீது திராவகத்தை வீசின.

அத்தையின் இறப்பிற்குக் கூட வராதவன், இத்தனை வருடங்கள் கழித்து இன்று எதற்காக வந்திருக்கிறான்?

இன்று.. உலகத்திலேயே தான் அதிகமாக வெறுக்கும் ஒருவன் யாரென்று கேட்டால், அது அருள்தான் என்று யோசிக்காமலே கூறும் அளவுக்கு, அவனிடம் பழி உணர்ச்சியும், குரோதமும் அதிகமாய்!

அதனாலேயே முகத்திலறைந்தாற் போல் அவனுக்கு பதில் கொடுத்து, வீட்டை விட்டு துரத்துவதைப் போல் கடும் சொற்களை வீசினாள்.

இதுவரை அவள் யாரிடமும் இது போல் பேசியதேயில்லை! மரியாதையின்றி நடந்ததுமில்லை!

JUN 12 2010

முதன் முறை என்பதால், மனதைக் கூட வெகுவாக உறுத்திற்று!

ஆனால்.. அத்தைக்கு... தன்னை உயிராய் வளர்த்த வருக்கு அநியாயம் செய்த குடும்பத்தை, தண்டித்த ஒரு திருப்தி உணர்வு!

ஆனால், இன்று தன் தந்தையிடம் பேசிய போதுதான் தன் தவறு புரிவதாய்!

ஐசியூவில் இருந்த நிலையிலும், ''ஏம்மா.. அந்த அருளை அப்படிப் பேசினே?'' அவர் கேட்டபோது உறைந்துதான் போனாள்.

''உங்களுக்கு... எப்படிப்பா தெரியும்?''

அவள் விதிர்ப்புடன் வினவ, ''பத்மநாபன் சொன் னாரும்மா.. தப்புடா!'' என்றதோடு வேதனையுடன் கண்களை இறுக மூடிக் கொண்டார், விநாயகம்!

'கடவுளே.. இதை ஏன் பத்மநாபன் அங்கிள் அப்பாவிடம் சொன்னார்...? இந்த நேரத்திலும் அதை அவரால் மறக்க முடியவில்லையே!'

இனம் புரியாக் கவலையும், வேதனையும் மனதை நிறைத்தன!

யார் என்ன சொன்னாலும், தன்னால் வில்வநாதனை மட்டும் மன்னிக்க முடியாதென்பது புரிவதாய்!

அதில் பாதியளவாவது வெறுப்பும், கோபமும் அருள் மீதும் கனமாய் படிந்திருந்தன.

'அவனைச் சொன்னால் அப்பாவிற்கு ஏன் கஷ்டமாக இருக்கிறது? இனி அவருக்கு உடல்நிலை சரியாகும் வரை எதுவும் பேசக்கூடாது' முடிவெடுத்தாள் அவள்!

* * *



மருத்துவமனைக்கு கிளம்பிய அருள், நேரே தன் அறைக்கு போய் சில ஃபைல்களில் கையெழுத்திட்டான்.

பிறகு, ஐசியூவிற்கு விநாயகத்தைப் பார்க்கச் சென் றான்.

வெளியே வெயிட்டிங் அறையில் ஏதோ யோசனை யுடன் கண்மூடிச் சாய்ந்திருந்தாள் தபஸ்யா!

அவளைக் கண்டதும்.. அருளுக்குள் அதுவரை மறைந் திருந்த உணர்வுகள் பேயாட்டம் போட ஆரம்பித்தன.

மருத்துவர்கள், நர்ஸ்கள் என பரிவாரங்களுடன் உள்ளே நுழைந்த அருளைக் கண்டதும், கட்டிலிலிருந்து எழ முயன்றார் விநாயகம்!

அவரைக் கையமர்த்தி அமைதிப்படுத்தி படுக்கச் செய்து அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

நிமிர்ந்தபோது அவர் விழிகள் கலங்கியிருந்தன.

ஒன்றும் புரியாமல் விழித்தாலும், தன்னை சுற்றி அசிஸ் டெண்ட்களும் நர்சும் இருப்பதை உணர்ந்து கடமையே கண்ணாக ஒரு மருத்துவராய் செயல்பட்டான் அருள்.

பெருமையும், அமைதியுமாய் அவனையே பார்த் திருந்தவரிடம், ''அங்கிள்! நாங்க எல்லாரும் இருக்கும் போது எதுக்கு பயம்? கவலைப்படாதீங்க.. எல்லாம் சரியாயிடும்! நான் ரவுண்ட்ஸ் முடிச்சிட்டு வரேன்...''

அவருடைய கையைப் பற்றி ஆதரவாக அழுத்தி அவன் விடைபெற, பரிவும் பாசமும் சுமந்த அவர் விழிகள் அவனையே தொடர்ந்தன.

அப்போது, தன் தங்கையின் இறுதிக் கோரிக்கை நினைவிற்கு வந்தது.

பிறகு, தனியாக அருள் வந்தபோது, வாஞ்சையுடன் அவன் கையைப் பற்றிக் கொண்டார்.

''அருள்! எனக்கு ஒரு ஆசை இருக்கு.. உன் பெரியம்மா விருப்பமும் அது தான்.. அதை நிறைவேத்துவீங்களா?'' இறைஞ்சும் குரலில் கேட்டார்.

''என்ன அங்கிள் சொல்லுங்க! ஆபரேஷனுக்கு மட்டும் பயப்படாதீங்க.. நான்தான் செய்யப் போறேன். நீங்க சீக்கிரமே நார்மலாயிடுவீங்க பாருங்க'' மெதுவாக தேறுதல் கூறினான்.

''அந்த நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கு அருள்! இப்போ அது பிரச்சனை இல்லை!

''என் பொண்ணு தபஸ்யாவுக்கு நீங்க தான் கணவரா வரணும்னுகிறது என் தங்கையோட ஆசை... என் விருப்பமும் அதுதான்!

''ஆனா, நான் உங்களை கட்டாயப்படுத்த மாட்டேன்! உங்களுக்கு விருப்பமிருந்தா எங்க கனவு நிறைவேறும்!''

ஒருவித எதிர்பார்ப்புடன் அவருடைய கண்கள் பளபளக்க, பெருமூச்சுடன் முடித்தார்.

உடனே, அவன் முகமும் மகிழ்ச்சியில் விரிய, அதைக் கண்ட விநாயகத்துக்கோ தாங்க முடியாத உற்சாகம் வருவதாய்!

ஆனால், அவர் கண்டது கனவோ என்பது போல், மறுநொடியே அவன் முகம் சுருங்கி இறுக பதறிப்போனார் அவர்!

''என்னப்பா.. ஏன் உங்க முகம் இப்படி மாறுது? பிடிக்காத விஷயத்தை நான் உங்க மேல திணிக்கறேன்னு நினைக்கறீங்களா?'' தவிப்புடன் கேட்...



''அதில்லை அங்கிள்! இப்ப.. நம்ம விருப்பத்தை விட உங்க பொண்ணுக்கு இதிலே இஷ்டமிருக்கான்னு முதல்லே கேக்கனும்! அதான் முக்கியம்!''

''அதெல்லாம் நான் பார்த்துக்கறேன் அருள்! அவ என் பேச்சை மீறமாட்டா!''

நம்பிக்கையுடன் கூறியவரிடம் மறுக்க மனமின்றி எழுந்தான் அவன்.

''நாளைக்கு உங்களை ரூமுக்கு மாத்திடுவாங்க! ஆப்சர்வேஷன்லே ஒரு வாரம் வச்சிருந்து அப்புறமா ஆபரேஷனைப் பற்றி முடிவு செய்யலாம்! எதையும் போட்டு குழப்பிக்க வேண்டாம்.. ரெஸ்ட் எடுங்க!'' என்றபடி சிறு முறுவலுடன் அவன் வெளியேறினான்.

* * *

மறுநாள், அவன் ரவுண்ட்ஸ் வந்தபோது, விநாயகம் அறைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அவருடைய அறைக்குச் சென்றபோது, யாரோ ஒரு உறவினர் உடனிருக்க, தபஸ்யா வீட்டிற்குச் சென்றிருப்பது தெரிந்தது!

அவரை பரிசோதிக்கும் போதே, வீல் சேரில் அங்கு வந்து விட்டார் சொர்ணம்!

''நல்லாருக்கீங்களாண்ணா! இன்னிக்கு தான் ரூமுக்கு உங்களை மாத்தறதா அருள் சொன்னான்! எப்படி இருக்கீங்க?'' ஆதரவாகக் கைகளைப் பற்றியபடி கேட்டார்.

''நான் நல்லாருக்கேன்மா! ஆனா நான் விரும்பறது தான் நடக்காது போலருக்கு'' அவர் குரல் பெரிதும் உடைந்திருந்தது.

''கவலைப்படாதீங்க... எல்லாம் அருள் சொன்னான்... நடக்கும்.. நம்பிக்கை வைங்க''

மெதுவாக அவரை ஆறுதல் படுத்தினார் சொர்ணம்.

பிறகு உதவியாளர்களை அனுப்பி விட்டு அறைக்குள் வந்த அருளின் முகமோ, கடும் யோசனையாய்!

நேற்றிரவு, வேணியக்காவிடம் பேசிய போது அவர் கூறியது ஞாபக அடுக்குகளில் சுழல ஆரம்பித்தது.

## 10

மலேஷியாவில், தபஸ்யாவை சந்தித்த விபரமும் அவள்தான் தன் இதயத்தில் இடம் பிடித்த ஆதர்சப் பெண் என்பதையும் அவள் வெறுப்பையும் உதாசீனத்தையும் பற்றி முதலில் வேணியிடம் கூறினான் அவன்.

உடனே அவரிடம் திரை விழுந்தாற் போல் ஒரு விதக் கடுமையும், வேதனையும் தெரிந்தன.

அதே கவலையில் முகம் சுருங்கி விட, ''அருள்! இதை நான் எதிர்பார்க்கவேயில்லை!

''அருள்மொழி அம்மாவோட விருப்பமும், உங்க அம்மா ஆசையும் நிறைவேற ஒரு சந்தர்ப்பம் வந்திருக்குன்னு நினைச்சு சந்தோஷப்படறதா?

''இல்லை... தேவையில்லாத கசப்பையும் வெறுப்பையும் மனசுல சுமந்து அவ உன்னை நியாயமே இல்லாம ஒதுக்கறதை நினைச்சி கவலைப்படறதா... புரியலை அருள்!''



அவர் குரல் பெரிதும் உடைந்திருந்தது.

ஆனால், மறுகணமே சமாளித்து நிமிர்ந்தவர், ''கவலைப்படாதே அருள்! உன்னை இப்படி ஒரு ஓய்ஞ்ச தோற்றத்துல நான் பாத்ததே இல்லை! உங்கப்பா செஞ்ச தவறுக்கு நீ எப்படிப் பொறுப்பாளியாக முடியும்? நான் அவகிட்ட பேசறேன்'' அழுத்தமான குரலில் முடித்தார்.

''அக்கா! அதோட இன்னொரு விஷயம்!'' என்றவன், விநாயகத்தை சந்தித்ததையும், அவர் தன் மருத்துவ மனையிலேயே அனுமதிக்கப்பட்டிருப்பதையும், அவரின் விருப்பத்தையும் கூறினான்.

சட்டென்று அவர் முகம் மத்தாப்பூவாய் மலர்ந்து.. கவலைகளைக் களைந்தது!

''இதை விடப் பெரிய ஆயுதம், நமக்கு வேறென்ன வேணும் அருள்? அவங்கப்பாவும் அதைத்தானே விரும்பறாரு!

''நீ... உன் பெரியம்மா.. சொர்ணம்மா.. உன் மாமனார்.. நான்.. இப்படி எல்லார் விருப்பமும் ஒரே மாதிரி இருக்கும் போது நீ ஏன் தயங்கறே அருள்? அவ ஒருத்திதானே... சுலபமா அவளை மாத்திடலாம்!''

அவர் வார்த்தைகள்... கோடி பலம் தந்தன.

''ஆனா, இதில முக்கியமானவ அவதானேக்கா! அவ சம்மதம் இல்லாம எப்படி?''

பரிதவிப்புடன் கேட்டவனையே பரிவுடன் நோக்கியவர், ''அருள்! அவ மனசுல இருக்கறது தேவையில்லாத ஒரு வெறுப்பு! அது தப்பு! தவறா ஒரு கணிப்பு பதிவாகி அது புரையோடிப் போயிருக்கு.''

JUN 12 2010

''நீயே ஒரு டாக்டர்! இப்போ ஒரு இடத்துல செப்டிக் ஆகிட்டா, ஆபரேஷன் செஞ்சு அதை குணப்படுத்தற தில்லையா? அதைத் தான் நாமும் செய்யலாமின்னு சொல்றேன்!

''உங்க கல்யாணம்தான், அந்த அறுவை சிகிச்சை... அதுக்கப்புறம் உண்மை புரிஞ்சு அவ நிச்சயமா மாறு வாப்பா! நீ வேணா பாரு... இது நடக்கத்தான் போகுது!''

அவருடைய வார்த்தைகள் பெரும் சுகமாய் சிலிர்ப்பாய் பரவ, மீண்ட தைரியத்துடன் எழுந்தான் அருள்!

''எவ்வளவு தைரியமானவன் அருள் நீ? எந்த நேரத்திலயும் தளர்ந்ததே இல்லையே! அப்பா இறந்தப்ப கூட மனசில வலிமையோட அந்த இழப்பைத் தாங்கின வனாச்சே!''

''இப்போ அந்த மன வலிமையும், தைரியமும் எங்கே போச்சு அருள்? ஒரு பொண்ணால அது தொலைஞ்சு போச்சா? பயமாருக்கு!'' வேணி பிசிர் தட்டிய குரலில் முடித்தார்.

''இல்லைக்கா! எதுவுமே தொலைஞ்சு போகலை! ஒரு பொண்ணோட விருப்பம் இல்லாம அவளை கட்டாயப் படுத்தறது தப்போன்ற நியாய உணர்வும், தப்பான ஒரு முடிவை எடுத்துட்டோமோன்ற தயக்கமும் தான் என்னை அலைக்கழிச்சுது!''

''இப்ப நான் தெளிஞ்சிட்டேன்! விநாயகம் அங்கி ளோடப் பேசி சீக்கிரமே ஒரு முடிவெடுக்கிறேன்!''

உறுதியுடன் அழுத்தமாகக் கூறிவிட்டு விடைபெற் றான்.

* * *



''என்னப்பா அருள்? ரொம்ப யோசனையில இருக்கீங்க போலருக்கு.''

விநாயகம் வினவ அவனுடைய கனவுலகம் கலைந்தது.

''ம்... என்ன அங்கிள்... அம்மா என்ன சொல்றாங்க?'' என்றபடி அருகில் அமர்ந்தான்.

''இப்பல்லாம், அவங்க எங்கேயும் வரதில்லையாமே! இன்னிக்கு உங்க கல்யாணத்தைப் பத்தி பேசத்தான் இங்கே வந்திருக்காங்க! அவங்களோட ஆசையைத் தெரிஞ்சிக்கிட்டப்புறம், எனக்கும் ரொம்ப சந்தோஷம்!

''அருள் மாதிரி, சொர்ணமும் என் தங்கச்சி தானே! அதான் உடனே உன் பெரியம்மா எனக்கு எழுதின லெட்டரை அவங்ககிட்டயே குடுத்திட்டேன்'' என்றார்.

அவன் ஆவலுடன் திரும்ப, தன் கையிலிருந்த கடிதத்தை அருளிடம் கொடுத்தார் சொர்ணம்!

அருள்மொழி, மரணப் படுக்கையில் இருந்தபோது தன் அண்ணனுக்கு எழுதிய கடிதம்!

தனது மகன் அருளுக்கு, தான் உயிராய் வளர்த்த தபுவைத் திருமணம் முடித்துத் தர வேண்டும் என்று முதலில் அண்ணனுக்கு ஒரு கோரிக்கை வைத்திருந்தார்.

அருளை விட சிறந்த மாப்பிள்ளையை, இவ்வுலகி லேயே பார்க்க முடியாதென்றும், இந்த உதவியை தனக்கு செய்யும் படியும் வேண்டியிருந்தார்.

தன்னைப் போலவே தபுவும் பிடிவாதமான ஒரு பெண் என்பதால், அவளை எப்படியாவது மனதை மாற்றி இதற்கு சம்மதிக்க வைக்க வேண்டும் என்றும் ஆணை யிட்டிருந்தாள்.

* * *

அந்தக் கடிதம்.. அவனுக்குள் பல விதமான உணர்வுகள் ஊஞ்சலாய் ஆட, பெரியம்மாவிற்கு மானசீகமாய் நன்றி கூறியது இதயம்!

அப்போதுதான் விநாயகம் பேச ஆரம்பித்தார்.

''அருள்! இன்னிக்கு காலையிலதான், தபுவோட இதுபத்திப் பேசினேன்... அவ பிடிவாதமா, மறுத்துட்டா! கோபமாகக் கிளம்பி வீட்டுக்குப் போயிட்டா!''

''ஆனா, எனக்கு உடனே ஒரு ஐடியா வந்துடுச்சி! இதை நாமதான் சாமர்த்தியமா முடிக்கணும்! அவளுக்கு நல்லதுதானே செய்யப் போறேன்... அதனாலே அவ கொஞ்சம் வருத்தப்பட்டா பரவாயில்லை!''

''இந்த ஆபரேஷனுக்குள்ளே அவ கல்யாணத்தைப் பாக்கணும்னு முதல்லே நான் அவகிட்டப் பேசறேன்! இந்த சூழ்நிலையில அவளால மறுக்க முடியாது!''

''அப்புறம், நீங்கதான் இந்த ஆபரேஷனை செய்யணும்னு நான் சொல்லுவேன்! உங்களை இது வரைக்கும் அவ பாக்கலை... சீஃப் சர்ஜன் நீங்கதான்னு அவளுக்குத் தெரியாது!''

''அவ உங்ககிட்டே பேச வருவா... அப்ப நீங்க அவளோடப் பேசுங்க! என்ன பேசுவீங்களோ எப்படி அவளை மாத்துவீங்களோ... என் ஆபரேஷக்குள்ளே உங்க கல்யாணம் நடக்கணும்'' பிடிவாதமாக முடித்தார்.

''இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே ஆபரேஷன் செய்யணும்... அதனால கல்யாணத்தை அப்புறம் வச்சிக்கலாம்... அவ சம்மதத்தை முதல்லே வாங்கிடறேன்!''

ஆழ்ந்த குரலில் அவன் பகர, ''இல்லை அருள்.. ஆபரேஷன் முடிவு எப்படி வேணாலும் இருக்கலாம்...



அதுக்குள்ளே என் பொண்ணு கல்யாணத்தை நான் பாக்கணும்!'' வேதனையுடன் நிறுத்தினார்.

உடனே, அவன் விழிகளில் ஒரு குறுஞ்சிரிப்பு தடம் பதித்தது.

''அங்கிள்! என் மேல அவ்வளவு நம்பிக்கையில்லையா? என் ட்ரீட்மெண்ட் அவ்வளவுதான்னு முடிவெடுத்திட்டீங்களா?'' குறும்புடன் கேட்டான்.

''இல்லைப்பா... சாரி! நான் தபுகிட்டே பேச வேண்டியதை, தெரியாம உங்ககிட்ட சொல்லிட்டேன்...! இது ஒரு ஆயுதம்ப்பா அருள்... உங்க கல்யாணம் கட்டாயம் நடக்கணும்!''

அவர் குரலில் பெரும் ஏக்கமும், தீவிர எதிர்பார்ப்பும் தெரிந்தன.

''நீங்க கவலைப்படாதீங்க அண்ணா! என் பையன் எல்லாம் பாத்துப்பான்! தபுவை அருள் மாத்திடுவான் பாருங்க! நான் போய் கல்யாணத்துக்குத் தேவையான எல்லா வேலையையும் பாக்கறேன்.''

சக்கர நாற்காலியைத் தள்ளியபடி உற்சாகத்துடன் கிளம்பி விட்டார் சொர்ணம்.

விநாயகத்தின் உறவினர் நமட்டுச் சிரிப்புடன் விடை கொடுக்க இருவரும் வெளியே வந்தனர்.

## 11

அப்போதுதான் கறுப்பு நிற ஜீன்ஸும், வெள்ளை நிற குர்த்தாவுமாக வேக நடையுடன் தபு வெராந்தாவின் கோடியில் வருவதை கவனித்தான் அவன்!

"அம்மா! அதோ பாருங்க உங்க மருமக வரா!"

அவன் குறும்புடன் கூற. அவளோ இருவரையும் கவனிக்கவேயில்லை!

தனக்குள்ளேயே மூழ்கியபடி யோசனையுடன் வந்தவளைப் பார்த்த சொர்ணமோ, பரவசத்துடன் திரும்பினார்.

"நான் உள்ளே போயிடறேன்! நீ உடனே கிளம்பு அருள்... அவகிட்டே நான் பேசணும்!" பரபரத்தார்.

"என்னம்மா! மருமகளைக் கண்டதும் மகனை விரட்டறீங்க! இதான்! ப்ச்... இந்த லேடீஸ் சேர்ந்தாலே எங்களை ஓரம் கட்டிடுவீங்களே!"

குறும்புடன் கூறிவிட்டு எதிர்ப்புறம் திரும்பி நடக்க ஆரம்பித்தான் அவன்.

சொர்ணம் வீல்சேரைத் தள்ளியபடி மீண்டும் உள்ளே சென்று சைகையால் தபு வருவதை விநாயகத்திடம் தெரிவித்தார்.

வேகமாக அறைக்குள் நுழைந்தவள். அங்கு சொர்ணத்தை எதிர்பார்க்கவில்லை என்பதை அவளின் வியந்த விழிகள் அறிவித்தன.

"என்னம்மா அப்படிப் பாக்கறே! நம்ம சொர்ணம்தான்... உங்கத்தை!" அதில் அழுத்தம் கொடுத்து முடித்தார் விநாயகம்.

உடனே அவள் முகத்திலும் சிறு பிரகாசம் தெரிவதாய்!

"அத்தை உங்களைப் பத்தி நிறைய சொல்லியிருக்காங்க! அவங்களுக்கு உங்க மேல ரொம்பப் பிரியம்!

"எனக்கும் உங்களைப் பாக்கணும்னு தோணும்.. ஆனா..." பழைய நினைவுகள் மனதை நிறைக்க நிறுத்தினாள்!



அவளுடைய உணர்வுகள் அவருக்குப் புரிந்தன.

"அதெல்லாம் இருக்கட்டும்.. எப்படிம்மா இருக்கே? படிப்பெல்லாம் முடிஞ்சுதா? நான் கூட உன்னை வயசுக்கு வந்த புதுசிலப் பார்த்தது! ம்.. நாங்க மலேஷியா வரப்பதான் நீ லீவுக்கு இங்கே வந்துருவியே!"

"ம்..." இனம்புரியா குற்றவுணர்வுடன் தலையசைத்தவள், "என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க! அப்படியே அப்பா நல்லபடியா உடம்பு சரியாகி வீட்டுக்கு வரணும்னு வாழ்த்துங்க!" என்றபடி சொர்ணத்தின் காலைத் தொட்டு வணங்கினாள்!

உடனே, உணர்ச்சிகளின் பிடியில் தன்னை இழந்த சொர்ணமும் ஒரு கையால் அவளை ஆசீர்வதித்தார்.

அப்போதுதான் அவருடைய நிலைமையையே உணர்ந்தவள், "ஏம்மா... உங்களை கஷ்டப்படுத்திக்கிட்டு இங்கே வந்தீங்க? நீங்க கிளம்புங்க!" என்றவள் விநாயகத்திடம் திரும்பினாள்.

"ஏம்ப்பா! இந்த நிலைமையில அவங்களை ரொம்ப நேரம் உக்கார வைச்சி, உங்க சோகக் கதைங்களை பேசிட்டுருந்தீங்களா?

"நீங்களும் ரெஸ்ட் எடுக்கணும்! இவங்களுக்கும் ரெஸ்ட் வேண்டாமா? வீட்டில் இருந்தா படுத்து ஓய்வெடுத்திருப்பாங்களே! நான் கார் வரைக்கும் போய் அனுப்பிட்டு வரேன்" என்றபடி சக்கர நாற்காலியைத் தள்ளியபடி வெளியே வந்தாள்.

உடனே, ஒரு நர்ஸும் வார்டுபாயும் ஓடி வந்து பொறுப்பை ஏற்க, வியந்து போனாள் அவள்.

"நீங்க போங்க! நாங்க அம்மாவை அழைச்சிட்டுப் போய் காரில ஏத்தி விடறோம்."

JUN 12 2010

அவர்கள் பணிவுடன் கூற, சொர்ணத்திடம் மெதுவாக முறுவலித்து விடை பெற்று உள்ளே வந்தாள் அவள்.

''நல்ல ஹாஸ்பிடல்தான்ப்பா இது! நர்ஸும் வார்டு பாயும் அவங்களுக்கு ஓடி வந்து உதவ முன் வந்தாங்க... அதான் அவங்களோட அனுப்பிட்டு வரேன்.''

பெருமிதமாகக் கூறும் மகளையே ஏறிட்டவருக்குள், ஒரு நமட்டுப் புன்னகையும், இது அருளுடைய மருத்துவமனை என்ற உண்மை அவளுக்குத் தெரியாததும் நல்லதற்கே என்ற திருப்தியும், உள்ளே நிறைந்தன.

வில்வநாதன், தன் தந்தையின் பெயரில் அந்த மருத்துவமனையை ஆரம்பித்திருந்ததால் அவளால் அந்த பெயரை வைத்து அது யாருடையது என்று இனம் கண்டு கொள்ள இயலாமல் போயிற்று!

வாசலின் எதிரே மாட்டப்பட்டிருந்த அருளின் தாத்தா வுடைய புகைப்படம், வித்தியாசமான ஜாடையிலிருந்தது வேறு எளிதாயிற்று.

வீட்டிற்குச் சென்ற சொர்ணத்திற்கோ தன் மருமகள் இப்படிப்பட்ட பேரழகியாக இருக்கிறாளே என்ற பெருமிதம்!

மனிதநேயமும், பிரியமும் நிறையப் பெற்றவளென் பதை தன்னிடம் அவள் நடந்து கொண்ட விதமே உணர்த்துவதாய்!

தன் மகன் மேல் அவள் கொண்டிருக்கும் புரியாத வெறுப்பும் கூட நாளடைவில் மாறிவிடுமென்று எண் ணியபடி, மகிழ்ச்சியுடன் ஓய்வெடுக்க ஆரம்பித்தார்.

ஆனால், அவருடைய நம்பிக்கை பொய்க்கப் போவதை அவர் அறியவில்லை!

* * *



மறுநாள் காலையில் அவன் மருத்துவமனைக்கு சென்றபோது, அருளுடைய செல் ஒலித்தது.

யோசனையோடு எடுத்தால் விநாயகம்தான் பேசினார்.

''மாப்பிள்ளை! ஹாஸ்பிடலுக்கு வந்திட்டீங்களா? உங்களைப் பாக்கத்தான் தபு அங்கே வரா! உங்களைப் பாத்து பேசச் சொல்லியிருக்கேன்! அவளைக் கல்யாணத் துக்கு சம்மதிக்க வைக்க வேண்டியது இனிமே உங்க பொறுப்பு! நான் வெச்சிடறேன்ப்பா!''

அவர் வைத்ததும், தன் நாற்காலியில் சாய்ந்தவன், ரோலிங் சேரில் பின்புறம் திரும்பி அமர்ந்து ஒரு பைலை எடுத்துப் பார்க்கத் துவங்கினான்.

அதே நேரம் அவனைத் தேடி வந்து கொண்டிருந்தாள் தபஸ்யா!

காலையில் வந்ததுமே, தனக்கு ஆபரேஷன் செய்யும் டாக்டரைப் பார்த்துப் பேசிவிட்டு வரும்படி விநாயகம் கூறியிருந்தார்.

ஆபரேஷனை எப்போது வைத்துக் கொள்ளலாம்... அவருக்கு இப்போது உடல்நிலை எப்படி உள்ளது போன்ற விபரங்களை தெளிவு படுத்திக் கொள்ள வேண்டு மென்ற முடிவுடன் அவளும் கிளம்பினாள்.

அறை வாசலைத் தாண்டும் போதே, ''ஒண்ணு மட்டும் ஞாபகம் வச்சிக்க தபு! இந்த ஹாஸ்பிடல் சீஃப் சர்ஜன் மிஸ்டர் வேந்தன் தான் எனக்கு சர்ஜரி பண்ணணும்னு நான் விரும்பறேன்! அதை மட்டும் அவர்கிட்ட உறுதியா சொல்லிடு!'' என்றார் விநாயகம்.

''சரிப்பா...'' என்று தலையசைத்தவள், மருத்துவ விவரங் கள் அடங்கிய ஃபைலோடு ரிசப்ஷனிஸ்டிடம் சென்றாள்.

''எக்ஸ்கியூஸ்மீ! நான் சீஃப் டாக்டர் மிஸ்டர் வேந்தனை பாக்கணும்! நான் பேஷண்ட் விநாயகத்தோட பொண்ணு தபஸ்யா!''

''ஒரு நிமிஷம்! அப்பாயிண்ட்மெண்ட் ஏதும் இருக்கா? இன்னும் கொஞ்ச நேரத்துல சர்ஜரி ஆரம்பிச்சிடும்.. சீஃப் பிஸி! ஈவினிங் பாருங்களேன்!'' இனிமையாய் மொழிந்தாள் அவள்.

''இல்லை! அவரோடக் கொஞ்சம் பேசணும்... அப்பாவைப் பத்தி! கேட்டு சொல்ல முடியுமா...? ரெண்டு நிமிஷம் போதும்!''

கெஞ்சலாக வந்த அவளுடைய குரலில் சிறிது அசைந்தவள், உடனே அருளுக்கு தொடர்பு கொண்டாள்.

இண்டர்காமின் அழைப்பை ஏற்று அவளை உடனே வரும்படிப் பணித்த அருளுக்குள் பல குழப்பங்கள்!

தபுவைப் பற்றி பல எண்ணங்கள் மனதில் உலா வந்தன.

மிகவும் நல்ல பெண்.. மென்மையான ஒருத்தி.. பிறர் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்கத் தெரிந்தவள்... எல்லாவற்றையும் விட பெரியம்மாவைப் போல ஒரு பிடிவாதக்காரி...

தந்தையிடம் பாசம் இருந்தாலும் தன்னை நிச்சயம் மணக்க ஒத்துக் கொள்ள மாட்டாள் என்பதை தெளிவாகவே உணர்ந்திருந்தான் அவன்!

ஆனால், உள்ளம் புத்திசாலித் தனமாய் ஒரு கணக்குப் போட்டு திட்டம் தீட்ட ஆரம்பித்தது!

எப்படியாவது இந்தத் திருமணத்தை நடத்தி அவளை தன்னுடையவளாக்கியபின், எல்லாவற்றையும் சுலபமாக அவளுக்குப் புரியவைத்து விடலாம் என்று எண்ணும் போதே கதவு தட்டப்பட்டது!



''யெஸ்.. கமின்...'' எனவும் மெதுவாக அவள் உள்ளே வருவது தெரிந்தது.

மனம் வெகுவாய் ஆர்ப்பரித்தது. ஆனாலும் அவன் திரும்பவேயில்லை!

''குட்மார்னிங் டாக்டர்! நான் தபஸ்யா! உங்க பேஷண்ட் விநாயகத்தோட டாட்டர்! அவரைப் பத்தி உங்களோடக் கொஞ்சம் பேசணும்!'' மெதுவாக நிறுத்தினாள்.

''ப்ளீஸ் சிட்டவுன்! என்ன விஷயம்? எனக்கு டைம் ஆகுது! பத்து மணிக்கு சர்ஜரி இருக்கு... என்ன விஷயம்னு சீக்கிரமா சொல்றீங்களா?''

ஃபைலைப் பார்க்கின்ற பாவனையுடன் அவன் திரும்பியே அமர்ந்தபடி பேச, ''என் அப்பாவோட ஆபரேஷனை நீங்கதான் செய்யணும்னு அவரு விரும்பறாரு.. அதான் உங்க கிட்டே ரிக்வெஸ்ட் பண்ணிக்கலாமின்னு வந்தேன்!'' அவள் குரல் கம்மியிருந்தது.

''ஆமாம்! சீக்கிரமே ஆபரேஷனை செய்யற மாதிரியிருக்கும்! அதிர்ச்சி தர எந்த விஷயமும் அவரிடம் சொல்ல வேண்டாம். முடிஞ்ச அளவு சந்தோஷமா வெச்சிக்கங்க!''

''சரி சார்! எப்போ ஆபரேஷன்?'' தயங்கியபடிக் கேட்டாள் அவள்.

''ம்.. அதை அப்புறம் சொல்றேன்! ஆனா, ஆபரேஷன்.... கட்டாயம் நான்தான் செஞ்சாகணுமா?'' ஆழ்ந்த குரலில் வினவினான் அருள்!

''நீங்கதான் செய்யப்போறதா அப்பா சொன்னாங்க... அவரோட விருப்பம் அது... அதிலே ஏதாவது மாற்றம் இருக்கா?'' தவிப்புடன் கேட்டாள் த...

JUN 12 2010

''ம்.. இல்லை! நான் உங்க விருப்பத்தைக் கேட்டேன்...

''அதிலே உங்களுக்கு ஏதும் அப்ஜெக்‌ஷன் இல்லையே?'' சிறு குறும்புடன் வினவினான் அவன்!

''எனக்கு.. எனக்கு எந்த அப்ஜெக்‌ஷனும் இல்லை சார்... உங்களுக்கு சம்மதம்னா எனக்கு அதை விட வேற சந்தோஷமே இல்லை!''

நெஞ்சார்ந்த நன்றியுடன் பகர்ந்தாள்.

''அப்படியா? ஏன் இவ்வளவு சந்தேகம்... இந்த ஆபரேஷனை நான்தான் பண்ணுவேனான்னு... ம்...?'' ஆழ்ந்த குரலில் வினவினான்.

''இல்லை! முக்கியமான ஆபரேஷன்னா, மட்டும்தான் நீங்க செய்வீங்க! மத்ததெல்லாம் உங்க அசிஸ்டெண்ட்ஸ் தான் செய்வாங்கன்னு அப்பா சொன்னாங்க!''

''ஓ! அப்போ..எனக்கு நீங்க ஒரு சம்மதம் தரவேண்டி இருக்குமே?'' குறும்புடன் மெதுவாக இழுத்தபடி நிறுத்தினான்.

''நான் என்ன செய்யணும் சொல்லுங்க டாக்டர்? ப்ளீஸ்! எதுவாயிருந்தாலும் பரவாயில்லை! நான் ஒத்துக்கறேன்!'' அவள் கவலையாகக் கேட்டாள்.

''அப்புறம்... பேச்சு மாறமாட்டீங்களே?'' பிசிறின்றி வினவியது அவன் குரல்!

''நிச்சயமா இல்லை சார்.. டாக்டர்! எங்க சொத்துக்களை வேணும்னாலும் தந்திடறேன்.. எனக்கு எங்கப்பாதான் முக்கியம்!''

''ஓ! ஆனா சொத்து வேண்டாம்... நீதான் வேணும்!'' மென் குரலில் முணுமுணுத்தான் அவன்.



''என்ன...?'' அவனுடைய குரல் சரியாகக் கேட்காமல் பின்புறமிருந்து அவனையே கூர்ந்தாள் தபஸ்யா!

''ம்... ஒண்ணுமில்லை! சிம்ப்பிள்! நீங்க என்னைக் கல்யாணம் செஞ்சுக்க சம்மதிக்கனும்.. அவ்வளவுதான்!'' என்றபடி ரோலிங் சேரில் அவன் திரும்ப, திக்கென்று அதிர்ந்து விதிர்த்துப்போய் எழுந்தாள் அவள்!

அவள் முகமே, இங்கு அவனை எதிர்பார்க்கவில்லை என்பதை அறிவித்தது.

## 12

விழிகளில், ஆராய்ச்சியும் தவிப்பும் விரவிப் பரவ, ''நீங்க.. நீங்கதான் சீஃப் கார்டியாக் சர்ஜன்... வேந்தனா?'' ஏமாற்றத்துடன் வினவினாள்.

''ம்... நானேதான்.. அதிலென்ன சந்தேகம்? இது தெரியாமலா இவ்வளவு நேரம் பேசினீங்க?''

ஒருவிதக் கூர்மையுடன் அவன் வினவ, அவளுடைய விழிகளில் செவ்வரிகளுடன் சிறு கோபமும் கலந்து பரவின.

''ம்... நீங்க கோபப்படும் போது கூட ரொம்ப அழகா இருக்கீங்க! ஐ லைக் யுவர் டிம்ப்பிள்ஸ்! பொதுவா, சிரிக்கும் போதுதான் எல்லாருக்கும் கன்னம் குழியும்!

''ஆனா உங்களுக்கு கோபப்படும் போது கூட அழகா கன்னத்துல குழி விழுது.. ஆச்சர்யமா இருக்கு...'' வேண்டுமென்றே வியப்புடன் நிறுத்தியபடி வம்பிழுத்தான்.

JUN 12 2010

அந்த நொடியே பதறி எழுந்தவள், "மிஸ்டர்... மைண்ட் யுவர் வேர்ட்ஸ்! அப்பாவோட ஆபரேஷனைப் பத்திப் பேச வந்திருக்கற பொண்ணுகிட்டே அவ கழுத்தில கத்திய வைக்கிற மாதிரிப் பேசறீங்களே! உங்களுக்கே இது தப்புன்னு தெரியலை?" அடிக்குரலில் சீறினாள்.

"எது? நான் எப்ப உன் கழுத்தில கத்தி வெச்சேன்! உன் கன்னம் குழியறது அழகா இருக்குன்னு காம்ப்ளி மெண்ட்தான் செஞ்சேன்... அதைப் போய் பாராட்டுன்னு எடுத்துக்காம..."

"போதும் மிஸ்டர் அருள் வேந்தன்! நான் அதைப்பத்தி சொல்லலை! என்னை... என்னைக் கல்யாணம் செஞ்சுக்கனும்னு சொன்னீங்களே... அதைச் சொன்னேன்!" அழுத்தமாக முடித்தாள்.

"ஓ! அதுவா... ஆமாம்... சொன்னேன் இல்லை..? அது நல்ல விஷயமாச்சே! அதைப் போயி கத்தி அது இதுன்னா.. அதான் எனக்கு புரியலை!

"கல்யாணம்கிறது நல்ல விஷயம்மா! கழுத்தில தாலி கட்டற புனிதமான ஒரு சடங்கு.. அதைப் போயி கத்தி அது இதுன்னு.. ப்ச்.. உங்கத்தை உனக்கு அதெல்லாம் சொல்லித் தரலையா?"

வேண்டுமென்றே வம்பிழுத்தான்.

"எங்க அத்தையைப் பத்திப் பேச உங்களுக்கும் உங்க அப்பாவுக்கும் எந்தத் தகுதியும் இல்லை!" சினத்துடன் சீறினாள் தபஸ்யா.

"அவங்க உன் அத்தை மட்டும் இல்லை. என் அம்மாவும் கூடத்தான்!"



"அதான் ஒதுக்கி வெச்சி அவங்களைக் கஷ்டப்படுத்தினீங்களோ? உண்மையா அவங்க வயத்துல பிறந்திருந்தா இப்படி செஞ்சிருப்பீங்களா?"

ஒரு வித வேகத்துடன் படபடத்தாள்.

"அப்பா அவங்களை ஏத்துக்கறேன்னு தான் சொன்னாங்க... பெரியம்மாதான் ஒத்துக்கலை.. அம்மாவும் மூணு பேருமா சேர்ந்து வாழலாம்னு சம்மதம் தந்தாங்க... பெரியம்மா பிடிவாதமா மறுத்து ஒதுங்கியே வாழ்ந்திட்டாங்க!"

அவன் முடிப்பதற்குள், "இதே நிலைமை உங்களுக்கு வந்தா நீங்க ஒத்துப்பீங்களா சார்? உங்க துணையை இன்னொருத்தரோட பகிர்ந்துக்க சம்மதிப்பீங்களா?" தபு ஏளனத்துடன் வினவினாள்.

"ஏய்..." பற்களைக் கடித்தபடி ரௌத்ரமாக எழுந்து சீறினான் அவன்!

"இப்போ கோபம் வருதுல்லே.. அது மாதிரிதான் எங்க அத்தைக்கும் வந்திருக்கும்... ஆணுக்கு ஒரு நியாயம்... பெண்ணுக்கு ஒரு நீதியா?"

"தயா! யார்கிட்டே பேசறோம்னு புரிஞ்சுதான் பேசறியா?" மிருகமாய் கர்ஜித்தான்.

"புரியுது சார்! மகாகனம் பொருந்திய டாக்டர்... கார்டியாக் சர்ஜன் அருள்வேந்தன் கிட்டே தான் பேசிட்டிருக்கேன்!"

"அதோட, இன்னொண்ணும் ஞாபகம் இருக்கட்டும்... இதே சர்ஜன்தான் உங்கப்பாவுக்கு ஆபரேஷன் செய்யணும்" இடியாய் முழங்கினான் அவன்!

அவள் விழிகள், கடும் வெறுப்பையும் குரோதத்தையும் உமிழ்ந்தன.

''உங்க வீட்டில யாருமே நல்லவங்க இல்லையா... உங்கம்மாவைத் தவிர! நீங்களும் உங்கப்பாவைப் போல மோசம்னு நான் நினைச்சேன்! ஆனா இத்தனை மோசமானவருன்னு எதிர்பார்க்கலை!

''டாக்டர் தொழில் எவ்வளவு புனிதமானது.. அதை இப்படிக் கேவலப்படுத்த எப்படி மனசு வந்தது சார் உங்களுக்கு?''

''அப்பாவைப் பத்தி கவலையாப் பேச வந்த பொண்ணு கிட்டே இப்படி ஒரு கண்டிஷன் போடற அளவு தரம் தாழ்ந்தவரா சத்தியமா நான் உங்களை... சே...'' என்றபடி வேகமாக எழுந்தாள்.

''ஒரு நிமிஷம் பெண்ணே! நான் உன்னை வற்புறுத்தலை! நீதான் எதுவாயிருந்தாலும் சரின்னு ஒத்துக் கிட்டே!''

''நான் ஒண்ணும் உன்னைத் தப்பாக் கேக்கலையே! கல்யாணம் செஞ்சுக்கலாமின்னு தானே சொன்னேன்!'' நக்கலாக வினவினான்.

''என்னது...? தப்பா வேற கேட்பீங்களா? கன்னம் பழுத்துடும்... இதையெல்லாம் வேற யார்கிட்டயாவது வச்சிக்கங்க!''

''ம்.. வேற யார்கிட்டயாவது வச்சிக்கிட்டாதான் கன்னம் பழுக்கும்! நான் என் வுட்பி ஒய்ஃப்கிட்ட தானே கேட்டேன்'' சோம்பலாக முடித்தான் அவன்.

''என்னது? வுட்பி ஒய்ஃபா? யாரு.. நான் இன்னும் சம்மதிக்கவேயில்லை.. புரிஞ்சிக்கங்க!''

''அது சரி! ஏதோ உனக்கு உதவலாமே.. என் அம்மாவோட கல்யாண வற்புறுத்தலும் ஒரு முடிவுக்கு வரட்டுமேன்னு நினைச்சேன்!''



உடனே, அவள் பார்வையில் பரவிய வெப்பம் அந்த ஏசி அறையையே அனலாக்குவது போல்!

''உனக்கு ஒரு நாள் அவகாசம் தரேன்! முடிவு இனி உன் கையில! அது எதுவா இருந்தாலும் எனக்கு ஓகேதான்!''

''காதலிக்கறது.. கல்யாணம் செய்யறது இதெல்லாம் உன்னைப் போல எனக்கும் பிடிக்காத விஷயங்கள்! அதனால யோசிச்சி ஒரு முடிவை சொல்லு... உங்கப்பாவுக்கு இது தெரிய வேண்டாம்... பை!''

ஆழமான குரலில் கூறிவிட்டு, அவளின் பதிலுக்கு காத்திராமல் அவன் வெளியேறவும், செய்வதறியாமல் திகைத்தபடி எழுந்தாள் தபு!

* * *

ஆபரேஷன் தியேட்டருக்கு செல்லும் போதே அருளுக்கு மிகவும் உறுத்தலாய்... நெஞ்சிற்குள் பெரும் சம்மட்டி அடியாய்!

''அவள் கேட்டது போல் ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நியாயமா... தன்னால் தன் வாழ்க்கையை, தன் துணையை இன்னொருவருடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?''

அவளுடைய பேச்சிலிருந்த நேர்மையும் நியாயமும் புரிந்தாலும், ஏனோ அவளை இழக்க மனம் சம்மதிக்கவில்லை.

சர்ஜரிக்கு செல்லும் வழியிலேயே செல்லில் அழைத்து விநாயகத்திடம் சுருக்கமாக விபரம் கூறினான்.

அவரோ.. இதைக் கேட்டதும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கித் தவித்தார்.

JUN 12 2010

பகல் கனவில்... அவர்களுடைய திருமணக் காட்சியும் பேரன் பேத்திகளுடன் தான் விளையாடுவதும் நிழற்பட மாய் தெரிய ஆரம்பித்தன.

அருளுடைய அறையிலிருந்து வெளியேறிய தபஸ்யா விற்கோ, கண்களை இருட்டிய உணர்வு!

மீட்க முடியாத ஒரு வேகச் சுழலுக்குள் மாட்டிக் கொண்ட பரிதவிப்பு!

கடவுளே... இப்போது என்ன செய்யப் போகிறேன்? அருளுடைய கண்டிஷனை தந்தையிடம் கூறவும் முடியாது...

இதற்கு ஒத்துக் கொண்டு அவனோடு வாழவும் மனம் ஒப்பவில்லை...

இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்த இதயம் பலவீனப்பட்டுப் போயிற்று!

''இங்கு ஆபரேஷன் செய்தால்தானே இந்தக் கஷ்ட மெல்லாம்.. வேறு பெரிய மருத்துவமனையென்றால் இந்தப் பிரச்சனை இருக்காதே.''

சட்டென்று பெருகிய எண்ணத்தில் குழப்ப மேகம் விலக, தந்தையிடம் பேசி உடனே இங்கிருந்து கிளம்பி விட வேண்டும் என்ற முடிவுடன் அவரின் அறைக்குச் சென்றாள்.

## 13

தபஸ்யாவின் முகம்... சமீபத்திய அதிர்ச்சியிலும், கவலையிலும் கலங்கியிருந்தது.



அவள் உள்ளே நுழைந்ததுமே கவனித்தாலும், ''என் னம்மா தபு! கார்டியாலஜிஸ்டை பாத்தியா? ஆபரேஷன் எப்ப வெச்சிக்கலாமின்னு அவர் சொன்னாரா?'' கவனி யாதவர் போலக் கேட்டார்.

ஒரு கணம் அமைதி காத்தவள், ''அந்த... அருள் வேந்தன்... அத்தையோட மகன்னு உங்களுக்குத் தெரியுமாப்பா?'' இறங்கிய குரலில் வினவினாள்.

''ம்.. தெரியும்மா! நேத்து சொர்ணம் வந்தப்பதான் தெரிஞ்சிக்கிட்டேன்.. அதனால என்னம்மா? அவர் ஒரு டாக்டர், நான் ஒரு பேஷண்ட் அவ்வளவுதான்! இதிலே பழைய பகை, உறவெல்லாம் பாக்கக் கூடாது.''

''அது சரிப்பா... ஆனா, நான் ஒண்ணு சொன்னா நீங்க கோபப்பட மாட்டீங்களே...''

''என்னம்மா... சொல்லு! என்கிட்ட என்ன தயக்கம் உனக்கு...?''

''ம்.. நாம... வேற ஏதாவது ஒரு ஹாஸ்பிடல்... இதை விட சிறந்த ஹாஸ்பிடல்லே ஆபரேஷனை வெச்சிக்க லாமேப்பா!'' தயக்கத்துடன் நிறுத்தினாள்.

''ஏம்மா? இங்கே உனக்கு என்ன பிரச்சனை? டாக்டர் வேந்தன் முடியாதுன்னுட்டாரா? சென்னையில இதுவும் ஒரு பெஸ்ட் ஹாஸ்பிடல்தான் தபு!

''எனக்கு என்னவோ அருள்வேந்தன் தான் ஆபரேஷன் பண்ணனும்னு நான் விரும்பறேன்டா! அப்பதான், நான் சரியாகிப் பிழைச்சிப்பேன்னு தோணுது!

''என்னவோ.. இந்தக் கிழவனுக்கு தேவை இல்லாத ஒரு சென்டிமெண்ட்.. ஏம்மா.. உனக்குப் பிடிக்கலையா?''



JUN 12 2010

"நான் உன்னை அருளைக் கல்யாணம் செஞ்சுக்கறி யான்னு கேட்டதுக்கும் இதுக்கும் எந்த சம்மந்தமில்லை. அதை நினைச்சி குழப்பிக்காதே! எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு."

அயர்ச்சியுடன் அவர் சாயவும், பதறிப்போய் தலை யணையை சரிப்படுத்தினாள் அவள்!

அவர் மெதுவாகக் கண்மூட, இதயம் பரிதவித்தது.

இந்த நிலையில் அவரைக் கட்டாயப் படுத்தவும் முடியாமல், அருளின் கண்டிஷனையும் கூற மனமின்றி... அவனுடைய கோரிக்கைக்கு இணங்கவும் முடியாமல், தபு தவிக்க ஆரம்பித்தாள்.

ஏனோ, வெகுநேரம் யோசித்த பின்பும் விடை கிடைக்கவில்லை.

தாயை இழந்தபிறகும், தனக்காகவே வேறு திருமணம் செய்யாமல் வாழ்ந்த தந்தையின் விருப்பமும் உயிரும் தானே முக்கியம் என இடித்துரைக்க ஆரம்பித்தது நெஞ்சம்!

இப்போது இந்த வீணான சிந்தனைகள் எதற்கென்று தவிர்த்தாலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் பரிதவித்தது அந்தப் பெண்மை!

சிறு வயதிலிருந்தே வில்வநாதனையும் அருளையும் வெறுத்து வந்தவளால், இந்த திடீர் திருப்பத்தை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை!

தன் தந்தையின் உயிரா... தன் திருமணமா... எது வென்று யோசிக்கும் போதே நியாயத் தராசு அவர் பக்கமே சாய்வதாய்!

யோசிக்க யோசிக்க, தலை வலிக்க ஆரம்பித்து உள்ளம் பாரமாகியது!



அப்படியே சாய்ந்து கண்மூடியவள், தாங்க முடியாத அதிர்ச்சியிலும், தீவிர மன உளைச்சலிலும் ஓய்ந்து போய் உறங்கத் துவங்கினாள்.

* * *

அன்று மதியம், சாப்பிடும் நேரத்தில் வேணிக்கு போன் செய்து, தான் தபுவிடம் பேசியதைப் பற்றிக் கூறினான் அருள்!

அதைக் கேட்டதும் உற்சாகத்துடன் துள்ளிக் குதிக்காத குறையாக, "ரொம்ப சந்தோஷம் அருள்! சரியான பிரம் மாஸ்திரத்தைத்தான் பிரயோகம் செஞ்சிருக்கே! இதி லிருந்து அவளால தப்பிக்கவே முடியாது! அப்பாவுக்காக இதுக்கு ஒத்துக்கிட்டுதானே ஆகணும்" ஆனந்தமாக ஆர்ப்பரித்தார்!

"பாப்போம்! ஆனா, அவளைப் பத்தி சாதாரணமா எடைபோட முடியாதுக்கா! ரொம்பப் பிடிவாதம் நிறைஞ் சவ... பெரியம்மா மாதிரி!

"ஆனா, அந்தப் பிடிவாதம் நேர்மையானதாவும், இருக்கும்போது தோத்துடுவோமோன்னு பயமாக் கூட இருக்கு" ஒரு நீண்ட பெருமூச்சுடன் நிறுத்தினான்!

"அருள்! என் ராசய்யா.. உனக்கு பயமா...? உன் கம்பீரமும், தைரியமும் அழுத்தமான ஆளுமை குணமும் எங்கேப்பா போச்சு!

"அந்தப் பொண்ணும்.. அவ மேல வெச்ச நேசமும் உன்னை தூசா உடைச்சுடுச்சா? வேண்டாம்யா! எங் களுக்கு பழைய ராசய்யாதான் வேணும்!"

"எதுக்கும் கலங்காம ஒரு மலை மாதிரி.. பாத்தாலே கையெடுத்துக் கும்பிடத் தோணுற கடவுள் மாதிரி நீ

கம்பீரத்தோட இருக்கணும்யா!" அவர் குரல் கம்மி யிருந்தது.

அவர், ராசய்யா என்றவுடன் அவனுக்குள் பால்ய நாட்களின் அணிவகுப்பு!

பாசமிகுதியில் அவனை, வேணி எப்போதுமே ராசய்யா என்றுதான் அழைப்பார்.

வெகு நாட்களுக்குப் பிறகு இன்று அவருடைய அழைப்பு சிலிர்க்கச் செய்ய, இளகியது மனது!

இப்போதெல்லாம் தன்னைப் பற்றி நினைத்தால் அவனுக்கே வியப்பாய்!

காதல்.. ஒரு இரும்பு மனிதனைக் கூட மென்மையாக்கி விடுவது புரிவதாய்!

அதுதான், கிராமப்புறங்களில் பெரிய சண்டியர்களுக்குக் கூட கல்யாணம் செய்து வைத்தால் அடங்கி விடுவா னென்று பெரியவர்கள் கூறுவது நினைவிற்கு வந்தது.

"என்ன ராசய்யா.. சத்தமே காணோம்?" பரிவுடன் வினவினார் வேணி!

"ம்.. ஒண்ணுமில்லைக்கா! அவளுக்கு ஒரு நாள் அவகாசம் குடுத்திருக்கேன்! நாளைக்குப் பாப்போம்.. அவ என்ன முடிவெடுத்திருக்கான்னு! ஆனா அம்மாவுக்கு இப்படின்னு தெரிய வேண்டாம்."

"சரிய்யா.. ஆல் தி பெஸ்ட் பை!" என்றபடி இணைப்பைத் துண்டித்தார் வேணி!

அன்றிரவு... உறக்கம் வராமல் தனது அறையில் தவித்தபடி விழித்திருந்தாள் தபஸ்யா!

ஆனால், அவனுடைய கண்டிஷனுக்கு ஒத்துக் கொள் வதைத் தவிர வேறு வழியில்லை என்பதும் புரிவதாய்!




மனதிற்குள் ஜுவாலையாய் ஒரு வித வன்மம், தீப்பற்றி எரிய ஆரம்பித்தது.

என்னை மிரட்டியா பணிய வைக்கிறாய்.. இதற்காக ஒரு நேரம் நீ வருத்தப்படப் போகிறாய்!

தகிப்புடன் உறங்க ஆரம்பித்தாள் அவள்.



## 14



மறுநாள்...

அருள் மருத்துவமனைக்கு கிளம்பிக் கொண்டிருந் தான்.

மனதிலோ... தணியாத தாகமாய் தயாவின் நினைவு!

அவளுடைய கன்னக்குழியில் சிக்கி மரக் கிளைப் பட்டமாய் சிதைந்திருந்தது இதயம்!

அன்று, சனிக்கிழமை என்பதால் ஆபரேஷன் கிடையாது!

மீட்டிங் முடிந்து ரவுண்ட்ஸ் போய் விட்டு மதியம் வந்து விடுவான்!

காரில் கிளம்பி மருத்துவமனைக்கு வந்தபோது, உள்ளம் எதிர்பார்ப்பில் தவிக்கத் துவங்கியது!

அங்கு... விநாயகத்தின் அறையில், தபுவும் பெரும் பரிதவிப்பில் இருந்தாள்.

காலையில் வந்ததிலிருந்தே, தொடர்ந்து நகத்தைக் கடித்தபடி யோசனையுடன் ஜன்னலுக்கு வெளியே

JUN 12 2010

பார்வையைப் பதித்திருந்தவளை, விநாயகமும் படுத்தபடி கவனித்துக் கொண்டுதானிருந்தார்.

''அப்பா...'' திடீரென்று அழைத்தாள் தபஸ்யா.

''என்னம்மா?''

''நான்... உங்ககிட்டே ஒரு விஷயம் பேசணும்! அதுக்கு முன்னாடி... எனக்கு ஒரு நம்பர் வேணும்!''

உதட்டைக் கடித்தபடி தயக்கத்துடன் அவள் நிறுத்த, ''என்னடா இவ்வளவு தயங்குறே? நைட் சரியாத் தூங்கலையா? வேணும்னா வீட்டுக்கு போய் ரெஸ்ட் எடுத்துட்டு வரியா?'' வாஞ்சையுடன் கேட்டார்.

பிறகு, ''நான் இப்போ நல்லாத்தானே இருக்கேன்.. ராமையா என்னைப் பாத்துப்பாரு! ஆமாம்.. ஏதோ நம்பர் வேணும்னியே.. யாரோடதுடா?''

ஒன்றுமே தெரியாதவரைப் போல் வினவியவர், மனதிற்குள் சிரித்துக் கொண்டார்.

''ம்... அது வந்து.. டாக்டர் அருள்வேந்தனோட பர்சனல் செல் நம்பர் உங்ககிட்டே இருக்கா?''

அதைக் கேட்பதற்குள் வியர்த்து.. விதிர்த்துப் போனாள் அவள்.

அருள், தான் சொன்னதை சாதித்துக் காட்டி விட்டானே... பெரிய கெட்டிக்காரன் தான்!

உள்ளே மெச்சியபடி, ''இந்தாம்மா... அருளோட விசிட்டிங் கார்டு'' எடுத்து நீட்டினார்.

* * *

அந்தக் கார்டை வாங்கிக் கொண்டு, செல்போனில் டயல் செய்தபடி அறைக்கு வெளியே சென்ற மகளையே நோக்கியவருக்குள் வெற்றி சிரிப்பு பீறிட்டெழுந்தது.



எதிர்முனையில், ''அருள்வேந்தன் ஹியர்...'' என்று ஒலித்த ஆழ்ந்த குரலில், அவள் தேகமே ஒரு கணம் அதிர்ந்தது.

மறுமுனையில் சத்தமின்றிப் போகவே, ''ஹலோ.. நான் அருள்! கால் பண்ணிட்டுப் பேசாம இருந்தா எப்படி?'' எரிச்சலாகக் கேட்டான் அவன்.

''ம்.. நான்.. தபஸ்யா!'' தயக்கத்துடன் அவள் கூற, அவனிடம் ஒரு நொடி சப்தமே இல்லை...

''ஹலோ! லைன்லே இருக்கீங்கதானே?'' பதட்டத்துடன் அவள் கேட்கும் போதே, ''ம்... சொல்லு!'' அழுத்தமாக வந்தது அவன் குரல்!

''நீங்க எங்கே இருக்கீங்க? நான் உங்களோடக் கொஞ்சம் பேசணும்...'' தைரியமாகக் கூறிவிட்டாள்.

''ம்.. நான் இப்ப செகண்ட் ஃப்ளோரிலே என் ரெஸ்ட் ரூமில இருக்கேன்! வரியா?'' ஒரு மாதிரிக் குரலில் வினவினான்.

''ம்.. வரேன்!'' என்றபடி தொடர்பைத் துண்டித்தவளுக்குள், பெரும் நடுக்கம் ஓடியது...

உள்ளே சென்று விநாயகத்திடம், அவருடைய ஆபரேஷன் சம்பந்தமாக டாக்டரிடம் பேசிவிட்டு வருவதாகக் கூறி கிளம்பினாள்.

இரண்டாவது மாடியிலிருந்த அவனுடைய ஓய்வறைக்குச் சென்று கதவைத் தட்டியபோது உடலும் உள்ளமும் துவண்டு, நேற்று இருந்த தைரியம் தொலைந்து போயிருந்தது.

''யெஸ்... கமின்!'' அவனுடைய கம்பீரக் குரலுக்கு பணிந்து உள்ளே நுழைந்தாள் தபஸ்யா!

JUN 12 2010

மெல்ல மிரண்டு மயங்கியது அவள் நெஞ்சக் கூடு!

''வெல்கம் மை ஹைனஸ்! இருபத்து நாலு மணி நேரத்துல ஒரு நல்ல முடிவை எடுத்திருப்பேன்னு நினைக்கிறேன்! நான் எதிர்பார்த்ததை விட நீ புத்திசாலிதான்!''

அவள் முடிவை யூகித்து அவன் மெச்சியதும்... அவளுக்குள் நீறுபூத்த நெருப்பாய் கோபம் எல்லை மீற ஆரம்பித்தது!

பொறு மனமே பொறு என்று அடக்கியபடி, அவன் காட்டிய இடத்தில் அமர்ந்தாள்.

''வெல்... தயா! மாமா எப்படி இருக்கார்?'' கூர்மையாக வினவினான்!

'அவர் நோயாளியாக இருக்கும் திமிர்தானே உன்னை இப்படிப் பேச வைக்கிறது...? நீ யாரென்று காண்பித்து விட்டாய்..

'புத்திசாலியாக திட்டம் தீட்டி என்னைப் பொறியில் மாட்ட வைத்து விட்டதாக இறுமாப்பு கொள்பவனே...

'நான் எப்படி என்று நிரூபிக்கும் போது... என் பிடிவாதம் பற்றித் தெரியும் போது நீ சிதைந்து போவாய்!'

நெஞ்சுக்குள் புகைந்தபடி, தீக்குழம்பை மறைத்து வைத்திருக்கும் அமைதியான எரிமலையாய் அமர்ந்திருந்தாள்.

அவனோ, இது எதையுமே அறியவில்லை!

மெதுவாக நிமிர்ந்தவளுக்குள், அவனைப் புதிதாய் பார்ப்பது போல் ஒரு திகைப்பு!

மலேஷியாவில் கூட அவன் முகம் பார்த்து பேச விருப்பமின்றி சுவரைப் பார்த்தபடி தான் சீறிவிட்டு சென்றது நினைவிற்கு வந்தது.



அவனை, கோட் சூட்... அல்லது டாக்டர் கோட்டுடனே பார்த்திருந்தவளுக்கு இன்று ஆறரை அடி உயரத்தில் டி சர்ட் ஜீன்சுமாக அவன் நின்றிருந்தது புதிதாய்!

மாநிறமாக இருந்தாலும், கம்பீரமாய்.. கூர்மையான விழிகளும், செதுக்கிய முகமுமாய்.. ஆணழகனாய் நின்றிருந்த அவனுடைய தோற்றம், அவளறியாமலே நெஞ்சிற்குள் ஆழப்பதிவதாய்!

இவன் ஏன் என்னைத் திருமணம் செய்ய இப்படி கண்டிஷன் போட வேண்டும்? இவனுடைய வசதிக்கும், படிப்புக்கும், அழகிற்கும் பெண்கள் இவனை மணக்க வரிசையில் நிற்பார்களே?

''ஏன் இப்படிச் செய்கிறான்...?'' குழப்பத்துடன் அவனையே ஊடுருவிய பார்வை.. அவனுடைய ஒற்றைப் புருவம் உயர்த்தப்பட்டு குறும்புடன் நெறிந்ததும், சட்டென்று தழைந்தது!

அருகிலிருந்த கட்டிலில் தலையணையில் உற்சாகமாய் சாய்ந்து அமர்ந்தவன், ''ஏதாவது சாப்பிட்டியா?'' அக்கறையுடன் வினவினான்!

''ம்..'' அவள் தயக்கத்துடன் தலையசைக்க, உடனே ரூம் சர்வீஸை அழைத்தான் அவன்!

''உடனே அனுப்புங்க! ஒரு காபி... ஒரு ஜூஸ்... ஒரு ப்ளேட் வடை'' என்று வைத்தான்.

பிறகு சோம்பலுடன் நிமிர்ந்தவன், ''ம்... பாஸ் மார்க் தானே.. என்ன... சம்மதமா?'' அவளையே கூர்ந்தபடி வினவினான்.

ஆனால், அவளுக்குள், ஒரு அக்னி பிரவேசம் நிசப்தமாய் நிகழ்ந்தது.

"ஏன்? எப்படி இவ்வளவு ஷ்யூராக் கேக்கறீங்க? நான் ஒருவேளை மறுத்தா...?" ஏளனமாய்க் கேட்டாள்!

"ம்... மறுத்தா உனக்குத் தான் நஷ்டம்!"

வார்த்தைகளை அதே ஏளனத்துடன் திருப்பிக் கொடுத்தான் அவன்!

"என்ன நஷ்டம்? இந்த ஹாஸ்பிடலை விட்டா எங்கப்பாவுக்கு ஆபரேஷன் பண்ண வேற டாக்டரே இல்லைன்னு நினைச்சீங்களா?"

சட்டென்று, சிரித்துவிட்டான் அவன்.

அந்த நிலையிலும் மிகவும் வசீகரமாய் பரவிய அவனுடைய, புன்னகையை உள்வாங்கி ரசித்தது அவளின் இதயக் கூடு!

அந்த எரிச்சலில் தன்னையே அவள் கடிந்தபோதுதான், அவன் பேச ஆரம்பித்தான்.

"நான்.. அதை நஷ்டம்னு சொல்லலை! உனக்கு ரொம்பப் பொருத்தமா, ஆறரை அடி உயரத்துல, கம்பீரமான அழகோட... அதுவும் ஒரு டாக்டரை இழக்கறது உனக்கு இழப்புதானே... அதைச் சொன்னேன்!"

குறும்புடன் விரிந்தன அவன் உதடுகள்!

ஒரு நெடுமூச்சுடன் சிலையாய் அமர்ந்திருந்தவளை, அவன் வார்த்தைகள் கலைத்தன!

"ஓ! உங்க மேல அவ்வளவு நம்பிக்கையா? ரொம்ப ஓவர் கான்பிடன்ஸ்தான்! ஆனா நான் உங்களை மறுத்தவ... அது ஞாபகமிருக்கட்டும்!"

"ஹூம்! அது, பழைய பகை... அப்பா மேல படிஞ்ச வெறுப்பு காரணமில்லாம என் மேலயும் பரவி



இருந்தது! இப்ப என்னை நேரில பார்த்தவுடனே மாறி இருக்குமே!"

அவள் பதில் கூறுவதற்குள் அறைக்கதவு தட்டப்பட்டது.

கேண்டீலிருந்து, ஜூஸும், காபியும், வடையும் வந்திருந்தன.

பணியாள் சென்ற பிறகு, அவளிடம் எடுத்துக் கொள்ளும்படிப் பணித்தவன், மெதுவாக காபியைப் பருகத் துவங்கினான்.

## 15

காலையில் வீட்டிலிருந்து கிளம்பும் போது, பதட்டத்தில் டிபனைத் தவிர்த்து விட்டு வந்தவள், பசியினால் மறுக்காமல் சாப்பிட ஆரம்பித்தாள்.

அவனை வார்த்தைப் போரில் வெல்ல, தனக்கு சக்தி தேவை என்பதை உணர்ந்தது போல், மௌனமாக ஜூஸையும் குடித்து முடித்தாள்.

அதற்கென்றே காத்திருந்தவன் போல, "ம்.. இப்ப சொல்லு!" என்றான், கண்ணோரங்கள் இடுங்க!

அவளுடைய உலகே திடீரென்று இருண்டு அஸ்தமனமானதைப் போல்!

ஒரு பெருமூச்சுடன், தன் விரல்களில் பார்வையைப் பதித்தபடி பேச ஆரம்பித்தாள் தபஸ்யா!

"என் அப்பாவை விட இந்த உலகத்துல பெரிய சொத்து எனக்கு ஏதுமில்லை! என் சொத்து முழுக்க நீங்க

கேட்டாக் கூட அவரோட உயிருக்கு விலையா, நான் தந்திருப்பேன்!''

உணர்ச்சிகள் நிறைந்த குரலில் நிறுத்தினாள்.

''எனக்கு உன் சொத்து வேண்டாம்... என்கிட்ட இருக்கறதே ஏழு தலைமுறைக்குப் போதும்! நீ.. நீ மட்டும் தான் வேணும்!'' அழுத்தமாக பதிலிறுத்தான் அவன்!

அவள், ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்த போது, தெவிட்டாத இனிமையாய் அவள் பார்வை அவனுள் கலந்தது!

அந்த ஒரு நொடி.. அவனுள் கோடி மலர்களை புஷ்பிக்கச் செய்தது போல்!

அதை உணராமல் ஒரு முடிவுடன் பேச ஆரம்பித்த வளது குரலில் கடும் சீற்றம் தெரிவதாய்!

''நீங்க ஒண்ணை மட்டும் ஞாகபம் வச்சிக்கங்க!''

அவள் முடிப்பதற்குள், ''ம்... எது இந்த ஒண்ணா? அது இரண்டு வயசிலேயே கத்துக்கிட்டது.. மறக்காது!''

விழிகள் மட்டும் குறும்பாய் நகைக்க, ஒரு விரலைக் காட்டி, சிரியாமல் நிறுத்தினான்.

''ப்ச்! போதும் விளையாட்டு! இந்தக் கடியெல்லாம் எனக்குப் பிடிக்காது!'' பொறுமையின்றிக் கூறியவளை சோம்பலாக ஏறிட்டவன், ''வேற என்ன கடியெல்லாம் பிடிக்கும்?'' குறுஞ்சிரிப்புடன் கேட்டான்.

ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தவள், ''சே! ஒரு டாக்டர் மாதிரியே இல்லை!'' எரிச்சலாக மொழிந்தாள்.

''ஏய்... டாக்டரும் மனுஷன் தான்மா! அதென்ன... அவங்கள்ளாம் மட்டும் உணர்ச்சியில்லாத ஜடங்களா?'' நான் சின்ன வயசில சாப்பிட்ட காக்கா கடி பத்தி சொன்னேன்... ஏன் நீ தப்பாவே யோசிக்கறே!''



''சரி! என்னைப் பேச விடுங்க! என்னை கல்யாணம் செஞ்சுக்க நீங்க கொடுத்த நெருக்கடிக்காக வாழ்நாள் முழுக்க வருத்தப்படப் போறீங்க!''

''தேங்க்யூ!'' திடீரென்று நன்றியுரைத்தான் அவன்.

''என்ன.. எதுக்கு தேங்க்ஸ்?''

அவள் சீற, ''கூல் பேபி கூல்... என்னைத் திருமணம் செய்ய சம்மதிச்சதுக்குதான் தேங்க்ஸ்!'' குறும்புடன் பகர்ந்தான்.

''என்னை பேபின்னு கூப்பிட வேண்டாம்... ப்ளீஸ்!''

அவள் வெறுப்புடன் கூறிவிட்டுத் திரும்பிக் கொள்ள, சத்தமாக சிரிக்க ஆரம்பித்தான் அவன்.

''என்ன.. ஏன் இந்த சிரிப்பு?''

கடுமையாக அவள் கேட்க, ''ம்.. நாம ரெண்டு பேரும் கல்யாணம் செஞ்சுக்க முடிவெடுத்திருக்கோம் பேபி! என்னவோ சண்டை போடப் போறா மாதிரி முகத்தை திருப்பிக்கறயே? அதான் சிரிச்சேன்...''

''ம்.... அடுத்தவங்க வாழ்க்கைன்னா.. மத்தவங்க கழுத்தில கத்தி வெச்சி காரியத்தை சாதிச்சுக்கறதுன்னா... உங்களுக்கெல்லாம் விளையாட்டா இருக்கு இல்லை...?'' அடிக்குரலில் சீறினாள்.

''இல்லை! உனக்கு நல்ல வாழ்க்கையை, சந்தோஷத்தை தரப்போறோம்னு நிம்மதியா இருக்கு!''

''எனக்கு அப்படி இல்லை? என்னை ஒரு விளையாட்டு பொம்மையா நீங்க பிய்ச்சு விளையாட நான் அனுமதிக்க மாட்டேன்!'' சீறிவிட்டு வேகமாக எழுந்தாள்.

இமைகள், கண்ணீரை வழியவிட்டு விடுவேனென்று பயமுறுத்தின.

JUN 12 2010

''ஏய் தயா... இங்கே யாரும் உன்னை பொம்மை மாதிரி ஆட்டி வைக்கலை... உனக்கு விருப்பமில்லைன்னா வேண்டாம்!''

அவன் குரல் பெரிதும் இறங்கியிருந்தது!

ஏனோ.. மென்மையான அந்தக் குரல் அவளுடைய உணர்வுகளை மயிலிறகாய் நீவி இதம் செய்வதாய்!

சட்டென்று தன்னை அமைதிப்படுத்தியவள், ''சரி.. சொல்லுங்க! எப்போ, அப்பாவுக்கு ஆபரேஷன் டேட் ஃபிக்ஸ் பண்ணப் போறீங்க...'' மெல்லிய குரலில் கேட்டாள்.

''இன்னும் பத்து நாளிலே.. நம்ம கல்யாணத்துக்கு சரியா ரெண்டு நாள் கழிச்சி!'' அழுத்தமாக முடித்தான் அவன்!

''மனசில ஈரமே இல்லையா...? கல்யாணமே வேண் டாம்... காதல் எல்லாம் ஒரு மாயைன்னு இருந்தவளை இப்படியா ப்ளாக்மெயில் செய்யறது?''

சிறு கோபத்துடன் மெதுவாக முணுமுணுத்தாள்.

மீண்டும் அவனிடம் பெரிதாய் ஒரு புன்னகை... இந்த முறை சப்தமே இல்லாமல்...!

மனதில் பரவிய சீற்றத்தையும் மீறி, அவன் பற்கள் வரிசையாய் மின்னுவதை இதயம் ஏனோ ரசித்தது!

''சரி.. சொல்லு! என்ன படிச்சிருக்கே?'' அவன் குரல் அவளை மீட்பதாய்!

''பி.டெக்... அண்ணா யுனிவர்சிட்டி...''

''முடிச்சாச்சா.. ஏன் கேட்டேன்னா, திருமணத்துக்குப் பிறகு படிக்கறது பெண்களுக்கு கொஞ்சம் கஷ்டமா இருக்குமே... அதான்!''



''அதெல்லாம் கஷ்டமில்லை! நான் கோல்ட் மெடலாக்கும்!'' சட்டென்று கூறிவிட்டாள்.

உடனே, அவனுடைய உடல் மௌனச் சிரிப்பில் குலுங்க, விதிர்த்து நிமிர்ந்தாள் அவள்!

அவன் சிரிப்பு தொடர, என்னவென்பது போல் யோசனையும் எரிச்சலுமாய் நோக்கினாள்.

விழிகள்... கருவண்டாய், இமைகள் வண்ணத்துப் பூச்சியாய், அந்த மலர் முகத்தில் தெரிந்தன.

''ம்.. நான் ஜெயிச்சிட்டேன் பாத்தியா? சாதாரணமா கேட்டா உன்னைப் பத்தி... நீ வாங்கின கோல்ட் மெடல் பத்தியெல்லாம் சொல்லியிருப்பியா?

''இப்போ பார்.. உன் வாயாலேயே உன்னை பத்தி எல்லாம் தெரிஞ்சிக்கிட்டேன் பார்'' வெற்றிக் களிப்புடன் முடித்தான்.

''அதுக்குத் தான் சிரிச்சீங்களா?''

அவனை நம்பாமல் அவள் அடிக்குரலில் கேட்க, ''சிரிச்சது அதுக்கில்லை! என்னையும் சமாளிச்சி, படிப் பையும் தொடருவேன்னு சொன்னது தான் என்னை சிரிக்க வச்சிது!'' குறுகுறுத்த விழிகளுடன் நிறுத்தினான்.

''உங்களை சமாளிக்கறதுன்னா...?''

யோசிப்பதற்குள் வார்த்தைகள் வந்து விழுந்து விட, பெரும் தர்மசங்கடத்துடன் சிவந்தது அவள் முகம்!

அந்த முகச் சிவப்பு அவனுள் பல கனவுகளை விதைக்க, வன்மையாய் வருடி அவள் தேகமெங்கும் காயங்கள் செய்தன அவனுடைய குறும்பு விழிகள்!

சட்டென்று பேச்சை மாற்றினாள் அவள்!

''கோல்ட் மெடலுக்கும், கல்யாணத்துக்கும் அப்படி என்ன சம்பந்தம்?'' சலிப்புடன் வினவினாள்.

JUN 12 2010

"ம்.. கோல்ட் மெடலுக்கும், கோல்ட் மெடலுக்கும் மேரேஜ்... அதைச் சொன்னேன்."

அமர்த்தலாக அவன் மொழிந்தபோது, உடனே அவளுக்குப் புரியவில்லை!

பிறகு, அவனும் மருத்துவத் துறையில் தங்கமெடல் வாங்கியிருப்பது தெரிய "ஓ..." என்றாள்!

"ஒரு சின்ன சந்தேகம்! நீங்க கார்டியாலஜிஸ்டா இல்லை சைக்காலஜிஸ்டா?"

அவளின் வியந்த கேள்விக்கான உள் அர்த்தம் புரிய, இயல்பாக முறுவலித்தபடி "ரெண்டுமேதான்!" என்றான் அருள்!

"இவனை வெல்ல முடியுமா..? தான் நினைத்தது போல் இவனுடைய நிம்மதியை அழிக்க முடியுமா?"

பல கேள்விச் சரங்கள் அவளுக்குள்!

இது எதையுமே அறியாத அவனோ, உள்ளார்ந்த சிரிப்புடன் அவளையே விழிகளால் பருகிக் கொண்டிருந்தான்.

அவள் வேகமாக மூச்சு விட்ட வெப்பத்தில்... அவனுடைய இதயப்பூ வேகமாய் மலர்ந்தது.

அவனுடைய உணர்வுகளை அவள் அறியவில்லை!

"ஓகே பேபி! அம்மாவை விட்டு இந்த ஒரு வாரத்துக்குள்ளே ஒரு நல்ல நாளைப் பாக்கச் சொல்லிடறேன்! கோவில்லே சிம்ப்பிளா கல்யாணத்தை வெச்சிக்கலாம்!"

"அங்கிளோட ஆபரேஷன் முடியட்டும்... அவர் ஹெல்த் கொஞ்சம் இம்ப்ரூவ் ஆனபிறகு கிராண்டா ஒரு ரிசப்ஷன் அரேன்ஜ் பண்ணிடலாம்!



"இந்த ஒரு வாரத்திலே, கல்யாணத்துக்கு தேவையான திங்க்ஸ் எல்லாம் வாங்கணும்! பட்டுப்புடவை, நகை... டைமண்ட், ஜுவல்ஸ் உனக்குப் பிடிக்கும் இல்லியா? நீ என்னிக்கு ஃப்ரீன்னு சொல்லு.. வாங்கிடலாம்!

"உன் நட்பு வட்டத்துல.. உறவுல கல்யாணத்துக்கு யாரைக் கூப்பிடணுங்கிறதை முடிவு பண்ணிடு! போன்லேயே அழைச்சிடலாம்! ரிசப்ஷனுக்கு இன்விடேஷன் ரெடி பண்ணிக்கலாம்!"

அவன் தொடர்ந்து திட்டமிட்டுக் கொண்டே போக, அவளுடைய இதயம் பலமாய் துடிக்க ஆரம்பித்து உணர்வுகள் உலர்ந்தன.

அவளுடைய மௌனம் அவனுக்குள் பெரும் பாரமாய்...!

"பெண் பூவே வாய் பேசு..." மெல்லத் தகிக்க ஆரம்பித்தது அவன் மனது!

ஆனால், அவனுடைய வார்த்தைகளின் கனம் தாங்க இயலாமல், உடனே எழுந்தாள் அவள்.

"என்ன.... கிளம்பிட்டியா? சரி... அங்கிள் கிட்ட நீயே சொல்லிடறியா?" இயல்பாக வினவினான்.

உடனே விதிர்த்து நிமிர்ந்தவள், "வேண்டாம்.. அப்பாவுக்கு இது தெரிய வேண்டாம்" பதட்டத்துடன் உரைத்தாள்.

மறுகணமே முகம் சுருங்கி விட, "அப்போ ரகசியக் கல்யாணம் செஞ்சுக்கலாம்கிறியா?" கூர்மையாகக் கேட்டான்.

"ப்ச்... நான் அதைச் சொல்லலை! இந்த கண்டிஷன்.. அதை அப்பாகிட்டே சொல்ல வேண்டாம்னு தான் சொன்னேன்!" உதட்டைக் கடித்தபடி நிறுத்தினாள்.



JUN 12 2010

அவனுடைய பார்வை.. மொட்டாய் கூம்பிய அந்த இதழ்களில் வேட்கையுடன் பதிய அதை ஸ்பரிசிக்க போகும் தருணத்தை ஆவலுடன் எதிர்பார்த்தது உள்ளம்!

ஆனால், அவளுடைய பேச்சில் அந்தக் கனவுலகம் கலைந்தது.

கூம்பியிருந்த அவளுடைய இதழ்கள் விரிந்து அசைய, அவளையே கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான் அருள்!

''எப்பவும்.. எந்தக் காலத்துலயும் அப்பாவுக்கு நீங்க என்னை... இப்படி ஃபோர்ஸ் பண்ணி கல்யாணம் பண்ணிக்கப் போறது தெரிய வேண்டாம்!''

''உண்மை தெரிய வந்தா அவர் உடைஞ்சிடுவாரு... கலங்கியே போயிடுவாரு... அதான்.''

தலைகுனிந்து தன் விரல்களையே பார்த்தபடி அவள் கூற, அவனுக்குள் தாங்க முடியாத சிரிப்பு தடம் பதிப்பதாய்!

இந்த யோசனையைக் கூறியதே உன் தந்தைதான் என்று கூறினால், அவள் முகம் எப்படி மாறும் என்ற கற்பனையில் குறும்புடன் ஒளிர்ந்தது அவன் முகம்!

அவனுடைய மௌனம் சங்கடப்படுத்த திடீரென்று அவள் நிமிர்ந்த போது, தன்னுடைய உணர்வுகளை அடக்கப் பெரும்பாடு பட்டான் அவன்.

''ஒகே பேபி! அதே மாதிரி, எங்கம்மாவுக்கும் இந்த விஷயம் தெரிய வேண்டாம்.. இது அவங்களுக்காகவே எடுத்த ஒரு முடிவு!''

மெதுவாக அவன் நிறுத்தியதும், சரியென்பது போல் தலையசைத்தாள் அவள்!



இதயம் செல்லரித்த பலகையாய் பலவீனப்பட்டிருந்தது!

விழிகள், சோகமின்மினிகளாய் ஒளிர்ந்தன.

மன்றத்தில் கைப்பிடித்த

மன்னவனை...


மஞ்சத்தில்

மகிழ்விக்க மனமிலாத

மலராய்

அவள்!

ஆனால், தன் இதயக் கருவறையில் அவளை சுமந்திருந்த அருளுக்கோ, உன்னை என் உயிரினில் சுமக்கிறேனடி என்று கூற வேண்டும் போல்!



## 16



மறுகணமே, தன் செல்லை எடுத்து தன் தாயை அழைத்தான் அவன்.

''அம்மா! உங்க மருமக... கல்யாணத்துக்கு சம்மதிச்சிட்டா! இன்னும் ஒரே வாரத்துல கல்யாணம்! கோவில்லதான்... எல்லா ஏற்பாடும் செய்யச் சொல்லிடுங்க!'' என்றான்.

எதிர்முனையில் அவர் என்ன கூறினாரோ, அவன் முகத்தில் மெல்லிய குறும்பும் சிறு வெட்கமும் அலையாய்ப் பரவியது!

ஒரு கம்பீரமான ஆணிடம் கசிந்த சிறு வெட்க உணர்வு... அவள் விழிகளிலும் பிரமிப்பையும், பரவசத்தையும் ஏற்படுத்தின!

''கம்பீரம்... ஆளுமைத்தனம்... சிறு சிறு குறும்புகள்... இறுக்கம் கலைந்த அகங்காரம்... கொஞ்சம் மென்மை... கொஞ்சம் திமிர்!''

பல குணங்களின் கலவையாய் அவனை அளவிடும் போதே, செல்லில் ஸ்பீக்கர் போனை அவன் அழுத்த, தனது மகிழ்ச்சியை வெளியிட வார்த்தைகளே இல்லை என்று கூறி ஆனந்தக் கண்ணீரில் தத்தளித்த சொர்ணத்தின் குரல் உடைவது அவளுக்கும் கேட்டது!

உடனே மனம் தன் தந்தையிடம் செல்வதாய்!

''அப்பா! உங்களின் மகிழ்ச்சிக்காகத்தான் எல்லாமே... அதற்காகத்தான் நான் விரும்பாத இந்தத் திருமணத்திற்கு சம்மதித்தேன்'' தந்தையிடம் மானசீகமாகப் பேசியது இதயம்!

உள்ளூர மறுகியபடி அமர்ந்திருக்கும்போதே அவன் வேறு யாருக்கோ தொடர்பு கொண்டான்.

அவள் விழிகள்... காட்சிப் பதிவுகளை உணர மனமின்றி எங்கோ பதிந்திருக்க, செவிகள் மட்டும் கூர்மையாய் அவன் பேசுவதை அளவெடுத்தன.

''வேணிக்கா! என் தேவதை என்னை மணக்க சம்மதிச்சிட்டா! இன்னும் ஒரு வாரத்தில் கல்யாணம்! எல்லா ஏற்பாட்டையும் நீங்கதான் கவனிக்கணும்!'' மெல்லிய குரலில் கூறினான்.

ஆனால் அவளுக்குள்ளோ... ஒரு புகைச்சல்... ஈரவிறகாய்!



''தேவதையாம் தேவதை! என்னமாய் கதை விடுகிறான்... பொய், அவன் நாக்கில் சரளமாய் புகுந்து விளையாடுமோ?''

மேலும் ஒரு தவறான கணிப்பில் அவள் முகம் சுருங்க, சிறு சினம் வந்து விழிகளில் எட்டிப் பார்த்தது!

அவனோ எதையும் கண்டு கொள்ளாதவன் போல, செல்லை அவளிடம் நீட்டினான்.

அவள் புரியாது விழிக்கவும், ''என்னை வளத்தவங்க அவங்க... அம்மாவுக்கப்புறம் எல்லா விஷயங்களையும் நான் அவங்ககிட்டதான் ஷேர் பண்ணிப்பேன்... என்னோட வெல்விஷர்... பேசு!'' அவன் குரலில் ஒருவித ஆணையிடும் தன்மை தெரிவதாய்!

மறுக்க இயலாமல் வாங்கி அவள் ''ஹலோ...'' எனவும், ''கண்ணம்மா! எங்க ராசய்யாவைக் கல்யாணம் செஞ்சுக்க சம்மதிச்சிட்டியாமே... நான் கும்பிட்ட கடவுள்தான் உன்னை அவன்கிட்ட கொண்டு வந்து சேத்திருக்கு!

''திருமணமே வேண்டாம்னு இருந்தவன், உன்னை மணக்க விரும்பி ஒரு முடிவு எடுத்தானே.. அதுவே எனக்குப் போதும் கண்ணம்மா! என் செல்லமே! அவன் மனசை மாத்துனதுக்கு உனக்கு கோடி நன்றிடா!''

உணர்ச்சி வசப்பட்டு நடுங்கும் குரலில் கூறிவிட்டு, போனிலேயே அவர் பாசத்துடன் முத்தமிட, அவளறியாமலே நெகிழ்ந்தது நெஞ்சம்.

அந்த எதிர்பார்ப்பில்லாத அன்பு, தன்னை தாயாய் வளர்த்த அருள்மொழியை... ஒரு தாயன்பை அறிமுகப்படுத்தி, மனதிற்குள் ஒரு தாயுருவை உருவகம் செய்தது.

JUN 12 2010

என்ன பேசுவது என்று தடுமாறும்போதே அவன் செல்லை வாங்கக் கை நீட்ட, மனமின்றி திருப்பிக் கொடுத்தாள்.

பிறகு அவன் பேசிவிட்டு வைத்ததும் அவளிடம் திரும்பினான்.

''வேணியக்காவுக்கு ரொம்ப சந்தோஷம்... அவங்க ஒரு டாக்டர்... எங்க மேனேஜர் நல்லசிவம் அங்கிளோட பொண்ணு! என்னைப் பெறாத ஒரு அம்மா... உனக்கு அருள்மொழி பெரியம்மா எப்படியோ அது மாதிரி!'' என்றான்.

''ஓ!'' என்றவள், ''அவங்களை யாரும் கல்யாணம் செஞ்சு ஏமாத்தலை இல்லே? பாவம்... ரொம்ப நல்லவங்களாத் தெரியறாங்களேன்னு கேட்டேன்!'' குத்தலாக மொழிந்தாள்.

உடனே, அவன் முகம் சுருங்கி இறுகியது.

பதிலேதும் கூறாமல் கை முட்டிகளை மடக்கி ஒருவித இறுக்கத்துடன் அவன் தன் கோபத்தை அடக்க முயற்சித்தான்.

மறுகணமே, தவிக்க ஆரம்பித்த இதயத்திற்குள் தான் தவறு செய்து விட்டாற் போல ஒரு குற்ற உணர்வு அவளிடம்.

'ஒருவேளை, உண்மையாகவே இவன் நல்லவன் தானோ...?'' இதயம் கேள்வி கேட்டது!

ஆனால், தன் அத்தையின் வாழ்க்கையில் அவன் தந்தை விளையாடியதைப் போல், அவன் தன்னை வேறு விதமாய் பகடைக் காயாய் உருட்டி விளையாடுவது பொறுக்க முடியாத ஒன்றாய்!



'என் தந்தையின் கழுத்தில் கத்தி வைத்துத் தானே என்னை மணக்க திட்டம் தீட்டினாய். அவரைக் காரணம் காட்டி என் கழுத்தில் கல்யாண மாலையை ஏற்ற நினைக்கிறாய்..?

'இதற்கு, நான் உன்னைப் பழி வாங்காமல் விடமாட்டேன்!' உள்ளம் சூளுரைத்தது!

''என்ன... அங்கிள் கிட்ட சொல்ல வேண்டாமா? நானும் வரவா?'' அவன் குரல் அவளைக் கலைத்தது.

விதிர்ப்புடன் நிமிர்ந்தவள், ''இல்லை... வேணாம்! நானே சொல்லிக்கறேன்!'' வேகமாக எழுந்து விடை பெற்றாள்.

உள்ளடக்கிய சிறு முறுவலுடன், அவள் உணர்வுகளைப் புரிந்தாற் போல், அவனும் மௌனமாய் தலையசைத்து விடை கொடுத்தான்.

## 17

தபஸ்யா, அறையை விட்டுச் சென்ற உடனே செல்லை எடுத்து, விநாயகத்திடம் அந்த நல்ல செய்தியை அவன் தெரிவித்தபோது, அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!

''ரொம்ப நன்றிப்பா! எங்க எல்லாருடைய ஆசையும் நிறைவேறப் போகுது... இனிமே அவ உன்னுடையவ! அவளை அன்பாப் பாத்துக்க வேண்டியது உன் பொறுப்பு!'' கம்மிய குரலில் கூறினார்.

''நிச்சயமா அங்கிள்! இந்த ஐடியாவைச் சொன்னது நீங்கதானே? உங்களுக்குதான் நான் [illegible] சொல்லணும்!

JUN 12 2010

தயா வந்துடப் போறா... எதுவும் தெரியாத மாதிரியே பேசி சமாளிங்க... பை'' என்று வைத்தான்!

சிறிது நேரத்தில் அறைக் கதவைத் திறந்து அருகில் வந்து அமர்ந்தவள், மெதுவாக அவருடைய கையைப் பிடித்தபடி பேசத் துவங்கினாள்.

''அப்பா... நான் நல்லா யோசித்துப் பார்த்துட்டேன்... நீங்க சொல்றதும் சரின்னுதான் தோணுது!'' மெல்ல நிறுத்தினாள்.

''என்னம்மா... அருள்தான் எனக்கு ஆபரேஷன் பண்ணணும்னு சொன்னேனே... அதுவா? நல்ல வேளை இப்பவாவது உனக்குப் புரிஞ்சுதே!''

நமட்டுச் சிரிப்பை அடக்கியபடி சிரிக்காமலே கூறினார்.

''அதில்லைப்பா... அந்த அருள்...''

அவன் முடிக்கும் முன்பே இடைமறித்தவர், ''அருள் வேந்தன், விஸ்வநாதனோட மகன் அப்படிங்கிறதெல்லாம் மறந்துடும்மா! அவர் ஒரு நல்ல சர்ஜன்! அதை மட்டும் தான் நான் நினைக்கிறேன்... அவர்தான் எனக்கு ஆபரேஷன் பண்ணணும்... இதான் என் முடிவு!'' அழுத்தமான குரலில் முடித்தார்!

அவளுக்குள், இந்த விஷயத்தை அவரிடம் எப்படி உடைத்துச் சொல்வதென்ற தவிப்பு!

''அப்பா... நான் அதைச் சொல்லலை! உங்க விருப்பப்படி நான்... அந்த அருளை கல்யாணம் செஞ்சிக்க சம்மதிக்கிறேன்ப்பா! சந்தோஷம் தானே?''

தர்ம சங்கடத்துடன் தலை குனிந்தபடி அவள் கேட்க, ''கடவுளே... என் வயித்துல பாலை வார்த்தேப்பா! ரொம்ப



சந்தோஷம்மா! கல்யாணம்னவுடனே இந்தப் பொண்ணுங்களுக்கு எங்கேருந்துதான் இவ்வளவு வெக்கம் வருமோ?'' உற்சாகத்துடன் அவளைக் கேலி செய்தார் விநாயகம்!

பிறகு அவளை அருகே அழைத்தவர், கண்கள் கலங்க மகளை அணைத்து தலையை வருடி உச்சந்தலையில் முத்தமிட்டார்.

''இப்பவே எனக்கு உடம்பு சரியாயிட்ட மாதிரித் தோணுதுடா! எப்ப கல்யாணம்னு ரெண்டு பேரும் சேர்ந்து முடிவு செஞ்சிட்டீங்களா? கள்ளி! அதுக்குத்தான் என்கிட்டகூட சொல்லாம அருளைப் பாக்கப் போனியா?''

அவருடைய கிண்டலை உணர்ந்து, ''போங்கப்பா! உங்களுக்கு கேலியா இருக்கா?'' மெல்லச் சிணுங்கினாள்.

''கேலியாவா? நல்லாக் கேட்டே போ! இப்பதான் புதுசாப் பிறந்த மாதிரி இருக்கு... உலகத்திலேயே ரொம்ப சந்தோஷம் நிறைஞ்சவங்க இந்த நிமிஷம் யாருன்னா அது நான்தான்!'' பரவசத்துடன் கூறினார்.

''சந்தோஷப் படுங்க அப்பா! ஆனால் நானும் ஒரு நாள் ஆனந்தமாய் கை கொட்டி சிரிப்பேன்... அன்று அந்த அருள் என்னை ஏன் திருமணம் செய்து கொண்டோம் என்று எண்ணி நெஞ்சு புழுங்கிக் கலங்கும் நிலை வரும்!''

பழி வாங்கத் துடித்த நெஞ்சிற்குள், அனலாய் தகித்தன உணர்வுகள்!

''என்னடா யோசனை? என்னை நிமிர்ந்து தான் பாரேன்! நீ.. உண்மையான விருப்பத்தோட தானே இதுக்கு சம்மதிக்கிறே?'' ஆவலாகக் கேட்டார்

JUN 12 2010

அவருக்காக, மெதுவாகத் தலையசைத்தபடி நிமிர்ந்தவளின் மனம் உலைக் களமாய் தகிக்க, முகம் அடை மழையாய்க் குளிர்ந்திருந்தது.

அவளுடைய முகத்தை இரு கைகளிலும் ஏந்தியவர், "இன்னிக்கு இப்படி ஒரு முடிவெடுத்ததுக்காக வாழ்நாள் முழுக்க நீ ஆனந்தமா இருப்பே பாரு!" நெகிழ்ச்சியுடன் முடித்தார்.

"ஆமாம்ப்பா! நான் அப்படித்தான் இருப்பேன். ஆனா அந்த அருளோட மகிழ்ச்சியும், மன நிம்மதியும்தான் குலையப்போகுது... பாத்துட்டே இருங்க!"

உணர்வுகள் மௌனமாய் மருகின!

* * *

மறுநாளிலிருந்து, திருமண வேலைகள் அசுர வேகத்தில் நடைபெற ஆரம்பித்தன!

அடுத்த நாளே புடவை எடுப்பதற்காக சென்றபோது தான் அவள் வேணியை முதன் முதலாகச் சந்தித்தாள்.

இரட்டை நாடி சரீரம்... பார்த்ததும் கையெடுத்துக் கும்பிடத் தோன்றும் உருவம்... கருணையும் பரிவும் சுமந்த விழிகள்!

ஏனோ அவரை உடனே பிடித்துப் போனது தபஸ்யாவுக்கு!

அவளைக் கண்டதும் ஓடி வந்து பாசத்துடன் அணைத்துக் கொண்ட அந்தப் பெண்மணியின் மேல் இனம் புரியா ஒரு விதப் பாசம் வருவதாய்!

தன்னை ஒரு கைனகாலஜிஸ்ட் என்று அவர் அறிமுகப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பிக்க, அவருடைய இயல்பான பேச்சில் வெகுவாய் ஈர்க்கப்பட்டாள் அவள்.



பழக ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே அவரிடம் ஒட்டிக் கொண்டு விட்டாள்.

பிறகு, சென்னையிலேயே பெரிய துணிக்கடைக்கு மூவரும் சென்றனர்.

திருமணத்திற்கு அரக்கு நிறத்திலும், ரிசப்ஷனுக்கு இளம் பிங்க் நிறத்திலும் அவள் சேலையைத் தேர்வு செய்தாள்.

ஆனால் தனக்குப் பிடித்திருக்கிறதென்று பேன்சி பட்டு, டிசைனர் புடவை, ஆர்கன்ஸா, சில்க் காட்டன் என்று இருபது புடவைகளுக்கும் மேல் தேர்ந்தெடுத்து விட்டான் அருள்!

வேணியின் முன் தன் மறுப்பை வன்மையாய் வெளிப்படுத்தவும் முடியாமல், அந்தப் புடவைகளை இயல்பாக ஏற்கவும் மனமின்றி தவித்தவள், சீற்றத்துடன் அவனருகில் குனிந்தாள்.

"மிஸ்டர் அருள்! போதும்! எனக்கு இந்தப் புடவை எல்லாம் வேண்டாம்.. என்கிட்டே நிறையவே இருக்கு! அப்பா சொன்னாரேங்கறதுக்காகத்தான் வந்தேன்... வேணி ஆன்ட்டி முன்னாடி ரொம்ப என் மேல காதல் இருக்கற மாதிரி நடிக்க வேண்டாம் எனக்குப் பிடிக்கலை!" அடிக் குரலில் சீறினாள்.

"நான் நடிக்கலை! உண்மையாவே எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!"

சட்டென்று விதிர்த்தவள், "என்னது... இதை என்னை நம்பச் சொல்றீங்களா?" சுள்ளென்று கேட்டாள்.

"எதை...?"

கூர்மையுடன் வந்த அவன் கேள்விக்கு, "ம்... என்னைப் பிடிச்சிருக்குன்றதை" சுவாரசியமின்றிக் கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

JUN 12 2010

உடனே அவன் வாய்விட்டுச் சிரித்தவுடன், அது ஏதோ காதலர் ஊடலென்று புரிந்து இங்கிதத்துடன் எதிர்ப்புற மிருந்த புடவை செக்ஷனுக்கு சென்றார் வேணி!

''என்ன சிரிப்பு? பாருங்க... வேணி ஆன்ட்டி நமக் குள்ளே என்னவோ ப்ரச்னைன்னு நினைச்சிக்கிட்டு விலகிப் போயிட்டாங்க!''

''என் ப்ரச்னையே இல்லையா? அதை விடு... நான் பிடிச்சிருக்குன்னு சொன்னது... இந்தப் புடவைகளை...! போதுமா?'' ஆழ்ந்த குரலில் முடித்தான்.

''ப்ச்... அதானே பாத்தேன்... அம்மாவோட கட்டாயத் துக்காக கல்யாணம் செஞ்சுக்க சம்மதிச்சு... சுய விருப்ப மில்லாம ஒரு பொண்ணை... அப்பாவை முன் நிறுத்தி மிரட்டறவராச்சே நீங்க?

''உங்க மனசுல காதல்... ஈரம்... மென்மை இதை யெல்லாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? உங்கப்பா ரத்தம் தானே உங்களுக்குள்ளேயும் ஓடுது'' குத்தலாய் தெறித்தன வார்த்தைகள்!

மறுநொடியே நிமிர்ந்தவனுடைய விழிகள், தீச்சுடராய் சினம் சுமந்து பளபளத்தன!

''எங்கப்பா இறந்துட்டாங்க... அவரைப் பத்தி இப்ப ஏன் இழுக்கறே..? அவரை மரியாதையில்லாம நீ பேசறது... இதுவே கடைசி தடவையா இருக்கணும்!

''எல்லா நேரமும் நான் சகிச்சிட்டிருக்க மாட்டேன்... என் கோபத்தை நீ பாத்ததில்லை. இப்படி சீண்டி சீண்டி என்னை மிருகமாக்கிடாதே!''

உள்ளத்து உணர்வை... உண்மையான எழுச்சியை பிரதிபலித்தது. அந்தக் குரல்!

அமர்ந்த குரலில் கர்ஜிப்பதென்றால் என்ன என்பதை நேரிலேயே பார்த்தவளுக்கு சப்த நாடியும் ஒடுங்கிப் போக உள்ளே ஒருவிதக் குளிரும் நடுக்கமும் பரவின!



ஒருநாள் காலையில் கிருஷ்ணவேணியுடன் அவ ளுடைய வீட்டிற்கே வந்து விட்டான் அருள்!

தலை குளித்துவிட்டு விரித்து காயவிட்டபடி, ஓய்வாக அமர்ந்திருந்தவள், அவ்வளவு சீக்கிரத்தில் இருவரையும் எதிர்பார்க்கவில்லை.

''வாங்க...'' பொதுவாக அழைத்தபடி இருவரையும் வரவேற்று அமர வைத்தாள்.

தன் கையிலிருந்த பெரிய லெதர் பேகிலிருந்து நகைப்பெட்டிகளை எடுத்து அவளிடம் அளித்தான் அவன்!

''இது...'' அவள் தயங்கும்போதே ''தயாம்மா! அருள் உனக்காக வைர செட் வாங்கி இருக்கான்! சொர்ணம் மாவும் உனக்கு பரம்பரை வைர மாலையையும் வங்கி, ஒட்டியாண செட்டையும் குடுத்துட்டு வரச் சொன்னாங்க!

''கல்யாணத்தன்னிக்கு நீ இதையெல்லாம் போட் டுட்டுதான் வரணும்கிறது எங்க விருப்பம்'' என்றார்.

அவரிடம் ஏனோ அவளால் மறுக்க முடியவில்லை.

## 18

திருமண நாளும் வந்தது!

எல்லோரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருக்க, தபு மட் டும் சுழலில் சிக்கிய பரிசிலாய் தடுமாறித்தான் போனாள்.

யாருமில்லாத் தீவில் தனித்து விடப்பட்ட கப்பற் பறவையாய்... தனிமையை வெகுவாய் உணர்ந்தாள்.

விநாயகமோ, பெண் திருமணக் கனவுகளில் ஆழ்ந்திருப்பதாக எண்ணினார்.

தினமும், அருளை மருத்துவமனையில் சந்திக்கும் போதெல்லாம் அவளுக்குதான் படபடப்பாய்!

அவனோ, எந்தவித மாற்றமுமின்றி, இயல்பாக ஒரு மருத்துவராய் கடமையே கண்ணாக நடந்து கொள்வது அவளுக்குதான் பெரும் வியப்பைத் தரும்!

திருமண நாளன்று, உடல் முழுவதும் ஜரிகைக் கொடிகள் ஓடிய அரக்குப் புடவையும், வைர நகைகளும் அணிந்து வீட்டில் காத்திருந்தாள் அவள்.

நெருங்கிய உறவுகள் மட்டுமே அழைக்கப்பட்டிருக்க, பத்து பதினைந்து பேர் மட்டுமே ஊரிலிருந்து வந்திருந்தனர்.

அழகு நிலையத்திலிருந்து வந்திருந்த பெண்ணுடைய கைவண்ணத்தில் உலக அழகியை மிஞ்சும் விதமாக ஒளிர்ந்து கொண்டிருந்தாள் தபஸ்யா!

விநாயகத்தை, மருத்துவமனையிலிருந்தே நேராக கோவிலுக்கு அழைத்து வர ஏற்பாடு செய்திருந்தான் அருள்!

வாசலில் கார் வந்து நிற்க, கிருஷ்ணவேணியும் அவருடைய கணவர் சம்பந்தமும் இறங்கினர்.

வேகமாக உள்ளே வந்த வேணியின் விழிகள் பிரமிப்புடன் விரிய, விரைந்து வந்து கன்னம் வருடி திருஷ்டி கழித்தார்.

"தபு! இப்ப எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா?" அவருடைய பார்வை அவளையே பாசத்துடன் தலை முதல் கால் வரை வருடியது!



வைர நகைகளுக்கு பொருத்தமாக அணிவிக்கப்பட்டிருந்த வெள்ளைக் கல் நெத்திச் சுட்டியும், பல வர்ணங்களை வாரியிறைத்தபடி வர்ண ஜாலங்களுடன் பளபளத்த வைரக் காதணியும், தொங்கட்டானும், மாட்டலும் அவள் திரும்பும் போதெல்லாம் ஒளிர்ந்தன.

அதற்குப் பொருத்தமாக அருள் வாங்கிப் பரிசளித்திருந்த வைர நெக்லஸும், பரம்பரை வைர மாலையும் அவளுடைய அழகுக்கு அழகு சேர்த்தன.

பழைய மாடலாக இருந்தாலும் புதுப்பிக்கப்பட்டு, ஆண்டிக் மதிப்புடன் தங்கள் மதிப்பை பறை சாற்றியபடி அவளுடைய இடையையும், கரங்களையும் இறுகப் பற்றியிருந்தன... ஒட்டியாணமும், வங்கியும்!

ஒரு தேவ கன்னிகையே உயிர் பெற்று வந்ததைப் போல் தோன்றியது... வேணிக்கு!

பெண் தோழியாய் அவளை அழைத்துக் கொண்டு அவர் கிளம்பி கோவிலுக்கு வந்தபோது அனைவரும் அங்கு காத்திருந்தனர்.

பட்டு வேட்டி சட்டையில் அருள் ஒரு ராஜகுமாரனைப் போலிருந்தான்.

சொர்ணமும், விநாயகமும் ஆசீர்வதிக்க, குடும்ப உறுப்பினர்கள் மட்டும் பங்கேற்க, எளிமையாய் நிறைவாய் நடந்து முடிந்தது திருமணம்!

தபுவிற்குத் தான் அது ஒரு கட்டாயக் கல்யாணமாய்! விவாகப் பொருத்தமின்றி, விவாதப் பொருத்தம் மட்டுமாய்!

அருள்... தன் தேவதையின் கைப்பிடித்த ஆனந்த அதிர்ச்சியிலும், அவள் தன் தோள் சேரும் தருணத்தை

JUN 12 2010

எதிர்பார்த்து ஏக்கப் பெருமூச்சுடனும் வலம் வந்து கொண்டிருந்தான்.

திருமணம் பற்றி பெரிய அளவில் விளம்பரங்கள் புகைப்படத்துடன் எல்லாப் பத்திரிகைகளிலும் கொடுக்கப்பட்டிருந்தன.

சப்தபதி மந்திரம் உச்சரிக்கப்படும்போது, அவள் காதருகில் குனிந்தவன், "எங்கம்மாவும், உங்கப்பாவும் கவனிக்கிறாங்க தயா! வீடியோ வேற எடுக்கிறாங்க... கொஞ்சம் சிரிக்கலாமே... அப்புறம், போட்டோல பாக்கறப்ப அன் சகிக்கபிளா இருக்கும்!" ஆழ்ந்த குரலில் கூறினான்.

உடனே, தன் சோகக் கனவுலகிலிருந்து கலைந்து தன்னிலை உணர்ந்து நிமிர்ந்தவள் விநாயகத்தைப் பார்த்து மென்மையாகப் புன்னகைத்தாள்.

பிறகு ஓரக்கண்ணால் அருகில் கம்பீரமாக அமர்ந்திருந்த அருளைப் பார்க்க, அவனோ அந்த நேரம் அவளையே கவனித்துக் கொண்டிருந்ததால், வெற்றிக் களிப்பில் புருவங்கள் உயர்த்தி குறும்பாய் முறுவலித்தான்.

உடனே, அவளையும் அறியாது படர்ந்த நாணத்தால், இரு கன்னங்களும் சேதாம்பலாய் சிவந்தன.

அவள் முகத்தில்... வெட்கம் வரைந்த ஓவிய வரிகள் மிக எழிலாய்!

முகம் முழுவதும் விகசிப்புடன் அவளையும், தாள முடியாத உச்ச சந்தோஷத்தில் அருளையும் கண்ட அனைவரும், மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருந்தனர்.

அந்த இனிமையான தருணத்தில், அனைவரின் நல்லாசியுடன் அவள் கழுத்தில் திருமாங்கல்யத்தை அருள் அணிவித்தபோது, ஏனோ சிலிர்த்துப் போனது அவள் தேகம்!



பின்புறமிருந்து கிருஷ்ணவேணி மாப்பிள்ளையின் சகோதரியாய் மூன்றாவது முடிச்சுப் போட்டு தாங்கிக் கொள்ள சடங்குகள் தொடர்ந்தன.

* * *

திருமணம் முடிந்ததும் இருவரும் எழுந்து சொர்ணத்திடமும், விநாயகத்திடமும் ஆசி பெற, அருள் புன்னகையுடன் வேணியிடம் சென்றான்.

உடனே குறிப்புணர்ந்து சம்பந்தம் அருகில் வந்து நிற்க, இருவரும் விழுந்து நமஸ்கரித்தனர்.

"வேணிதான் உன்னை வளர்த்த அம்மான்னு தபு கிட்டே சொல்லிட்டியா அருள்?"

சொர்ணம் கேட்கும்போதே குனிந்து இருவரையும் வாரி அணைத்து முத்த மழை பொழிய ஆரம்பித்தார் வேணி!

"உன் ராசய்யாவை இந்தக் கோலத்துல பாக்கணும்னு தானே, கோவில் கோவிலா ஏறி இறங்கி அங்கப் பிரதட்சணம் செய்தே! உன் வேண்டுதலைக் கடவுள் நிறைவேத்தி வெச்சிட்டார் பாரு."

நெகிழ்ச்சியுடன் கசிந்த கண்களைத் துடைத்துக் கொண்டார் சம்பந்தம்!

சொர்ணம் பெருமிதத்துடன் வேணியின் கைகளைப் பற்றி அழுத்த, அப்படியே அவருடைய தோளில் சாய்ந்தவரின் விழிகள், ஆனந்த அருவிகளாயின.

இப்படியும் ஒரு பிரியமா? ஒரு டாக்டர்... தான் வளர்த்த பாசத்துக்காக அங்கப் பிரதட்சணம் செய்கின்ற அளவு!

பக்திக்கும், படிப்புக்கும் சம்பந்தமில்லை என்பது விளங்க, தபுவின் விழிகளும் மெல்லக் கசிந்தன.

JUN 12 2010

அந்த நிமிடத்திலிருந்து வேணியின் மீது, இன்னும் அதிகமாய் ஒரு விதப் பாச உணர்வு இழை கோர்ப்பதாய்!

அனைவருக்கும், ஒரு நட்சத்திர ஓட்டலில் விருந்து முடிந்ததும், அதிகம் அலைப்புறாதபடி விநாயகத்தை மருத்துவமனைக்கு அனுப்பி விட்டான் அருள்!

## 19

பிறகு, உறவினர்களுடன் இருவரும் அருளின் வீட்டிற்குச் சென்றனர்.

வேணியும், சில சுமங்கலிப் பெண்களும் முன்பே சென்று காத்திருக்க, ஆரத்தி சுற்றும் போது, தன் தாயை அழைத்தான் அவன்!

அவள் பதட்டத்துடன் மறுக்க, "அம்மா! எனக்கு முதல் வெல்விஷரே நீங்கதான்! உங்களோட ஆசீர்வாதம்தான் எனக்கு முக்கியம்! நீங்களும் வேணியக்காவும் எங்களுக்கு ஆரத்தி சுத்தி வீட்டுக்குள்ளே அழைங்க!" அழுத்தமாக அழைத்தான்!

"இல்லைப்பா! உங்க அப்பா உயிரோட இருந்திருந்தா அது வேற! சுமங்கலிப் பெண்கள்தான் ஆரத்தி எடுக்கணும்! உனக்குப் புரியாது" அவர் மறுத்தார்.

"அம்மா! இப்ப வரப் போறீங்களா இல்லையா. அப்பா இல்லைன்னா... ப்ளீஸ் புரிஞ்சிக்கங்க! நீங்கதான் எங்களை அழைக்கணும்னு நான் நினைக்கிறேன்... வாங்க!" என்றவன் அவளிடம் திரும்பினான்.



"தயா! இதுலே உனக்கொண்ணும் அப்ஜெக்ஷன் இல்லையே?" அடிக்குரலில் கேட்டான்!

எல்லாவற்றிலும் அவனை மறுக்க வேண்டும் என்று எண்ணியிருந்தாலும், இப்போது அவளால் அதை செயல்படுத்த இயலவில்லை!

"நிச்சயமா இல்லை... அத்தை வாங்க... உங்களைவிட எங்களுக்கு நல்லது நினைக்கப் போறவங்க யார் இருக்காங்க? ப்ளீஸ்!" மெல்ல அழைத்தாள்.

பிறகு அரை மனதுடன் அவர் முன்னால் வர, இருவருமாக ஆரத்தி சுற்றி அழைத்தனர்.

ஒருமுறை அவளுடைய தோழியின் திருமணத்திற்கு அவள் சென்றிருந்தபோது, வீட்டில் மூத்தவர் விதவையாக இருந்தாலும், பெண் மாப்பிள்ளைக்கு திருஷ்டி சுற்றி அழைத்தனர்.

அது நகரத்தார்களின் திருமணம் என்பதால் அவர்களின் வழக்கம் அதுதான் என்று மற்றொரு தோழி கூறியது. இன்று நினைவு வந்தது.

முதன் முதலாக அருள் வேந்தன் மேல் ஒரு நல்ல கணிப்பு வித்தாய் மனதில் விழுந்தது.

ஆனால் பூஜையறைக்கு செல்லும் வரை தான் அந்த நல்லெண்ணம் நீடித்தது.

அங்கு நுழைந்ததுமே, வில்வநாதனின் புகைப்படத்திற்கு பக்கத்திலேயே அதே மாதிரியாக தங்க பிரேமிடப்பட்டு இருவர் படமும் மாட்டப்பட்டிருப்பதைக் கண்டாள்.

புதிதாய் போடப்பட்டிருந்த ரோஜாப்பூ மாலைக்கு நடுவே கம்பீரமாய் சிரித்திருந்த அருள் மொழியைக் கண்டதும் தாங்க முடியாமல் விம்மி விட்டாள் அவள்.

அவருடைய நிழற் படத்தின் முன்னால் சரிந்து அமர்ந்தபோது, நிஜமாகவே அவர் இருப்பது போன்ற ஒரு பிரமை!

விழிகள் கண்ணீர்ச்சரம் தொடுக்க, வாழ்க்கையில் ஏமாந்து அதை இழந்து தொலைத்தவர்களுக்கு இறந்த பின் மிகப் பெரிய அங்கீகாரமாவென்ற மௌனக் கோபம் உள்ளே பீறிடுவதாய்!

அதையறியாமல், அவளுடைய தோளைப் பற்றி அவன் தேற்ற, வெகுண்டு அந்தக் கையைத் தட்டி விட்டாள் அவள்!

உடனே அவன் முகம் இறுக, ''பொண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பாலும் பழமும் குடுங்க'' யாரோ உரக்கக் கூறுவது கேட்டு அவள் கலைந்தாள்.

* * *

பிறகு, தன்னை சமாதானம் செய்தபடி அவள் நிமிர அவன் விழிகளோ, அருள் மொழியிடமே பதிந்திருந்தன.

''அம்மா உங்கள் மகளையும், மகனையும் நீங்கள் ஆசீர்வதிக்க வேண்டும். அவள் என்னைப் புரிந்து இணைய வேண்டும்!'' மௌனக் கோரிக்கை அவன் மனதில்!

''அத்தை! காலமெல்லாம் தனிமைத் தவமிருந்தீர்களே... உங்கள் வருத்தத்தை, வேதனையை அருகில் இருந்து பார்த்தவள் நான்! உங்களை ஏமாற்றியவரின் மகனைக் கூட இருந்தே பழி தீர்க்கப் போகிறேன் அத்தை!'' நெஞ்சுக்குள் சபதம் எடுத்தாள்!

இது எதையும் அறியாத அருளோ, அவளுடைய கையை இறுக்கமாகப் பற்றி அழைத்தபடி வெளியே வந்தான்.



பாலும் பழமும் கொடுத்து அவளை ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு சொர்ணம் விடைபெற சக்கர நாற்காலியில் வைத்துத் தள்ளியபடி அவருடைய அறைக்கு அழைத்துச் சென்றார் வேணி!

* * *

தபஸ்யாவை அழைத்துச் சென்று வீட்டைச் சுற்றிக் காட்டினான் அவன்!

கீழே பெரிய ஹால், டைனிங் ஹாலுடன், அலுவலக அறை, சொர்ணத்தின் அறை, விருந்தினர் அறை என்று மூன்று அறைகள் இருந்தன!

எல்லா இடங்களும் தேர்ந்த இன்டீரியர் டெகரேட்டரால் அலங்கரிக்கப்பட்டிருப்பது புரிவதாய்!

பின்புறம் சமையலறை, ஸ்டோர் ரூம், பூஜையறை என்று அவையும் பெரிதாகவே இருந்தன.

இருவரும் ஹாலுக்கு வந்தபோது, வேணி இருவரையும் மாடிக்கு அழைத்துச் சென்றார்.

படிகளில் ஏறும்போதே அருளின் குறுகுறுத்த பார்வை அவளை ரசனையுடன் வருட, அதைத் தாங்க முடியாமல் குனிந்து சமாளித்தாள், தபு!

அருள், தன் தாயைவிட வேணியிடம் பாசமாகப் பழகுவதும், அதிக உரிமை எடுத்துக் கொள்வதும் புரிவதாய்!

கதவைத் திறந்ததும் முதல் தளம் முழுவதுமே ஏர் கண்டிஷன் செய்யப்பட்டிருப்பதை முகத்தில் வந்து மோதிய குளிர்க்காற்று அறிவித்தது.

அருளுடைய அறைக்குள் அவர்களை விட்டு விட்டு வேணி வெளியில் செல்ல, வேகமாக அவரைப் பின் தொடர்ந்தாள் தபஸ்யா!

''ஏம்மா! நீ ரெஸ்ட் எடு... விடியற்காலையில் எழுந் திருச்சிருப்பே! டயர்டா இருக்கும்... கொஞ்ச நேரம் படுத்து எந்திரிம்மா'' என்று கூறி விட்டுப் படிகளில் இறங்க ஆரம்பித்தார்.

அதற்குள் நல்ல சிவம் படிகளில் எதிர்ப்பட ''என்னப்பா ஈவினிங் டிபன், நைட் டின்னருக்கெல்லாம் சொன்ன மாதிரி ஹோட்டல்லே அரேன்ஞ் பண்ணிட்டீங்களா?'' கனிவுடன் விசாரித்தார்.

''அதெல்லாம் ஆச்சு! என்ன... ராசய்யா தான் எப்பவுமே வளர்த்த பாசத்துல அக்கா அக்கான்னு உன் பின்னாடியே வருவாரு! இப்ப என்னடான்னா, நம்ம வீட்டு சின்னம் மாவும், அதே மாதிரி இருக்காங்க!''

அவர் கூறியதும் திரும்பினால், தபஸ்யா தன் பின் னோடு வந்திருப்பது தெரிந்தது!

''என்னடா செல்லம்.. ஏன் என் பின்னாடியே வரே... அருளோட பேசிட்டிருடா!''

ஒரு விதப் பரிவுடன் அவர் கூற அங்கு ஒரு தாயுள் ளத்தைக் கண்டாள் அவள்.

அவளின் கையை அவர் ஆதரவாகப் பற்றும்போதே அங்கு வந்து விட்டான் அருள்.

பதட்டத்தில் அவள் வேகமாக மூச்சு விடுவதையும், அவசரமாக அதைக் கட்டுப்படுத்த முயல்வதையும் அருள் கவனிக்கத் தவறவில்லை!

பல ரசனைகளில்... விருப்பு வெறுப்புகளில் பிடி வாதத்தில், அவளும் தன்னைப் போலவே இருப்பதை உள்ளூர எழுந்த ஆச்சர்யத்துடன் உணர்ந்தான் அவன்!

அவளைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளும் ஆர்வமும் விருப்பமும் அதிகமாய் வந்தன.

வேணியிடம் குனிந்தவள், ''அப்பாவோட ஹெல்த் இப்படி இருக்கும்போது... வேற சடங்கெல்லாம் வேணாம்...! ம்... முதலிரவு அது இதுன்னு ஏதாவது ஏற்பாடு செஞ்சிடப் போறாங்க! அத்தை கிட்ட நீங்கதான் சொல்லணும்... என் உணர்வுகள் புரியும்னு நினைக்கிறேன்!'' மென் குரலில் முடித்தாள்.

உடனே, பிரமிப்புடன் நிமிர்ந்தவர், ''அதெப்படி செலலம், நீயும் அருளும் எல்லா விஷயத்திலயுமே ஒரே மாதிரி, யோசிக்கறீங்க! சரியான ஜோடிதான் போங்க!'' பெருமையுடன் சிலாகித்தார்.

அவளுக்கோ, தூக்கி வாரிப் போட்டது.

வேணி, இருவரையும் குறும்புடன் நோக்கி விட்டு, குறிப்பறிந்து இங்கிதத்துடன் விலகிச் சென்றார்.

வேகமாக அவளருகில் வந்தவன், ''மாமாவோட சர்ஜரி முதல்லே முடியட்டும்... அவர் கொஞ்சம் சரியான பிறகுதான் நம்ம ரிசப்ஷன்... மத்ததெல்லாம்!''

''எனக்கும் மனிதாபிமானம் உண்டு! இது இனிமே உன் வீடு... உன் விருப்பப்படி இருக்கலாம்! ஃபீல் ஃப்ரீ... ஓகே!'' கூறிவிட்டு தன் அறைக்குள் சென்று விட்டான்.

அவளுக்கு என்னவோ போல்! அவனுடைய அக்கறை யும் கரிசனமும் புரிய, செய்வதறியாது திகைத்துப் போனாள்.

வேணியைத் தொடர்ந்தவள், ''நான்... அது வரைக்கும் அத்தையோட ரூமிலேயே தங்கிக்கலாமா?'' தர்மசங்கடத் துடன் வினவினாள்.

JUN 12 2010

உடனே அவளிடம் திரும்பியவருக்குள், சிரிப்பு தான் வந்தது!

"தபும்மா... இனிமே இது உன் வீடுடா! நீ உன் இஷ்டம் போல எங்கே வேணும்னாலும் இருக்கலாம்... கீழே ஒரு கெஸ்ட் ரூம் கூட உண்டு. உனக்கு விருப்பம் இருந்தா அங்கேயே தங்கிக்கம்மா!'' பரிவுடன் கூறினார்.

பிறகு அந்த அறையில், சூட்கேஸை எடுத்து சென்று அவள் உடைமாற்றவும், அலங்காரங்களைக் களையவும் உதவி செய்தார் வேணி!

## 20

மதியம் ஓய்வெடுத்தவள், மாலையானதும் எழுந்து முகம் கழுவித் தயாராகி, சொர்ணத்தைப் பார்க்க அவருடைய அறைக்குச் சென்றாள்.

பாசத்துடன் அருகில் வந்து கைப்பிடித்து நலம் விசாரித்த தபஸ்யாவைப் பார்த்தபோது, அவர் கண்கள் கசிந்தன.

ஒரு கையால் அவளை முகம் வருடி ஆசீர்வதித்தவர், ''நல்லா ரெஸ்ட் எடுத்தியாம்மா?'' வாஞ்சையுடன் வினவினார்.

''ம்... நீங்க தூங்கினீங்களா அத்தை?''

அக்கறையுடன் அவள் விசாரிக்கும்போதே அங்கு வந்து விட்ட வேணியின் முகத்திலோ, மகிழ்ச்சிப் பிரவாகம்!



''என்னம்மா... அதுக்குள்ளே எழுந்திரிச்சிட்டே... உன்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்னு சொல்லி இருந்தேன்'' என்றபடி அங்கு நர்ஸுக்காக போடப்பட்டிருந்த திவானில் அமர்ந்தார்.

மூவரும் பொதுவான விஷயங்களை உற்சாகமாகப் பேசிக் கொண்டிருக்க, அப்போதுதான் நினைவு வந்தாற் போல் மருமகளிடம் திரும்பினார் சொர்ணம்!

''தபும்மா! பக்கத்து ரூமிலே ஒரு பீரோ இருக்கும். அதிலே... உனக்காக, எனக்கு வரப் போற மருமகளுக்காக நான் வாங்கி சேர்த்து வச்சிருக்கிற புடவைங்க நிறைய இருக்கு!

''அப்பப்ப பட்டு, சில்க் காட்டன், கிரேப் சில்க் ஆர்கன்ஸா, டிசைனர் புடவைன்னு வேணியை விட்டு செலக்ட் பண்ணச் சொல்லி வாங்கி வெச்சிருக்கேன்!

''ரெண்டு மூணு வருஷமாத்தான்.

''அதெல்லாம் உனக்குப் பிடிச்சிருந்தா ப்ளவுஸ் தைக்கக் குடுக்கலாம்! அப்புறம் வீட்டில எப்படி ட்ரெஸ் பண்றதோன்னு கவலைப்பட வேண்டாம்!

''உனக்கு பிடிச்ச மாதிரி சுடிதாரோ, லாங் ஸ்கர்ட்டோ, ஜீன்ஸோ எது வேணும்னாலும் போட்டுக்கலாம்! உன் விருப்பம்!''

''கோவில், கல்யாணங்களுக்குப் போறப்ப மட்டும் கட்டாயம் புடவை கட்டிக்கம்மா!'' மெதுவாக நிறுத்தினார்.

அவரிடம், இவ்வளவு பரந்த மனப்பான்மையை எதிர்பார்த்திராதவளுக்குள், வியப்பாய்!

''தேங்க்யூ அத்தை!''

JUN 12 2010

மனமார்ந்த நன்றியை அவள் தெரிவித்தபோது, ''என் மகனை அருமையாய் பார்த்துக்கணும் தபும்மா! அவன் ஊருக்கெல்லாம் வைத்தியம் பார்ப்பான்... ஆனா தன்னைப் பத்தி கவலைப்படவே மாட்டான்...

''அவன் உடல் நலத்தைப் பார்த்துக்கறது... நேரத்துக்கு சாப்பாடு பரிமாறி அவனை கவனிச்சிக்கறது... இனிமே உன் பொறுப்பு!''

ஒரு வித யாசிப்பு தெரிந்தது அவரிடம்!

அவரிடம் மறுக்க மனமின்றி சரியென்பது போல் அவள் தலையசைக்க, வேணி அவளை உச்சி முகர்ந்து முத்தமிட்டு நன்றியுரைத்தார்.

உடனே நிமிர்ந்த தபுவின் மனதிற்குள் இனம் புரியா ஒரு சோகப் பந்து தடம் புரள்வது போல்!

''அம்மா! நான் உங்களை அப்படிக் கூப்பிடலாமில்லை,'' என்று வினவியதும், அவருடைய முகம் இளகி கண்கள் குளமாகின...

''ஏன்டா அப்படிக் கேக்கறே? இதைவிட எனக்கு வேறென்ன சந்தோஷம் இருக்க முடியும்?'' நெகிழ்ச்சியுடன் அவளை அணைத்துக் கொண்டார் வேணி!

தாயின் கதகதப்புச் சிறகிற்குள் தஞ்சம் புகுந்தது போல்... அருள் மொழியே திரும்ப வந்த உணர்வு அவளிடம்!

''நீங்க... கொஞ்ச நாள் இங்கே என்னோட இருக்கீங்களா?'' தவிப்புடன் கேட்டாள்.

''ஏம்மா? இங்கே உனக்கு என்ன பயம்? ஓ... உனக்கும் அருளுக்கும் நடுவில மெசஞ்சர் வேலை பாக்கணுமா?''

குறும்புடன் அவர் கேட்டபோது, அடக்க முடியாத சிரிப்புடன் அவள் குனிய, அப்போதுதான் அழுத்தமான காலடிகளுடன் உள்ளே வந்தான் அருள்.



''என்ன? நாத்தனார், மாமியார், மருமகள் எல்லாரும் ஒண்ணா சேர்ந்தாச்சா? ம்... கட்சிக் கூட்டணி மாதிரியிருக்கு... இனிமே நான் தான் தனி போலருக்கு.''

ஒரு போலிப் பெருமூச்சுடன் கூறியபடி சொர்ணத்தின் கட்டிலில் வந்து அமர்ந்தான்.

''சின்னப் பொண்ணுடா அவ!''

சொர்ணம் சலுகையாகக் கூற, ''அவளை என்னப்பா பயமுறுத்தினே... மாடிப் பக்கமே போக மாட்டேங்கிறா?'' வேணி குறும்புடன் கேட்டார்.

ஒருவித விதிர்ப்புடன் அவள் குனிய, ''பாவம்மா நான்! அப்புறம், சடங்கு சம்பிரதாயம்னு அவ ரொம்பக் களைச்சிப் போயிருப்பா! கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும்... நாளைக்கு காலையில போய் அங்கிளைப் பாக்கலாம்!''

அவன் கூறும்போதே, நல்லசிவத்தின் குரல் இடைமறித்தது.

''நீங்க நாலு பேரும் மட்டும்தான் இன்னும் டிபனே சாப்பிடலை! வாங்க... எல்லாரும் சாப்பிட்டாச்சு'' என்று அழைத்தார்.

பிறகு நால்வரும் டிபன் சாப்பிட்டு காபியைப் பருகியபடி ஹாலில் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்போது சில நெருங்கிய நண்பர்கள் வருவதாகப் போன் வர, சொர்ணம் அவளிடம் திரும்பினார்.

''தபும்மா! வேற ஏதாவது புடவையா... சில்க் காட்டன் மாதிரி கட்டிக்கறியா? சில ஃப்ரெண்ட்ஸ் வராங்களாம்... பேப்பர்ல போட்டதுனால இதைத் தவிர்க்கவும் முடியாது'' என்றார்.

JUN 12 2010

"சரி அத்தை!" என்றபடி எழுந்தவளுடனே பின் தொடர்ந்து வந்து அவள் புடவை கட்ட உதவினார் வேணி!

"கொஞ்ச நாளைக்கு யாராவது வீட்டுக்கு வந்துட்டே இருப்பாங்க... அதனால ரிசப்ஷன் முடியற வரைக்கும் புடவையிலயே இருடா!

"அப்புறம், அருளுக்கும் உனக்கும் எது பிடிக்குமோ அது மாதிரி ட்ரெஸ் பண்ணிக்கலாம்" கரிசனம் மிகுந்து தெரிந்தது அவர் குரலில்.

"சரிம்மா!" என்றவளை அவர் பெருமிதத்துடன் ஹாலுக்கு அழைத்து வர, அன்று விருந்தினரின் வருகையால் வீடே நிறைந்திருந்தது.

பிறகு அவள் உறங்கச் செல்லும்போது பத்து மணியாகி இருந்தது.



## 21



மறுநாளைய விடியல்...

மாமரக் குயிலின் ஒற்றைக் கூவலை ரசித்தபடி பொழுது விடிந்து கொண்டிருந்தது!

உயர்ந்து விரிந்திருந்த அந்த மரத்தில் ஒலித்த மற்ற பட்சிகளின் கீச் கீச் ஒலி... அதற்கு அழகான பின்னணி சங்கீதமாய்!

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த தபஸ்யாவை, யாரோ எழுப்புகின்ற உணர்வு!

இது, தன் வீடென்ற உணர்வில் விநாயகம்தான் எழுப்புகிறாரென்ற எண்ணத்துடன் சோம்பலாக இமை



திறக்க மறுத்தவள், "அப்பா... குட்டே ப்பா! ப்ளீஸ் நான் இன்னும் கொஞ்ச நேரம் தூங்கறேனே!" மெல்லிய குரலில் கெஞ்சினாள்.

ஒரு கரம் அவள் கையை மெதுவாகத் தொட, தந்தையின் கரமென்று பிடித்து இழுத்து முத்தமிட்டபடி, "காபி வந்தப்புறம் முழிக்கறேனே" செல்லக் கொஞ்சலுடன் கண் விழித்தவள் ஒரு கணம் விதிர்த்துப் போனாள்.

அருள்... அவள் முன்னால் குனிந்திருக்க, அவனுடைய கரம் அவள் கைப்பிடிக்குள் இருந்தது.

உடனே பதறி விடுவித்தால், வேணி சிரிக்கும் ஒலி கேட்டது.

"தபும்மா! நான் தான் உன்னை எழுப்ப வந்தேன். அருள் ஹாஸ்பிடலுக்குக் கிளம்பியாச்சு... இன்னிக்கு ஒரு நாளாவது ரெஸ்ட் எடுப்பான்னா கேட்டாத்தானே!" பெருமையுடன் கூறினார் வேணி!

பிறகு, இவன் எப்படித் தன் அறைக்குள் வந்தான் என்று அவள் கலங்கி நோக்கும்போதே அதற்கும் பதிலைக் கூறினார் வேணி!

"நாங்க உள்ளே வரப்பதான் அருளும் ரெடியாகி வந்தான்! நான்தான் அவனை விட்டே உன்னை எழுப்ப சொன்னேன்.

"நீங்களா?" குழப்பத்துடன் அவள் திரும்ப, வீல் சேரில் மறுபுறம் அமர்ந்திருந்தார் சொர்ணம்!

'கடவுளே! இவர்களுக்கு முன்பாக, அப்பா என்று தவறாக எண்ணி இவனிடம் சிணுங்கி முத்தம் வேறு தந்து விட்டேனே!'

JUN 12 2010

தன்னையே நொந்தபடி எழுந்தவள், "ஒரு நிமிஷம்... குளிச்சிட்டு வந்திடறேன்... சாரி அத்தை!" என்றபடி நைட்டியுடன் குளியலறைக்குள் ஓடினாள்.

ஒற்றைக் கண் சிமிட்டி கேலியுடன் அவளை வழியனுப்பி வைத்தான் அவன்.

குளிக்கும்போதோ, அவனுடைய முதல் முத்தம் தந்த ஸ்பரிசத்தில் கிறங்கி நின்றிருந்த அருளின் நினைவு!

மனம் பாறையாய் இறுக, அவனை முத்தமிட்ட இதழ்களோ மென்மையாய்!

அவசரமாக உடைமாற்றி கிளம்பியவள், ஏதோ தோன்ற உடனே தன் செல் போனை உயிர்ப்பித்து அவனுக்குத் தொடர்பு கொண்டாள்.

* * *

செல் ஒலித்தபோது, அருள், சொர்ணத்தின் அறையில்தான் இருவரிடமும் பேசிக் கொண்டிருந்தான்.

எடுத்துப் பார்த்தால் அவள் செல் நம்பர் என்று தெரிய அவனுடைய முத்தத் துளி பட்ட இடம் சிலிர்ப்பாய்!

அந்த முத்தம்... இனிய ரசவாதமாய்... இதழ்களின் பரிசனிப்பாய்... போதை தரும் மதுவாய்... அவனுள் பரவியது!

ஒரு விஷமச் சிரிப்புடன் செல்லிலுள்ள ஸ்பீக்கர் போனை உயிர்ப்பித்து, "ஹலோ..." என்றான்.

"நான்தான் பேசறேன்..." அவளுடைய குரல் கிசுகிசுப்பாய்!

"நான்தான்னா... யாருன்னு தெரியலையே" உள்ளே பொங்கிய சிரிப்பை அடக்கியபடி இயல்பாக உரைத்தான்!

"நிஜமாத் தெரியலை?" எதிர்முனையில் அவள் கேட்க, சொர்ணமும் வேணியும் அந்த உரையாடலை வெகுவாய் ரசித்தனர்.



"சத்தமாப் பேசினாத்தானே புரியும் யாருன்னு... இப்படி முணுமுணுன்னா?"

அவன் வேண்டுமென்றே வம்பிழுப்பது புரிந்து, "ம்... நான்தான் மிஸஸ். அருள் வேந்தன் பேசறேன்... இப்போ தெரியுதா?" நக்கலாகக் கேட்டாள்.

"ஓ! நீங்களா? சொல்லுங்க மேடம்..."

கிண்டலாக அவன் வம்பிழுக்க அவளோ வெடித்தாள்.

"என்ன... ஒண்ணும் புரியலையா?"

"ம்... எங்களுக்கு எல்லாம் புரியுது... நாங்க தெளிவாத்தான் இருக்கோம்! நீங்கதான் எங்கே இருக்கோம் கிறதையே மறந்திட்டீங்க மிஸஸ். அருள் வேந்தன்!" குறும்புடன் இழுத்தான்.

"ம்.. தூக்கக் கலக்கத்துல எங்க வீடுன்னு நினைச்சி ஏதோ சொன்னா கிண்டலா பண்றீங்க... அத்தை முகத்துக்காகப் பாக்கறேன்.. இல்லேன்னா!"

சட்டென்று இடைமறித்தான் அவன்.

"இல்லேன்னா?"

அவன் திருப்பிக் கேட்க, "ம்... காதைப் பிடிச்சி திருகியிருப்பேன்... போதுமா?" கேட்டு விட்டு உடனே லைனைத் துண்டித்தாள்.

* * *

பிறகு, தயாராகி சொர்ணத்தின் அறைக்கு வந்தபோது, மூன்று பேரும் ஏதோ பேசி சிரித்துக் கொண்டிருந்தனர்.

அவளைக் கண்டதும், "அம்மா! உங்க மருமகளுக்கு நிஜமாவே இவ்வளவு முடியா? இல்லை... செயற்கை முடியா? தலை பின்னவே தனியா ஒரு ஆள் வைக்கணும் போலருக்கே!" வேண்டுமென்றே [illegible] அவன்.

JUN 12 2010

பெரியவர்கள் இருப்பதால் அவள் தன்னை அடக்கியபடி அமைதி காக்க, அவனுக்கோ அவளைக் கிண்டல் செய்ய இதுதான் சமயமென்று புரிவதாய்!

''ஏன் வேணிக்கா... புடவை வேற சரியா கட்டத் தெரியலை... பாவம்னீங்களே... எத்தனை ஆள் தான் புதுசா வேலைக்கு வைக்கிறது? ப்ச்.'' போலியாக கவலைப் பட்டான்.

அவளுக்கோ ஆத்திரம் ஆத்திரமாய்... அப்படியே அவனைத் தள்ளி விட வேண்டும் போல்!

''அருள்... நான் இனிமே என் மருமகளுக்குத்தான் சப்போர்ட் பண்ணுவேன்! நீ இனிமே கவலைப்படாதேம்மா... நான் இருக்கேன்!''

''இவன் காதைப் பிடிச்சித் திருகி, அடக்க ஆளில்லையேன்னு கவலைப்பட்டுட்டு இருந்தேன்... நல்லவேளை... நீ வந்திட்டே''

மறுகணமே திக்கென்று விதிர்த்து நிமிர்ந்தவளுக்கு, மூவரும் தாங்க முடியாமல் நகைப்பதைக் கண்டு விபரம் புரிந்தது.

அவனைக் கோபத்துடன் உறுத்து விழித்துவிட்டு, உடனே குனிந்து கொண்டவள் அவனுடைய பார்வையைத் தாங்கி எதிர்கொள்வது எவ்வளவு கஷ்டமென்று அந்தக் கணமே புரிந்து கொண்டாள்.

பிறகு, வேணி அவளுக்கு தளரப் பின்னலிட்டு, முல்லைச் சரத்தை சூட்டிவிட, ''ம்... என் மருமக மகா லெட்சுமியேதான்'' பெருமையுடன் உரைத்தார் சொர்ணம்!

''அம்மா.. போதும்! மஹாலெட்சுமியைப் பாத்துட்டே இருந்தா வயிறு நிறைஞ்சிடாது! எனக்குப் பசிக்குது... வாங்க'' கேலியாக அழைத்தான் அருள்!



பிறகு, வீல்சேரைத் தள்ளியபடி வேணி வர, இரு புறமும் அவளும் அருளும் தொடர்ந்தனர்.

## 22

டிபன் சுவைபடத் தயாரிக்கப்பட்டிருக்க, சாப்பிடும் போதே ''ஹாஸ்பிடலுக்கு எப்ப கிளம்பலாம்?'' மெதுவாகக் கேட்டாள் தபு.

''ம்... இப்ப என்னோட வரதா இருந்தா வா! பாத்துட்டு டிரைவரோடத் திரும்பி வந்திடலாம்! வேணியக்கா.. நீங்களும் வாங்களேன்! முதல் நாளே அவ தனியா திரும்பி வரணும்!'' அவரையும் அழைத்தான்.

''சின்னஞ் சிறுசுகளுக்கு இடையில நான் எதுக்குப்பா?''

அவர் நிராகரிக்க, ''ம்.. நாங்க என்ன ஹனிமூனாப் போறாம்... ஹாஸ்பிடலுக்குத் தானே?''

குறும்புடன், மனைவியைக் கூர்ந்தபடிக் கேட்டு விட்டு சாப்பிடத் தொடங்கினான்.

ஆனால், அவளுக்குத் தான் கோபம் செந்தணலாய்!

காலையில் எழுப்பி கிண்டல் செய்தது... போனில் ஸ்பீக்கரை போட்டு விட்டு இருவரிடமும் மாட்டிவிட்டது... மகாலெட்சுமியென்றதும் கேலி செய்தது... எல்லாமாகச் சேர்ந்து எரிகின்ற நெருப்பில் நெய்யை வார்த்தது போல்!

அதே கோபத்தில் கைகழுவச் சென்றவள், அவன் கழுவி விட்டுத் திரும்பி டவலுக்காகக் கை நீட்ட அதை



JUN 12 2010

கவனிக்காமல் திரும்பியவளின் புடவை முந்தானையில் அவன் துடைத்துவிட, கொதித்துப் போனாள்.

''ஏன்... நான் திரும்பி வரும்போது தனியா வந்தா எங்காவது கண் காணாம ஓடிப் போயிடுவேன்னு பயமா?'' அடிக்குரலில் சீறினாள்.

உடனே முகம் இறுகி அவளையே ஒரு கணம் கூர்ந்தவன், ''உங்கப்பா இன்னும் என் ஹாஸ்பிடல்லேதான் இருக்காரு! அவருக்கு சர்ஜரியும் முடியலை... அது மறந்திடுச்சா?'' நக்கலாகக் கேட்டான்.

''எல்லாம் ஞாபகம் இருக்கு! அப்படி எங்க அப்பாவுக்கு ஏதாவது ஆச்சுன்னா... நான் திரும்பி வந்து கேஸ் போடுவேன்... தெரியுமா?'' மூச்சு வாங்க நிறுத்தினாள்.

உடனே மௌனச் சிரிப்பில் அவன் உடல் அதிர்ந்தது.

''ம்... அப்படியா... பயமாருக்கே! இவ்வளவு கஷ்டப்பட்டு ஓடிப் போயி... நீ திரும்பி வந்து கேஸ் போட்டு... ப்ச்... அதுக்கு இங்கேயே இருந்து உங்கப்பாவையும் பாத்துக்கிட்டு, என்னையும் எதிர்க்கலாமே!''

சிரிக்காமல் கூறிவிட்டுத் தோளைக் குலுக்கி நடந்தான்.

''ம்... நான் அதான் செய்யப் போறேன்... நான் ஏன் பயந்து ஓடணும்... இங்கே இருந்தே உங்களைப் பழி வாங்குவேன்!''

''ஓ! தேங்க்யூ... ஆனா அதுக்கு உனக்கு தைரியம் பத்தாது!'' ஏளனத்துடன் வந்தது அவன் குரல்!

''இல்லை... நான் என்ன செய்யறேன்னு பாருங்க!''



''குட்! லெட் அஸ் வெயிட் அண்ட் சீ! சீக்கிரம் கிளம்பு!''

அடிக்குரலில் ஆணையிட்டு விட்டு முன்புறமிருந்த அலுவலக அறைக்குச் சென்றான்!

கோபத்தை அடக்க சிரமப்பட்டு அவள் மூச்சைக் கட்டப்படுத்தும்போதே வேணி கைகழுவ வந்து விட்டார்.

''என்னடா! வேற சாரி மாத்திக்கிறயா? இல்லை இதுவே போதுமா?''

அவள் கட்டியிருந்த சில்க் காட்டன் புடவையைப் பார்த்தபடிக் கேட்டார்.

''இதுவே போதும்மா!'' முகச்சிவப்பை மறைத்தபடி அவள் குனிந்தபடி கூறிவிட்டு விலக, அவரோ வேறு விதமாக எண்ணி மனதினுள் நகைத்துக் கொண்டார்.

சிறிது நேரத்திலேயே அருள் கோட் சூட்டுடன் தயாராகி வர, இருவரும், வேணியுடன் சொர்ணத்திடம் விடை பெற்றுக் காரில் ஏறினர்.

செல்லும் வழி முழுவதும், இருவரும் பேசிக் கொண்டே வர, தபு அமைதியாகவே வந்தாள்.

* * *

மருத்துவமனை வாயிலை அடைந்ததுமே, ஊழியர்கள் அனைவரும் வாசலிலேயே தயாராக நின்று பூங்கொத்துகளை கொடுத்து வரவேற்க, இனம் புரியாத ஒருவித உணர்வு பரவியது அவளுக்குள்!

தங்கள் முதலாளியின் மனைவியை... அந்த அழகு தேவதையை அனைவரும் பிரமிப்போடு நோக்கினர்.

அவள், முன்பே பரிச்சயமானவளென்பதால், சிலர் புன்னகையும் செய்தனர்.

JUN 12 2010

கம்பீரமான தலையசைப்புடன், அவன் மனைவியின் கையைப் பற்றி அழைத்துச் செல்ல, அவளால் மறுக்கவோ, விலகவோ இயலவில்லை!

தனது தந்தையின் அறை வாசலை அடைந்த பிறகு தான்... தன் கைப்பிடியை விடாமலே அவன் அழைத்து வந்திருப்பதை உணர்ந்தாள்.

புடவை சரசரக்க, மங்கல நாணோடு, வைர நகைகள் மின்ன, லட்சணமாய் ஒரு உற்சவச் சிற்பம் போல், மாப்பிள்ளையோடு அவள் நடந்து வருகின்ற அழகை இமை கொட்டாமல் ரசித்த விநாயகத்தின் கண்களிலோ ஆனந்தக் கண்ணீர் அருவியாய்!

''என்னப்பா அப்படிப் பாக்கறீங்க?'' செல்லமாகக் கேட்டபடி, தபஸ்யா அவருடைய படுக்கையின் ஓரத்தில் மெல்ல அமர்ந்தாள்.

உடனே அருகில் வந்து அவருடைய கையைப் பிடித்து அழுத்தியவன், ''அங்கிள்! இப்படியா கலங்கறது? டென்ஷனாகக் கூடாது! நீங்க விரும்பினதுதான் நடந்துருச்சே!

''மனசையும், உடம்பையும் சந்தோஷமா வெச்சுக்கங்க! நாளைக்கு மறுநாள் ஆபரேஷன்! இன்னிக்கு எல்லா டெஸ்டும் முடிச்சி ஐ.சி.யூ.வுக்கு ஷிப்ட் பண்ணிடுவாங்க!''

அவன் கூறவும், தபுவின் விழிகளில் மெல்ல அரும்பியது, கண்ணீர்த் துளி!

உடனே அவளைப் பரிவுடன் நோக்கியவன், ''தயா... நீதான் உங்கப்பாவுக்கு தைரியம் சொல்லணும்! நீயே கலங்கினா எப்படி? டெக்னாலஜி எவ்வளவு டெவலப் ஆகியிருக்கு...

''ஏன்... என் மேல நம்பிக்கை இல்லியா? இதுக்கெல்லாம் அழுவாங்களா?''



ஆதரவாக அவன் முடிக்க, நெஞ்சுக்குள் பெரும் நம்பிக்கை மழை!

* * *

அதுவரை இருந்த கோபம், சட்டென்று மாறும் வானிலையாய் மாறி, கார் கோபம் விலகி நம்பிக்கை ஒளி கீற்றாய்ப் பரவியது!

''சரி... நீங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டிருங்க... வேணிக்கா! வேற யாரையோ பாக்கணும்னீங்களே! வாங்க! அங்கிள்... டேக் கேர்'' என்றபடி அவளிடம் தலையசைத்து விடைபெற்று வெளியேறினான்!

அவன் இங்கிதத்துடன் வேணியையும் அழைத்துச் சென்றதைப் பெருமிதத்துடன் மெச்சின, விநாயகத்தின் விழிகள்!

பிறகு மகளிடம் திரும்பியவர், ''எப்படிம்மா இருக்கே? மாப்பிள்ளை வீடு உனக்குப் பிடிச்சிருக்கா?'' ஆர்வத்துடன் வினவினார்.

''ம்... ரொம்பப் பிடிச்சிருக்குப்பா! எல்லாரும் என்கிட்டே ரொம்ப அன்பா இருக்காங்க! என்னைப் பத்தி கவலைப்படாதீங்கப்பா! நிம்மதியா சந்தோஷமா இருங்க!

''ஆபரேஷன் நல்லபடியா முடியணும். அதுதான்பா இப்ப முக்கியம்!'' கண்களில் கனிவுடன் கூறினாள்.

''ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு! என் விருப்பத்துக்காக, மனசே இல்லாம, வெறுப்போட நீ அருளைக் கல்யாணம் செஞ்சிக்கிட்டியோன்னு நான் பயந்துட்டே இருந்தேன்... இப்பதான் அது சரியாச்சு!'' நிம்மதியும் நிறைவும் தெரிந்தன அவரிடம்!

JUN 12 2010

அவர் நிறைந்த மனதுடன் கூறியது... பெரும் மன தைரியத்துடன் இருப்பது... அவளுக்குப் பெரும் மகிழ்வாய்!

'உங்களுடைய இந்த சந்தோஷத்திற்காகத் தானே அப்பா நான் என் வாழ்க்கையையே பலியிட சம்மதித்தேன்... இது போதும் எனக்கு..!'

உணர்வுகள், ஊற்றாய் மலர்ந்தன.

"என்னடா? அதுக்குள்ளே மாப்பிள்ளை ஞாபகமா? இன்னிக்கே அவர் ட்யூட்டிக்கு வந்தது கஷ்டமா இருந்தாலும், இப்படி ஒருத்தர் உனக்கு கணவராக் கிடைச்சதை நினைச்சா பெருமையா பிரமிப்பா இருக்குடா!"

"போங்கப்பா... எப்பவுமே உங்களுக்கு மாப்பிள்ளை புராணம் தானே? ஏதேது... விட்டா, மகளையே மறந்துடுவீங்க போலருக்கு!" செல்லமாகக் கோபித்தாள்.

"அது சரி! அந்த வேணி எப்படிம்மா? குடும்பத்துல ரொம்ப உரிமை எடுத்துக்கற மாதிரித் தெரியுதே?"

அவரைப் பற்றி அறியும் ஆர்வத்துடன் வினவினாள்.

"அவங்க ரொம்ப நல்லவங்கப்பா! அருளுக்கு ஒரு பெறாத தாய் மாதிரி... அருளைப் பாசமா வளர்த்தவங்க!

"எனக்கும் அவங்களைப் பாக்கறப்ப, அம்மா மாதிரி... அருள்மொழி அத்தையே திரும்பக் கிடைச்ச மாதிரி இருக்கு!" நெகிழ்வுடன் நிறுத்தினாள்.

பிறகு இருவரும் பல கதைகளைப் பேசியதில் நேரம் சிறகு கட்டிச் செல்ல, மெலிதாகக் கதவைத் தட்டும் ஒலி இருவரையும் இவ்வுலகிற்குக் கொண்டு வந்தது.

"நான் உள்ளே வரலாமா?" கேட்டபடி வேணி நிற்க, "வாங்கம்மா" என்று வரவேற்றார் விநாயகம்.



"நாம கிளம்பலாமா தபு? அப்பாவோட எல்லாம் பேசியாச்சா?" பரிவுடன் வினவினார் அவர்.

"ம்... நான் இன்னிக்கு நைட் இங்கேயே தங்கவாப்பா? சாயந்திரமா வந்திடறேனே?"

அவள் கேட்டதும் விநாயகம் உடனே தடுத்தார்.

"என்னம்மா பொண்ணு நீ? கல்யாணம் ஆன மறுநாளே ஹாஸ்பிடல்லே தங்கறேன்னு சொல்றே! போய் மாப்பிள்ளையை கவனி!" என்றார்.

அப்போது தனது மருத்துவப் பரிவாரங்களுடன் உள்ளே வந்தான் அருள்.

"அங்கிள்! உங்களுக்கு எல்லா டெஸ்டும் எடுக்கப் போறாங்க... அப்படியே ஐ.சி.யூ.வுக்கு மாத்திடுவாங்க! அங்கே யாரும் கூட இருக்க முடியாது.

"சாயந்திரம் விசிட்டிங் ஹவர்லே வேணா தயா வந்து பாக்கட்டும்! டேக் கேர்" என்றபடி அவருடைய கையைப் பிடித்து அழுத்தி விட்டுத் திரும்பியவன், மனைவியிடம் கண்களாலேயே விடைபெற்றான்.

## 23

பிறகு, நர்ஸ் வந்து அவரை அழைத்துச் செல்ல, இருவரும் வீட்டிற்குக் கிளம்பினர்.

அன்று மாலையில் வேணி தன் க்ளினிக்கிற்கு சென்றிருக்க, தபு மட்டும் காரில் கிளம்பி மருத்துவமனைக்கு வந்தாள்.

JUN 12 2010

அவள் வந்த நேரம் மருத்துவமனையே அல்லோல கல்லோலப் பட்டிருந்தது.

எல்லோரும் பதட்டத்திலிருக்க, போலீஸ் பாதுகாப்புடன் ஒரு ஆம்புலன்ஸ் வந்து நின்றது.

அதற்குப் பிறகு அதிலிருந்து ஒரு டாக்டர் 'கிட்'டுடன் வந்து மேலே செல்ல மருத்துவமனை வளாகமே பரபரப்பாயிற்று!

அவள் என்னவென்று விசாரித்தபோதுதான் உண்மை தெரிந்தது!

யாரோ ஒரு வாலிபன் விபத்தில் வேறு ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட, அவருடைய மூளை செயலிழந்தது தெரிந்ததும், அவர் மனைவியே கணவனின் உடலுறுப்புகளை தானம் செய்ய முன் வந்திருப்பது தெரிந்தது.

மண்ணீரல், கல்லீரல், நுரையீரல், கண்கள், சிறுநீரகம் என எல்லா உறுப்புகளும் தேவையானவர்களுக்கு அளிக்கப்பட, இதயம் மட்டும் அவர்களுடைய மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டதாக ஒரு நர்ஸ் கூறினார்.

மனம் நெகிழ்ந்து போனது!

தான் இறந்தும் இறவாது வாழப் போகும் அந்த இளைஞனுக்கும், அந்த நிலையிலும், தன் கணவரின் உடல் உறுப்புகள் பிறருக்கு பயன்படட்டும் என்று தானம் செய்த அந்தப் பெண்ணிற்கும் ஒரு சல்யூட் வைக்க வேண்டும் போல்!

அந்த அறுவை சிகிச்சையை, அருளின் 'டீம்' தான் செய்யப் போவதாக அறிந்ததும், அது நன்றாக நடந்து முடிய வேண்டும் என்று இதயம் ப்ரார்த்தித்தது!

மருத்துவர்களை மட்டும் கடவுளுக்கு அடுத்தபடியான உயர்ந்த ஸ்தானத்தில் வைத்திருப்பதன் அர்த்தம் புரிவதாய்!



ஒருவருக்கு உயிரையே பரிசளிக்கும் விதத்தில் அவர்களை ஒரு கடவுளாக... பிரம்மாவாகவே எண்ணத் தோன்றியது.

இன்று ஒரு உயிர் கொடுத்ததால் என் கணவனும் ஒரு பிரம்மாவோ... நினைக்கும்போதே உடல் சிலிர்த்தது.

ஐ.சி.யூ.விலிருந்த தந்தையைப் பார்த்து பேசி தைரியம் கூறிவிட்டு வெளியே வந்தவள், அருள் டீம் நடத்திய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்திருக்கிறதாவென்று அறிந்த பிறகே வீட்டிற்குக் கிளம்பினாள்.

* * *

மறுநாள் விடியலிலேயே எழுந்து, குளித்து பூஜையறைக்குள் நுழைந்தவள் அருள் கிளம்பும் வரை வெளியே வரவே இல்லை.

பிறகு அவனுடன் கிளம்பி மருத்துவமனைக்குச் சென்றபோது வேணியும் அவளுக்குத் துணையாக வந்திருந்தார்.

மற்ற உறவுகளும் நட்பும் துணையிருந்தாலும், வேணியிடமும் அருளிடமும் ஒருவித எதிர்பார்ப்புடன் தஞ்சம் புகுந்திருந்தாள் அவள்.

அன்று முழுவதும் எதுவுமே சாப்பிடாமல் அவருக்காக விரதமிருந்தவளுக்கு, அருளிடமிருந்து நல்ல தகவல் வரும் வரை உயிரே அவள் வசமில்லை!

அறுவை சிகிச்சை முடிந்து அருள் வந்து வெற்றிகரமாக முடிந்ததென்று கூறியவுடனே அவள் உடல் அப்படியே ஒரு பூமாலை போல் சரியத் துவங்கியது!

உடனே, பதட்டத்துடன் அவளை ஏந்தியவன், அப்படியே அள்ளி அருகிலிருந்த அறைக்கு தூக்கிச் சென்றான்.

JUN 12 2010

அதிகப்படியான மன உளைச்சலும், சாப்பிடாமலே பசியுடன் காத்திருந்ததும், அவளைப் பெரிதும் துவளச் செய்திருந்தன.

அவளுக்கு கு ப்பதற்கு பழச்சாறும் உடல் சத்திற்கு விட்டமின் ஊசியும் போட்டு ஓய்வெடுக்க வைத்தவன், வேணியை அருகில் வைத்து விட்டுக் கிளம்பினான்.

''ஒரு நிமிஷம்!'' அவனைத் தயக்கத்துடன் அழைத்தாள் தயா!

என்னவென்பது போல் புருவத்தை உயர்த்தியவன், பச்சை நிற தியேட்டர் உடையிலும், தலையில் வைத்திருந்த தொப்பி போன்ற அமைப்பிலும் வித்தியாசமாகத் தெரிந்தது. அப்போதுதான் உரைப்பதாய்!

''தேங்க்ஸ்!'' உடைந்த குரலில் நன்றியுரைத்து விட்டு அவள் விழிகளைத் தழைத்தாள்.

சிறு முறுவலுடன் அவளுடைய கன்னத்தைச் செல்லமாகத் தட்டிவிட்டு, வெளியே சென்றான் அவன்.

அவளுக்குத்தான், அவன் விலகிச் சென்றது என்னவோ போல்!

## 24

அன்று மாலையில் வீட்டிற்குக் கிளம்பும்போது, ஐ.சி.யூ.விற்குச் சென்று விநாயகத்தைப் பார்த்து விட்டே இருவரும் கிளம்பினர்.

''அப்பா! நான் வீட்டுக்குப் போய் ட்ரெஸ் எடுத்துட்டு வந்து நைட் உங்களோடத் தங்கிக்கவா?'' மெதுவாகக் கேட்டாள்.



''இங்கே நைட் தங்க முடியாது!'' அவன் அடிக்குரலில் கூற, விநாயகமும் வேண்டாமென்பது போல் சைகை செய்தார்.

''அப்பா! எதுக்கும் பயப்படாதீங்க. உங்க மாப்பிள்ளை இருக்காரு! நான் போயிட்டு காலையில வந்துடறேன்!''

அவரிடம் விடைபெறும்போது மீண்டும் கலங்கியவளை சமாதானப்படுத்தும் விதமாக மெல்ல அவள் கரத்தைப் பற்றினான் அவன்!

''நான் இருக்கிறேன்... கவலைப்படாதே'' என்பது போல் இருந்தது அந்தத் தொடுகை!

பிறகு, இருவரும் காரில் கிளம்பிச் செல்ல, சீட்டின் ஒரு ஓரத்தில் கார்க் கதவுடன் ஒட்டியபடி சிறு குழந்தையைப் போல் அமர்ந்திருந்தாள் அவள்.

உடலில், தந்தையை எண்ணி சிறு நடுக்கம் ஓடியது!

அவளையே ஒரு கணம் கூர்ந்தவனுடைய விழிகளில் சிறு காயம் பட்ட வலி!

''தயா! அப்படி என்ன தயக்கம் உனக்கு என்கிட்டே? ஏன் இப்படி ஒதுங்கி ஒதுங்கிப் போறே! நான் உன் கணவன்! உன் மேலயும் உங்கப்பா மேலயும் நிறைய அக்கறை உள்ளவன்! வா!'' மென் குரலில் கூறி அவளை அருகில் அழைத்தான்.

அப்போதுதான் தான் விலகி உட்கார்ந்திருந்த நிலை அவளுக்கு உரைப்பதாய்!

மெதுவாகத் தள்ளி அவனருகில் அமர்ந்தவள், சட்டென்று விழிகளில் கண்ணீர் சிதறலுடன் நிமிர, அவள் துக்கம் புரிந்து, தன் மேல் சாய்த்து ஆறுதல் கூறினான் அருள்!

அந்தப் பாச அரவணைப்பில் தன்னை மறந்தவள், அப்படியே அவன் தோள் சாய்ந்து உறங்கியே போனாள்.

வீட்டிற்கு வந்ததும், அவளைக் கைத்தாங்கலாய் பற்றி அழைத்துச் செல்ல, 'தன்னை என்ன அழகாய் தாங்குகிறான்... எப்படிப் பாதுகாக்கிறான்' என்று தோன்றும் போதே அருள் மொழியின் நினைவு!

உடனே மனம் இறுகிவிட பதறி விலகியவளை வியப்புடன் ஆராய்ந்தவன், ''சாப்பிட்டுட்டுப் படு!'' என்று கூறிவிட்டு மாடிக்குச் சென்றான்.

பிறகு அவன் குளித்து விட்டு வரும்போது, அவள் தன் அறையில் உறங்கியிருந்தாள்.

இப்படியே ஒரு வாரம் மருத்துவமனையும் வீடுமாகக் கழிய, விநாயகத்தை அறைக்கு மாற்றினர்.

அன்றிலிருந்து தபஸ்யாவும் அவளுடைய சித்தப்பா நடேசனும் உடனிருந்து அவரை கவனித்துக் கொண்டனர்.

ஒரு நாள் அவளிடம் கவலையுடன் இதுபற்றிப் பேசினார் விநாயகம்.

''தபும்மா! உனக்குக் கல்யாணம் முடிஞ்சி பத்து நாள் தான்டா ஆகுது! மாப்பிள்ளையோட இருடா! என்னையே கவனிச்சிட்டிருந்தா எப்படி?''

''அப்பா! அவர்தான் தினமும் என்னை இங்கே அழைச்சிட்டு வந்துடறாரு! அதான் நைட் வீட்டுக்குப் போயிடறேனே!'' சலுகையாகக் கூறினாள்.

அன்று மாலையில் ரவுண்ட்ஸ் வந்தவன், ''இன்னும் ரெண்டு நாளிலே டிஸ்சார்ஜ் ஆயிடலாம் அங்கிள்! நம்ம வீட்டுக்கு வந்துடுங்க... உங்களைப் பாத்துக்கறதுக்கு தயா இருக்கா!''



''ஏதாவது எமர்ஜென்சின்னா நானும் கூட இருப்பேனே! மூணு மாசம் அங்கே ரெஸ்ட் எடுத்துட்டு... அப்புறமா உங்க இஷ்டம்!

''எங்களோடவே நீங்க இருந்தா எனக்கும் தயாவுக்கும் ரொம்ப சந்தோஷமா இருக்கும்!'' பரிவுடன் கூறினான் அருள்.

அவர் சஞ்சலத்துடன் மறுக்க, ''அப்பா... ப்ளீஸ்! சரின்னு சொல்லுங்க... நானே சொல்லணும்னு நினைச்சேன்... அருளே சொல்லிட்டாரு!'' உற்சாகமாக உரைத்தாள்.

''பாரு! நீ என்ன மனசிலே நினைக்கிறியோ அதை செயல்படுத்தற மாதிரி மாப்பிள்ளையும் அமைஞ்சிருக்காரு!'' பெருமையுடன் சிலாகித்தார் நடேசன்!

உடனே அவன்புறம் திரும்பியவளின் விழிகள் நன்றியுடன் ஒளிர அவனுடனே பின் தொடர்ந்து வெளியே வந்தாள்.

வெளியில் வந்ததும் சட்டென்று அவன் கையைப் பிடித்து ''தேங்க்ஸ்!'' என்றாள் உணர்ச்சிகள் நிரம்பிய குரலில்!

பின்னோடு வந்த டீம், ''டாக்டர்! இது ஹாஸ்பிடல்... நாங்களும் இருக்கோம். மறந்துட வேண்டாம்!'' குறும்புடன் நினைவு படுத்தினர்.

''ஹாய் கைஸ்! நாங்க எதுவுமே செய்யலை...! அதுக்குள்ளே பயமா?'' கிண்டலுடன் பதிலடி கொடுத்தான் அருள்.

அந்தத் தருணம் மிக இனிமையாய்!

அனைத்துமே அவளாய் மாறி... வாழ்க்கைக்கே ஒரு புது அர்த்தம் பிறந்தாற் போல்...!

சிறு வெட்கம் முகமெங்கும் படர, தந்தையிடம் சென்று விட்டாள் அவள்!

JUN 12 2010

அருளுக்கோ, அவள் வெட்கம் தந்த மயக்கத்தில் மாயச்சிறகு ஒன்று இதயம் வருடியது!

* * *

நாட்கள் விரைந்தோடும் காட்டாறாய் கடந்தன.

விநாயகம் டிஸ்சார்ஜ் ஆகி அருளின் வீட்டிற்கே வந்து விட்டார்.

இரு மாதங்கள் கழித்து தன் வீட்டிற்குப் போக முடிவெடுத்திருந்தார்.

கீழே உள்ள அறை அவருக்கு அளிக்கப்பட, தபஸ்யா மாடியிலிருந்த விருந்தினர் அறைகளில் ஒன்றில் தங்கும் படியாயிற்று!

அவர் உடல் தேறிய பிறகு, ஒரு மாதம் கழித்து ரிசப்ஷன் வைக்க முடிவு செய்து ஏற்பாடுகள் நடந்தன!

ஒரு நாளில் பாதி நேரம் அவள் தந்தையுடனும் மாயியாருடனுமே இருக்க, விநாயகம் தான் அவளை அருளிடம் போகும்படி வற்புறுத்தி அனுப்பி வைப்பார்.

மாப்பிள்ளை காலையில் மருத்துவமனைக்குச் செல் லும் வரை அவரை கவனிக்கும்படி விநாயகம் ஆணை யிட, அவளால் மறுக்க முடியாது போயிற்று!

அவன் கிளம்பும் வரை தன் அறையிலேயே இருப் பவள் அவனோடுதான் கீழே வருவாள்.

அது போல், ஒரு நாள் அவனைப் பின் தொடர்ந்த போது, ''என்ன...? என் பின்னாடியே வரே! மாமா ஏதாவது சொன்னாரா?'' சரியாக யூகித்துக் கேட்டு விட்டான்.

உடனே தர்ம சங்கடத்துடன் புன்னகைத்தவள், ''ம்... நீங்க கிளம்புற வரைக்கும் உங்களோடதான் இருக் கணும்னு அப்பாவோட உத்தரவு அதான்!'' என்றாள்.



''நான் இப்பவே போய் அங்கிள்கிட்ட சொல்றேன்... உங்க பொண்ணு என்னை கவனிக்கறதே இல்லைன்னு!''

ஒற்றைக் கண் சிமிட்டிக் குறும்புடன் நிறுத்தினான்.

சட்டென்று அவள் முகம் சுருங்கி விட, அவனுக்கு முன்பாக வேகமாக இறங்கிச் சென்று விட்டாள்.

தான் அவளைக் கோபமூட்டி விட்டது புரிய, குறுஞ் சிரிப்புடன் அவளைத் தொடர்ந்து விநாயகத்தின் அறைக் குள் சென்றான் அருள்.

''என்ன அங்கிள்! நார்மலாயிட்டீங்க போலருக்கு! தினம் வாக்கிங் போறீங்களாமே!'' அக்கறையுடன் விசா ரித்தபடி அவரருகில் அமர்ந்தான்.

''ம்... பத்து மாசத்துல பேரக் குழந்தையைப் பாத்திட் டேன்னா, அப்புறம் ஓடவே ஆரம்பிச்சிடுவேன்.''

ஆர்வத்துடன் அவர் கூற கண்களில் மையலுடன் மனைவியை ஏறிட்டவனுக்குள் பெரும் அதிர்வு!

அதை இயல்பாக ஏற்று நாணத்துடன் புன்னகைக் காமல், தீச்சுடராய் விழியில் மின்னலுடன் கோபமாக நின்றிருந்தாள் அவள்!

'ஏன் இவளிடம் இப்படி ஒரு மாறுதல்... குழந்தை களென்றால் இவளுக்குப் பிடிக்காதோ...?'

'இல்லையே... அன்று ஏர்போர்ட்டில் அவ்வளவு ப்ரியத்துடன் அந்தக் குழந்தையைக் கொஞ்சினாளே... இன்று ஏன் இப்படி?'

வினாக்கள் குழப்ப வலை பின்ன ஆரம்பித்தன!

இது எதையுமே கவனிக்காத விநாயகம் உற்சாகத்தில் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்.

JUN 12 2010

# 25

நாட்கள்... காற்றாலையின் சுழற்சியுடன் விரைந்தன.

அன்று மாலையில், சென்னையிலேயே பெரிய நட்சத்திர ஓட்டலில் ரிசப்ஷன்!

முதல் நாளிலிருந்தே மெஹந்தி போடுவது, மேக்கப் சரி பார்ப்பது என்று பிஸியாக இருந்தாள் தபஸ்யா!

எல்லாவற்றிற்கும், அவள் தோழி சரோஜாவும், வேணியும் உடன் வர அழகு நிலையத்தில் தயாராகி ஹோட்டலுக்கு வந்தாள்.

இளஞ்சிவப்பு தங்க நிறச் சேலையில் அவள் ஸ்வர்ண சிற்பமாய் மின்ன, கோட் சூட்டில் கம்பீர ஆண்மகனாய் தோற்றம் கொண்டிருந்தான் அருள்!

ரிசப்ஷன் இனிதே நடந்து முடிய, மறுநாளிரவே முதலிரவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

முதல் நாள் வரை இயல்பாக இருந்தவள், அன்று காலையிலிருந்தே நத்தையாய் தனது கூட்டினுள் சுருங்கிக் கொண்டாள்.

அருளின் விழிகள் ஆராய்ச்சியுடன் அவளையே தொடர்ந்திருக்க, தனது மனைவியின் இறுக்கத்திற்கான காரணம் புரிந்து நமட்டுச் சிரிப்புடன் மௌனமாகவே இருந்தான்.

இத்தனை நாள் சிறு குழந்தையைப் போல் வலம் வந்தவள், இன்று பிடிவாதத்துடன் வீம்பாக இருப்பது ஏனென்று வேணிக்குப் புரியவில்லை.



ஒரு டாக்டராய் அவளிடம் இதைப்பற்றி பேசலாமென்றாலோ உறவு முறை தடுத்தது.

ஆனால், அவளுக்கு விளக்கி புரிய வைக்க இயலாவிட்டால், சாதுர்யமாகத்தான் காய் நகர்த்த வேண்டும் என்ற முடிவுடன், முதலிரவு அறைக்குள் நுழைந்தான் அவன்.

* * *

ஓவியப் பாவையாய் அவளும் நுழைய, இயல்பாக வரவேற்றான்!

அவள் தயக்கத்துடன் கட்டிலில் அமரும்போதே, "என்னாச்சு தயா? ஏன் இவ்வளவு டென்ஷனா இருக்கே?" மெல்லிய குரலில் கேட்டான்.

"ம்... ஒண்ணுமில்லையே!"

அவள் தயக்கத்துடன் உதட்டைக் கடித்தபோது, அவனுக்கோ தாங்க முடியாத குறும்புச் சிரிப்பு உள்ளூரப் பீறிடுவதாய்!

"தயா... உனக்கு இஷ்டமில்லைன்னா, நான் உன்னை வற்புறுத்த மாட்டேன்... ஆனா உன் அப்பா கிட்டே எப்படியும் சொல்லித் தானே ஆகணும்!"

சாதுவாய் முகத்தை வைத்தபடி அவன் கேட்க.

"ஏன்...?" பதட்டத்துடன் வினவினாள் தபஸ்யா!

"இல்லை... அங்கிள் பேரக் குழந்தையை சீக்கிரமே பாக்கணும்னாரு... இல்லைன்னா ஏன்னு கேப்பாரே... சொல்லிடவா?" சீண்டலாகக் கேட்டான்.

'தன் தந்தையை வைத்தே இவன் வெற்றி பெற்று விடுவான் போலிருக்கிறதே... [illegible] வி[illegible]கூட[illegible]... மனம் தீவிரமாய் யோசித்தது.

"அதெல்லாம் வேண்டாம்... நாங்க ரெண்டு வருஷ ப்ளானிங்கிலே இருக்கோம்னு சொல்ல வேண்டியது தானே!" கூர்மையுடன் கேட்டாள்.

"அப்போ என் உரிமையை நான் எடுத்துக்கலாமா? ரெண்டு வருஷம் ஜாக்கிரதையா இருந்தாப் போதும்... அவ்வளவு தானே?"

சிரிக்காமல் கேட்டான்.

உடனே அவன் தவறாகப் புரிந்து கொண்டதை எண்ணி அவள் ஒரு மாதிரி விழிக்க சட்டென்று சிரித்து விட்டான் அவன்!

பிறகு, "நம்ம முதலிரவு ரெண்டு வருஷம் கழிச்சி நடக் கட்டும்கிறியா?" அமர்த்தலான குரலில் வினவினான்.

"ம்... ஊஹூம்..."

அவள் வார்த்தைகளின்றிப் பரிதவிக்கும் போதே, "அப் படின்னா என் உரிமையை இப்ப நான் எடுத்துக்கலாமா?"

ஒற்றைப் புருவம் உயர்த்தி குறும்பாக வினவினான் அவன்.

அவள் விதிர்த்து நிமிரும்போதே, "சும்மாக் கேட்டேன்! நீ தூங்கு... எப்போ என்னை நீ மனசார விரும்பறியோ... நான் உன் இணைன்னு தோணுதோ... அப்பதான் நமக்கு நிஜமான முதலிரவு!"

அழுத்தமான குரலில் கூறிவிட்டு ஒரு ரஸாயை எடுத்துக் கீழே விரித்தான்.

"அருள்! நான் கீழே படுத்துக்கறேன்! நீங்க மேல கட் டில்லே படுங்க" என்றபடி அதில் படுத்து விட்டாள் தபு.

சிறிது நேரத்திலேயே அவள் உறங்கிவிட, அவன் பார்வை அவளிடமே பதிந்திருந்தது.



அதில் தெரிந்த குழந்தைத் தனம் கலந்த பிடிவாதமும், விரவித் தெரிந்த சிறு கவலையும் எதையோ உணர்த்தின.

யோசனையுடன் அழுந்த உதட்டைக் கடித்தபோது, அவனுடைய மேல் உதடுகள் விரதமிருந்தன... கீழ் உதடுகள் விரகத்துடன் தனித்திருந்தன.

தன் நெஞ்சில் அலையாய் பொங்கிப் பரவும் தாபப் பேரலை, இனி உறங்காதென்பதும் புரிவதாய்!

* * *

காலம் தன் நடையை வேகப்படுத்த அந்த வீட்டி லுள்ள அனைவருக்கும் மிகவும் பிடித்தமானவளாக, ப்ரியமானவளாக மாறிப் போனாள் தபஸ்யா!

அவர்களிருவரும், மனமொத்த தம்பதிகளாக இல்லறம் நடத்துவதாக, அனைவருமே ஒரு மாயமனப்பான் மையில் இருந்தனர்.

வேணி, அடிக்கடி வந்து அவளைப் பார்த்துவிட்டு செல்ல, தபுவுக்குத்தான் பெரும் இதமாய்!

ஒருநாள், வேணியும் அவளும் விநாயகத்தின் அறை யில் பேசிக் கொண்டிருந்தனர்.

"பாவம் தபு! இந்த வீக்எண்ட் அருள் இல்லாம போர டிக்கப் போகுது!" குறும்புடன் கூறினார் வேணி!

"ஏன்... அருள் எங்கே போறாரு?" வியப்புடன் வினவி னாள் அவள்.

"உனக்குத் தெரியாதா? ஆச்சர்யமா இருக்கு! மூணு மாசத்துக்கு ஒரு தடவை இந்த மாதிரி வீக் எண்டுல எதாவது ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே போய் தங்கி இலவச கேம்ப் நடத்துறது அ[illegible] வழக்கம்!

JUN 12 2010

"அவங்க டீமே அங்கே போயிடுவாங்க! இங்கே சில ட்யூட்டி டாக்டர்ஸ் பார்த்துப்பாங்க! அப்போ சர்ஜரி கிடையாது!

"அப்படி கிராமத்துல பாக்கற பேஷண்ட்லே ரொம்ப வசதி குறைவா இருக்கிறவங்களைத் தேர்ந்தெடுத்து மாசத்துக்கு ஒரு ஆபரேஷன்னு இலவசமா செய்யறதும் பழக்கம்!

"அருள் வெளியே ரொம்ப இறுக்கமானவனா, கோபக் காரனாத் தெரியலாம்... ஆனா உள்ளே ரொம்ப இளகின மனசு படைச்சவன்னு எனக்கும், அவங்கம்மாவுக்கும் தான் தெரியும்!"

பெருமையுடன் அவர் முடிக்க அவளுக்குள் அவனுடைய மறுபக்கம் மெல்லப் புரிய ஆரம்பிப்பதாய்!

"என்னம்மா பேசாம இருக்கே..? மாப்பிள்ளை உன்கிட்ட சொல்லலையா?" யோசனையுடன் கேட்டார் விநாயகம்!"

"ம்... சொன்னாருப்பா... நான் தான் மறந்திட்டேன்."

விட்டுக் கொடுக்க மனமின்றிக் கூறினாள்.

உடனே வேணியிடம் திரும்பியவர், "எனக்குத் தெரியும்மா... மாப்பிள்ளையப் பத்தி! அருள்மொழி சொல்லியிருக்கா... அவரோட குணத்தை... அன்பு செலுத்தற அந்த மனசை... எல்லாத்தையுமே!" நெகிழ்வுடன் முடித்தார் விநாயகம்.

அப்போதுதான், அருள்மொழி, அவனைப் பற்றிக் கூற வரும்போதெல்லாம் அதைத் தான் தடுத்து விடுவதும், விலகிச் சென்று விடுவதும் தபுவிற்குள் ஞாபகச் சுவடுகளாய்!

அவனுடைய மனித நேயமும் சேவை குணமும் புதிதாய் ஏதோ ஒரு மாற்றத்தை உண்டு பண்ண... அந்த



இனம் புரியா உணர்வை விலக்க இயலாமல், தவித்து அமர்ந்திருந்தாள்.

## 26

மறுநாள் விநாயகம் தன்னுடைய வீட்டிற்குக் கிளம்பி விட்டார்.

இரண்டு மாத ஓய்விற்குப் பிறகு, அவர் புறப்பட, தபஸ்யாவிற்குத் தான் பெரும் சங்கடமாய்!

மாணிக்கத்தை, அவருக்கு முழு நேரப் பாதுகாப்பாளராக நியமித்து விட்டாள் தபஸ்யா.

தன் சிறு வயதிலிருந்தே அவர் விநாயகம் இண்டஸ்ட்ரீஸில் பணிபுரிந்ததால், ஓய்விற்குப் பிறகு அவரும் இந்த வேலையை மிகவும் விரும்பி ஏற்றார்.

"அப்பா! நானும் உங்களோட வந்து கொஞ்ச நாள் தங்கியிருக்கவா?" தயக்கத்துடன் கேட்டாள்.

"அதெல்லாம் வேண்டாம்மா! நீ மாப்பிள்ளையை கவனி! கல்யாணம் ஆன புதுசிலே உங்களை இவ்வளவு நாள் தொந்தரவு செஞ்சிட்டேனே... அதுவே போதும்!

"இப்படி ஒரு மாப்பிள்ளையும் குடும்பமும் கிடைக்க நான் ரொம்ப குடுத்து வச்சிருக்கணும்டா!" முடிவாக நிராகரித்து விட்டார்.

பிறகு அவர் கிளம்பும்போதுதான், அருளுக்கு அடுத்த வாரம் பிறந்த நாள் வருகிறதென்பதை நினைவு படுத்தினார் சொர்ணம்!

அப்போது தான் தெரியுமென்பதால், அவனுக்கு ஏதாவது பரிசு வாங்க முடிவு செய்[illegible]ப்பு!

JUN 12 2010

அந்த வாரமே அருளுடைய பிறந்த நாளும் வந்தது.

காலையிலேயே விநாயகமும் வேணியும் வந்து விட்டனர்.

தந்தையைக் கண்ட உற்சாகமும், அவனுடைய பிறந்த நாள் என்ற மகிழ்ச்சியும் அவளைப் பேரழகியாய் மாற்றியிருந்தன.

அன்று அதிகாலையில், அவன் எழுந்து வாக்கிங் செல்வது தினப்படி வழக்கமென்பதை அறிந்திருந்தவள், விடியலிலேயே எழுந்து விட்டாள்.

அவன் தன் அறையிலிருந்து வெளியே வரும்போதே எதிர்கொண்டவள், ''ஹேப்பி பர்த்டே மெனி மோர் ஹேப்பி ரிடர்ன்ஸ்!'' மென் குரலில் வாழ்த்தினாள்.

''தேங்க்யூ'' என்றபடி அவன் எதிர்பார்ப்புடன் நோக்க, ஒரு பரிசுப் பொருளை அவனிடம் அளித்தாள் தபஸ்யா!

சிறு முறுவலுடன் அதைப் பெற்றுக் கொண்டவனுடைய விழிகள் பெரும் ஏக்கத்துடன் இடுங்கின.

''என்ன கிஃப்ட்டுன்னு பிரிச்சிப் பாக்க மாட்டீங்களா?''

ஆர்வத்துடன் கேட்டபடி நிமிர்ந்தவளின் பார்வை, அதில் தெரிந்த வித்தியாசமான பாவனையில் உறைந்து அந்தரத்திலேயே ஸ்தம்பித்தது.

''ம்... ஆனா, இது மட்டும் தானா? நான்... என்னென்னவோ எதிர்பார்த்தேன்'' தாபம் கசிந்தது அவன் குரலில்!

''என்னென்னவோன்னா... ஊஹூம்! தப்பு!'' ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்தபடி வேகமாக விலகி ஓடி விட்டாள் அவள்.



''ஏய்... நான் என் மனைவிகிட்ட தானே எதிர்பார்த்தேன்... அதைப் போய் தப்புங்கறே!''

குறும்புடன் மொழிந்த அவன் குரல் காற்றிலே கரைந்து மறைந்தது.

ஒரு பெருமூச்சுடன் அந்தப் பரிசை அவன் பிரித்த போது, ஒரு அழகிய ஸ்டெதாஸ்கோப் வெள்ளியில் செய்து அங்கங்கு தங்க முலாமிடப்பட்டு நேர்த்தியாய் உருவாக்கப்பட்டிருந்தது.

உடனே இதழில் பரவசத்துடன் ஒரு முறுவல் ஜனிக்க மனைவியின் தேர்வை மனம் மெச்சியது.

ஜாகிங் முடிந்து மாடிக்கு வந்தபோது, அவளுடைய பரிசுக்காக நன்றியுரைத்தான் அவன்.

பிறகு, ''இன்னிக்கு மதியானம் பதினோரு மணிக்கு ரெடியா இரு... நாம எல்லாரும் வெளியே போறோம்'' என்றான்.

''எங்கே..?''

ஆர்வத்துடன் வினவியவளிடம் ''அது சர்ப்ரைஸ்! நான் குளிச்சிட்டு ஹாஸ்பிடலுக்கு ரவுண்ட்ஸ் போயிட்டு வந்திடறேன்'' என்றபடிக் குளியலறைப் பக்கம் திரும்பினான்.

''ம்... இன்னிக்கு கூட ஹாஸ்பிடல் போகணுமா?'' தபு மெதுவாகக் கேட்டாள்.

''சரி போகலை. அதுவும் உனக்காக!

''ஆனா, நான் கேக்கறதை நீ தரணும்... தருவியா?'' குறும்புடன் சீண்டினான்.

''என்ன...?'' குழப்பத்துடன் அவள் நிமிரும்போதே, உதடுகளை குவித்து அவன் ஜாடை செய்ய, மறுகணமே அவளுக்கு விதிர்த்துப் போயிற்று!

JUN 12 2010

பதிலே கூறாமல் வேகமாக வெளியே சென்றவள், மாடிப்படிகளில் இறங்க ஆரம்பிக்க, அவனுடைய கேலிச் சிரிப்பு மட்டும் விடாமல் அவளைத் துரத்தியது.

''என்னம்மா கீழே வந்துட்டே?'' மாப்பிள்ளையை கவனிக்கலையா?''

தந்தையின் குரல் கேட்டதும், ஓடி வந்து அணைத்துக் கொண்டாள்.

''எப்பப்பா வந்தீங்க?''

குதூகலத்துடன் அவள் கேட்க, ''இப்பதான் வந்தோம்...'' என்றபடி உள்ளே வந்தார் வேணி!

''வாங்க... வாங்க.. ரெண்டு பேரும் ஒரே நேரத்துல வந்திருக்கீங்க?'' வியப்புடன் வினவினாள்.

''நான்தான் போய் மாமாவை அழைச்சிட்டு வந்தேன்.

''எங்கே பர்த்டே பேபியைக் காணோம்?'' உற்சாகமாக விசாரித்தார் வேணி.

''குளிச்சிட்டிருக்காரும்மா! ஆமாம்... மதியம் நாம எல்லாரும் எங்கேயோ சர்ப்ரைஸா போகப் போறோம்னாரே? எங்கேம்மா?'' ஆர்வத்துடன் வினவினாள்.

''அதுவா? வில்வநாதன் ஐயா பேரிலே ஒரு ட்ரஸ்ட் ஏற்படுத்தி அருள் ஒரு அநாதை ஆசிரமத்தை நடத்திட்டு வரானே! அங்கேதான்!''

அவர் கூறியதும் வியப்பில் அவள் விழிகள் விரிந்தன.

''அந்த ஆசிரம ஐடியாவே ஐயா குடுத்ததுதான்! தனக்குப் பிறகு இப்படி ஒரு நல்ல காரியத்தை செய்யணும்கிறது அவரோட வேண்டுகோள்... அதைத்தான் அருள் நிறைவேத்தினான்... அவனோட ஒவ்வொரு பிறந்த



நாளுக்கும் மதியம் அங்கேதான் லஞ்ச்!'' பெருமிதத்துடன் முடித்தார்.

''ஓ...!'' என்றவளுக்கு, அவனுடைய மனிதாபிமானமும், விசுவரூபமும் புரிவதாய்!

பிறகு அருளும் வந்துவிட, அனைவரும் ஸ்பெஷலாக தயாரிக்கப்பட்டிருந்த டிபனை சாப்பிடச் சென்றனர்.

அவன் மருத்துவமனைக்குக் கிளம்பியதுமே பெரியவர்கள் பேச ஆரம்பித்து விட, அவளுக்குத்தான் பரபரப்பாய்!

''அத்தை! சாயந்திரம் கேக் ஆர்டர் பண்ணிடலாமா?'' ஆர்வத்துடன் கேட்டாள்.

''இல்லைம்மா! அதிலே அவனுக்கு விருப்பமே கிடையாது! எவ்வளவோ அநாதைக் குழந்தைங்க ஒரு வேளை சாப்பாட்டுக்கு இல்லாம கஷ்டப்படறப்ப அதெல்லாம் வேண்டாம்பான்!

''அதனாலதான் பர்த்டே அன்னிக்கு எல்லாருமே அங்கேயே சாப்பிட ஏற்பாடு செஞ்சிடுவான்.

''ஆனா ஆசிரமத்துல அவனுக்காக ஒவ்வொரு வருஷமும் கேக் வாங்கி வச்சிடுவாங்க. அதை அவனால மறுக்க முடிஞ்சதில்லை!

''அந்தக் குழந்தைகளுக்காக ஒத்துப்பான். அன்னிக்கு மட்டும் அவங்களோட சேர்ந்து ஒரு குழந்தையாவே மாறிடுவான்.''

சொர்ணம் முடித்தபோது பெரும் வியப்பும் ஆர்வமும் அவளுக்குள் ஊற்றாய்ப் பீறிட்டன!

* * *

மதியம், அனைவரும் கிளம்பி, சென்னையை விட்டு சிறிது தள்ளியிருந்த அந்த ஆசிரமத்திற்குச் சென்றனர்.

JUN 12 2010

கடலோர இரைச்சலுடன், அழகுற அமைக்கப்பட்டிருந்தது அந்த ஆசிரமம்!

கார் நின்றதும் ஓடி வந்து வரவேற்ற சிறுவர் சிறுமிகளைப் பார்த்தபோது பரிதாபமாய்!

ஆனால் அருளைக் கண்டதும் ஒவ்வொருவர் முகத்திலும் ஒளிர்ந்த தீபச் சுடர்கள் புதிதாய்!

"அருள் அண்ணா! என்று அழைத்தபடி பாசத்துடன் அவனைச் சுற்றிக் கொண்டவர்களைப் ப்ரியத்துடன் அவனும் அரவணைத்துக் கொண்டான்.

பிறகு அனைவரும் அவனுக்கு பிறந்த நாள் வாழ்த்துக் கூற கேர் டேக்கரும், மேனேஜரும் அவர்களை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர்.

அருள், அங்கிருந்தவர்களுக்கு தபஸ்யாவையும், விநாயகத்தையும் அறிமுகம் செய்ய சில குழந்தைகள் வணக்கம் கூற, சிலர் அவளிடம் நெருங்கி வந்து பேசினர்.

அதற்குள் "அருள் அண்ணா... விளையாடலாமா?" என்று சில சிறுவர்கள் அவனை அழைக்க, அருளும் உற்சாகத்துடன் தலையசைத்து உடன் சென்றான்.

ஏற்கனவே, அங்கு கிரிக்கெட் விளையாடுவதற்குத் தயாராக ஸ்டம்ப்கள் நடப்பட்டிருந்தன.

அந்தப் பிள்ளைகளுக்கு சரிசமமான உற்சாகத்துடன் இணைந்து அவன் விளையாடுவதை ஒரு ஓரத்தில் நாற்காலியில் அமர்ந்து ரசித்துக் கொண்டிருந்தாள் தபு.

சொர்ணமும் விநாயகமும் கேர் டேக்கரிடம் பேசிக் கொண்டிருக்க, வேணி மட்டும் அவளுடனிருந்தார்.

அவளுடைய வியந்த முகத்தைக் கண்டவர், "என்னம்மா தபு யோசனை...?" பரிவுடன் கேட்டார்.



"இல்லை! அங்கே ஒரு ஃபேமஸ் சர்ஜனா கோட் சூட் போட்டுக்கிட்டு... இங்கே ஜீன்ஸ், டி-சர்ட்டுல பசங்களோட பசங்களா விளையாடறாரே... ரெண்டு துருவம் மாதிரி இருக்கு... இதுலே எதும்மா நிஜம்?" குழப்பத்துடன் வினவினாள்.

"ம்... ரெண்டுமே தான்! பாக்கப் போனா இதான் நிஜம்... அவனோட ஆழ்மன ஆசைகளுக்கு வடிகால் இந்த ஆசிரமம்தான்!

"தினம் காலையில கிளம்பி இயந்திரத் தனமா ஓடி தொழில் செய்யறது ஒரு அருள்... அது டாக்டர் தொழில்ங்கறதால ஆத்மார்த்தமா அதிலே ஈடுபட்டு சர்ஜரி செய்யறது ஒரு முகம்!

"ஆனா இதுதான் அவனோட நிஜ முகமா எனக்குத் தோணும்! அதெல்லாம் ஒரு டெடிகேஷனோட செய்யறது!

"இது... அவன் சந்தோஷத்துக்காக! இந்த நிமிஷம் அவனைப் பாத்தா புதுசாப் பிறந்த ஒரு சின்னக் குழந்தையாத் தோணும்.

"இங்கே வந்தாலே இவங்களோட சேர்ந்து இப்படி மாறிடுவான்! ஒவ்வொரு மனுஷனுக்கும் இது மாதிரி ஒரு அவுட்லெட் தேவைதான்! இன்னும் பாரேன்!"

பெருமிதத்துடன் அவர் கூற சிறிது நேரத்தில் விளையாட்டு முடிந்து அனைவரும் சாப்பிட அழைக்கப்பட்டனர்.

அந்த சாப்பாட்டறையில் எல்லா பிள்ளைகளும் அவனை வாழ்த்திய பிறகு அருள் கேக் வெட்டினான்.

மனைவி என்ற முறையில் இரண்டாவது துண்டை எடுத்து அவளிடம் நீட்டினான்

''ம்... அண்ணி... வாயைத் திறங்க'' என்று அந்த சிறார்கள் ஆணையிட அவளால் மறுக்க இயலாது போயிற்று!

அருள், அவளுக்கு கேக் ஊட்டியபோது மென்மையாய் இதழ்களில் படிந்த அந்த ஸ்பரிசம் அங்கேயே சிலிர்ப் புடன் உறைவதாய்!

ஒரு கணம் அவன் இதயத்தில் பெருகிய காதல் அந்த விழிகளில் கசிவது போல்!

ஆனால் மறு நொடியே அது பொய்யோ என்பது போல்... அவன் முகம் இயல்பானது!

சாப்பிட்டு முடித்த பிறகு சொர்ணமும் விநாயகமும் ஓய்வெடுக்க, அருள் பிள்ளைகளுடன் செல்வது தெரிந்தது.

''அவங்க எங்கே போறாங்க?'' அவள் கேட்க வேணி அவளையும் உடன் அழைத்துச் சென்றார்.

ஒரு பெரிய அறையில் சிறு மேடை ஒன்று தெரிய அதில் அமர்ந்திருந்தான் அருள்!

பிள்ளைகளில் ஒருவன் ''காணி நிலம் வேண்டும்'' என்ற பாரதியார் பாடலை மெய் மறந்து பாட ஆரம்பித் திருந்தான்!

அவளைக் கண்டதும் ஒற்றைக் கண்ணசைவில் தன்னருகே அழைத்தான் அருள்.

இருவரும் சென்று அமர, தொடர்ந்த மணித் துளிகள் மிகவும் உற்சாகமாய்!

பிள்ளைகள் அவரவர்க்குத் தெரிந்த திறமையை வெளிப்படுத்தினர்.



பாட்டு, நடனம், நகைச்சுவை, பல குரலில் பேசுதல் என்று அந்த இடமே களை கட்டியது.

கடைசியில் அருளுடன் சேர்ந்து அனைவரும் ஆடியபடி ஒரு குத்துப் பாடலுக்கு நடனமாட அவளுக்குள் பெரும் வியப்பாய்!

அங்கு சென்னையில் பெரிய மருத்துவர் என்ற முறையில் கம்பீரமாக, ஒருவித கர்வம் கலந்த இறுக்கத்துடன் காணப்படுபவன், இங்கு ஒரு சிறு குழந்தையாய், கல்லூரிப் பறவையாய் சிறகு விரித்தது பிரமிப்பாய்!

பிறகு மாலையில் அங்கிருந்து கிளம்பும் போது அவளுக்கே என்னவோ போல்!

விடைபெறும் போது அவளுடைய விழிகள் பனித்து விட, அன்று முழுவதும் ஓரக் கண்ணால் அவளையே கவனித்திருந்த வேணிக்கோ மனதில் நமட்டுச் சிரிப்பு மலர்வதாய்!

இது நாள் வரை இருவரையும் ஓரளவு கணித்திருந்த வரால், எந்த முடிவுக்குமே வர இயலவில்லை!

ஆனால் சரியான ஒட்டுதலின்றி அருளிடம் மட்டும் அவள் ஒதுங்கியிருப்பதைப் போல் ஒரு பிரமை!

இன்று, அவளுடைய பார்வை பெரும் வியப்பும், பிரமிப்புமாய் அவனையே தொடர இதுவும் ஒரு நல்ல மாற்றமென்றே அவருக்குத் தோன்றியது!

## 27

அந்த மாதமே, ஊரிலுள்ள குலதெய்வம் கோவிலுக் குச் சென்று வர முடிவு செய்தார் சொர்ணம்.

JUN 12 2010

உடல்நிலை இப்படியானதிலிருந்து, அவர் கணவரின் சொந்த ஊருக்கே செல்வதில்லை!

இப்போது, புதுமணத் தம்பதிகளாய் இருவரையும் அழைத்துச் செல்ல வேண்டுமென்பதால் உடன் வர சம்மதித்தார்.

வேணிக்கு முக்கியமான கான்பரென்ஸ் ஒன்று இருந்த தால் வர இயலாமல் போக, மூவரும் கிளம்பினர்.

காரைக்காலுக்குச் சென்று அங்கு உறவினர்களின் வீட்டில், தங்கியது தபுவுக்குத்தான் புது அனுபவமாய்!

உடனொத்த வயதுடைய பெண்கள் பலர், தங்களை அருளுடைய சித்தப்பா பெண், அத்தை பெண், பெரி யப்பா பெண் என்று அறிமுகப்படுத்தி கொள்ள, தபு அவர்களுடன் ஒன்றிப் போனாள்!

மலேஷியாவில் அவளுக்கு நிறைய நட்பு வட்ட மிருந்தது. சிறு வயது நட்பாய்... அருள் மொழியின் தோழி களாய் பல குடும்பங்கள் அவளிடம் உயிராய் இருந்தனர்.

சென்னையில் சில கல்லூரித் தோழிகள் மட்டுமே இருக்க, விநாயகத்திற்கு அவ்வளவு நெருக்கமாய் யாரும் இல்லாது போயினர்!

தொழில் தொழில் என்று இருந்ததில், சில உறவுகள் மட்டுமே தொடர்பில் இருந்தனர்.

இன்று அவளுக்கு தன் பால்ய நினைவுகள் மடை திறந்த வெள்ளமாய்ப் பரவின!

நிறைவும் சந்தோஷமுமாய் ஒரு வேனில் உறவுகளும் உடன் வர கோவிலுக்குச் சென்றபோதுதான் அது ஒரு ஐயனார் கோவிலென்றே தெரிந்தது.



அவருக்கு பூஜை முடிந்து சுற்றி வந்தபோது, அங்கு பெரிதாய்க் கருப்பண்ண சாமியின் சுதை வேலைப்பாட்டு சிலை சிவப்பாய் தெரிய, பக்தியுடன் எதிரே அமர்ந்து விட்டாள்.

"ஏய்! என்ன இங்கே உக்காந்திட்டே?"

அருள் கேட்க, "எனக்கு கருப்பண்ணசாமின்னா ரொம் பப் பிடிக்கும்! அங்கே மலேஷியாவில் எல்லா அம்மன் கோவில்லேயும் அவர் இருப்பாரே... என்னோட பேவரைட் சாமி அவரு!

"நான் கொஞ்சம் அமைதியாக் கும்பிட்டுட்டு வரேன்... நீங்கல்லாம் போயி வேன்லே இருங்க" என்றாள்.

மற்றவர்கள் வேனுக்கு செல்ல, அருள் மட்டும் அவ ளருகில் அமர்ந்தான்!

கண்மூடி கருப்பண்ணசாமியை ப்ரார்த்தித்தபோது, ஒவ்வொரு முறையும் அருள் மொழியுடன் தான் அங்கு சென்ற ஞாபகங்கள் கரை மீறின!

ஒற்றைத் துளியாய் உணர்வுகள் பலவீனப்பட்டு கன் னத்தில் வழியத் திரும்பினால் அருகே அருள் அமர்ந் திருந்தான்.

அவனைக் கண்டவுடன் சிறு கோபம் பீறிட, அருள் மொழி அத்தைக்கு அவன் தந்தை செய்த துரோகமே நினைவுக்கு வந்தது!

மனம் இறுகி, கல்லூரி நாட்களில் கவிதை பாடிய வேகம் மீண்டும் கைவசப்படுவதாய்!

தண்டிக்கப்படாமலே இறந்து போன அவரை எண்ணி மௌனக் கோபத்தில் மறுகியது நெஞ்சம்!

JUN 12 2010

கிராமங்கள்லே...
காவல் தெய்வம் நீயின்னு
காலம் காலமா
சொல்லுறாங்க!
நகர நெரிசலிலே...
நாகரீகம் நெறைஞ்சாப்போல...
கெட்டதெல்லாம் நிறைஞ்சிருக்கு!
கிராமத்தை விட்டு...
காவல் கறுப்பு...
நீ அங்கே வந்தா...
ஆயிரம் பலி கிடைக்குமங்கே!
எல்லைக்குன்னு நீ
இங்கே இருந்தா...
கொள்ளைக்குன்னு அங்கே வருபவரை
கொண்டு போவதார் அங்கே?
ஊருக்குள்ளே நீ வந்து
உடுக்கடிச்சு பூச செஞ்சு...
உளுத்துப்போன பாவிங்களை
உயிர் கலங்கச் செய்திடணும்!
சந்தனக் கறுப்பு நீ...
தாவி வெள்ளைக் குதிரையேறி...
தாமதிக்காம இங்கே வந்து
தர்பார் நடத்திடணும்!
தன் குடிகளைக் காத்திடணும்!



தவறுகளைக் காட்டிடணும்!
தண்டனையைக் குடுத்திடணும்!
மக்களைக் காப்பாத்த...
மாட்டேன்னு சொல்லாம...
பாவி மக்க பயம் தீர்க்க...
பறந்து நீயும் பட்டணத்துக்கு
புரவி மேல பாய்ஞ்சு ஏறி
வந்து விடு கருப்பா!

மௌனக் கோரிக்கை விடுத்த,

இதயம் உணர்ச்சிப் பெருக்கில் விம்மியது!

விழிகளில் ஒற்றைக் கோடாய் வழிந்த கண்ணீருடன் இறுகி அமர்ந்திருந்தவளை, மெல்ல உசுப்பினான் அருள்.

"என்னாச்சு தயா? ஏன் அழறே?"

தவிப்புடன் கேட்டான்.

"ஹூம்... இது அழுகை இல்லை... எனக்கு பிடிச்ச சாமிகிட்ட நான் வெச்ச ஒரு கோரிக்கை!"

பொறுமலுடன் கூறிவிட்டு வேகமாக எழுந்து திரும்பியும் பார்க்காமல் வேனுக்குச் சென்று விட்டாள் தயு!

பிறகு ஊர் திரும்பும் வரை, அவளால் இயல்பாகவே இருக்க இயலவில்லை!

பழைய ஞாபகங்களும், துருப்பிடித்திருந்த வேதனைகளும் நீறுபூத்த நெருப்பாய் கனன்று எரிய, தொட்டாற் சுருங்கியாய் தனக்குள்ளே சுருங்கிப் போனாள்.



JUN 12 2010

# 28

ஊருக்குத் திரும்பியதும் அவள் அவனிடமிருந்து பெரிதும் விலக அருளுக்குதான் பெரும் குழப்பமாய்!

என் அவளிடம் இப்படி ஒரு மாறுதல் திடீரென்று... என்ன நேர்ந்தது? புரியாத புதிராய் பல வினாக்கள் அவனுள்!

அதுவரை உறவுப் பெண்களுடன் உற்சாகமாகச் சுற்றித் திரிந்தவள்,

திடீரென்று தனக்குள் இறுகியது கோவிலுக்கு சென்ற பிறகுதானென்பது புரிந்தது.

சில நாட்களாக, இயல்பாக அவனிடம் பேசத் தொடங்கியிருந்தவளின் குணம் மாறியிருந்தது.

விரக்தியும் வெறுப்புமாய் தனக்குள்ளேயே அவள் இறுகிப் போயிருப்பதை சிறு வலியுடன் உணர்ந்தான் அவன்!

என்ன செய்து அவளை மாற்றுவது என்று யோசிக்கும்போதே, தன் தந்தையின் செய்கை, அவள் மனதில் ஆறாத ரணமாய் பதிந்திருப்பது புரிவதாய்!

அதை எப்படி மாற்றுவது... வேணியிடம் இது பற்றி சொல்லலாமா? பல சஞ்சலங்கள் அவனுள்!

பிறகு இதை மெதுவாக ஆறப்போட்டு தபுவை அவள் போக்கிலேயே விட்டுப் பிடிக்க முடிவு செய்தான்!

நாட்கள் காற்றெனக் கடுகிக் கடந்தன!



சொர்ணத்திற்கும், வேணிக்கும் மட்டும் பெறாத மகளாய்... ஒரு நல்ல தோழியாய் மாறிப் போனாள் அவள்!

ஒரு நாள் மூவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் போதுதான் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் சொர்ணம்!

"என்னம்மா தபு.. எப்ப என்னைப் பாட்டியாக்கப் போறீங்க, நீங்க ரெண்டு பேரும்? கல்யாணம் முடிஞ்சு நாலஞ்சு மாசமாகப் போகுது! எப்போ அந்த நல்ல செய்தியை சொல்லப் போறீங்க?" ஆர்வத்துடன் கேட்டார்.

தபஸ்யாவிற்கோ என்ன செய்வதென்றே புரியாத நிலை!

அதற்குள் வேணிதான் முந்திக் கொண்டு அவளுக்கு உதவினார்.

"நான்கூட ரெண்டு பேர்கிட்டயும் இதான்மா கேட்டேன். அருளுக்குதான் கொஞ்ச நாள் ப்ரீயா இருக்கணும்னு ஆசை போலருக்கு! ப்ளானிங்கிலே இருக்காங்க!

"கொஞ்ச நாள் சுதந்திரமாத்தான் இருக்கட்டுமே... வாழ்க்கையை என்ஜாய் பண்ணட்டும்! அப்புறம் குழந்தைங்க... அவங்க எதிர்காலம்னு தானே இருந்தாகணும்!"

மெல்ல அவர் நிறுத்த, நன்றியுடன் அவரிடம் பதிந்தன தபுவின் விழிகள்!

"என்னவோ போ! அந்த காலத்தில எல்லாம் உடனே குழந்தை பெத்துக்கிட்டோம்... இப்படியா?"

சலிப்புடன் கூறிவிட்டு சக்கர நாற்காலியைத் தள்ளியபடி அவர் உள்ளே செல்ல வேணி அவளிடம் திரும்பினார்.

''எப்படியோ அம்மாவை சமாளிச்சாச்சு! ஏன்மா ஏதும் ஃபேமிலி ப்ளானிங் அது இதுன்னு இருக்கீங்களா?'' கவலையுடன் கேட்டார்.

''ம்... ஆமாம்மா!'' திக்கித் திணறி முடித்தவளுக்குள் அருள்மொழியின் நினைவு!

* * *

அவள் ஒரு முறை அவரிடம் பேசிக் கொண்டிருந்த போது இதையேதான் தன் அத்தையிடம் கேட்டாள்.

''ஏன் அத்தை? மாமாவுக்கு முதல் மனைவி நீங்க தானே? உங்களுக்கும் ஒரு குழந்தை இருந்திருந்தா மாமா உங்களை விட்டுட்டுப் போயிருக்க மாட்டார் இல்லையா?''

பதினைந்து வயதில் இப்படி ஒரு கேள்வியை அவளிட மிருந்து சத்தியமாக எதிர்பார்த்திருக்கவில்லை என்பதை, அவரின் வியந்த பார்வை கூறியது!

''என்னடா இப்படி ஒரு திடீர்க் கேள்வி?'' பரிவுடன் அவள் தலையைக் கோதியபடி கேட்டார்.

''ம்... சொல்லுங்களேன்!''

பிடிவாதமாக அவள் உரைக்க சிறு கசந்த முறுவல் அவர் உதடுகளில்!

''அது... எனக்கு படிப்பு முடியணும்னு காத்திருந்தோம். கடைசி வருஷத்துல கல்யாணம் செஞ்சுக்கிட்டாலும் ஹவுஸ் சர்ஜன் பயிற்சி ஒரு வருஷம் மீதமிருந்தது.

''அது கெட வேண்டாமேன்னு கருத்தடை மாத்திரை களை நான் உபயோகப் படுத்தினேன்... அது கூட அவர் யோசனைதான்!

''அப்புறம் ஒரு நாள், திடீர்னு அவங்கப்பாவுக்கு சீரியஸ்ன்னு போன் வந்தது... காரைக்காலுக்குப்



போனாரு! என்னைப் பொறுத்தவரைக்கும் அன்னிக்கே என் வாழ்க்கையும் மரிச்சிப் போச்சு!''

கலங்கிய விழிகளுடன் அவர் முடிக்க, ''ஒரு குழந்தை இருந்திருந்தா அவர் உங்களை விட்டிருக்க முடியாது இல்லை அத்தை?'' குமுறலுடன் கேட்டாள் அவள்!

''அவர் என்னை நிராகரிக்கலைடா! அப்பாவோட இறுதி விருப்பத்துக்காக அவர் சொர்ணத்தை கல்யாணம் செஞ்சுக்கிட்டாரு. ஒரு கோழை மாதிரி!

''ஆனா, நான்தான் அவரை விலக்கி நிறுத்தினேன். ஒரு குழந்தை இருந்திருந்தாக் கூட என் முடிவு அதாத்தான் இருந்திருக்கும்!''

அழுத்தமாக முடித்தவரிடம் பெரும் மரியாதையும் ப்ரியமும் அன்று வந்தன.

* * *

திடீரென்று, யாரோ அவளைப் பற்றி உலுக்குவது புரிந்து நிமிர்ந்தால் வேணிதான் யோசனையுடன் நின் றிருந்தாள்.

''என்னாச்சுடா? திடீர்னு முகம் ஒரு மாதிரி மாறிடுச்சி. வேர்த்துப் போச்சு!

''ஏதாவது பழைய ஞாபகமா?''

''ம்... ஆமாம்மா... நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கவா? தலை வலிக்குது!'' சிறு குழந்தையாய் வினவினாள்.

''சரி... அதுக்கு ஏன் பர்மிஷன் கேக்கணும். வாடா என் மடியில கொஞ்ச நேரம் படுத்துக்க!'' உரிமையுடன் அழைத்தார்.

JUN 12 2010

கீழே முன்பு விநாயகம் இருந்த அறையில் சிறிது நேரம் அவர் மடியில் படுத்திருந்தபோது, தாய் மடியின் இதம் தெரிவதாய்!

கண்களை மூடி பழைய நினைவுகளைக் களைந்து... மனம் லேசாகி இயல்பு நிலைக்கு திரும்பத் துவங்கிய போது. அருளின் குரல் கேட்டது.

''என்ன... பாசமலர் காட்சி மாதிரி இருக்கு. ஒரே ஒரு வித்தியாசம் இங்கே... நாத்தனாரும் தம்பி மனைவியும்! ஆச்சர்யம்தான்!''

இதமான கேலியுடன் உள்ளே நுழைந்து அங்கு போடப் பட்டிருந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்தான்.

''கண்ணு வெக்காதே அருள்! அவ ஏதோ மூட் அவுட்டா இருந்தா... அதான்! நான் ஒண்ணு சொல்லவா... கேப் பியா?'' வேணி வினவினார்.

''என்ன சொல்லுங்க... எப்படி இருந்தாலும் நான் இங்கே தனிதான்! லேடீஸ் எல்லாரும் ஒண்ணா சேர்ந் தாச்சு! கேக்காம இருக்க முடியுமா?'' போலியாய் பெரு மூச்சு விட்டான்.

''அருள்... போதும் உன் கேலி.. பீ சீரியஸ் மேன்! கல்யாணம் ஆகி நாலஞ்சு மாசமாச்சு.. இன்னும் ஒரு நல்ல நியூஸ் இல்லையேன்னு அம்மா கேக்க ஆரம்பிச்சிட் டாங்க!

''உன் வேலையை எல்லாம் முதல்லே ஒதுக்கி வை... ரெண்டு பேரும் எங்காவது ஹனிமூனுக்குப் போயிட்டு வாங்க! இது என் ஆர்டர்!'' புன்னகையுடன் உத்தரவிட் டார்.



''சரிக்கா... உத்தரவு!''

பயந்தவனைப் போல் நடித்தவன்,

''ஆனா எனக்குப் பசிக்குது... அதை முதல்ல யாராவது தீர்க்கறீங்களா ப்ளீஸ்'' மெல்லக் கெஞ்சினான்.

''சரி சரி வா! தபு... முதல்லே அருளுக்கு டிபன் வைக்கலாம் வாம்மா'' என்றபடி எழுந்தாள் வேணி!

''அக்கா அவ ரெஸ்ட் எடுக்கட்டும்... நீங்க வந்து வைங்க'' என்றபடி அவன் செல்ல, சிறு ஊடலுடன் திரும்பவும் படுத்துக் கொண்டாள் அவள்.

மறுவாரம் இருவருக்கும் நேபாளத்திற்குச் செல்ல விமானத்தில் டிக்கெட் முன்பதிவு செய்தான் அருள்.

* * *

தபஸ்யாவிடம் கலந்தாலோசித்த பிறகே சுற்றுலாத் தலமாக காட்மாண்டுவைத் தேர்வு செய்திருந்தான்!

ஒரு நாள் அவள் குளித்து விட்டுத் தயாராகி வெளியே வந்தபோது அறைக் கதவு மெலிதாகத் தட்டப்பட்டது.

யாராக இருக்கும் என்ற யோசனையுடன் அவள் திறந்தபோது முகத்தில் தீவிர யோசனையுடன் அங்கு அருள் நின்றிருந்தான்!

''நான் உள்ளே வரலாமா... உன் கூடக் கொஞ்சம் பேசணும்'' என்றான்!

''வாங்க...'' என்றபடி விலகி வழிவிட்டாள் அவள்.

''அம்மா சொன்னாங்களாம்... வேணியக்காவும் ரொம்ப கம்ப்பெல் பண்றாங்க! அதனால [illegible] நாம [illegible] எங்கேயாவது ஒரு டூர் மாதிரி [illegible] சீயிங் மட்டும்தான்!'' ஆழ்ந்த குரலில் பகர்ந்தான்.

JUN 12 2010

''எங்கே? குழப்பத்துடன் கேட்டவளின் இதயம் தும்பிச் சிறகாய்!

''ம்... உனக்கு ஏதாவது ஒரு இடத்தை சுத்திப் பாக்கணும்னு தோணுச்சின்னா அங்கே போகலாம்!''

தோளைக் குலுக்கியபடி இயல்பாகக் கேட்டவனிடம், ''நேபாள் போகலாமா? நான் போகணும்னு ஆசைப்பட்டப்பதான் ரொம்ப ப்ரச்னையாயிடுச்சி. இப்போ அதெல்லாம் ஒரு முடிவுக்கு வந்திடுச்சின்னு நினைக்கிறேன்!'' மெதுவாக உரைத்தாள்.

''ஓகே! ஒரு ப்ராப்ளம் சால்வ்ட்! நான் டிக்கெட்டுக்கு சொல்லிடறேன்! அடுத்த வாரம் கிளம்பற மாதிரி இருக்கும்! தேவையானதை பேக் பண்ணிக்கோ!'' என்றபடி எழுந்தான்.

''எத்தனை நாள் தங்கறோம்?''

அவளுடைய கேள்விக்கு திரும்பியவன், ''ஒரு வாரம்... எனக்கும் ஒரு சேஞ்சா இருக்கும்... அதான்!'' கூறிவிட்டு வெளியே சென்று விட்டான்.

## 29

இருவரும், நேபாளுக்குக் கிளம்பும் நாளும் வந்தது.

அருளுக்கு அருகில் அமர்ந்து விமானத்தில் பயணித்த போது, சிறு சிலிர்ப்பாய்!

வழியனுப்ப வந்த விநாயகமும் வேணியும் கூறியது பசுமரத்தாணியாய்!



''தபு! ரெண்டு பேரும் சந்தோஷமாப் போயிட்டு வாங்க... ஏதாவது மனக் கசப்பு இருந்தாக்கூட அதை எல்லாம் ஒதுக்கிட்டு ஜாலியா என்ஜாய் பண்ணுங்க!'' வேணி மெல்லிய குரலில் அறிவுரை செய்தார்.

உடனே ஒரு விதிர்ப்பு எழ அவள் தலையசைத்தபடித் திரும்பியபோது அவளுடைய கைகள் வாஞ்சையுடன் பற்றப்பட்டன.

விநாயகம்தான் அவளையே நோக்கியபடி பேசினார்!

''தபும்மா! நீயும் மாப்பிள்ளையும் இப்படி ஒத்துமையா இருக்கறதைப் பாக்கறதைத் தவிர எனக்கு வேற என்ன வேணும்! கடைசி வரைக்கும் நீங்க இப்படியே இருக்கணும்!'' மனமார வாழ்த்தினார்.

இதயத்திற்குள் சில்லென்று ஒரு அதிர்வு பரவ, ''இப்படியே வாழ வேண்டுமா?'' கசப்பாய் ஒரு முறுவல் இதழ்களில் படர்ந்தது.

''சரிப்பா!'' என்றபோது விமான நிலையத்தில் அவர்களுடைய விமானம் போர்டிங்கிற்குத் தயாராக இருப்பதாக அழைப்பு வந்தது.

பிறகு இருவரும் விடைபெற்று ஏறி அமர்ந்தபோது, முதன் முறையாக அவனுடன் தனிமையில் கழிக்கப் போகின்ற தருணங்களை எண்ணி சங்கடமாய்!

ஆனால் அருளோ எந்தவித உணர்வுமின்றி கண் மூடிச் சாய்ந்திருந்தான்.

சாப்பிட்டு விட்டு அவன் திரும்பவும் உறக்கத்தில் ஆழ்ந்து விட, அவள் மட்டும் விமானத்தின் கண்ணாடி ஜன்னல் வழியே கீழே பார்த்துக் கொண்டிருந்தாள்.

JUN 12 2010

நேபாளத்தை நெருங்குவதற்குள் இமயமலையின் மேல் விமானம் பறக்க ஆரம்பித்ததுமே, இயற்கை எழில் மனதைக் கொள்ளை கொள்ளத் துவங்கியது.

அழகிய பனி படர்ந்த மலைச் சிகரங்களும், அடர்ந்த பசிய காடுகளும், விரிந்த சமவெளிகளும் சிந்தைக்கு பெரும் விருந்தாய் சிலிர்க்கச் செய்தன.

சில இடங்களில்... மலைகளில் அருவியாய்ப் பெருகி சமவெளியில் ஓடிக் கொண்டிருந்த நதிகள் வைர ஓடையாய்... வெள்ளிச் சரிகை வேலைப்பாடாய் மின்னின!

திடீரென்று அருகில் அசைவை உணர்ந்து திரும்பினால், அருள் விழித்திருந்தான்!

"என்ன... அழகா இருக்கா? நேபாளோட அழகு மேலே இருந்து பாக்கறப்ப பல மடங்கு அழகாத் தெரியும்!"

சிறு முறுவலுடன் கூறினான்.

"நீங்க முன்னாடியே இங்கே வந்திருக்கீங்களா?" அவள் வியப்புடன் வினவினாள்.

"ரெண்டு முறை வந்திருக்கேன்! இங்கே என் பேஷண்ட் ஒருத்தர் இருக்காரு! ரொம்ப ஃப்ரெண்ட் அவர்தான், நாம இப்ப தங்க எல்லா ஏற்பாடும் செஞ்சிருக்காரு!

"அவங்க வீட்டுக்கும் ஒரு நாள் போகணும்! அவரும் தமிழர்தான்... ஆனா, இங்கேயே வந்து செட்டிலானவரு!

"இன்னும் நிறைய பேரும் இருக்காங்க!"

"ஓ! அங்கே மக்கள் எப்படி இருப்பாங்க? தமிழர்கள் இருப்பாங்களா?" ஆர்வத்துடன் கேட்டாள்.



"இங்கே மலைப் பகுதிதான் அதிகம்... சமவெளிப் பிரதேசம் குறைச்சல்! பதினைஞ்சு சதவீதம் பூமிதான் கல்டிவேஷனுக்குப் பயன்படுது... கொஞ்சம் பகுதி புல்வெளி... ஆடு மாடு மேய்க்க உபயோகப்படுத்தறாங்க!

"கிட்டத்தட்ட பாதி இடம் அடர்ந்த காடுதான்... மலைச் சாதி மக்கள் பழங்குடிகள்தான் அதிகம். இந்தியன்ஸ் இருக்காங்க. புத்த மதத்தினர்... முஸ்லீம்ஸும் இருக்காங்க!"

"மொழி என்ன பேசுவாங்க?" அவள் குரலில் எல்லாவற்றையும் அறிந்து கொள்ளும் ஆர்வம்!

"நேபாள மொழிதான் அதிகம் பேசுவாங்க! வேற மொழிகளும் பழக்கத்துல இருக்கு! வேற ஏதாவது தெரியணுமா? இல்லை... போதுமா?" குறும்புடன் தலை சரித்துக் கேட்டான்.

"போதும்!" சிணுங்கலாகக் கூறிவிட்டு வெளிப்புறம் திரும்பிப் பார்க்க ஆரம்பித்தாள் அவள்.

அப்போதுதான் எப்போதோ படித்த ஒரு மேலை நாட்டுப் பொன் மொழி நினைவிற்கு வந்தது!

"விலை மிகுந்த வைரம் ஒன்று, தங்க நகையில் பதிக்கப் பட்டதைப் போல் காட்மாண்டு தோற்றமளிக்கிறது" முகம் தெரியா ஒரு அறிஞரின் வரிகள் நிஜமாய்!

* * *

காட்மாண்டுவிற்கு சென்று இறங்கியபோது, அவர்களை வரவேற்க ஒரு கூட்டமே விமான நிலையத்தில் காத்திருந்தது.

ஒரு சந்தனமாலையை அருளுக்குப் போட்டு விட்டு மற்றொன்றை அவளுக்கு அ[illegible] அந்த கோட் சூட் அணிந்த மனிதர்.

JUN 12 2010

இருவரையும் மகிழ்ச்சியும் உற்சாகமுமாய் அனைவரும் வரவேற்க, அந்த இயல்பான பாசமும் ப்ரியமும் அவளுள் வியப்பைத் தூண்டின!

மற்றவர்கள், தங்கள் வீட்டிற்கு ஒரு நாள் விருந்திற்குக் கட்டாயம் வரவேண்டுமென்ற அழைப்புடன் விடைபெற, ஒரு தம்பதி மட்டும் உடன் வந்தனர்.

விலையுயர்ந்த வெளிநாட்டுக் காருடன் டிரைவர் காத்திருக்க காட்மாண்டுவின் புதிய நகரத்திற்குச் சென்றபோது, அங்கு பெரிய நவீனக் கட்டடங்கள் புதிதாய்த் தெரிந்தன.

உள்ளே மலைப்பாங்கான இடத்தில் ரிசார்ட் ஒன்று அழகாகக் காட்சியளித்தது.

அங்கு சென்று கார் நின்றதும், ஹனிமூன் காட்டேஜின் சாவியை வாங்கி அருளிடம் கொடுத்து விட்டு இருவரும் விடைபெற்றனர்.

மூத்த தலைமுறையிலிருந்தே இங்கு வசிப்பதால் அவர்களின் பேச்சில் தமிழுடன் வேறு மொழி கலந்தது போல் ஒரு உணர்வு!

கணேஷ் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட அந்த மனிதரும், அவர் மனைவி மாயாவும் காரை அவர்களுடைய உபயோகத்திற்கென்று டிரைவருடன் விட்டு விட்டு வேறு காரில் கிளம்பினர்.

அன்றிரவு, தங்களின் வீட்டிற்கு விருந்திற்கு வருமாறும், அழைத்துச் சென்றனர்.

அந்தக் காட்டேஜின் அறையில் இரட்டைக் கட்டில் மட்டுமே இருக்க, ஹாலில் ஒரு சோபா செட் மட்டும் போடப்பட்டிருந்தது!



அதுவும் சிறிதாக இருக்க, எங்கு படுப்பதென்ற கவலையுடன் நின்றிருந்தபோது தான், அவன் குரல் அவளைக் கலைத்தது!

''என்ன... எங்கே படுக்கறதுன்னு யோசனையா? கவலைப்படாதே... ஒரு பெட்டை எடுத்து கீழே போட்டு நான் படுத்துக்கறேன்.''

இயல்பாகக் கூறிவிட்டு குளியலறைக்குள் சென்று விட்டான்.

அவளுக்குதான் என்ன செய்வதென்றே தெரியவில்லை!

* * *

சிட் அவுட் கதவைத் திறந்து வெளியே வந்தபோது, சில்லென்ற காற்று முகத்தில் பனிச்சாரலுடன் மோதியது.

பனி படர்ந்த மலைகளுடன், பச்சைப் பட்டுடுத்திய ராஜகுமாரியாய்த் தெரிந்தது, நேபாளம்!

மெல்லிய பஞ்சுப் புகையாய் தூரத்தே மிதந்த மேகங்களை, இரு கைகளிலும் இதமாய்ப் பிடித்து விளையாட ஆசை வந்தது!

அந்தக் குளிர்க் காற்றை சுகமாய் உள்ளே நிரப்ப, சட்டென்று ஒரு சிலிர்ப்பு ஊடுருவியது!

இறைவன், தன் படைப்பின் அழகு மொத்தத்தையும் இந்த நேபாளத்தில் சிதறச் செய்தது போல்!

உணர்வுகள் இதமாய் மயங்கி, இயற்கையில் தன்னைத் தொலைத்து ரம்யத்தை ஸ்வீகரித்தன!

மனதிற்குப் பிடித்த ஒ[illegible] மென்மையாய் முணுமுணுத்தபடி நின்றிரு[illegible]ள்!

JUN 12 2010

"நெஞ்சுக்குள் பெய்திடும் மாமழை...
நீருக்குள் மூழ்கிடும் தாமரை...
சட்டென்று மாறுது வானிலை...
பெண்ணே நீ காஞ்சனை!"

குளித்துவிட்டு வெளியே வந்த அருள் அதை ரசித்தபடி அவளை ஓய்வெடுக்கும்படிக் கூறினான்.

"நீயும் ரெஸ்ட் எடு தயா. சாயந்திரம் நாம கணேஷ் சார் வீட்டுக்கு விருந்துக்குப் போறோம்! நாளையிலிருந்து ஊரைச் சுத்திப் பாக்கலாம்!" என்றபடி ஒரு ரஸாயை எடுத்து விரித்து கார்ப்பெட்டின் மேல் படுத்துக் கொண்டான்.

தினமும், சர்ஜரி மருத்துவமனை, நோயாளிகள் என்று இருப்பவனுக்கு, இந்த ஓய்வு தேவையென்று அவளுக்குத் தோன்றியது.

விமானத்திலேயே மதிய உணவு சாப்பிட்டு விட்டதால் குளியலறையிலேயே உடைமாற்றி விட்டு வந்து படுத்தவள், அப்படியே உறங்கி விட்டாள்.

நினைவுகள் கனவுப் பிரதேசத்திற்குள் கால் பதிக்க... உயர்ந்த மலைச் சிகரத்தில் தனிமையில் அவள் நிற்கிறாள்!

யாருமில்லாத் தனிமை ஏதோ செய்ய, அந்த ஆளரவமற்ற சூழலில் தனக்கான ஒரு துணையைத் தேடுகிறாள். ஆனால் யாருமில்லை!

பதறி ஓடும்போது இருள் சூழ்கிறது... பதட்டத்துடன் விழித்தால் மாலையாகியிருந்தது.

கீழே படுத்திருந்த அருளைக் காணவில்லை... குளியலறையில் தண்ணீர் சப்தம் மெலிதாய்க் கேட்டது!



வியர்த்திருந்த முகத்தைத் துடைத்தவளுக்குள், பெரும் குழப்பம்!

இந்தக் கனவு எனக்கு எதை உணர்த்துகிறது? நீ தனியே இருப்பது தவறு என்பதையா? குழப்ப அலைகள் நெஞ்சுக்குள் பரவின.

அதே நிமிடம் குளியலறைக் கதவு திறக்கப்பட அருள் வெளியே வந்தான்.

"ஓ! எழுந்திரிச்சாச்சா? அசந்து தூங்கிட்டிருந்தே... வந்து எழுப்பலாமின்னு போனேன்" என்றபடி முகம் துடைக்க ஆரம்பித்தான்!

உடனே எழுந்து குளியலறைக்குச் சென்றவள், முகம் கழுவி வரும்போது, அவன் உடைமாற்றியிருந்தான்.

"நான் வெளியே வெயிட் பண்றேன்! நீ ரெடியாயிட்டு வா! இன்னிக்கு புடவையே கட்டிக்க... அவங்க வீட்டுக்குப் போறதால சொல்றேன்!" என்றபடி வெளியேறினான்.

வேண்டுமென்றே அவன் கூறியதற்கு மாறாகச் செய்ய மனம் விழைந்தாலும், அவனுடைய கௌரவம் விலை மதிப்பற்றதாய் தோன்ற, புடவையே அணிந்தாள்.

அழகிய நாவல் பழ நிறத்தில் ராசில்க்கும் தங்க ஜரிகை வேலைப்பாடுகளுடன் மின்னிய சேலையணிந்து அதற்குப் பொருத்தமாக சிறு நகைகள் அணிந்து வெளியே வந்தாள்.

ஆனால் அவளைக் கண்டதும், அருள்தான் ஒரு கணம் இமைக்க மறந்து மூச்சடக்கி சிலையாய் உறைந்தான்!

நேபாள தேவதையே அவன் உருக்கொண்டு மிதந்து வந்த ஒரு உணர்வு!

JUN 12 2010

"போகலாமா?" அவள் கேட்ட பிறகே தெளிந்தவன், தலையசைத்தபடி மெல்ல எழுந்தான்.

"இவள் என்னவள்... என் இணை... பெருமிதத்தில் விம்மியது இதயம்!

அவர்கள் கிளம்பும்போதே கணேஷ் வந்து விட்டார்.

மிகுந்த மரியாதையுடன் அவர் இருவரையும் அழைத்துச் செல்ல, கார் பழைய நகருக்குள் நுழைந்தது.

## 30

சுற்றிலும் தோட்டம் சூழ்ந்த ஒரு புராதன பங்களாவின் முன் கார் நிற்க அவள் பிரமிப்புடன் இறங்கினாள்.

அந்த வீட்டின் அமைப்பே வித்தியாசமாய்!

உள்ளே சென்றபோது பெரிய குடும்பமே அங்கிருந்தது.

அனைவரும் ஒன்றாகக் கூட்டுக் குடும்பமாக வாழ்வதாக மாயா கூறியபோது பிரமிப்பாய்!

கணேஷ், முதலில் தன் தாய் ஹேமாவதியிடம் அவர்களை அழைத்துச் சென்றார்.

அருளைக் கண்டதும் பாசத்துடன் இரு கை நீட்டி அணைத்து முகம் வருடிய அந்த வயோதிகப் பெண்மணியை அவளுக்கு மிகவும் பிடித்துப் போனது!

"பாட்டிம்மா! இவதான் என் மனைவி... தபஸ்யா!" அருள் அவளை அறிமுகப்படுத்தினான்.



உடனே அவளை அருகே வரும்படி அழைத்தவர், கண்களை சுருக்கி அவளைக் கூர்ந்து விட்டு அருளிடம் திரும்பி,

"உங்க மனைவி ரொம்ப அழகு டாக்டர்" என்றார் பொக்கை வாய் புன்னகையுடன்!

அதற்கு அவன் அவளையே கூர்ந்தபடி முறுவலிக்க, "தபஸ்யா... அழகான பெயர்! நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரிம்மா! எங்க டாக்டர் கிடைக்க நீ குடுத்து வெச்சிருக்கணும்.

"எனக்கு ஆபரேஷன் செஞ்சு என்னைக் காப்பாத்தின தெய்வம் அவரு! இங்கேருந்து நிறைய பேர் எங்க சொந்தக்காரங்க, அவருக்காகவே அந்த குணத்துக்காகவும் அருமையான ட்ரீட்மெண்ட்டுக்காகவும் சென்னைக்கு வருவாங்க!

மூச்சு வாங்க நிறுத்தியவரை அமைதிப்படுத்திய அருள், "போதும் பாட்டிம்மா. ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக்காதீங்க!" என்று அணைத்துக் கொண்டான்.

"எனக்கு என்ன பண்ணப் போகுது. அப்படியே செஞ்சாலும் எங்க டாக்டர் நீங்க பக்கத்துல இருக்கும்போது எந்தக் கவலையும் இல்லை!"

வாஞ்சையுடன் அவன் கையைப் பற்றியபடிக் கூறினார் அவர்.

பிறகு குடும்பத்தில் அனைவரும் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

சிறு குழந்தைகளும் அங்கிருக்க, பார்த்த முதல் நாளே அவர்களிடம் பிரியமாக, ஒட்டிக் கொண்டாள் அவள்.



JUN 12 2010

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு பரிசுப் பொருளை அவனிடம் கொடுத்து அளிக்கும்படி அவன் கூற, அப்போதுதான், அவன் தனியாக ஒரு பெரிய சூட்கேஸை ஏன் எடுத்து வந்தான் என்பது புரிந்தது.

புன்னகையுடன் அவர்கள் அதைப் பெற்றுக் கொள்ள, விருந்து துவங்கியது!

"அருள் மகராஜ்! உங்கள் மனைவி ரொம்ப அழகு!" சாப்பாடு பரிமாறிய ஒரு பெண்மணி வியந்து பாராட்டினார்.

"தேங்க் யூ!" என்று அவன் புன்னகைத்தபோதுதான் பாட்டி அவரை அறிமுகம் செய்தார்.

"இவ எங்க வீட்டில் ரொம்ப வருஷமா வேலை செய்யறா! பேரு குகேஸ்வரி. இங்கேயே வாழ்ந்ததாலே ஒரு நேபாளியை கல்யாணம் செஞ்சுக்கிட்டா!

"இன்னிக்கு இவ தான் உங்களைப் பாடி சந்தோஷப் படுத்தப் போறா தபஸ்யா!" சிறு புன்னகையுடன் முடித்தார்.

பிறகு அவனுக்கு அருகிலேயே நின்று ஒவ்வொரு உணவு வகையையும் விளக்கினாள் மாயா!

"தபஸ்யா! இது சிக்கன் டர்க்காரி. எங்க ட்ரெடிஷனல் சிக்கன்... நல்லா இருக்கும், சாப்பிடுங்க. இது சிக்கன் புட்டுவா. இது லேம்ப் மாஸீ... கறிக் குழம்பு மாதிரி! வித்தியாசமாருக்கும்... சாப்பிடுங்க" என்றார்.

அவன் சாப்பிடும்போதே அவளருகில் குனிந்தவன், "அங்கே சமோசா மாதிரி இருக்கே அது பேர் மேமோ... அதைச் சாப்பிட்டுப் பாரு உள்ளே கொத்துக்கறி ஸ்டஃப் பண்ணியிருப்பாங்க" அருள் விளக்கினான்.



"முதல்லே 'கஜார் கோ ஹல்வா' வைங்க... ஸ்வீட் சாப்பிடட்டும்" ஹேமாவதி ஆணையிட்டார்.

அது சுவையில் கேரட் புட்டிங் போலிருந்தது.

புரியாத நிறைய ஐட்டங்களும் மேஜையை நிறைத்திருக்க, தேர்ந்தெடுத்து சாப்பிட்டாள் அவள்.

கடைசியில் 'ஜீ ஜீ தாவ்' என்ற டெசர்ட் பரிமாறப்பட்டது. அதில் க்ரீம் கலந்த தயிருடன் பழ வகைகள் சேர்க்கப்பட்டிருந்தன.

* * *

சாப்பிட்ட பிறகு, கணேஷின் தம்பி பசுபதி புல்லாங்குழல் வாசிக்க, குஹா பாடியது மிக இனிமையாய்!

கிருஷ்ணனைப் பற்றிய பாடல் என்பது மட்டும் புரிந்தாலும் மொழி புரியவில்லை.

ஆனால் ஏதோ ஒரு தேவகானத்தைக் கேட்ட உணர்வு.

குழலில் இனிமையுடன் குழைந்து பயணித்தது குஹாவின் குரல்!

மெய்மறந்து ரசித்தவளுக்கு அங்கிருந்து கிளம்பவே மனமில்லை.

ஒரே ஒரு மாலைப் பொழுது பழக்கத்தில் அந்தக் குடும்பமே அவளுடன் பிரியாது இணைந்து போன ஒரு உணர்வு!

தனியாகவே வளர்ந்ததால், எப்போதும் உறவுக் கூட்டத்துடன் இருக்க அவள் மிகவும் பிரியப்படுவாள்.

இன்றும் அப்படியே உணர்ந்தவளை, மாயாவும் விடவில்லை!

JUN 12 2010

''இன்னிக்கு நைட் மட்டும் இங்கே தங்குங்களேன் டாக்டர்! காலையில கிளம்பிப் போகலாம். நாளையிலிருந்து ரெண்டு நாள் நான்தான் உங்களுக்கு கைடு... கணேஷ் இப்ப பிசினஸ்லே பிஸி! நாம திரும்பி வந்தப்புறம் பேக்கேஜ் டூர் அரேன்ஜ் பண்ணி இருக்கோம்.''

மெதுவாகக் கெஞ்சுவது போல் கேட்டவளிடம் ஏனோ மறுக்கத் தோன்றவில்லை!

அவள் அருளைப் பாத்து விழிகளாலேயே இறைஞ்ச ''ஓகே!'' என்றபடி தோளைக் குலுக்கினான் அருள்.

''பாத்தீங்களா கணேஷ்! இத்தனை முறை வந்தப்ப நாம எவ்வளவு கெஞ்சியும் தங்காதவரு, இன்னிக்கு தபஸ்யா ஒரு பார்வை பார்த்ததும் ஒத்துக்கிட்டதை!''

குறும்புடன் அவர் கேலி செய்ய எல்லாரும் சிரித்ததும் தபுவிற்குத்தான் முகம் சிவந்து போயிற்று!

''ஆமாம்! டாக்டர் இப்போ முன்னாடி மாதிரி இல்லாம, இப்ப ரொம்ப மென்மையா மாறினதாத் தெரியுது!''

ஹேமாவதி கூற கணேஷ்தான் தடுத்தார்.

''என்ன மாஜி! அப்ப இத்தனை நாளு நம்ம டாக்டர் முரட்டுத்தனமாவா இருந்தாரு. கவனமாப் பேசுங்க!'' என்றார்.

''டாக்டர்! நான் அந்த அர்த்தத்துல சொல்லலை. தப்பா நினைச்சிக்காதீங்க'' என்றவர் அவளிடம் திரும்பினார்.

''இங்கே நிவார் குடும்பங்கள்லே பெண்களுக்கு மஞ்சள் நீராட்டு விழா முடிஞ்சவுடனே பக்கத்துல இருக்கற கணேசர் கோவிலுக்கு அழைச்சிட்டுப் போயிடுவாங்க! அங்கே சம்பிரதாயப்படி கடவுளுக்கு அவங்களை கல்யாணம் செஞ்சு வைப்பாங்க!



''அப்புறம் உரிய வயசு வந்ததும், பெத்தவங்க தேர்ந்தெடுக்கற மாப்பிள்ளையோட கல்யாணம்!

''ஆனா, முதல் கல்யாணம் கடவுளோடதான்! அதனாலதான் இங்கே யாரும் விதவையாகறதில்லை!

''கடவுளைக் கணவனா ஏத்துக்கறதால புனிதமானவளாகக் கருதப்படுவா!

''எனக்கு என்ன தோணுது தெரியுமா? நம்ம தமிழர்கள்லே இது பழக்கமில்லைன்னாலும், உங்கப்பா உங்களை ஒரு கடவுளுக்குதான் திருமணம் செஞ்சு குடுத்திருக்கறதாத் தோணுது!

''முதல் திருமணத்தில் இங்கே கடவுளுக்கு பெண்ணைத் தர்ற மாதிரி எங்களுக்கெல்லாம் உயிரைக் குடுத்த இந்த தெய்வத்துக்கு உங்களையே பரிசாக் குடுத்திருக்காரு உங்கப்பா!''

கண்கள் கலங்க அவர் உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூற, ''மாஜி அவங்கப்பாவுக்கும் நம்ம டாக்டர் தான் ஆபரேஷன் செஞ்சாங்க!'' கணேஷ் பெருமையுடன் பகர்ந்தார்.

''ஓ! அதான்... அப்ப நான் சொன்னது சரிதான் இல்லையா டாக்டர்?' அவர் கேட்க,

''இல்லை பாட்டிம்மா... உங்களைப் பொறுத்தவரைக்கும் வேணா அப்படி இருக்கலாம்... எனக்குக் கிடைச்ச பெரிய கிஃப்ட் இவதான்!

''என் மனசுக்குப் பிடிச்ச தேவதை இவ!''

அவளுடைய கரத்தை மென்மையாய்ப் பற்றியபடி அவன் கூற, அனைவரும் 'ஓ'வென்று ஆர்ப்பரித்தனர்.

அவளுடைய இதய [illegible] விடப் படாமலே தானாகவே இயங்கியது... [illegible] வார்த்தைகள் [illegible]

இனம்புரியாத கூச்சமும் வெட்கமும், அவன் பேச்சினால் விளைந்த சிலிர்ப்பும், அவளை வாய் மூடி மௌனியாக்குவதாய்!

ஆராதனைக்குரிய அந்த மனிதனின் அக அழகில்..... என்னவென்றே உணர முடியாத ஒரு லயிப்புடன் ஈர்க்கப்பட்டது இதயம்!

பிறகு கணேஷும் அருணுமாகச் சென்று மாற்றுடை எடுத்து வர அதற்குள், தனது புதிய இரவு உடையை அவளுக்குப் பரிசாக அளித்து விட்டாள் மாயா.

இருவரும் வந்ததும், ஹேமாவதி உறங்கச் சென்று விட, வெகு நேரம் அனைவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

தபுவிற்குதான் மிகுந்த உற்சாகமாய்!

வெகு நாட்கள் கழித்து நட்புடன் பகர, பல தோழமைப் பெண்கள் கிடைத்த உணர்வு!

அந்த இனிய சுகத்தில் இருந்தவளுக்கு, இரவு, உறக்கக் கலக்கத்தில் அறைக்குள் சென்று படுத்ததுதான் தெரியும்!

ஆழ்ந்த உறக்கத்திலிருந்தவள் மெதுவாகத் திரும்பிப் படுக்க, அந்தக் குளிருக்கு இதமாய் இரு கைகள் அவளை மெதுவாக அணைத்தன.

அவளும் அந்த கைச்சிறையில் தன்னையறியாது சரண் புக, ''தபா... உனக்கு சம்மதம்தானே?'' காதருகில் ஒரு குரல் சீறலாய்!

அவன் எதற்குக் கேட்கிறானென்றே புரியாமல் அவளும், ''ம்...'' என்று சிணுங்கலாக முனகினாள்!

அந்த மலையரசியின் ரம்மியமா...

அதில் மயங்கி நின்ற மனதின் கிறக்கமா...

மஞ்சள் கயிறின் மாயாஜாலமா...



மாயா வீட்டில் அனைவரும் அவளைப் போற்றிய தருணமா... அவளை அவன் தேவதை என்று புகழ்ந்த அந்த சிலிர்ப்பில் விளைந்த இனிய ரசவாதமா... தன்னையறியாமலே கசிந்துருகியது அந்தப் பெண்புறா.

மறுகணமே அவளுடைய இதழ்கள் அவன் வசமாகியிருக்க, வாய் திறந்து மறுக்கக் கூட முடியாத ஒரு நிலை!

ஆனால் அவள் சுதாரிப்பதற்குள், அவன் அவளை தன்னுடையவளாக்கத் துவங்கியிருந்தான்.

அவளுக்குள் உறங்கியிருந்த அந்த மெல்லிய உணர்வுகளும் பெண்மையும் விழித்து விட, அவளாலும் அந்த காட்டாற்றைக் கட்டுப்படுத்த இயலவில்லை!

அவனுடைய நெஞ்சணையே அவள் பஞ்சணையாக மாறியிருக்க, அந்த பனிக்கால நள்ளிரவில் அவன் வசம் தன்னைத் தந்தது அந்தப் பெண்மை!

## 31

விடியல் மெல்ல மிதந்த பனிச்சாரலுடன் ரம்யமாய் புலர்ந்தது.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த தபஸ்யாவை, மெல்ல உசுப்பி எழுப்பினான் அருள்!

சோம்பலாய் விழித்தவள், தன் அருகே அருளுடைய முகத்தைக் கண்டதும், ஒரு நொடி விதிர்த்துப் போனாள்.

உடனே, நேற்றிரவு நடந்[illegible]ல்லாம் ஒரு நதியின் வேகச் சுழிப்புடன் மனதில் [illegible]ன.

"கடவுளே... நானா, நானா இவனிடம் என்னை இழந்தேன்! எப்படி... எது என்னை பலவீனப்படுத்தியது? என் திட்டமும் பழி வாங்கும் வஞ்சமும் தவிடு பொடியாகி விட்டதே?"

மனம் கூக்குரலிட்டு அழ ஆரம்பிக்க, பனித்த விழிகளுடன் சட்டென்று எழுந்து குளியலறைக்குள் புகுந்தாள்.

தாம்பத்யம் ஒரு நஞ்சாய் மாறுமா? இன்று மாறியிருந்தது!

தான் எழுப்பியதும் விதிர்த்து அமர்ந்தவள், பிறகு தலை குனிந்து யோசித்ததை வெட்கம் என்று தவறாக எண்ணிய அருளின் முகத்திலோ அவளை வென்ற ஆண்மையின் கர்வப் புன்னகை!

குளியலறையில் ஷவரில் நனைந்தபடித் தவித்திருந்த தவிற்கோ எதுவுமே புரியவில்லை...

'இதற்காகத்தான் தன்னை இங்கு நேபாளுக்கு தனிமையில் அழைத்து வந்தானோ? இந்த சூழ்நிலையும் அழகும் குளிரும் ஏகாந்தமும், என்னை மாற்றி விடுமென்று திட்டம் தீட்டினானோ?'

'எவ்வளவுதான் நான் தீவிரமாய் யோசித்திருந்தாலும் என்னை சுலபமாகச் சரித்து விட்டானே... இந்த வெட்கம் கெட்ட தேகம் எப்படி இவனிடம் சரணடைந்தது?'

பல கேள்விகள் அலையலையாய் பரவ இனம் புரியாக் குளிர் உடலெங்கும் முள்ளாய் குத்திற்று!

இளமையின் வேகமும், இயல்பான பெண்மையும் தன்னை இளகச் செய்ததை உணர்ந்தவளுக்கு வெறுப்பாய்!

'தேகமும் இதயமும் வேறு வேறோ? இரண்டிற்கும் இடையே தூரம் அதிகமோ? எப்படி அவனை என் இதயம் வெறுக்க, தேகம் சரிந்தது?'



குழப்பமாய் பல கேள்விகளுடன் தவித்தவளுக்கு விருப்பிற்கும் வெறுப்பிற்கும் இடையே உள்ள இடைவெளி ஒரு நூலிழைதான் என்பது தெரியவில்லை...

தான் விரும்பிய ஒருவனைத் தவிர வேற்று மனிதனிடம் எந்தப் பெண்மையும் தன்னை இழக்க சம்மதிக்காது என்பதையும் அவள் உணரவில்லை!

உள்ளம் மட்டும் 'யோசிப்பைத் தொடர்ந்தது!

'இனி அவனிடமிருந்து விலகி இருப்பது கடினம்... ஒரு முறை அவளை அடைந்தவனால் மீண்டும் அதை செயல்படுத்துவது சுலபம்!'

'ஆனால், உன்னால் என் மனதை அடைய முடியாது அருள்! ஆனால் உனக்கு என் மனமா பெரிது... இல்லையே!'

'அப்படி இருந்தால் தன் தந்தையை வைத்து தன்னை அவன் அடைந்திருக்க மாட்டானே!' பரிதவித்தாள்.

'என் மனம் அவனுக்குப் பெரிதில்லை! உடல்தான் வேண்டும்! அதனால் அதைப் பற்றி அவன் கவலைப்பட மாட்டான்!'

அவனைப் பழிவாங்க ஒரே வழிதான் இருக்கிறது... இறுதியாக ஒரு முடிவிற்கு வந்தாள் அவள்!

'உன் தந்தை என் அத்தையை நம்பிக்கை துரோகம் செய்து கழுத்தை அறுத்தது போல், நானும் செய்வேன்... என் மூலமாக உனக்கு ஒரு வாரிசு உருவாவதை நான் அனுமதிக்க மாட்டேன்!

'ஊருக்குச் சென்றவுடன் இனி மாதந்தோறும் கருத்தடை மாத்திரைகளை உபயோகிப்பேன். உன் தந்தையைப் போல ஒரு மட்டமான மனிதரின் வாரிசு என்

JUN 12 2010

மூலம் தொடரக்கூடாது... இதுவே நான் உனக்கு அளிக்கப் போகின்ற தண்டனை!" மனதிற்குள் சபதம் எடுத்தாள்.

அதன் விளைவு, தன்னை வெகுவாய் அமைதிப்படுத்தி இயல்பாக, குளித்து தயாராகின்ற நேரமே போதுமானதாய்!

பிறகு மாயாவும் வந்து விட, டிபன் சாப்பிட்டு விட்டு மூவரும் ஊர் சுற்றிப் பார்க்கக் கிளம்பினர்.

முதலிரவு அனுபவத்தினால் சிலிர்த்துப் போயிருந்த அருள், ஒருவித இனிய மயக்கத்திலிருந்தான்.

ஆனால், அவன் பார்வைகள் அவள் புறம் சீண்டலாய் பதியும் போதெல்லாம், அவள் இவன் இருக்கும் பக்கமே திரும்பவில்லை.

மாயாவின் துணையும் கிடைத்துவிட, அவன் ஒருவன் இருப்பதே மறந்தது போல் ஒதுங்கியிருந்தாள்.

அழகிய சுடிதாரில் அவளுடைய எழில் வளைவுகள் அவனை இதமாய் இம்சை செய்ய, தன்னை அடக்க வெகுவாய் சிரமப்பட்டுப் போனது அருள் தான்!

* * *

முதலில், பக்தாபூர் நகரை மூவரும் சுற்றிப் பார்த்த போது அது ஒரு பழங்கால நகர நாகரிகத்துடன் இருந்தது.

அங்கு மண் பாண்டங்களும், நெசவுத் தொழிலும், மர வேலைப்பாடுகளும் அதிகம் பிரபலம் என்று மாயாவதி கூற, வியப்புடன் எல்லாவற்றையும் ரசிக்க ஆரம்பித்தாள் தபு!

அந்த நகரமே பழமையையும், பழங்கால நாகரிகத்தையும் பறை சாற்றியபடி கலாச்சார சீரழிவின்றிக் காட்சியளித்தது.



அங்கிருந்து பசுபதி நாத்திற்குச் சென்று பாக்மதி நதிக்கரையில் அமைந்திருந்த அழகிய சிவன் கோவிலுக்குச் சென்றனர்.

அந்தக் கோவிலின் கூரையில் நாற்புறமும் தங்கத் தகடுகள் பதித்திருக்க, வெள்ளிக் கதவுடன் அழகிய சிவலிங்கத்தை தமக்குள் புதையலாய் சுமந்திருந்தது அந்த சன்னிதி!

ஒரு கைடாய் அந்தக் கோவிலைப் பற்றி மாயா விவரிக்க, ஏனோ எதிலுமே தபுவின் மனம் ஒன்ற மறுத்து சண்டித்தனம் செய்தது!

மூவரும் படிகளில் இறங்கி வரும்போது, திடீரென்று எங்கிருந்தோ ஓடி வந்த குரங்கு ஒன்று அவளிடமிருந்து அர்ச்சனைப் பொருட்களைப் பிடுங்கத் துவங்கியது!

பயத்தில் விதிர்த்து அவள் அலற ஆரம்பிக்க, ஓடி வந்து அந்தக் குரங்கைப் பிடித்து இழுத்துத் தள்ளி அவளைக் காப்பாற்றிய அருள், வாழைப்பழத்தை எடுத்து வீசி எறிந்தான்.

அந்தக் குரங்கு அதை எடுத்துக் கொண்டு ஓட பயத்துடன் அவன் மார்பில் சரண் புகுந்தாள் அவள்.

படபடப்பும் பதைபதைப்புமாய் கழிந்த சில விநாடிகளுக்குப் பிறகு நிலைமை புரிந்து சட்டென்று விலகினாள்!

பிறகு, மாயா அவளை சமாதானப்படுத்த மூவரும் அங்கிருந்து கிளம்பினர்.

அவன் மார்பில் புதைந்திருந்த அந்த நிமிடங்கள், கோடி பலம் தந்ததை ஒரு நொடி ஒத்துக் கொண்டாலும், மனம் உடனே அதை வன்மத்துடன் விலக்கியது!

* * *

JUN 12 2010

பிறகு சுயம்பு நாத் புத்த ஆலயத்திற்கும், போதிநாத் தூணையும் புத்தனி காந்தாவில் உள்ள பெருமாளையும் தரிசித்து விட்டு ஹனுமான் தோக்காவிலிருக்கும் பெரிய கால பைரவர் கோவிலுக்கு வந்தனர்.

"தபஸ்யா! குடும்பத்துல நடக்குற ப்ரச்னை எல்லாத்தையும் இங்கே முறையீடு செஞ்சி இந்தக் கால பைரவரை வணங்கினா, அதெல்லாம் சரியாயிடும்னு சொல்லுவாங்க!" மாயா கூறினார்.

"ஓ!" என்றவளுக்குள் தங்களுக்கு இடையே இருந்த இடைவெளி மேலும் அதிகரித்தால் போதும் என்ற வேண்டுதல்!

தான் தவறான வேண்டுதலை செய்திருப்பதை அறியாமலே அங்கிருந்து கிளம்பினாள் அவள்!

அருளின் மனதிலோ, தனக்கும் தன் மனைவிக்குமிடையே இருந்த பிணக்கு நீங்கி இனிதான இல்லறம் தொடர வேண்டுமென்ற ப்ரார்த்தனை!

## 32

மதியம் சாப்பிட்டு விட்டு சபாஹில் கிராமத்தின் மத்தியிலுள்ள சந்திர விநாயகரையும் ஹனுமான் நதிப் பாலத்தைக் கடந்து சூர்ய விநாயகரையும், தரிசித்தனர்.

அந்த இடம் மிக அழகாய் இருக்க, பல புதுமணத் தம்பதிகளை அங்கு காண முடிந்தது.



அடர்ந்த காட்டிற்கு நடுவே அழகிய மலைக் கோவிலாய் அந்த இடம் அமைந்திருக்க, இதயம் லேசாகி வெகுவாய் ரசிக்கத் துவங்கியது!

திடீரென்று அருகில் வந்த அருளின் குரல் அவள் செவியை செல்லமாய் வருடியது!

"இந்தக் கோவில்லே என்ன ஸ்பெஷல் தெரியுமா? நான் கூட அதை வேண்டிக்கிட்டேனே!" குறும்புடன் கூறினான்.

என்னவென்பது போல் அவள் நிமிர்ந்தபோது, "இங்கே பேச வராத பிள்ளைகளுக்கும், சரளமாப் பேச முடியாதவங்களுக்காகவும் ப்ரார்த்தனை செய்வாங்க" என்றான் மெல்லிய குரலில்!

"ஓ!" என்றவளுக்குள் ஒரு வன்மப் புன்னகை!

"உனக்கும் எனக்கும் ஒரு குழந்தை பிறந்தால்தானே இந்தப் பிரார்த்தனை செல்லுபடியாகும்."

அவள் மனம் குரூரமாய் எண்ணும் போதே, அவன் குரல் இடைமறித்தது.

"தயா! நீ என்கூட சரளமாய் பேசணும்னு நான் வேண்டிக்கிட்டேன்!"

சீண்டலாக அவன் கூற அவளுக்குள் புகைச்சலாய் ஒரு தகிப்பு.

பிறகு அங்கிருந்து மூவரும் சங்கு நாராயணன் கோவிலுக்குச் சென்றனர்.

மனோகரா நதியைக் கடந்து மலையின் மேல் நடந்து கோவிலை அடைந்தனர்.

ஒரு கோவிலில் நரசிம்மரும் மற்றொன்றில் நாராயணனும் காட்சி தர, தரிசனம் முடிந்து வெளியே வந்தால் இயற்கை அழகு நெஞ்சை அள்ளியது.

JUN 12 2010

அந்த மலையிலிருந்து பார்த்தால், பச்சை வெல்வெட்டாய் வயல் வெளிகள் தெரிந்தன!

காலையிலிருந்து தெய்வ தரிசனமாய் தொடர்ந்ததில் மனம் லேசாகி நிறைவாய் இருந்தது!

எல்லாக் கோவில்களுமே வித்தியாசமான அமைப்புடனிருப்பதை அப்போதுதான் உணர்ந்தாள் அவள்.

* * *

அன்றிரவு மாயாவை வீட்டில் விட்டு வரச் சென்றபோது, இருவரும் அங்கேயே சாப்பிட்டனர்.

பிறகு காட்டேஜிற்கு வந்தபோதுதான், அவளுக்குள் புதிதாய் ஒரு பயம் கிளர்வதாய்!

இன்று அவனிடமிருந்து எப்படித் தப்புவதென்ற யோசனையுடன் குளித்து விட்டு இரவு உடையுடன் அவள் வெளியே வந்தால் அறை இருண்டிருந்தது!

நடுவே டீப்பாயில் ஒரே ஒரு ஒற்றை மெழுகுவர்த்தி மட்டும் மெல்லிய ஒளியை உமிழ, யோசனையுடன் திரும்பினாள்.

மறுகணமே, அவளுடைய பாதங்கள் அந்தரத்திலிருக்க, ஒரு பூங்குவியலாய் அவளை ஏந்தியிருந்தான் அருள்!

''ப்ளீஸ்! என்னை விடுங்க!'' சிறு கோபத்துடன் அவள் சிணுங்கினாள்.

''நோ... இன்னிக்கு நீதான் என்னை ப்ளீஸ் பண்ணணும்... ப்ளீஸ்'' என்றபடி சிறு குழந்தையைப் போல் மென்மையாய் அவளைக் கட்டிலில் கிடத்தினான்.



பிறகு, அவளுடைய மறுப்புக்கும் தவிப்பிற்கும் அங்கே மதிப்பின்றிப் போனது!

இதமான சிலிர்ப்புடனும், வெட்கச் சிணுங்கலுடனும் முடிய வேண்டிய அந்த உறவின் நிறைவில், அவளுக்கு மட்டும் தோற்றுப் போன ஒரு உணர்வு!

கண்கள் தகித்துக் கரிக்க தலையணையில் முகம் புதைத்து அதை அடக்கியவள், வெகு நேரம் உறங்கவேயில்லை!

அவள் உறங்கி விட்டதாக எண்ணிய அருளுக்கோ நித்திரையின் வரவின்றி சிலிர்ப்பாய் கனவுகள் அணிவகுக்க ஆரம்பித்தன!

* * *

மறுநாள் காலையில் அருள் எழும்போது சோர்வில் அயர்ந்திருந்தாள் தபஸ்யா!

அவன் குளித்து விட்டு வந்தும் அவள் எழாததால், மெல்ல அவளை உசுப்ப ஆரம்பித்தான் அவன்.

அப்போது வாசல் கதவு தட்டப்பட, எழுந்து சென்று முன் அறைக் கதவைத் திறந்தால், கணேஷும், மாயாவும் நின்றிருந்தனர்.

அவர்களுடைய குரல் கேட்டதும், தூக்கக் கலக்கத்திலேயே எழுந்து ஓடி குளிக்க ஆரம்பித்தாள் தபஸ்யா!

பிறகு டிபன் சாப்பிட்டு விட்டு நால்வரும் புல் சோக்கி மலைக்குக் கிளம்பினர்.

''தபஸ்யா! இன்னிக்கு ஒரு நாள் தான் உங்களை நாங்க தொந்தரவு செய்வோம்! நாளையிலருந்து பேக்கேஜ் டூர் அரேன்ஜ் பண்ணியாச்சு! அது வரைக்கும் எங்களைப் பொறுத்துக்கணும்!''

JUN 12 2010

மாயாவதி தான் அவளிடம் கிண்டல் செய்தார்.

"இல்லைக்கா! நாளைக்கும் எங்களோட நீங்க வாங்க... எனக்கு எந்த அப்ஜெக்ஷனுமில்லை! எனக்கு நீங்க கூட இருக்கறது நல்லாப் பொழுது போகுது!" மெதுவாக உரைத்தாள்.

உடனே இடுங்கிய அருளின் விழிகளிலோ காயப்பட்ட சிறு வலியும், புறக்கணிக்கப்பட்ட வேதனையும் தெரிவதாய்!

ஆனால், அதை கவனித்த தபுவின் மனதில், அவனை வெற்றி கொண்ட ஒரு வித உணர்வு!

காதலிலும் இல்லறத்திலும் ஒருவருக்கொருவர் விட்டுத் தருதலும், பரிவுடனும் பாசத்துடனும் கணவனைத் தன்னுரிமை ஆக்கிக் கொள்வதும்... கண்ணுக்குக் கண்ணாக இருந்து,ஒருவரை ஒருவர் வழி நடத்துவதும்... பிறர் துணையின்றி வாழ முடியாதென்ற உன்னத உணர்வை உயிர்ப்போடு உணர்தலும்... அவளிடம் தொலைந்து போயிருந்தன.

அவனை ஓரக்கண்ணால் அளவெடுத்த அருளின் முகமோ பாறையாய் இறுகியது!

புல்சோக்கி மலையில் கால் பதித்தபோது, மலர்கள் நிறைந்து வண்ணக் கம்பளம் விரித்திருந்த அந்த மலையோ மிக அழகாய்!

மலையின் மீது நின்று பார்த்தால், காட்மாண்டு பள்ளத்தாக்கு மிக்க எழிலுடன் ரம்யமாகக் காட்சியளித்தது.

தபுவிற்கு, நேபாளம் சொர்க்கத்தின் முகவரியாய்த் தோன்ற, அந்த இயற்கை அழகில் தன்னை மறந்து நின்றிருந்தாள்.



சட்டென்று மாறிய வானிலை மெல்ல இருட்டி, பள்ளத்தாக்கை புகை படிந்த ஓவியமாக்கியது!

கீழே, தூரத்தில் வெள்ளிக் கம்பியாய் ஓடிக் கொண்டிருந்தது கோதாவரி நதி!

பெண்களும் நதியைப் போல வென்று பாடப் பட்ட ஒரு பாடல் வரிகள் தான் உடனே நினைவுக்கு வந்தன!

எங்கோ பிறந்து... தாய் மடியில் தவழ்ந்து... தந்தையின் தோளில் அருவியாய் பயணித்து... பல தடைகள் தாண்டி... கடைசியில் தன் துணையான கடலரசனிடம் அவள் சங்கமிப்பது போல்!

ஆனால், அது மட்டும், தன்னால் முடியாதென்று தோன்றியது.

'ஹூம்... முட்டாள்! இப்போது இணைந்து விட்டாயே?' மனசாட்சி வினா விடுத்தது.

'தேகம் இணைவது காதலில்லை! அது எங்கும் நிகழும் வேட்கை உணர்வு!'

'இதயங்கள் இணைவதே காதல்... அது எனக்குள் ஒரு நாளும் வரப் போவதில்லை... கடலிலே சங்கமிக்காத யமுனை நதியாய் நான் வாழப் போகிறேன்... எனக்கு என் தந்தை மட்டும் போதும்.'

உணர்வுகள் வீறு கொண்டு சபதமிட்டன.

"என்ன தபஸ்யா.. தனியா நிக்கறீங்க? உங்களைப் பாத்தா எனக்கு ஹனிமூன் கப்பிள்ஸ் மாதிரியே தெரியலை! அருள் சார் உருகிதான் நிக்கறாரு!

"ஆனா, நீங்க விலகி விலகி போற மாதிரி ஒரு ஃபீலிங்! பாவம் அவரு... எவ்வளவு [illegible] மா[illegible] ஒரு [illegible]

JUN 12 2010

தெரியுமா? உங்களை விரும்பி கல்யாணம் செஞ்சுக் கிட்டதா கனோஷ்கிட்ட சொன்னாராம்!

"இங்கே என் நாத்தனார் வசந்தராகூட அவரை ரொம்ப விரும்பினா! அழகா இருப்பா! எங்க அத்தைக்கு, உங்க சென்னையில ஆபரேஷன் பண்ணினப்ப துணையா இருந்தது அவதான்!

"அங்கே அருள் சாரோட அழகு, கம்பீரம், மதிப்பு, மரியாதை, சேவை மனப்பான்மை எல்லாம் பாத்து மயங் கிட்டா! எங்கிட்ட சொன்னப்ப, அத்தை கூட சந்தோஷமா சம்மதிச்சாங்க!

"ஆனா டாக்டர் சார்தான், அவளைத் தான் அப்படி நினைக்கவே இல்லை... கல்யாணத்துல ஆர்வமில்லைன் னுட்டாரு!

"இப்ப, உங்களைப் பாக்கறப்ப சந்தோஷமா இருந் தாலும் மனசுல ஏதோ ஒரு நெருடல்! நீங்க சந்தோஷமா இல்லியோன்னு!

"பெண்கள் பூ மாதிரி இருக்கணும் தபஸ்யா! கல் மரமாயிடக் கூடாது!

"ஏரிகளுக்கு அடியில பல வருடங்கள் நீரிலேயே கிடக்கிற சில மரங்கள் கல் மரங்களா மாறிடுமாம்! அங்கே ஊட்டியில நான் பாத்திருக்கேன்!

"ப்ளீஸ்... ஆழ் மனசு நிறைய வெறுப்பை சுமந்துட்டே இருந்தா மனசு கூட கல்லாத்தான் ஆயிடும்... உங் களுக்குள்ளே என்ன ப்ரச்னைன்னாலும் முதல்லே பேசி சரி பண்ணுங்க!

"எங்க டாக்டர் சார் சந்தோஷமா இருக்கணும்! அதான் எனக்கு வேணும்! என் அட்வைஸை ஒரு நீதி சொன்ன மாதிரி எடுத்துக்கங்க... ப்ளீஸ்!



இறைஞ்சிய மாயாவைப் பார்த்தால் கெஞ்சலுடன் பரிதாபமாய்!

'உனக்கு எதுவும் தெரியாது பெண்ணே அருளால் பாதிக்கப்பட்டு உடைந்து நிற்பவள் நான்.

'வெறுப்பின் உச்சத்தில் பல துகள்களாய் என் இதயம் சிதறிக் கிடக்கிறது.

'என்னால்... வெட்டுப்பட்ட பிறகு சிரிக்க முடியாது... பழி வாங்க மட்டுமே முடியும்!

'சுய விருப்பமின்றி... ஒரு கட்டாயத்துக்காக... என்னையும் கத்தி முனையில் நிற்க வைத்து மணந்தவர் அருள்... அவரை என்னால் மன்னிக்க முடியாது!

'என் அருள் மொழி அத்தையின் சோக வரலாறு உனக்குத் தெரியாது! அதனால் அவர் விருப்பத்தையே மதிக்காதவள் நான்!

'இவன் என்னை எதற்காக மணந்தானோ எனக்குத் தெரியாது! ஆனால், இது அவனுடைய தந்தையின் இறுதி விருப்பமாகக் கூட இருக்கலாம். அப்படித்தான் இருக்க வேண்டும்!

'அதில் அவனை வெற்றி பெற நான் விடமாட்டேன்! மஞ்சத்தில் அவன் என்னை ஒரு ஆண் மகனாய் வென்றிருக்கலாம்!

'ஆனால், அவனை ஒரு தந்தையாக்கும் தகுதியை என்னால் மட்டுமே தர முடியும்... அந்த அற்புதத் தரு ணத்தை அவனுக்கு பரிசளிக்க மாட்டேன்.'

நான் ஒரு கல்மரம்தான்!"

மெல்ல மூச்சு வாங்கியபோது, ஒரு கை அவன் தோளில் ஆதரவாகப் பதிந்த

JUN 12 2010

''தபஸ்யா! அங்கே மலைக் கோவிலுக்குப் போறதுக்காக ரெண்டு பேரும் நம்மைக் கூப்பிடறாங்க'' மாயா அழைத்தாள்.

தன்னைச் சீர்ப்படுத்திக் கொண்டு, அவள் அவரைப் பின் தொடர்ந்தாள்.

அருள், இயற்கை அழகை தன் ஹேண்டி கேமில் பதித்துக் கொண்டிருந்தான்.

அங்கிருந்த புல்சோக்கிமா கோவிலுக்கு சென்றபோது, திறந்த வெளிக் கோவிலாய் அது காட்சியளிக்க அங்கு அந்தக் காடுகளின் அன்னை வீற்றிருந்தாள்.

அவர் கேட்டதைக் கொடுக்கும் தெய்வம் என்பதால், மாயாவின் ப்ரார்த்தனை எல்லாம் அன்று அருளுக்காகவே!

பிறகு, அடிவாரத்திற்கு வந்து ராயல் பொட்டானிகல் கார்டனுக்குச் சென்றனர்!

பல மூலிகைகள், மலர்களுடன் ஒரு மீன் பண்ணையும் அங்கிருந்தது.

அல்லி மலர்களை தன் மடியில் சுமந்த குளங்கள். தத்தித் தாவியோடிய அழகிய நீரோடை... விழி இதழ்களை உயர்த்தி, மகரந்தம் பரப்பி, வண்ணங்களை விரித்து... தன் மடியில் சுமக்கும் தேனை உண்ண பட்டாம் பூச்சிகளுக்கு அழைப்பு விடுத்தபடி ஒற்றைக் காலில் நின்றிருந்தன... மலர்கள்!

அருளுக்குதான், அதைக் கண்டதும் மனதில் மாயச் சிறகுகள் முளைத்தது போல!

அவனையறியாமலேயே அவளருகில் சென்றவன், ''தயா! இங்கே உன்னை மாதிரி எத்தனை மலர்கள்... மென்மையா?'' மென் குரலில் சீறலாக உல்லாசமாக உரைத்தான்!



அதுவரை அழுந்தியிருந்த மன இறுக்கமும் வெறுப்புமாய் நிமிர்ந்தவள், ''நான் மென்மையானவ இல்லை! அதோ... அங்கே இருக்கே, அது மாதிரி ஒரு முள் செடி நான்!

''பக்கத்துல வராதீங்க. என்னையறியாம வெறுப்பில உங்களை குத்திக் கீறி ரணமாக்கிடப் போறேன்!'' ,

அடிக்குரலில் சீறியவளின் பார்வையைத் தொடர்ந்தவனுக்கு, அங்கு கள்ளிச் செடிகளும் முட்செடிகளுமே பரிசாய்!

இதயம் அப்படியே உறைந்துவிட அதிர்ந்து நின்றிருந்தவனை கவனியாது, மேலே செல்ல ஆரம்பித்தாள் அவள்!

ஆனால், உடனே சிலிர்த்து நிமிர்ந்தவனுக்குள், 'பெண்ணே! உன்னை என் அன்பால் வீழ்த்திக் காட்டுகிறேன் பார் என்ற உறுதி!'

## 33

அன்று மதியம் டர்பார் ஸ்கொயருக்கும் குமாரி கோவிலுக்கும் சென்று விட்டு ஸிடோ மச்சீந்திரநாத் கோவிலையும் தரிசித்த பிறகு மாலையில் வீடு திரும்பினர்.

அன்று மாலையில் அவ[illegible] வீட்டில் ஒரு விழா!

JUN 12 2010

நிவார் இனத்தவரான ப்ரதாப்பின் வீட்டில் இன்று அவருடைய குழந்தைக்கு சாதம் ஊட்டும் விழா!

நிவார் இனத்தினர் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று மாயா கூறினார்.

ஹோட்டலுக்குச் சென்று தயாராகக் காத்திருக் கும்போது, கணேஷும் மாயாவும் வந்து விட்டனர்.

குடும்பத்தில் மற்றவர்கள் அனைவரும், முன்பே ப்ரதாப்பின் வீட்டிற்குச் சென்று விட்டதாக கணேஷ் கூறினார்.

ப்ரதாப்பின் வீடு மிகப் பெரிதாய் ஒரு புத்தர் கோவி லின் வெளிப்புற அமைப்புடனிருந்ததும், ஐந்தடுக்கு பகோடா மாடலிலிருந்ததும், தபுவுக்கு பிரமிப்பை ஏற்படுத்தியது

உள்ளே சென்றதும் அனைவரும் ஓடி வந்து வரவேற்க, அவர்கள் எல்லாரும் இங்கு ஒரே குடும்பமாக வாழ்வதாக மாயா கூறியபோது, வியப்பு விண்ணைத் தொடுவதாய்!

"நம்ம டாக்டர் சார் தான், ப்ரதாப்போட அப்பாவுக்கும் ஹார்ட் ஆபரேஷன் செஞ்சாரு!

"தங்களோட அப்பாவுக்கு உயிர் குடுத்த பிரம்மான்னு இவரைப் ப்ரதாப் சொல்லுவாரு!" பெருமையுடன் சிலாகித்தார் மாயா.

அப்போது ஓடி வந்த ப்ரதாப், அவளுக்கு வணக்கம் கூறிவிட்டு, அருளின் கைகளைப் பிடித்து கண்களில் ஒற்றி அணைத்து வரவேற்றார்.

எல்லாமே அவளுக்கு புதிதாய் தோன்ற, கவனத்தை அதில் பதிக்க ஆரம்பித்தாள் தபு!

பாரம்பரியப் பழக்க வழக்கங்களுடன் கடவுள் பக்தியும் சேர்ந்து தெரிந்தது அந்தக் குடும்பத்தில்!

கணேஷின் குடும்பமே அங்கிருக்க, அவளை ஹேமா வதி வாஞ்சையுடன் அழைத்து தன்னருகே அமர்த்திக் கொண்டார்.

"தபஸ்யா! இவங்க விழாக்கள் எல்லாமே வித்தியாசமா இருக்கும்... அதான் உங்களைக் கட்டாயம் வரச் சொன் னோம். அதோட ப்ரதாப்புக்கு டாக்டர் சார் கிட்ட அப்படி ஒரு மரியாதை!

"இவங்க முப்பது பேரு... ஒரே குடும்பமா வாழறாங்க! ப்ரதாப்போட அப்பா, சித்தப்பாக்கள், அண்ணன் தம்பிகள்னு ஒரு உறவுக் கூட்டமே வீட்டில நிறைஞ் சிருக்கும்!

"இப்போ, ப்ரதாப்புக்கு முதல் குழந்தை பிறந்திருக்கு... தாரான்னு பேரு! தாரான்னா திபெத்திய புத்தமத தேவதைன்னு அர்த்தம்!"

அவர் பேசிக் கொண்டிருக்கும்போதே, பலர் வந்து அவளையும் அருளையும் மரியாதையுடன் வணங்கிச் சென்றனர்.

அனைவரின் முகங்களும் திபெத், பர்மீய அமைப்பி லிருந்தன. பேசும் மொழியும் வித்தியாசமான ஒலியாய்!

பிறகு பழரசத்தைப் போல், ஒரு பானம் அனை வருக்கும் அளிக்கப்பட, புதினாவின் மணத்துடன் நன்றாக இருந்தது.

புரோகிதரைப் போல் ஒருவர் வந்துவிட, குழந்தைக்கு சாதம் ஊட்டுகின்ற நிகழ்ச்சி துவங்கியது!

JUN 12 2010

அவர் மந்திரங்களைக் கூற அனைவரும் அந்த பெரிய கூட்டத்தில் ஒன்று கூடினர்.

தாராவிற்கு அழகான உடைகளும் நகைகளும் அணி விக்கப்பட்டிருந்தன!

ஒரு நாணயத்தின் மீது சாதத்தை கொஞ்சமாக வைத்து அந்தக் குழந்தைக்கு மூத்த தலைமுறை தாத்தா ஊட்ட, பிறகு அனைவரும் அதைத் தொடர மகிழ்ச்சியுடன் அனைவரும் அதில் பங்கு கொண்டனர்.

* * *

பிறகு, குழந்தைக்கு விளையாட்டு காட்ட ஏகப்பட்ட விளையாட்டு பொம்மைகளை ஒரு பெரிய தட்டில் வைத்தனர்.

அவைகளுடன் கொஞ்சம் மண், நெல், செங்கல், மோதிரங்கள், பேனா, இங்க் பாட்டில், புத்தகம் ஆகிய வைகளையும் அடுக்கியிருந்தனர்.

குழந்தை தவழ்ந்து சென்று எந்தப் பொருளை எடுக் கிறதோ அதை வைத்து எதிர்காலத்தில் அவள் என்னவாக வருமென்று பொருளாம்!

எல்லோரும் ஆர்வத்துடன் கவனித்திருக்க, தவழ்ந்து சென்ற தாரா, முதலில் ஒரு கணம் தயங்கி விட்டு புத்தகத் தில் கை வைக்க ஓவென்று ஆரவாரம் எழுந்தது!

பிரதாப்பின் தந்தை அவர் மொழியில் அருளைப் பார்த்து ஏதோ கூறி விட்டு வணங்கினார்.

அவளுக்கோ எதுவுமே புரியவில்லை!

மாயா தான் அதை தெளிவு படுத்தினாள்...



"குழந்தை தாரா, புத்தகத்தை எடுத்ததாலே ஒரு டாக்டரா வரணும்னு தாத்தா விரும்பறாரு! அதுவும் அருள் சார் மாதிரி!" என்றாள் உற்சாகமாய்!

அவளுக்குதான் என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை!

அப்போது ஹேமாவதி திடீரென்று அவளிடம் பேச ஆரம்பித்தார்.

"தபஸ்யா! தாரா மாதிரி எங்க டாக்டர் சாருக்கு அழகா புத்திசாலியா நிறைய குழந்தைகளைப் பெத்துத் தாணும்! அவரை மாதிரியே ஒரு நல்ல மனிதரா டாக்டரா ஒருத்தரையாவது உருவாக்கணும்!" பெருமையுடன் ஆர்ப்பரித்தார்.

உடனே, அவள் விழிகள் தழைய, அருளின் பார்வையோ அவளிடமே!

'ஏ... பெண்ணே! என்னை இவ்வளவு பேர் பாராட்டியும் உன் ஒருத்தியின் இதமான பார்வைக்கும், சிறு பாராட் டிற்கும், அன்புச் சாரலுக்கும் நான் ஏங்கித் தவமிருப்பது உனக்குத் தெரியவில்லையா?'

தாபத்துடன் அவளிடமே சரண் புகுந்திருந்தன அந்த விழிகள்!

அதைக் கண்டு 'ஓ...'வென்று கேலி செய்து அனை வரும் நகைக்க, தர்ம சங்கடத்திலும் தவிப்பிலும் ஓய்ந்து போனாள் தபு.

பிறகு, குழந்தைக்கு அனைவரும் பரிசளிக்கும்போது அவளிடம் வந்தவன், ஒரு அழகிய தங்க பிரேஸ் லெட்டை அவளிடம் கொடுத்து தாராவிற்கு அணிவிக் கும்படிக் கூறினான்.

JUN 12 2010

அப்போதுதான், இந்த விழாவைப் பற்றி அவனுக்கு முன்பே தெரியுமென்று புரிந்தது!

இருவருமாக நகையை அணிவித்து விட, குழந்தையை அவள் கையில் அளித்த ப்ரதாப்பின் மனைவி ருத்ரமதி நிறைவுடன் ஏதோ கூறி வாழ்த்தினார்.

அவள் புரியாமல் திமிர, அவனுக்குள்ளோ தயாவை ஒரு விதத் தாய்மைக் கோலத்தில் தரிசித்த சிலிர்ப்பு!

''அவங்க என்ன சொல்றாங்க தெரியுமா? இது மாதிரி ஒரு குழந்தையோடதான் நீ அடுத்த வருஷம் இங்கே வரணுமாம்!''

குறும்பும் உற்சாகமுமாய் அவன் கூற அவளுக்குள் தீக்குழம்பு சிதறியது!

சட்டென்று தலையை சிலுப்பி அவள் சிலிர்க்க, அருளோ அதை கவனித்ததும், கூர்மையான ஒரு பார்வையை அவளிடம் படர விட்டான்.

'என் இப்படி நிமிடத்திற்கொரு முறை நிறம் மாறுகிறாள்...? சிறிது நேரம் முன்பு அனைவரும் கேலி செய்த போதும் இப்படித்தான் இறுக்கமாய் இருந்தது அவள் முகம்...'

'ஒருவேளை குழந்தை, பிரசவம் என்கிற பயமாக்கூட இருக்கலாம்... வேணியக்காவிடம் கூறித்தான் அதை மெதுவாகத் தெளிய வைக்க வேண்டும்!'

அருள் ஆறுதலாய் பார்வையை திருப்பியபோது, ப்ரதாப்பும் அவனுடைய தம்பி மகேந்திராவும் அவனைப் பிடித்துக் கொண்டனர்.

அவளின் விரைத்த தோற்றத்தை தூர இருந்தே கவனித்த மாயாவிற்குதான் கவலையாய்!



'இந்தப் பெண் ஏன் இப்படி இருக்கிறாள்? இப்படி ஒரு கணவன் அமைய எவ்வளவு அதிர்ஷ்டமும், புண்ணியமும் செய்திருக்க வேண்டும்' யோசனையுடன் எண்ணியது மனம்!

* * *

பிறகு விருந்தில், எந்தெந்த உணவு வகைகளை சாப்பிடலாமென்று உடனிருந்து கற்றுத் தந்தாள் மாயா!

''இது 'பாத் - தால்' சாதமும் பருப்பும்! இந்த டிஷ் 'ஆலு தாமா' - உருளைக்கிழங்கும், மூங்கில் கொழுந்தும் போட்டு செஞ்சது... இதெல்லாம் 'சேக்' - காய்கறி சாலட். இந்த ஐட்டம் மட்டர் மாஸு - பட்டாணி கிரேவி'' என்றாள்.

அவள் மெதுவாக சாப்பிடும்போதே 'பபாரி சட்மாரி' என்று தோசை போன்ற ஏதோ ஒன்றை வைத்து விட்டுச் சென்றாள் ருத்ரமதி!

உணவு வகைகள் வித்தியாசமான சுவையுடன் நன்றாகவே தயாரிக்கப்பட்டிருந்தன!

விழா முடிந்து அனைவரிடமும் விடைபெற்றபோது, ஒரு குடும்பத்திற்கு ஒரு பரிசுப் பொருள் என்று அளித்து அனைவரும் அசத்தி விட்டனர்.

கை கொள்ளாப் பொருட்களுடன் இருவரும் காட்டேஜுக்கு சென்று இறங்கியபோது, இரவு வந்து விட்டதே என்ற நினைவில், இதயம் தொண்டைக்குள் மேலெழும்பி வந்து துடிக்க ஆரம்பித்தது!

அன்றிரவும், அவனுடைய கையணைப்பில் தனை இழந்து அவனை சகித்துக் கொண்டாலும், தன் மேலேயே கோபம் வந்தது! ஏன் அவனை முகத்திற்கு நேராக

JUN 12 2010

எதிர்க்கும் சக்தி எனக்கு இல்லாது போயிற்று... அவன் தீண்டியவுடன் குழையத் தொடங்கி, பெண்மையின் இயல்பான மென்மையுடன் இளகிய தன் தேகத்தை நினைத்தால், அவளுக்கே வெறுப்பாய்!

'அப்போது மட்டும் என் மூளையிலிருந்து ஒலிக்கும் அபாய எச்சரிக்கை மணியை இதயம் ஏன் அலட்சியம் செய்து அவனிடம் சரணடைகிறது?'

புரியாத பல குழப்பங்களுடன் கண்ணயர்ந்தாள் அவள்!

## 34

மறுநாள் காலையில் எழுந்ததுமே நாகர் கோட்டிற்குச் சென்றனர்.

மலைப் பாதையில் ஏறிச் சென்றபோது இருபுறமும் பைன் மரங்களின் அணிவகுப்புடன் பனிக்காற்று செவிகளில் உஸ்ஸென்று அசுர ரகசியம் பேசியது!

மலை மேலிருந்து பனி படர்ந்த வெள்ளித் தொப்பியை அணிந்த சகார் மாதா சிகரத்தை தூரத்தில் பார்க்க முடிந்தது.

இன்று இருவரும் தனித்து கிளம்பி இருந்ததால் கைகோர்த்தபடி அருள்தான் அவளுக்கு ஒவ்வொன்றாக விவரித்தான்.

''அதோ தெரியுது பாரு ரொம்ப தூரத்துல ஒரு 'பீக்' அதுதான் எவரெஸ்ட்'' என்று காட்டினான்.



அவள் வியந்து ரசிக்கும்போதே செவியருகில் குனிந்தவன், ''எனக்கு இப்ப எப்படி இருக்கு தெரியுமா? உன்கூடக் கைப்பிடிச்சி இப்படி நிக்கறது எவரெஸ்டுக்கே போயிட்ட மாதிரி இருக்கு!'' சிலிர்ப்புடன் கூறினான்.

பட்டென்று அவனுடைய கையை உதறியவள், ''எனக்கு அப்படி இல்லை! அதோ ஒரு பள்ளத்தாக்கு தெரியுதே... அதிலே யாரோ என்னைக் குப்புறத் தள்ளி விட்ட மாதிரி இருக்கு!'' பற்களைக் கடித்தபடி சீறினாள்.

சட்டென்று அவன் முகத்தில் ஒரு கறுப்புத் திரை விழுந்து விழிகள் கடுமையாக, அவளையே வெறித்தான் அருள்.

பிறகு மெதுவாக அவளருகே வந்தவன், ''ஏன் தயா? உனக்கு என்ன ப்ரச்னை? சில நேரம் என்கிட்ட அன்பா இருக்கே! பல நேரங்கள்லே இப்படிப் புரியாத புதிரா மாறிடறே!

''சின்ன வயசுல காரணம் புரியாம, பெரியம்மாவை நினைச்சி என் மேல படிஞ்ச ஒரு வெறுப்பு இன்னும் அப்படியே இருக்குன்னா, அதை நான் நம்ப மாட்டேன் தயா!

''அப்படின்னா, உன்னால என்னை இயல்பா கணவனா ஏத்துட்டிருந்துருக்க முடியாதே... குழப்பிக்காதே வா!''

தோளைப் பிடித்து அணைத்து அவன் அழைக்க, தன் பலவீனத்தை வெளிக்காட்ட மனமின்றி விசும்பியவள், ஓடிப்போய் காரில் ஏறி அமர்ந்து விட்டாள்.

டிரைவர் எங்கோ சென்றிருக்க, அவனும் அமைதியுடன் கைகளைக் கட்டியபடி வெளியே காத்திருந்தான்.

JUN 12 2010

அன்று காலையில் கிளம்பும்போது இருவரிடையேயும் பரவியிருந்த இதம் இப்போது தொலைந்திருக்க, அவளை எப்படி சரி செய்வதென்ற யோசனை அவனிடம்!

ஒரு வேளை இல்லற உறவில் அவளுக்கு விருப்பமில்லையோ? அப்படியும் தெரியவில்லையே... வெகுவாய் குழம்பிப் போனான் அவன்!

பிறகு டிரைவர் வந்ததும் காட்டேஜுக்குத் திரும்பினர்.

மதியம் சாப்பிடாமலே அவள் உறங்கி விட, மாலையில் அங்கு சூரிய அஸ்தமனத்தை பார்ப்பதற்காக தனி ஸ்தூபி ஒன்று தென்பட, அதில் ஏறி தனிமையில் ரசித்துக் கொண்டிருந்தான் அருள்.

நம் கன்யாகுமரியைப் போல், அங்கும் சூரிய உதயமும் அஸ்தமனமும் ஒரே இடத்திலிருந்து கண்டு களிக்கலாம்!

* * *

வெகு நேரம் நின்றிருந்தவன் மேல் இருள் கனமாய் தன் பனிச் சால்வையைப் போர்த்தத் துவங்கியதும் தான் குளிர்க்காற்றின் சீற்றத்தை உணர்ந்து கீழிறங்கி வந்தான்.

காட்டேஜிற்குள் நுழைந்தபோது, மின் கனப்பின் எதிரே கைகளை நீட்டி குளிர் காய்ந்து கொண்டிருந்தாள் தபஸ்யா!

அசைவை உணர்ந்து திரும்பியவள், தன்னிடமிருந்த ஒரு சாவியைக் கொண்டு அவன் கதவைத் திறந்து உள்ளே வருவதைக் கண்டாள்!

'காலையில் தேவையின்றி அவனை நோகடித்து விட்டோமோ' நெஞ்சம் குற்றக் குறுகுறுப்பாய்!

''தபா! ஏதாவது சாப்பிட்டியா? மதியமும் வந்த சாப்பாட்டை ரெண்டு பேருமே சாப்பிடலை! அப்படியே இருக்கு!''



அவன் கூறியதுமே பதறி எழுந்தவள், ''நான்தான் ஏதோ கோபத்துல சாப்பிடலை... நீங்க ஏன்?'' யோசனையுடன் கேட்டாள்.

''நீ மட்டும் பசியாப் படுத்திட்டே. எனக்கும் மனசு சரியில்லை... அதான்! சரி கிளம்பு! ஹோட்டல்லேயே ரெஸ்டாரெண்ட் இருக்கு... ஏதாவது டிபன் சாப்பிட்டுட்டு வரலாம்!''

அவன் இயல்பாக அழைக்க வேகமாக உள்ளே சென்று ஒரு லாங் ஸ்கர்ட்டையும், டாப்ஸையும் அணிந்து ஸ்வெட்டரையும் மேலே மாட்டியபடி வெளியே வந்தாள்.

அந்த உடையில் சிறு பெண்ணாய் தெரிந்த அவள் தோற்றம் அவனிடம் சிறு முறுவலை வரவழைத்தது.

''என்ன சிரிக்கறீங்க?'' குழப்பத்துடன் கேட்டாள் அவள்.

''இல்லை... இத்தனை நாள் உன்னைப் புடவையும், சுடிதாருமாப் பாத்துட்டு இன்னிக்கு இந்த ட்ரெஸ்ஸிலே பாக்கும்போது ரொம்ப சின்னப் பொண்ணா இன்னசெண்ட்டாத் தெரியுது... அதான்!''

கண்ணோரம் குறும்புடன் இடுங்க அவன் கூறியபோது அவளுக்கும் தாங்க முடியாத சிரிப்பு வருவதாய்!

சட்டென்று அதை அடக்கியவள், ''பாத்து... ஏமாந்துடப் போறீங்க! நான் இன்னசெண்ட் இல்லை! பயங்கரமானவ... தெரியுமா?'' விழிகளை உருட்டி குறும்புடன் சிரித்தாள்.

ஒரு கணம் அவளையே ஆழ்ந்து ஊடுருவியவன், தோளைக் குலுக்கியபடி திரும்பி வாசலுக்கு சென்றபோது, அவனுடைய உதடுகள் சந்தேகமாய் அந்தப் பாடலை முணுமுணுத்தன!

JUN 12 2010

"தோழியா... நீ காதலியா... யாரடி என் கண்ணே!
மடி மீது தூங்கச் சொல்கிறாய்
தோள் மீது சாய்ந்து கொள்கிறாய்!
ஏனடி பெண்ணே! குழப்பத்துடன் பாடியபடி சென்றவனை, சிறு புன்னகையுடன் தொடர்ந்தாள் தபஸ்யா!

'அவன் கூறுவதுபோல், நான் ஏன் இப்படி இருக்கிறேன்? ஒரு நேரம் பனிச்சாரலாய்... பல நேரம் அக்னிச் சுடராய்... ஏன்?'

'அவளைப் பழி வாங்க வேண்டும் என்று செய்கின்ற எல்லாமே தோல்வியிலேயே முடிகிறதே. அவன் சாப்பிடவில்லை என்றதுமே ஏன் உள்ளம் பதறியது?

'இதைத்தான் மஞ்சள் கயிறு மேஜிக் என்பதா? அவன் மேல் ஏன் பரிதாபம் வருகிறது...?' புரியாத புதிராய் மனம் சாட்சிக் கூண்டில் நிறுத்தி கேள்வி கேட்க, மௌனமாய் மறுகியபடி அவனைத் தொடர்ந்தாள்.

## 35

மறுநாள் விடியலிலேயே அவளை எழுப்பிய அருள், சூரிய உதயத்தைப் பார்ப்பதற்காக அவளைத் தயாராகும்படிக் கூறினான்.

அவளும் ஆவலுடன் கிளம்ப, இருவருமாக அந்த ஸ்தூபியில் ஏறிச் சென்று பார்த்தனர்.

விடியலின் கரங்கள், குளிர்க் காற்றை சீராய் அனுப்பி அவர்களை வரவேற்றன!



பனிப் போர்வையில் உறங்கிக் கொண்டிருந்த உலகத்தை தன் வெள்ளிக் கிரணங்களால் உசுப்பி எழுப்ப, சுறுசுறுப்பாய்... சிவந்த கரங்களுடன் உதயமாகிக் கொண்டிருந்தான் சூரியன்.

அந்த அழகிய காட்சி, ரவிவர்மாவின் ஓவியம் போலிருக்க, அதில் லயித்து தன்னை மறந்திருந்தாள் தபஸ்யா!

அந்த நிமிடம் அவளையே நோக்கியிருந்த அருளுக்கோ அவளே ஒரு உயிரோவியமாய்!

விழிகள் தாபத்துடன் அவளையே வருட, மெதுவாக அருகில் சென்றவன், அப்படியே பின்புறமாக அணைத்து கழுத்து வளைவில் மெல்ல இதழ் பதிக்க, உடனே பதறி விலகினாள் அவள்.

அவளுடைய மாயக் கனவுலகம் கலைக்கப்பட்டு... யாரோ சுடுகின்ற வெந்நீரை முகத்தில் தெளித்த உணர்வு!

சுற்றிலும் பார்த்தபோது பலர் சூரியோதயத்தை ரசித்துக் கொண்டிருக்க, வேகமாக இறங்கி கீழே போய் காரில் அமர்ந்து விட்டாள்.

அவனுக்குதான் ஏமாற்றமாய்... மெதுவாக அவளைப் பின் தொடர்ந்து அவன் வர, விரக தாபத்தில் தவித்தது நெஞ்சம்!

அதற்குப் பிறகு, தபுவும் எதுவுமே பேசாததால், அருளும் மௌனமாகவே இருந்தான்.

டிபன் சாப்பிட்ட பிறகு, இருவருமாக முன்பே தீர்மானித்திருந்தபடி ராயல் சித்வான் நேஷனல் பார்க் எனப்படும் 'வைல்ட் லைஃப் சஃபாரிக்கு'' சென்றனர்.

காட்டிற்குள் யானைச் சவாரி செய்தபோது, பல மிருகங்களைப் பார்க்க முடிந்தது.



JUN 12 2010

காட்டு நாய்கள், குரங்குகள், காட்டுப்பன்றி, காண்டா மிருகம் என்று எல்லா மிருகங்களையும் பார்த்த பிறகு, சிறு குழந்தையைப் போல் அதை ரசிக்க ஆரம்பித்து இயல்பானாள் தபஸ்யா!

பிறகு நாராயணி ஆற்றில் முதலைகளைப் பார்த்து விட்டுத் திரும்பும் போதுதான், காட்டின் அழகே தெரிவதாய்!

சுற்றிலும் உயர்ந்து தெரிந்த புற்களுக்கு "எலி·ஃபெண்ட் கிராஸ்" என்று பெயர் என்பதை அருள் கூறினான்.

காலையிலிருந்து இருவருக்குமிடையே இருந்த பனிப்போர் விலகி, தபு இப்போது இயல்பாக அவனிடம் பேச ஆரம்பித்திருந்தாள்.

அந்த இனிமையான பயணம் முடிந்து தமான் ரிசார்ட்டுக்கு வந்தபோது, அசதியில் அவன் குளித்து விட்டு வரும் முன்பே அவள் அடித்துப் போட்டாற்போல் உறங்கியிருந்தாள்.

* * *

மறுநாள் அங்கிருந்த ஷெர்ப்பாக்களின் உதவியுடன் மலையின் மேல் ட்ரெக்கிங் சென்று வர முடிவு செய்தான் அருள்.

முதல் நாளைய அலைச்சலில் தபு மறுக்க, அவளுக்கு மட்டும் ஒரு குதிரையை ஏற்பாடு செய்திருந்தான்!

"தபா! மலையேற்றம் ரொம்ப அருமையா இருக்கும்... மிஸ் பண்ணக்கூடாது.

"நான் நடந்து வரேன்... உனக்கு மட்டும் 'போனி ரைடு'க்கு சொல்லியிருக்கேன்! ப்ளீஸ்!"



அவன் கெஞ்ச அதற்கு மேல் மறுக்க முடியாமல் கிளம்பினாள் அவள்.

ஷெர்ப்பாக்கள் என்பவர்கள் மலைக்கு வழிகாட்டிகள் மட்டுமன்றி ட்ரெக்கிங் செல்பவர்களின் உடைமைகளை மூட்டையாக சுமந்து வருபவர்கள் என்பது அங்கு சென்ற பிறகே புரிந்தது!

ஏஜென்சியினர் வழியில் தங்க ஒரு கூடாரத்தையும், உணவையும் ஒரு ஷெர்ப்பா போர்ட்டரையும் உடன் அனுப்பினர்.

அதுவும், அருள் டாக்டர் என்றதும் அங்கு மிகுந்த மரியாதையும், மதிப்பும் கிடைத்தன!

"இதுக்கெல்லாம் பர்மிஷன் வாங்கிட்டுதான் போகணுமா?" வியப்புடன் கேட்டாள் அவள்.

"ஆமாம்... முன்னாடியே புக் பண்ணி பணம் கட்டணும்! கணேஷும் ப்ரதாப்பும் எல்லா ஏற்பாடும் செஞ்சி வச்சசிட்டாங்க!"

"ஏன் இங்கே, டாக்டர்னா இப்படி ஒரு மரியாதை அருள்?"

"அதுவா! இங்கே டாக்டர்ஸ் ரொம்பக் குறைச்சல்! முன்னாடி எல்லாம் ரொம்ப மோசம்... இப்பவும் அஞ்சாயிரம் பேருக்கு ஒரு டாக்டர்ங்கிற மாதிரிதான் நிலைமை!

"அதனால பிறக்கிற குழந்தைங்கள்லே பத்திலே ஒன்னு இறந்து போயிருது. அப்புறமும் வளர்றதுக்குள்ளே பல குழந்தைகள் சீதபேதி, நி[illegible]யா[illegible] திடறாங்க.

''அதுக்கு தேவையான மெடிகல் ஃபெசிலிடிஸ் கிராமங்கள்லே ரொம்பக் குறைச்சல்! அதான் டாக்டர்னா தெய்வம் மாதிரி பாக்கறாங்க!''

அவன் முடித்ததும் ''ஓ...!'' என்றவளுக்கு அவன் படிப்பின் உன்னதம் புரிவதாய்!

பிறகு ஒரு நேபாளி ஷெர்ப்பாவுடன் அவன் நடக்க, அவள் குதிரையில் பயணிக்க ஆரம்பித்தாள்.

இமயமலையில் தூரத் தெரிந்த பனிமலைகளைப் பார்த்தபடி அந்தக் கடும் குளிரில் பயணித்தது. புது அனுபவமாய்!

வாடகைக்கு வாங்கிப் போட்டிருந்த ஆழ்ந்த சிவப்பு நிற கம்பளி கோட்டும், தொப்பி, கையுறை, காலணியு மென வித்தியாசமாகத் தெரிந்தாள் அவள்.

அந்த உடையணிந்ததும், மிகுந்த கூச்சத்துடன் நின்றிருந்தவளை,

''ஏய்... நீ ரொம்ப அழகா இருக்கே. இந்த ட்ரெஸ்ஸிலே ஒரு நேபாள தேவதை மாதிரி!'' கண்ணோரங்கள் குறும்பில் இடுங்கப் பாராட்டினான் அருள்!

அந்த ஷெர்ப்பாவும் அருளுமாகக் கை கொடுத்து அவளைக் குதிரையில் ஏற்றியது புது அனுபவமாய்!

பிறகு, மெதுவாக இருவரும் அந்த ஷெர்ப்பாவைத் தொடர்ந்து மலையேற ஆரம்பித்தனர்.

ஒரு நேரம் அந்தக் குதிரை மேய்ச்சலுக்காக ஒரு ஓரமாக ஒதுங்க, திரும்பியவளுக்குள் பெரும் பய அதிர்வு!

பெரிய பள்ளத்தாக்கு பக்கவாட்டு சரிவில் தெரிய, இறுகக் கண் மூடியவள், ''அருள்..'' என்று கத்தி விட்டாள்.



''தயா! நான் தான் உன் பக்கத்திலேயே வர்றேனே... என்ன பயம்?''

மெதுவாகக் கூறியபடி அவளுடைய கையை ஆதரவாக பற்றிக் கொண்டான் அவன்.

பிறகும் அவள் விழிக்காதிருக்கவே, ''என்ன... கண்ணை மூடிட்டு பள்ளத்தாக்குல விழுந்தா வலிக்காதோ?''

குறும்புடன் கேட்டபடி அவள் கன்னத்தை செல்லமாத் தட்டினான்.

அதைக் கண்டு சிரித்தபடி நடந்த அந்த நேபாளி ஏதோ கூறினான்.''

''என்ன சொல்றாரு அவரு! இந்தக் குதிரையோட கால் மட்டும் கொஞ்சம் சறுக்கினா, தடுமாறினா... அப்புறம் அவ்வளவுதான்!

''இங்கேருந்து இந்த மலைச்சரிவில பாதாளத்தில விழுந்தா என் எலும்புகூட மிஞ்சாது தெரியுமா?'' விழிகளில் பீதியுடன் சிணுங்கினாள்.

''அதேதான் சொல்றாரு அவரு! இது பாதுகாப்பான குதிரையாம்... இந்தப் பாதையில பழக்கப்பட்டதாம்... மலையேறிப் பழகிய குதிரை... பயமில்லைங்கறாரு!''

அவன் குறும்புடன் சிரித்தபடி கூற ''உங்களுக்குக் கிண்டலா இருக்கா... எனக்கு பயமாருக்கு... தெரியுமா?''

முகத்தை சுருக்கியபடி அவள் கூற, வாய் விட்டுச் சிரிக்க ஆரம்பித்தான் அருள்!

''ஏய்! கீழே பாக்காதே.. சுத்தி இருக்கற பனிச் சிகரங்களைப் பாரு... இயற்கையை [illegible] வந்திருக்கோம்!

JUN 12 2010

''பயந்தா எங்கேயும் போக முடியாது! உயிருக்கு ஒரு ஆபத்துன்னா, இத்தனை பேர் குதிரையிலயும் நடந்தும் வருவாங்களா?''

''இனிமே இந்த மாதிரி பள்ளத்தாக்கு வந்தா அந்தப் பக்கம் நான் கூட வர்றேன்... போதுமா?''

அவன் கேலியுடன் கேட்டவுடன், ''ம்...'' என்று சுருங்கிய முகத்துடன் தலையசைத்தாள்.

அதைக் கண்டதும் நகைத்தவன், ''என்ன... மந்திரி குமாரி படத்துல வர்ற வில்லன் மாதிரி 'வாராய் நீ வாராய்'னு பாட்டுப் பாடி மலையிலேருந்து தள்ளி விட்டுடுவேன்னு பயமா?'' குறும்புடன் கேட்டான்.

''செய்வீங்க... செய்வீங்க... எங்க அப்பா சும்மா விட்டுடுவாங்களா?''

''அதானே! நீ பெரிய வீராங்கனைன்னு நினைச்சேன்... இங்கே வந்தப்புறம் தானே தெரியுது... எவ்வளவு பெரிய தைரியசாலின்னு!

''ப்ச்... என்கிட்டதான் கோபம் எதிர்ப்பு, ஆர்ப்பாட்டமெல்லாம்...! பாவம் அந்தக் குதிரை!'' கேலியாகக் கூறியபடி ஏற ஆரம்பித்தான்.

பிறகு தொடர்ந்த தருணங்கள் மிக அழகாய்... அற்புதமானதாய்... ரம்யமாய்க் கழிந்தன.

* * *

ஒரு இடத்தில் கூடாரமிட்டு, அவர்களுக்கு டீயுடன் 'சமே பாஜீ' என்னும் உணவையும், 'சோய்லா' என்ற வறுவலையும் பரிமாறினார் அந்த நேபாளி!

''உங்க பேரென்ன?'' அவள் ஆர்வத்துடன் விசாரிக்க, அதை மொழி பெயர்த்தான் அருள்!



முதன் முதலாக அவன் நேப்பாள மொழியில் பேசுவதைக் கண்டு வியந்தவள், வாய்விட்டு கேட்டே விட்டாள்.

''உங்களுக்கு இந்த மொழி தெரியுமா?''

''ம்... கொஞ்சம் கொஞ்சம் தெரியும்... பேசிக் லேங்வேஜ் பேச மட்டும் கத்திருக்கேன்... இரண்டு மூணு முறை வந்திருக்கேன் இல்லையா?''

''ஓ! அவர் பேரென்ன?''

''பீம்ஸன்! அப்படின்னா ஒரு கடவுள் பேராம்!'' என்றான் அவன்!

''அக்டோபர் மாசம்கிறதால குளிர் குறைச்சலா வானம் தெளிவா இருக்காம், சொல்றாரு!''

''இதுவே குளிர் குறைச்சலாமா? கடவுளே!''

அவள் அலுத்துக் கொள்ள, ''அவங்களுக்கு அப்படி! ஜூன்லேருந்து செப்டம்பர்... மழைக் காலம்... அக்டோபர் பரவாயில்லையாம்! நவம்பர் டிசம்பர் குளிர் காலம்! மார்ச் ஏப்ரல் தான் டூர் வர சரியான மாதங்கள்னு சொல்றாரு!''

அவர் பேசுவதை அருள் மொழி பெயர்க்க, சுற்றிலும் பார்த்துக் கொண்டே திரும்பியதில், பொழுது சென்றதே தெரியவில்லை!

ஆனால் அங்கு கண்ட இயற்கைக் காட்சிகள் அனைத்தையுமே, இதயத்திற்குள் உள் வாங்கி ரகசியமாய் படம் பிடித்து வைத்துக் கொண்டது, நெஞ்சம்!

அருள், ஹேண்டி கேம் கொண்டு வந்திருந்ததால், அதில் எல்லாற்றையும் படம் பிடி[illegible] நட[illegible] [illegible]டிருந்தான்.

JUN 12 2010

இருவரும் கீழே வந்து சேர்ந்தபோது, ஏதோ ஒரு மாய லோகத்திற்கு சென்று திரும்பிய உணர்வு அவளிடம்!

குதிரையிலிருந்து இறங்க அவள் தடுமாறும்போதே, அவளுடைய இடுப்பை லாவகமாகப் பற்றி அவன் இலகுவாகத் தரையிறக்கினான்.

அவளுக்குத் தான் பெரும் கஷ்டமாய்... அந்த உல்லன் ஆடையையும் மீறி அவனுடைய விரல்கள் அவளுக்குள் ஆயிரம் வாட் மின்சாரத்தை பாய்ச்ச, சிவந்து போனது தேகம்!

உடனே அவன் கவனித்து விட்டால் என்னாவதென்ற விதிர்ப்புடன் நிமிர்ந்தால், அந்த நொடி அவனும் அவளையே ரசனையுடன் குறுகுறுப்பாய் ஊடுருவிக் கொண்டிருந்தான்.

அந்த முகச்சிவப்பும், படபடப்பும் பல விஷயங்களை அவனுக்கு கண்ணாடிப் பிம்பமாய் தெளிவு படுத்தின!

உடனே உதட்டில் ஒரு இளநகையும், பார்வையில் குறும்பும் மின்னலும் ஒருங்கே ஜனித்தன.

அன்றிரவு! சிந்தனைகளின் பின்னலின்றி அந்த இதமான சூழலில் தன்னையே அவனுக்குப் பரிசாய் அளித்தது அந்தப் பெண்மை!

## 36

மறுநாள் அதிகாலையில், கிளம்பும்போதே அவள் முகத்தில் இயல்பாய்ப் படர்ந்திருந்த ஒருவிதச் சிவப்பு... அவன் பார்வைக்கு நாணச் சிவப்பாய்!



அங்கிருந்து, பொக்காராவிற்கு இருவரும் காரில் கிளம்பிச் சென்றனர்.

அன்னபூர்ணா மலையின் அடிவாரத்தில் ஒய்யாரமாக அமைந்திருந்தது அந்த இடம்!

அருகிலேயே, பேவா டால் ஏரி அழகிய நீல நிறப் பளிங்காய் ஒளிவீச இருவரும் முதலில் போட்டிங் சென்றனர்.

வைரமணி நீரலைகள் சுகமாய் இருபுறமும் பரவித் தெறிக்க, அதைக் கைகளால் அளைந்தபடி சிறு பிள்ளையாய் களித்திருந்தாள் தபு!

விரல்கள், அந்த நீரின் சில்லென்ற குளிரில் விறைத்து உறைந்தன.

திடீரென்று தன்னை யாரோ உற்றுப் பார்ப்பது போல்!

குழப்பத்துடன் நிமிர்ந்தால் கண்ணோரம் உல்லாசச் சிருங்காரத்துடன் அவளையே பருகியபடி இருந்தான் அருள்.

சட்டென்று நாண அலைகள் அவளை ஆட்படுத்த, இயல்பான வெட்கத்துடன் இமை தாழ்த்தினாள் தபு!

மெல்ல அருகில் வந்து அமர்ந்து அவளுடைய கரத்தை காதலுடன் பற்றிக் கொண்ட அருள், பிறகு அவளை விடவேயில்லை!

பிறகு அங்கிருந்து கிளம்பி மானகா மானா கோவிலுக்குச் சென்று தரிசித்து முடித்தபோது, மணி ஒன்றாகியிருந்தது.

மதியம் சாப்பிட்டு விட்டு [illegible] கார் [illegible] வர்கள் ''மௌண்டைன் வியூ'வைக் [illegible] களித்தனர்.

JUN 12 2010

இரு கன்னங்களிலும் கைகளைப் பதித்து, வியந்து சுற்றுப்புறத்தை ரசித்தவளை, தாபத்துடன் ஒரு கையால் இறுக அணைத்து தோளில் ஒரு குழந்தையைப் போல் சாய்த்துக் கொண்டான் அருள்!

அவளுக்குமே, அந்த ஏகாந்த வேளையில் அந்த அன்பும் அனுசரணையும் தேவையாய்!

"இதமாய் சாய்ந்து இமைகள் மூடு...
இது போல் இன்பம் வேறேது?"
இறக்கும்போதும் இதுவே போதும்!
இனிமேல் பிறவி வாராது"

பாடல் வரிகளை மெல்ல முணுமுணுத்தான் அருள்.

பள்ளத்தாக்குகளும், அன்னபூர்ணா சிகரமும், பனி உருகி பிளாட்டின நதியாய் பயணித்த காட்சியும் மிக அழகாய்.

அன்றிரவு அங்கு ஒரு ஓட்டலில் தங்கி விட்டு காலையில் ஏழு மணிக்கு கிளம்பி காட்மாண்டுவிற்கு வரும் போது பதினோரு மணியாகி விட்டது!

அன்று மதியம் ஒரு நண்பரின் வீட்டில் விருந்துக்கு அழைத்திருந்தனர்.

அங்கு விருந்து முடிந்து ஓட்டலுக்கு வரும்போது, பெரிதும் ஓய்ந்திருந்தாள் அவள்.

மறுநாள் மட்டுமே அவர்களுக்கு மீதமிருக்க அதற்கு, அடுத்த தினம் விடிகாலையில் ஃப்ளைட்!

அன்று ஓய்வெடுக்க முடிவெடுத்து சீக்கிரமே இருவரும் உறங்கி விட்டனர்.

காலையிலேயே அவர்களை ஷாப்பிங் அழைத்துச் செல்ல மாயாவும் கணேஷும் வந்து விட்டனர்.

தபுவிடம் தெரிந்த மாற்றம், மாயாவிற்குள் பெரும் உற்சாகம் தருவதாய்!



பிறகு கடைகளுக்குச் சென்று கம்பளி உடைகள், நிவாரி பெயிண்ட்டிங்குகள், கைவினைப் பொருட்ளைன்று ஊரில் அனைவருக்கும் வாங்கினர்.

மதியம் சாப்பாட்டிற்கு தன் வீட்டு விருந்திற்கு அவர்களை அழைத்துச் சென்றார் கணேஷ்.

அங்கு சாப்பிட்ட பிறகு அனைவரிடமும் பேசிவிட்டு ஹேமாவதியிடம் வணங்கி இருவரும் விடைபெற்றனர்.

"எங்க டாக்டரை நல்லாப் பாத்துக்கணும்மா தபஸ்யா! அதான் எங்களுக்கு வேணும்... சந்தோஷமா இருக்கணும்!"

இருவரின் தலையிலும் கை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார் மாஜி!

"இங்கே நிவாரி குடும்பங்கள்லே ஒரு பழக்கம்! கல்யாணத்தப்போ பெண்ணோட தாய்க்கு சுமார் ஒரு காலன் அளவு பாலை மாப்பிள்ளை அனுப்பணும்!

"ஏன்னா, குழந்தைப் பருவத்துல மணப்பெண் தாயின் பாலை குடிச்சதுக்கு ஈடுகட்டறதுக்காகன்னு சொல்லுவாங்க!"

"ஆனா நீ ரொம்ப குடுத்து வச்சவ தபஸ்யா! உங்கம்மா இருந்திருந்தா, அவங்க இந்த மாப்பிள்ளைக்கு பொன் பொருள் எல்லாத்தையும் தந்திருப்பாங்க... அப்பவும் எங்க அருள் மகராஜுக்கு அதெல்லாம் ஈடாகாது!"

அவர் விழிகள் உணர்ச்சிப் பெருக்கில் கசிய, குரல் உடைந்தது!

உடனே அவரை மெல்ல [illegible] அருளின் முகத்தை வருடி நெற்றியில் முத்தமிட்டார் மாஜி!

JUN 12 2010

ஏதோ தனக்கு நெருங்கிய உறவுக் குடும்பத்தைப் பிரிந்த ஒரு உணர்வு தபுவிடம்!

"நீங்க எல்லாரும் சென்னைக்கு வரணும்!" அவர் கனிடம் பாசக் கோரிக்கை விடுத்து விட்டு இருவரும் கிளம்பினர்.

கிளம்பும்போது மாயா அவளுக்கு அழகிய சில்க்கில் வேலைப்பாடுகள் செய்த புடவையைப் பரிசளித்தாள்.

கணேஷ்-ம், மாஜியும் ஒரு நகை செட்டைப் பரிசளிக்க பெரிதும் நெகிழ்ந்து போனாள் அவள்.

"அவ்வளவு தானா... என்னை விட்டாச்சா?"

அருள் கிண்டலாகக் கேட்க "எப்படி விட முடியும்?" என்றபடி அவனுக்கு அழகிய தங்கக் கடிகாரத்தைப் பரிசளித்தனர்.

தபுவுக்குத் தான் ஏதோ பாரமாய்!

* * *

அன்றிரவு ஹோட்டல் வரை வந்து விடை கொடுத்த இருவருமே விடியற்காலையிலும் வந்து விட்டனர்.

ஏர்போர்ட்டில் மாயா அவளை அணைத்து விடை கொடுத்தபோது, ஏதோ ஒரு இனம் புரியா உணர்வில் தபுவின் விழிகள் கசிந்தன.

பிறந்த வீட்டை, ஒரு சகோதரியைப் பிரிகின்ற உணர்வு!

"தபஸ்யா! அருள் ஒரு பொக்கிஷம்! அவரை உன் கையில ஒப்படைச்சிருக்கோம்! அவரை அன்பா, உயிராப் பாத்துக்க வேண்டியது உன் பொறுப்பு... செய்வியா?" உரிமையுடன் கைகளைப் பற்றியபடிக் கேட்டாள் மாயா.



"ம்!" வேறு எதுவும் பேச மனமின்றி மௌனமாய் விடைபெற்றாள் அவள்!

## 37

சென்னை ஏர்போர்ட்டில் கால் பதித்தபோது, ஏதோ புதிய உலகத்திற்கு வந்ததுபோல்!

நேப்பாளமும், அந்த மக்களும் அவர்களின் அன்பும், தன் மடியில் அழகை மட்டுமே சுமந்திருந்த மலைகளின் ரம்மியமும், மனதை விட்டு அகல மறுத்தன!

ஏதோ ஒரு தேவலோகத்திலிருந்து பூமிக்கு வந்த உணர்வு!

வேணியும் விநாயகமும், அவர்களை அழைத்துச் செல்ல காருடன் வந்திருந்தனர்.

ஓடிச் சென்று இருவரையும் அணைத்துக் கொண்டாள் தபு!

"ஏய்... என்ன... ஹனிமூன் போயிட்டு வரப்ப கூட எங்ககிட்டே ஓடி வர்றே... இனிமே அதுதான் உன் இடம்!"

அருளைக் காட்டி குறும்புடன் எச்சரித்தபடி வேணி கூற, நமட்டுச் சிரிப்புடன் அவளையே ஏறிட்டது அவன் பார்வை!

பிறகு வீட்டிற்கு வந்து ஓய்வெடுப்பதிலேயே ஒரு நாள் போயிற்று!

JUN 12 2010

பரிசுகளைக் கொடுத்துவிட்டு அன்றிரவு தான் நேபாளில் எடுத்த வீடியோ பதிவுகளை அனைவருக்கும் போட்டுக் காட்டினான் அருள்.

விநாயகமும் அன்று அங்கேயே தங்கிவிட, அனைவரும் ரசித்துப் பார்த்தனர்.

ஒரே கேலியும் அரட்டையும் உற்சாகமுமாகப் பொழுது போயிற்று! அவள் உறங்கப் போகும்போது அவளை அழைத்தார் விநாயகம்!

"தபும்மா! கடைசியா, அந்த வயசான அம்மா சொன்னாங்களாமே பாரு... அது எவ்வளவு உண்மை! நான் உன்னை ஒரு அற்புதமான மனுஷனுக்கு குடுத்திருக்கேன். அவர் மனசு கோணாம நீ நடந்துக்கணும்! சரியா?" பரிவுடன் கூறினார்.

"ம்... சரிப்பா!" என்றபடி உள்ளே சென்றவளுக்குள் இருதலைக் கொள்ளி எறும்பாய் உணர்வுகள்!

* * *

மறுநாளிலிருந்து வாழ்க்கை இயல்பான நதியின் ஓட்டமாய் பழைய தடத்திலேயே தடம் பதிக்க ஆரம்பித்தது.

அருள், தன் மனைவியின் மனமாற்றத்தால் மிகுந்த உற்சாகத்திலிருந்தான்.

இதயமெனும் மாயக்கண்ணாடியில் அழுத்தமாய் பதிந்திருந்த அவன் உருவம்... அவள் மேல் பெருகிய காதல்... தன் பிறப்புக்கே பெரும் அர்த்தம் சொல்வது போல்!

ஆனால் தபுவோ பெரும் குழப்பத்திலிருந்தாள்.



'எனக்கு மட்டும் ஏன் இப்படி?' மனம் கேள்வி கேட்டது! எவ்வளவு வைராக்யத்துடன் அருளை மறுத்தேன்...

'அங்கு அந்த நேபாள மண் என்ன மாயம் செய்ததோ, எப்படி என்னை இழக்க சம்மதித்தேன்... இங்கும் அது தொடர்கதையாகி விட்டதே!

'வாழ்க்கையில் அருள்மொழி அத்தை தோற்றதுபோல் நானும் தோற்று விடுவேனோ?' மனம் குழம்பித் தவித்தது.

'எனக்கு மட்டும் ஏன் இப்படி?' துன்பத்தில் கேட்கும் இந்த வினாவை, நாம் ஏன் இன்பத்தில் கேட்பதில்லை என்பதை அந்தப் பெண்மை உணரவில்லை.

உணரும் நிலையிலும் இல்லாமல், இங்கு வந்தவுடன் மீண்டும் அருள் மொழியின் நினைவுகள் ஆக்ரமித்து, அவளை குரோதமும் வன்மமும் நிறைந்தவளாய் மாற்றத் துவங்கின!

'ஒரு விஷயத்தில் நான் தோற்றுப் போய் விட்டேன். இனி தோற்க மாட்டேன்.. உன் வாரிசு என்னுள் வளர நான் அனுமதிக்க மாட்டேன்.

'இது உன் தந்தைக்கு... என் அத்தையை ஏமாற்றிய அந்தக் கொடூர மனிதருக்கு நான் தரும் தண்டனை!'

உள்ளே பெரும் போராட்டம் நிகழும் போதே, இதயம் ஏதோ ஒரு கணக்குப் போட்டு மறு கணமே விதிர்த்தது.

எப்போதும் வருகின்ற மாத விலக்கு இந்த மாதம் தள்ளிப் போயிருக்க, காரணம் புரியவில்லை!

பத்து நாட்கள் அதிகமாகியி[illegible] என்ன செய[illegible]று பதட்டத்துடன் யோசித்தாள்.

இந்த மாதத்திலிருந்து கருத்தடை மாத்திரை உபயோகிக்கலாம் என்று முடிவெடுத்திருந்தவளுக்குள் இது சம்மட்டி அடியாய்!

உடனே, யோசித்து, தனக்குத் தெரியாத யாரோ ஒரு மருத்துவரை அணுக முடிவெடுத்தாள்.

அந்த முடிவு, அவளுடைய வாழ்க்கையையே சிதைத்து சின்னாபின்னமாக்கப் போவதை அவள் அறியவில்லை!

## 38

அன்று மாலையே ஒரு முடிவுடன் தபஸ்யா வெளியே கிளம்பினாள்.

ஷாப்பிங் செல்வதாகக் கூறிவிட்டு காரில் சென்றவள், ஒரு பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்சின் வாசலில் காரை டிரைவருடன் நிறுத்தினாள்.

பிறகு பின் தெருவிலிருந்த ஒரு கிளினிக்கிற்குச் சென்றவள், தனக்கு நாள் தள்ளிப் போயிருப்பதையும், அதைக் கலைக்க மாத்திரைகள் தரும்படியும் டாக்டரிடம் கேட்டாள்.

அதற்கு அந்த டாக்டர் முறைப்படி டெஸ்ட் செய்து பார்த்த பிறகே மாத்திரை எடுக்க வேண்டும் என்று கூற, என்ன செய்வதென்று புரியாமல் ஒரு கணம் தவித்துப் போனாள்.

''நான் நாளைக்கே டெஸ்ட் பண்ணிடறேன் டாக்டர்... மாத்திரை மட்டும் எழுதிக் குடுங்க போதும்!'' கவலையுடன் கூறினாள்.



''இல்லைம்மா! போய் உன் வீட்டிலிருந்து உன் கணவரையோ, இல்லை அப்பா அம்மாவையோ அழைச்சிட்டு வாம்மா! அப்பதான் நான் ட்ரீட்மெண்ட் தர முடியும்... சாரி.''

அவர் உறுதியாக மறுக்க, என்ன செய்வதென்று புரியாமல் வெளியே வந்தபோதுதான் எதிர்பாராத விதமாக அந்த உதவி கிடைத்தது.

வாசலில் நின்றிருந்த அந்த நர்ஸிங் படித்த பெண் அவளை ரகசியமாக அழைத்தாள்.

''மேடம்! எனக்குத் தெரியும் நீங்க கேக்கற மாத்திரையைப் பத்தி! சில பேருக்கு நானே குடுத்திருக்கேன்... இந்த டாக்டரம்மா சொல்லித்தான்! வாங்க... ஆனா எனக்கு பணம் குடுத்துடணும்'' கறாராகப் பேசினாள்.

அவசரமாக மூச்செடுத்து சரியென்று தலையசைத்தவளிடம், அந்த மாத்திரையை ப்ரிஸ்கிரிப்ஷன் பேடிலேயே எழுதித் தந்தாள் அந்தப் பெண்!

''ரெண்டு மாத்திரை போடுங்க... கரு கலையலைன்னா இன்னும் ரெண்டு, அவ்வளவுதான்... வயிறு சுத்தமாயிடும்.'' அவள் கூற, கேட்ட பணத்தைக் கொடுத்துவிட்டு அந்த ப்ரிஸ்கிரிப்ஷனை வாங்கி வருவதற்குள், தபுவுக்கு வியர்த்துப் போயிற்று.

நேரே மருந்து கடைக்கு வந்து நான்கு மாத்திரையாக வாங்கியவள், அந்த பேப்பரைக் கிழித்துப் போட்டு விட்டு அங்கேயே மினரல் வாட்டரை வாங்கி இரண்டு மாத்திரைகளைப் போட்டு விட்டாள்.

* * *

JUN 12 2010

பிறகு வீட்டிற்கு வந்து மாலையாகியும் எந்த அறிகுறியுமில்லாமல் போக, கவலையுடன் மேலும் இரண்டு மாத்திரைகளை சாப்பிட்டுப் படுத்து விட்டாள்.

ஆனால், விடியும் முன்பே தாங்க முடியாத வயிற்று வலியாலும் அதிகமான உதிரப் போக்காலும் தபஸ்யா துடித்துப் போனாள்.

என்னவென்று புரியாமல் தவித்த அருணும், மறு கணமே தன் மருத்துவமனைக்கு அவளை அழைத்துச் சென்று விட்டான்.

உடனே, வேணி அங்கு வரவழைக்கப்பட்டார்.

என்னவென்று பரிசோதிக்கும்போதே தபுவிற்கு உதிரப் போக்கு மேலும் அதிகமாய் வெளியேற ஆரம்பித்தது!

உடனே ஆம்புலன்சில் தன்னுடைய மருத்துவ மனைக்கு அவளை மாற்றினார் வேணி!

எல்லா டெஸ்ட்டும் எடுக்கப்பட குழந்தை தரித்திருக்க வில்லை!

தாமதமான மாதவிலக்குதான் என்பது புரிந்தது. உதிரப்போக்கை நிறுத்துவதற்காக உடனே வேணியே அவளுக்கு டி அண்ட் சி செய்தார்.

வெளியே காத்திருந்த மூவரும் எந்த விபரமும் புரியாமல், என்னென்று தெரியாமல் உடைந்து போயிருந்தனர்.

பிறகு வெளியே வந்த வேணி விபரம் கூறியதும் தான் அவர்களுக்கு நிம்மதியாயிற்று.

"ஒண்ணுமில்லை அருள்... டிலே பீரியட்ஸ்தான்... ஆனா ஏன் இவ்வளவு ப்ளீடிங்குன்னு புரியலை! டி அண்ட் சி பண்ணியிருக்கேன்... நார்மலாயிடுவா" சிறு முறுவலுடன் கூறினார்.

"வேணி! குழந்தை ஏதும் உண்டாகிக் கலையலையே?" பதட்டத்துடன் கேட்டார் சொர்ணம்.

"அதெல்லாம் இல்லைம்மா! இருந்தா தெரிஞ்சிருக்கும்... ஒரு ஆர்வத்துல நாள் தள்ளிப் போயிருக்கு... அவ்வளவுதான்!

"பயப்படாதீங்க! இன்னும் ஒரு மணி நேரத்துல நினைவு வந்துரும். நானும் அருளும் கூடவே இருக்கோம்..

"நீங்க வீட்டுக்குப் போயி ஏதாவது சாப்பிடுங்க... சாயந்திரம் நானே அவளை வீட்டுக்கு அழைச்சிட்டு வந்திடறேன்!" ஆதரவாகக் கூறி இருவரையும் அனுப்பி வைத்தார் வேணி!

மயக்கத்திலிருந்த தபுவைப் பார்த்துவிட்டு இருவரும் வீட்டிற்குச் சென்றனர்.

அன்று லீவு சொல்லிய அருள், தான் ஆபரேஷன் நடத்த வேண்டிய சில நோயாளிகளுக்கு தன் 'டீமி'டம் கூறி சர்ஜரி நடத்த ஏற்பாடு செய்தான்.

பிறகு, கட்டிலருகே ஓய்ந்து போய் மனைவியையே பார்த்தபடி அமர்ந்திருந்தவனைப் பார்த்தால், வேணிக்கு பரிதாபமாய்!

எவ்வளவு பெரிய சர்ஜன்... எத்தனை இதய அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக அனாயாசமாக முடிப்பவன்... இன்று இப்படித் துவண்டு விட்டானே... பெரும் வேதனை வந்தது அவருக்கு!

JUN 12 2010

அவனை ஆறுதல் படுத்தி ஒரு கப் பாலைப் பருக வைக்கும் போதுதான் வீலென்று அலற ஆரம்பித்தாள் தபு!



## 39



அனஸ்தீசியா மயக்கம் தெளியும்போது, சிலர் மன உளைச்சலில் உளறுவதும், பிதற்றுவதும் சகஜமென்பதால், வேணி அருகில் சென்று அவளிடம் ஆறுதலாகப் பேச ஆரம்பித்தார்.

''தபு! உனக்கு ஒண்ணுமில்லைடா! எல்லாம் சரியாயிடுச்சி! இனிமே வயித்து வலி எதுவும் வராது... டி அண்ட் சி பண்ணியாச்சி... நீ நார்மலாயிட்டே!'' மெல்ல நிறுத்தினார்.

மறுகணமே கண்களை இறுக மூடிய நிலையிலேயே தன் உணர்வுகளைத் தொலைத்து, வயிற்றைப் பிடித்தபடி கதறத் துவங்கினாள் தபு!

''அய்யோ! என் குழந்தையை நானே சாகடிச்சிட்டேனா! தப்பு பண்ணிட்டேன்மா! அருள் மேல இருந்த வெறுப்புல இது என் குழந்தையும்தாங்கிறதை மறந்து கலைக்கறதுக்கு மாத்திரை சாப்பிட்டுட்டேனே! கடவுளே!

''எனக்கு என் குழந்தை வேணும்... ப்ளீஸ் குடுத்துடுங்க... நான் இனிமே இப்படிச் செய்ய மாட்டேன்'' அருளைப் பழி வாங்கணும்னு தப்பு பண்ணிட்டேனே!



''எனக்கு என் குழந்தை வேணும்... என் வாரிசை நான் அருளுக்குத் தர மாட்டேன்... மாமா எங்கத்தையை ஏமாத்தின பாவத்துக்கு... அவர் பதில் சொல்லித் தான் ஆகணும்!

''நான் எங்கேயாவது போயிடறேன்... என் குழந்தையை வளத்துக்கறேன்... மாத்திரை சாப்பிட்டது தப்புதான்... என் குழந்தையைக் காப்பாத்துங்க வேணிம்மா!''

பெரும் குரலெடுத்து அவள் கதற எல்லாம் புரிந்து அவர் ஓடிச்சென்று அறைக் கதவைத் தாளிட்டு விட்டுத் திரும்பும்போதுதான், அருளையே கவனித்தார்.

அவன் முகம் பாறையாய் இறுகியிருக்க, விழிகள் கோவ்வைப் பழமாய் சிவந்து கைகள் அழுந்த மூடி வெண்மையாய்க் காட்சியளித்தன.

''அருள்... ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர் செல்ஃப்.''

அவர் பதட்டத்துடன் அருகில் வந்து ஆறுதல் படுத்தும்போது, அவன் உள்ளூர உடைந்து சிதறியிருப்பது தெரிந்தது.

கண்கள் கலங்கி, தான் தோற்றுப் போனதை... ஏமாற்றப்பட்டதை அறிவித்தன.

''அருள் என்ன ப்ரச்னை உங்களுக்குள்ளே! ஏம்பா இப்படி?'' பரிதவித்தார் வேணி!

''அக்கா! நான் ஏமாந்திட்டேன்... இவளை ஒரு தேவதைன்னு நினைச்சி ஏமாந்திட்டேன். ஒரு ராட்சசியை, என் வாரிசை அழிக்க வந்த பாவியை... எவ்வளவு நேசிச்சி ஏமாந்திருக்கேன் பாருங்க!''

கண்களை இறுக மூடி அவன் [illegible] மீண்டும் மயங்கியிருந்தாள்.

''அப்படிச் சொல்லாதேப்பா... ஏன்... என்ன ப்ரச்னை உங்களுக்குள்ளே... நல்லாத்தானே நேபாள் போயிட்டு வந்தீங்க!'' கலக்கத்துடன் வினவினார்.

''அக்கா! இவ இப்படி வஞ்சம் வெச்சி கழுத்தறுப்பான்னு நான் நினைக்கவே இல்லைக்கா! அப்பா மேல இருந்த வெறுப்பும் கோபமும் நான் காட்டற அன்பிலே மாறிடும்னு நினைச்சேன்!

''தப்பாயிடுச்சி. இனிமே இவ எனக்கு வேண்டாம்... இவ முகத்துல முழிக்கவே எனக்குப் பிடிக்கலை!

''எப்போ, என் குழந்தையை அழிக்கணும்னு அவ நினைச்சாளோ... அதோட எல்லாமே முடிஞ்சி போச்சு! இனிமே எனக்கும் அவளுக்கும் நடுவிலே எதுவுமே இல்லைக்கா! நாங்க பிரிஞ்சிடறோம்!''

முகத்தை மூடியபடி அவன் தன் உணர்வுகளை அடக்க முயல, ஆதாவுடன் அவனை அணைத்துக் கொண்ட வேணிக்கு. எதுவும் புரியவில்லை!

ஆனால் என்னவென்று கேட்டு, அவனை மேலும் காயப் படுத்தவும் அவர் விரும்பவில்லை.

ஒன்றே ஒன்றை மட்டும் கூறினார்.

''அருள்! எதையுமே தீர உக்காந்து யோசிச்சா தெளிவு வரும்! நீ ஒரு டாக்டர்... நான் உனக்கு சொல்ல வேண்டாம்!

''ஆனா இந்த விஷயம் அம்மாவுக்கும் விநாயகம் அங்கிளுக்கும் தெரிய வேண்டாம்! அவங்க ரெண்டு பேருமே பேஷண்ட்ஸ்!

''திரும்பவும், ஸ்ட்ரோக்கோ, ஹார்ட் அட்டாக்கோ வந்திட்டா ரொம்பக் கஷ்டம் அமைதியா இரு! நான் தப கிட்டே பேசறேன்!''



அவர் கூறியதுமே வேகமாக நிமிர்ந்தவன், ''அக்கா! எதுவும் பேச வேண்டாம். எல்லாம் முடிஞ்சிடுச்சின்னு மட்டும் சொல்லுங்க! அவ முகத்துல முழிக்க நான் விரும்பலை! அதையும் உறுதியாத் தெரிவிச்சிடுங்க...''

காயப்பட்ட வலியுடன் கூறிவிட்டு எழுந்து வெளியேறினான்.

உடனே அருளைப்பின் தொடர்ந்தவர், ''அருள் வீட்டுக்கு போயி சாப்பிட்டுட்டு ஒரு பேராசிட்டமால் போட்டுட்டு ரெஸ்ட் எடு... எதுவா இருந்தாலும் அப்புறமாய்ப் பேசிக்கலாம்!'' என்று அனுப்பி வைத்தார்.

பிறகு கவலையுடன் அவளருகில் வந்து அமர்ந்தவளுக்குள் இருவரையும் நினைத்தால் பெரும் வேதனையாய்!

'இந்தப் பெண் எதற்காக இப்படி ஒரு முடிவெடுத்திருப்பாள்... பழி வாங்க என்கிறாளே... ஏன்?'

குழப்பத்துடன் அமர்ந்திருந்தவர், உடனே சொர்ணத்திற்கு போன் செய்தார்.

''அம்மா! அருள் ரொம்ப டயர்டா கவலையா இருக்கான்! வீட்டுக்கு வரான். எதுவும் பேசி தொந்தரவு செய்யாதீங்க!

''டிபன் மட்டும் குடுத்து படுத்து ரெஸ்ட் எடுக்கச் சொல்லுங்க... சாயந்திரம் நான் வந்து பேசறேன்!'' என்று வைத்தார்.

பிறகு தன் கணவரிடம் பேசியவர், மதியத்திற்கு மேல் சென்று அருளை கவனித்துக் கொள்ளும்படி [illegible] விட்டு, தபு எழுவதற்காகக் காத்திருந்தார்.

JUN 12 2010

## 4

தீபஸ்யா, கண் விழித்துக் கூறிய செய்திகள் அவர் தலையில் இடியாய் இறங்கின.

அவனிடம் அசைவை உணர்ந்து அருகில் சென்று பரிவுடன் நெற்றியை வருட, அந்தக் கையைத் தவிப்புடன் பற்றிக் கொண்டாள் அவள்!

பிறகு, விழிகள் அந்த அறைக்குள் அருளைத் தேடின.

"அருள் வீட்டுக்குப் போயிருக்கான்... ரொம்ப ஓய்ஞ்சு போயிட்டான்மா! உங்க ரெண்டு பேருக்கும் நடுவில என்ன ப்ராப்ளம்? என்கிட்ட சொல்லு?" கனிவுடன் வினவினார்.

ஒரு கணம் மலங்க மலங்க விழித்தவள், மறுகணமே காட்டாற்று வெள்ளமாய் அனைத்தையும் கொட்டத் தொடங்கினாள்.

"சிறு வயதிலிருந்தே அருள் மொழிக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு வில்வநாதனையும், அவருடைய குடும்பத்தையும் தான் வெறுத்தது... அருளை வில்வநாதனின் மறு உருவமாய்க் கண்டு கோபம் கொண்டது... அவனை சந்தித்தது... தந்தையின் கோரிக்கையை நிராகரித்தது..."

"பிறகு தந்தையின் கழுத்தில் கத்தியை வைப்பது போல் மிரட்டி, அவன் தன்னை மணக்க கேட்டது... அவன்தான் தனக்கு ஆபரேஷன் செய்ய வேண்டுமென்ற தந்தையின் பிடிவாதம்... வேறு வழியின்றி திருமணத்திற்கு ஒப்புக் கொண்டது.



"அவனும் தன் தாய் தந்தையின் விருப்பத்துக்காக தன்னை ஏற்றது... ஆனாலும் அவனை தான் ஏற்க மறுத்தது... நேபாளத்திற்குச் சென்ற பிறகு, ஒரு தருணத்தில் தங்கள் இல்லறம் ஆரம்பித்தது...

"ஆனாலும், பழி வாங்குவதற்காக அவனுக்கு ஒரு வாரிசை தன் வயிற்றில் வளர விடக்கூடாது என்று தான் பிடிவாதமாக இருந்தது... வரும் மாதத்திலிருந்து கர்ப்பத் தடை மாத்திரைகளை எடுக்க நினைத்தது... நாள் தள்ளிப் போக பயந்து கருக்கலைப்பு மாத்திரைகளை எடுத்தது..."

அவள் முடித்து விட்டு எதிர்பாராமல் முகத்தை மூடிக் கதற ஆரம்பித்தாள்.

"நான் தப்பு செஞ்சிட்டேன்மா என் குழந்தையை நானே அழிச்சிட்டேன்... எனக்கு இருந்த வன்மத்துலயும் கோபத்துலயும் அது என் குழந்தையும்தாங்கிறதை ஒரு நிமிஷம் மறந்தே போயிட்டேனே."

"எவ்வளவு பெரிய தப்பு செஞ்சிட்டேன்... தன் குழந்தையையே அழிக்கிற அளவு கொடூரமானவளா, ஒரு ராட்சசியா நான் எப்படி மாறினேன்?"

"அய்யோ... எனக்கு பைத்தியமே பிடிச்சிடும் போல இருக்கும்மா!" என்று அவள் அழுதபோதுதான் வேணிக்கு எல்லா உண்மையும் விளங்கிற்று!

உடனே அவளைப் பற்றி வேதனையுடன் உலுக்கியவர், "இங்கே பாரு தபு! உனக்கு நாள் தள்ளிப் போனதுக்குக் காரணம் கர்ப்பம் இல்லை! டிலே பீரியட்ஸ் தான்!

"எல்லாம் செக் பண்ணியா[illegible] குற்றவுணர்வுல நீ தவிக்கறதை முதல்லே நிறுத்து... திரும்

பவும் நல்ல அழகான ஒரு குழந்தைக்கு தாயாக உன்னால முடியும்! ஆனா...!"

வேணி நிறுத்த அழுவதை நிறுத்தி விட்டு கலக்கத்துடன் அவரை ஏறிட்டாள் தபு!

"ஆனா என்னம்மா! என் பூட்ரஸ் ஏதும் பாதிக்கப்படலையே?" பதட்டத்துடன் வினவினாள்.

"அதெல்லாம் நல்லாருக்கும்மா! உன் எதிர்காலம் தான் என்னாகுமோன்னு ரொம்ப பயமாருக்கு!"

ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினார் வேணி.

"ஏம்மா? அதுக்கென்ன நான், இப்ப என் மனசை மாத்திக்கப்போறேன்... எனக்கு இப்பதான் புரியுது... மாமா செஞ்சதுக்கு அருள் என்ன பண்ணுவாரு... அதனால அவரை மனசார ஏத்துக்கறதா முடிவு பண்ணிட்டேன்!"

அவள் கூறியதுமே உடைந்து போனார் அவர்.

"கடவுளே! இப்ப அருள் வேற ஒரு முடிவெடுத்திட்டானேம்மா... அதை எப்படி மாத்தறது... அவன் நொறுங்கிப் போயிட்டானே!" தன்னை அறியாது குமுறிவிட்டார்.

உடனே பதறி எழுந்து அமர்ந்தவளுக்கு, தலை சுற்ற அப்படியே சாய்ந்து கொண்டாள்.

* * *

பிறகு மெதுவாக நிமிர்ந்தவள், "ஏம்மா... அவருக்கு என்னாச்சு?" கவலையுடன் வினவினாள்.

"நீ தப்பு பண்ணிட்டேடா! முதல் தப்பு அவனை சரியா புரிஞ்சிக்காம கல்யாணம் செஞ்சுக்கிட்டது! ரெண்டாவது தப்பு... இன்னிக்கு எல்லாத்தையும் அவன் முன்னாடியே உளறினது..."



என்றவர் அவன் பிதற்றியதையும், அதனால் அவளிடம் விளைந்த மாற்றத்தையும், உருக்குலைந்து உடைந்து சிதறியதையும் கண்ணீருடன் விவரித்தார்.

அதற்குள் யாரோ அறைக் கதவைத் தட்ட, கண்களைத் துடைத்தபடி சென்று திறந்தார்.

அங்கு நர்ஸ்தான் நின்றிருந்தாள்.

"டாக்டர்... அவங்களுக்கு 'பிபி' செக் பண்ணணும்! 'ஐவி' ப்ளூயிட்ஸ் ஸ்டாப் பண்ணணும்" என்றாள் பவ்யமாக!

"அதெல்லாம் நான் பாத்துக்கறேன்... எங்களை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்! ஒரு மணி நேரம் கழிச்சி ஹார்லிக்ஸ் ஒரு கப்பும் ஜூஸும் எடுத்துட்டு வா!" என்று பணித்து அவளை அனுப்பினார்.

திரும்பி அவளருகில் வந்தபோது, அதிர்ச்சியில் உறைந்த பனிச்சிலையாய் உணர்வுகள் மரத்துப் போய் அமர்ந்திருந்தாள் தபு!

அவர் மெதுவாக உசுப்ப, கலைந்து நிமிர்ந்தவள், "அம்மா! நீங்க இப்ப என்ன சொன்னீங்க? அவருக்கு எல்லாம் தெரியுமா?" அவள் குரல் கம்மியிருந்தது.

"ம்... தெரியும் நீ தப்பு பண்ணிட்டே தபு! அவன், தன் அப்பாவுக்காகவோ அம்மாவுக்காவோ உன்னை கல்யாணம் செஞ்சுக்கலைடா!"

என்றவர் எல்லாவற்றையும் அவளிடம் கூற ஆரம்பித்தார்.

அவன் அவளை முதன் [illegible] ஒரு மருத்துவமனையில் சந்தித்தது... உடனே பார்த்த முதல் கணமே அவளை தன் மனதில் பதித்தது...

''பிறகும் ஷாப்பிங் காம்ப்ளெக்சில் ஒருவனிடம் செல்லைப் பிடுங்கி அவள் அறிவுரை செய்தபோது லிஃப்டில் பார்த்தது...

''மூன்றாவது முறையாக அவளை மீண்டும் ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலில் லிஃப்டில் சந்தித்தது... அதற்குப் பிறகு அன்றே அவளைப் பற்றி தன்னிடமும், சொர்ணத்திடமும் அவன் கூறியது... யாரென்று தெரியாமலே அவளை அவன் விரும்ப, மீண்டும் மலேஷியாவில் அருள் மொழியின் வீட்டில் சந்தித்து அதிர்ந்தது...

''அப்போதுதான் அவள் பெயரும், தன் பெரியம்மாவின் அண்ணன் மகளென்றும் அறிந்து குழம்பியது!

''பிறகு இந்தியா வந்ததும், விநாயகத்தின் விருப்பம்... அருள் மொழியின் கடைசிக் கடிதம் எல்லாம் அறிந்ததும் என்ன செய்வதென்று தவித்தபோது, விநாயகமே இந்தத் திட்டத்தைக் கூறியது...

''பிறகு, அவன் அதைச் செயல்படுத்தியது... அவளை உயிராய் விரும்பி ஏற்றுக் கொண்டது...'' எல்லாவற்றையும் கூறியபோது, இடி விழுந்தாற் போல அதிர்ந்து போனாள் அவள்.

கடவுளே... எப்படிப்பட்ட தவறை செய்திருக்கிறேன்? இதற்கு எனக்கு பாவ மன்னிப்பு உண்டா?''

கைதிக் கூண்டில் நிறுத்தி அவளையே கேட்டது மனசாட்சி!

'சேற்றிலே மலர்ந்த தாமரைதானே இறைவன் பாதத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது?'

'ஒரு கடல் வாழ் உயிரினத்தின் வாழ்விடம் சங்கு!



...அதை கடவுள் அபிஷேகத்துக்குப் பயன்படுத்துவ...ில்லையா?

'...தற்கும் ரிஷி மூலம் ஆராய்தலும் அதை வைத்து ஒரு ...னிதனை கணிப்பதும் எவ்வளவு தவறு?' இன்று ...ணர்ந்தாள் அவள்.

அவனுடைய உண்மையான காதல், இன்று கனவு ...ேசமாகிப் போனதை, பெரும் வலியுடன் சுவீகரித்தது ...இதயம்!

'தன் மேல் எவ்வளவு அன்பிருந்தால்... திருமணமே செய்யாது மறுத்து வந்தவன், தன்னை யாரென்று அறிந்தும், மணக்க முடிவெடுத்திருப்பான்...?'

'அந்த அற்புதமான ப்ரியத்தை நானே கொன்று விட்டேனே...' இதயம் பந்தயப் புறாவாய் பதறிப் பரிதவித்தது!

இப்போது அவளுக்கு எல்லாமே விளங்குவது போல்...

'வெண்ணெய் திரண்டு வருகின்ற நேரம் தாழி உடைந்தாற் போல்' என்கிற வரிகளின் நிஜம் புரிவதாய்!

தானே தன் வாழ்க்கையையும் அவன் காதலையும் சிதைத்து விட்டது புரிய, பெரும் குரலெடுத்து விம்ம ஆரம்பித்தாள் தபஸ்யா!

41

வீட்டில், அதைவிட மோசம... ...நிலையிலிருந்தான் அருள்!

JUN 12 2010

தன் குழந்தையை கருவிலேயே அழிக்கத் துடித்த ஒரு ராட்சசியாய்... வஞ்சகியாய்... மனதில் பதிந்து போயிருந்தது தபுவின் உருவம்!

அதீத வெறுப்பிலும், தாங்க முடியாத கோபத்திலும் அவள் மேலிருந்த நேசம் உருத்தெரியாமல் சிதறிப் போயிருந்தது.

ஒருவரை மற்றவர் எக்காரணம் கொண்டும் காயப் படுத்தக் கூடாதென்ற அவனுடைய இயல்பான குண மும், அனுசரணையும், அக்கறையும், சில கணங்களுக்கு முன்பாக தொலைந்து போயிருந்தன!

தாங்க முடியாத அதிர்ச்சியில் ஓய்ந்து சரிந்திருந்தான் அவன்...

இனி அவளுடன் வாழ்வதென்பது கனவிலும் கூட நினைத்துப் பார்க்க முடியாத காரணம் என்பது மட்டும் தெளிவாகப் புரிவதாய்!

தன் வானமே இருண்ட சோகத்தில் இமைகள் கனத்து உடைந்து படுத்திருந்தவனை செல் உசுப்பியது.

வேணியின் எண்ணைக் கண்டவுடன் விரக்தியுடன் அணைத்தவன், செல்லையே ஆஃப் செய்தான்.

* * *

அருள் செல்லை எடுக்கவில்லை என்றதுமே பதறிப் போனாலும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் திரும்பினார் வேணி!

எதிர்பார்ப்பும் ஏக்கமுமாய் கலங்கி அவள் விழித்த நிலை பரிதாபமாய்!

''இல்லை... எடுக்கலை... தூங்கறான்னு நினைக் கிறேன்... கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும்'' போலியாக சிரித்தபடி அவர் கூற, அவளுக்குப் புரிந்து போயிற்று!



உடனே செல்லை அவரிடமிருந்து வாங்கி அவள் ரீ டயல் செய்ய, அது அணைக்கப்பட்டிருந்தது.

''எனக்குத் தெரியும்... அவர் என்னை மன்னிக்கப் போறதில்லை! இப்படி ஒரு நாள் நான் அவருக்காக ஏங்கி உருக்குலைஞ்சு போவேன்னு நான் நினைக்கவே யில்லைம்மா.''

''அப்படியே ஓவர் ப்ளீடிங் ஆகி சாகட்டும்னு என்னை விட்டிருக்க வேண்டியதுதானே! ஏன் காப்பாத்தினீங்க?'' கேட்டு விட்டு முகத்திலறைந்தபடி குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தாள் தபு!

''இப்படி அழுதா உடம்புக்கு ஆகாது... இந்த விஷயம் சொர்ணம்மாவுக்கும் உங்கப்பாவுக்கும் தெரியாமலே இருக்கட்டும்! நீ என் வீட்டுக்கு வா! கொஞ்ச நாள் அங்கே, தங்கிட்டு அப்புறமா அருளோட வீட்டுக்குப் போகலாம்!'' ஆறுதலாகக் கூறினார்.

சட்டென்று நிமிர்ந்தவள், ''என்னை அங்கே வரக் கூடாதுன்னு அவர் சொல்லிட்டாராம்மா?'' ஏக்கத்துடன் கேட்டாள்.

அவர் மறுக்கும்போதே தடுத்தவள், ''எனக்கு தெரி யும்மா! அவர் என்னை மன்னிக்க மாட்டாரு! அதனால என்னைப் பார்க்கப் பிடிக்கலைன்னு சொல்லிட்டாரு இல்லை?''

பரிதவிப்புடன் உடைந்து கேட்டபோது, அவரால் எதுவுமே பேச முடியவில்லை! மறுகணம், அவரையே காயப்பட்ட குழந்தையாய் நோக்கியவள் அப்படியே மயங்கி சரிந்து விட்டாள்.

அதிகப்படியான மன உளைச்சலும், வேதனையும், குற்ற உணர்வும் அவளை [illegible]

JUN 12 2010

உடனே முதலுதவி செய்து அவனைத் தெளிய வைத்தவர், இரண்டு நாட்கள் அவனை மருத்துவமனையி லேயே தங்க வைக்க முடிவு செய்தார்.

* * *

அன்று மாலையில் தன் தங்கை சுபத்ராவை போன் செய்து வரவழைத்தவர், அவளுக்கு துணையாக வைத்து எச்சரித்து விட்டு அருளைப் பார்க்க அவன் வீட்டிற்குச் சென்றார்.

அறைக் கதவைத் தட்டியதும் திறந்தவன், ஒரே நாளில் பாதியாகி ஓய்ந்து தெரிந்தான்!

இப்படி அவனை ஒரு நாளும் பார்த்தே இராததால், அவனைக் கண்டதும் அடிவயிற்றிலிருந்து பொங்கிய அழுகையை அப்படியே விழுங்கியவர், மெதுவாக உள்ளே சென்றார்.

"அருள்... எப்படிப்பா இருக்கே? மாமா வந்தாரா?" மெல்ல விசாரித்தார்.

"ம்... எனக்கு என்ன வேணியக்கா! இன்னும் உயிரோட தான் இருக்கேன்! அந்த ராட்சசிய விரும்பின பாவத்துக்கு இன்னும் உயிர் மட்டும்தான் போகலை!" சலிப்புடன் சாய்ந்தான்.

"அப்படிச் சொல்லாதேப்பா! அவளும் எல்லாம் உணர்ந்துட்டா! துவண்டு போயிருக்கா! தான் செஞ்ச தப்புக்கு உன்கிட்ட மன்னிப்பு கேக்க துடியாத் துடிக்கறா!"

அவர் முடிப்பதற்குள் அவன் குரல் கடும் சீற்றத்துடன் இடைமறித்தது...!

"வேண்டாம்க்கா! அவளை என் முன்னாடி தயவு செய்து வரச் சொல்லிடாதீங்க... இருக்கற வெறியில ஏதாவது செஞ்சிடப் போறேன்!!



"இதுவரைக்கும் நான் கையிலே எடுத்த கத்திக்கு பல உயிர்களை காப்பாத்தற சக்தி மட்டுமே இருந்திருக்கு!

"ஆனா, அதை அழிவுக்கும் பயன்படுத்தலாமின்னு எனக்குப் புரிய வச்சிடாதீங்க!" கூறிவிட்டு வெறுப்புடன் திரும்பிக் கொண்டான்.

இவனை எப்படி மாற்றுவது...? புரியாத தவிப்புடன் அவனுக்கு ஆறுதல் கூறியவர், பெரியவர்களுக்கு இந்த விஷயம் தெரிய வேண்டாமென்று கோரிக்கை வைத்து விட்டுக் கிளம்பினார்.

அவர் அறை வாசலை அடைந்ததும், "ஒரு நிமிஷம்க்கா! என்று நிறுத்தினான் அவன்.

"அவளை அவங்கப்பா வீட்டுக்கு அனுப்பிடுங்க! ஒரு மாசம் கழிச்சி டைவர்ஸ் நோட்டீஸ் வரும்னு சொல் லிடுங்க!"

முடிவாகக் கூறிவிட்டு கதவை அவன் அழுந்த சாற்றி விட, அவனுடைய இதயக் கதவும் இறுக மூடிக் கொண் டது புரிவதாய்!

வருத்தத்துடன் கீழே வந்தவரை பெரியவர்கள் இருவரும் பிடித்துக் கொண்டனர்.

"அம்மா! தபு கொஞ்ச நாள் எங்க வீட்டில இருக்கட்டும். ஆறுதலா இருக்கும் மத்தபடி ஏதும் ப்ரச்னை இல்லை! அங்கிள் நீங்களும் வேணா அங்கே வந்து கூட இருங்க."

பரிவுடன் அழைத்தார்.

"இல்லைம்மா!

"தபுவுக்கு இப்படி ஒரு மாமியார் வீடு, [illegible] அம்மாவும் கிடைக்க குடுத்து [illegible]... [illegible] புரியுது!

JUN 12 2010

''அவ உங்க வீட்டிலேயே இருக்கட்டும்! நானும் அப்பப்ப வந்து பாத்துக்கறேன்'' என்றவர் உடனே வேணியுடன் கிளம்பி விட்டார்.

* * *

மருத்துவமனைக்கு வந்தபோது எதையும் குடிக்க மறுத்து படுத்திருந்தாள் தபஸ்யா.

விநாயகத்தைப் பார்த்ததும் விம்மலுடன் வெடித்துப் பொங்கியது அழுகை!

அவருக்கும் உள் விபரம் புரியாததால் ''கவலைப் படக்கூடாதுடா... வெறுமே நாள்தான் தள்ளியிருக்கு! கூடிய சீக்கிரமே எனக்கு அழகா ஒரு பேரனைப் பெத்து குடுக்கத்தான் போறே!''

அவர் கூறியதும் உடைந்தவள், ''அப்பா... அது மட்டும்'' என்பதற்குள் வேணி குறுக்கே வந்து சமாதானம் செய்தார்.

''சரி சரி... தைரியமா இருக்கணும்! அங்கிள் கிளம்புங்க... நாங்க பாத்துக்கறோம்!''

உடனே அவரை எழுப்பி டிரைவருடன் வீட்டிற்கு அனுப்பியவர், தபுவிடம் திரும்பினார்.

''தபு! உங்கப்பாவோட ஹெல்த் இப்பதான் நார்மலாயிருக்கு! அவருக்கு மறுபடி ஹார்ட் அட்டாக் வர மாதிரி செஞ்சிடாதே! ப்ளீஸ்டா'' என்று புரிய வைத்தார்.

மறுநாள் மாலையே அவளை டிஸ்சார்ஜ் செய்து தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார் வேணி!



# 42

மருத்துவமனைக்குச் செல்ல ஆரம்பித்த அருள், அவளை வந்து எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

சொர்ணத்திடமும் விநாயகத்திடமும் அவன் தினமும் இருமுறை வந்து செல்வதாக வேணி பொய் சொல்ல வேண்டியதாயிற்று!

மருத்துவமனைக்கு பத்து நாட்கள் விடுப்பு எடுத்தவர் அவளுக்கு அருகிலேயே இருந்தார்.

கவலையும், வேதனைகளும் தபஸ்யாவை செல்லரிக்கத் துவங்கியிருக்க, மெலிய ஆரம்பித்தாள்.

''தலைவன் அருகில் இல்லாத நேரத்தை... அந்தப் பிரிவை... அதிகம் உணர்த்தி இம்சை கொடுத்து அவளுள் சோகத்தை விதைக்கும் வாடைக்காற்றின் பொருள்பட எழுதப்பட்ட 'நெடுநல் வாடை' எனும் சங்க இலக்கியத்தில் வருகின்ற தலைவியாய் அவள்!

ஒரு நாள் அவள் ஏதோ எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்த வேணி, என்னவென்று விசாரித்தபடி அருகில் வந்தார்.

அவளுடைய மனதின் ஏக்கங்களை தாபங்களை கவிதை வரிகளாக்கி இருந்தாள் தபு!

**என் வேந்தனே!**
**எப்போது விழித்தது**
**என் பெண்மை?**

JUN 12 2010

எப்போது பூத்தது
என்னுள் காதல்!
நீ...
காதலுடன் கண் சிமிட்டி
குறும்பாய் சிரித்தாயே...
அப்போதா?
தந்தையின் கவலையில்
தவித்திருந்தவனை
தாயுமானவனாய் காத்தாயே...
அப்போதா?
மோக மயக்கத்தில் கிறங்கி
மார்போடு என்னை ஏந்தினாயே...
அப்போதா?
கழுத்து வளைவில் குளித்து
கள்வனாய் முத்தமிட்டாயே...
அப்போதா?
உன் முரட்டு மீசையால்
என் முகம் தீண்டி
செல்லமாய் குறுகுறுக்கச் செய்தாயே!
அப்போதா?
மலைப் பள்ளத்தாக்கில்...
மன்னனாய் எனைக் காக்க
மதிலாய் துணை வந்தாயே...
அப்போதா?

என் இடைபற்றி...
எனை குதிரையிலிருந்து கீழிறக்கி
என்னுள் மின்சாரம் பாய்ச்சினாயே...
அப்போதா?
ஊரே உனை உயர்வாய் பேச
உண்மை உணர்ந்து
உறைந்து நின்றேனே...
அப்போதா?
என் கருவை...
எங்கோ தொலைத்த பயத்தில்...
உன்னை எண்ணி
உடைந்து நின்றேனே...
அப்போதா?
அறிந்திலேன் மன்னவனே!

சிறு கண்ணீர்க் கறையுடன்
முடிந்திருந்தது அந்தக் காதல் கவிதை!

* * *

"தபு! நீ கவிதை எல்லாம் கூட எழுதுவியா?" வியப்புடன் கேட்டார் வேணி!

"ம்... அதெல்லாம் காலேஜ் டைம்லேம்மா! இன்னிக்கு என்னவோ என் மனசை எழுதினேன்!"

ஒரு பெருமூச்சுடன் குனிந்தவளை வாரி அணைத்துக் கொண்டார் அவர்.

"இனி எனக்கு என்ன வேலை தெரியுமா? உன்னையும் அருளையும் சேர்த்து வைக்கிற[illegible]! [illegible]

JUN 12 2010

படாதே... ஒரு பத்து நாள் பொறுத்துக்க!'' கனிவாய் முத்தமிட்டார்.

''இப்ப இந்தக் கிழவியாலதான் முடியும்... கொஞ்ச நாள் போகட்டும்... அப்புறம் கழுத்து வளைவை எல்லாம் உன் வேந்தன் வந்து பாத்துப்பாரு!''

அவர் கிண்டல் செய்தபோது, சட்டென்று சிவந்த முகத்தில் அபூர்வமாய ஒரு சிறு புன்னகை, அவள் விழியிலும் எட்டிப் பார்த்தது!

மூன்று வாரங்களில், அவள் சிறிது தேறிய பின்பு, தபுவை அருளின் வீட்டிற்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தார் வேணி!

அங்கு தினமும் சென்று அருளைப் பார்த்து வந்தாலும், அவன் வீம்பும் பிடிவாதமுமாகவே மாறாதிருப்பது புரிந்தது.

சொர்ணம் வேறு நிலைமை புரியாமல், தபுவை அழைத்து வரும்படி நச்சரிக்க ஆரம்பித்தார்.

## 43

ஒருநாள், அருளே எதிர்பாராத விதமாக ஞாயிறன்று மதியம் தபஸ்யாவை திடீரென்று அங்கு அழைத்துச் சென்றார் வேணி!

மாடியில், அவன் நல்ல உறக்கத்திலிருக்க, கதவைத் திறந்த நல்லசிவம் அவர்களை வியப்புடன் வரவேற்றார்.



''அப்பா! அம்மா தூங்கறாங்களா? நாங்க மாடிக்குப் போய் அருளைப் பாக்கறோம்... அம்மாவை எழுப்ப வேண்டாம்'' என்றபடி வேணி மாடியேற ஆரம்பித்தார்.

தயக்கத்தில் கால்கள் பின்ன தொடர்ந்த தபுவிற்கோ, மூச்சு முட்டுவதைப் போல்!

வேணி, மெதுவாக அவனுடைய அறைக் கதவைத் தட்டியபோது, சிறிது நேரம் கழித்தே தூக்கக் கலக்கத்துடன் திறந்தான் அருள்!

''என்ன அருள்! நல்ல தூக்கமா? நாங்க கொஞ்சம் உள்ளே வரலாமா?''

அவர் கேட்கும்போதே, பின்னால் நின்றிருந்த தபுவை அவன் கவனித்து விட்டான்.

''வேணியக்கா... இவளை ஏன் இங்கே...''

அவன் இரையும்போதே, அவசரமாக அவனுடன் உள்ளே நுழைந்து, கதவைத் தாளிட்டு விட்டார் வேணி!

''அருள்! இது உனக்கும் உன் மனைவிக்கும் உள்ள ப்ரச்னை! மத்தவங்களுக்கு அது தெரிய வேண்டாம்!

''நானே இங்கே அநாவசியம் தான்! ஆனா அவளுக்காகப் பேச இப்ப நான் மட்டும் தான் இருக்கேன்.''

அவரை, ரௌத்ரமாய் இடைமறித்து அவன் குரல்!

''ஓ! நீங்களும் கட்சி மாறியாச்சா? அவ செஞ்சது நியாயம்னு வாதாட வந்திருக்கீங்களா?''

''இல்லைப்பா! அவ செஞ்சது தப்புதான்... அநியாயம்தான்! ஆனா இப்ப அவ [illegible]... [illegible] மன்னிச்சி ஏத்துக்கன்னு கெஞ்ச வந்திருக்கேன்!''

JUN 12 2010

அவளுக்காக நீங்க என்க்கா உங்களைத் தாழ்த்திக்கறீங்க! இப்பகூட பாருங்க... எவ்வளவு திமிரா நிக்கறா!"

அவன் குரலில், அவளுடைய தேகமே நடுங்க ஆரம்பித்தது.

"அது திமிர் இல்லை அருள்.. பயம்! நீ என்ன சொல்லுவியோங்கற தயக்கம்! புரிஞ்சிக்க அருள்... அவ எல்லாத்தையும் உணர்ந்துட்டா!

"ஹூம்.. இவளா? என்னால நம்ப முடியாது! விட்டா உங்களையே ஏமாத்திடுவா! கொஞ்சம் கூட கருணையே இல்லாம என் குழந்தைய அழிக்கத் துணிஞ்ச இவளுக்கு பொருத்தமே இல்லாம ஒரு பெயர்... தயான்னு! சே..."

திராவகமாய் வார்த்தைகளை உமிழ்ந்து விட்டுத் திரும்பிக் கொண்டான்.

"அருள்... அப்படிச் சொல்லாதேப்பா! அவதான் கர்ப்பமா இல்லையே!"

பரிந்து வந்த வேணியையே விழி இடுங்க ஊடுருவியவன், "இருந்திருந்தா... ஒருவேளை கருத்தரிச்சிருந்தா... யோசிச்சிப் பாருங்க."

மிருகமாய் அவன் கர்ஜிக்க,

"அய்யோ..." என்று வயிற்றைப் பிடித்தபடி துவண்டு தரையில் சரிந்து விட்டாள் தபு!

"பார்த்தீங்களாக்கா... நடிக்கிறா! போதும் இதுவரைக்கும் நடிச்சதெல்லாம்! இனிமே நான் நம்பமாட்டேன்!"

கூறிவிட்டு, விருட்டென்று அறையை விட்டு வேகமாக வெளியே சென்று விட்டான் அருள்.

* * *

பிறகு அவளை உலுக்கி சமாதானம் செய்து கீழே அழைத்து வரும்போது, அங்கும் அவன் இல்லை!

மாடியிலுள்ள அலுவலக அறையில் அவன் இருப்பதாக நல்ல சிவம் கூற, சொர்ணத்திடம் அவளை ஒப்படைத்து விட்டு, மீண்டும் மாடிக்குச் சென்றார் வேணி!

சொர்ணம் அவளைப் பக்கத்து விருந்தினர் அறையில் ஓய்வெடுக்கும்படிக் கூற, ஓய்ந்து படுத்தவளுக்குள் வேதனையும் விரக்தியும்!

எதையும் வெளிக்காட்ட முடியாமல் அவள் படுத்திருக்க, சொர்ணம் தான் பேசிக் கொண்டிருந்தார்.

"உனக்கு இப்படியானதிலிருந்து அருள் உடைஞ்சி போயிட்டான்மா! சரியா சாப்பிடறதில்லை... பாதியா ஆயிட்டான்!

"குழந்தை வேணும்னு ரொம்ப எதிர்பார்த்திருப்பான் போலருக்கு... அதான்...! முகத்துல பழைய ஜீவனே இல்லை.... எதையோ பறி குடுத்த மாதிரி இருக்கான்! நீதான் இனிமே அவனைப் பாத்துக்கணும்!"

அவர் கூறியதும், விசும்பலை அடக்க முடியாமல் அழ ஆரம்பித்து விட்டாள் தபு!

"சாரிம்மா! உனக்கும் கஷ்டமாத்தானே இருக்கும். மனசுல எவ்வளவு கனவுகள் இருந்திருக்கும்... மனசை தேத்திக்க... அடுத்த முறை நிச்சயமா கருத்தரிப்பே! இப்ப ரெஸ்ட் எடுத்துக்க" என்றபடி நர்ஸிடம் சைகை செய்தார்.

பிறகு, அவள் சக்கர நாற்காலியைத் தள்ளியபடிச் செல்ல, உண்மை நிலைமையை நினைத்து அருவியாய் கண்ணீர் பெருகியது தபுவிற்கு!

# 44

மாடியில், வேணி எவ்வளவோ எடுத்துக் கூறிக் கெஞ்சியும் அவளை ஏற்க மறுத்து விட்டான் அருள்.

"உங்களுக்காக, ஒரு மருமகளா அவ அம்மாவிற்கு மட்டும் இருந்துட்டுப் போகட்டும்! பழைய மாதிரியே இது என் ரூம்... அந்த கெஸ்ட் ரூம் அவளுது! சொல் விடுங்க..."

"என்கிட்ட எதையும் எதிர்பார்க்கக் கூடாது... அதையும் மீறி என்னைத் தொந்தரவு செஞ்சா நான் மனுஷனாவே இருக்க மாட்டேன்!

"அப்புறம் இன்னொரு விஷயம்! அவ கர்ப்பப்பை ரொம்ப வீக்கா இருக்கறதாலே குழந்தை பிறப்பை தள்ளிப்போட சொல்லியிருக்கறதா அம்மாகிட்ட சொல் விடுங்க!"

"நான் இந்த வாரமே டைவர்ஸுக்கு அப்ளை பண்ணிடறேன்! அதுக்குக் கல்யாணம் முடிஞ்சி ஒரு வருஷம் முடிஞ்சிருக்கணும் இல்லையா?"

"அதனால, ஒரு ஆறு மாசம் அவளைப் பொறுத்துக்கச் சொல்லுங்க. அவ விரும்புன விடுதலையைக் குடுத்திடுவேன்!"

வெறுப்புடன் கூறிவிட்டு குளியலறைக்குள் சென்று அவன் கதவை மூடிக்கொள்ள, வேணிக்குதான் பெரும் தவிப்பாய்!



[illegible] மெதுவாக எழுந்து அவர் கீழே சென்றபோது... மிராய் ஒடுங்கிப் போய்ப் படுத்திருந்தாள் தபு!

மெல்ல அவள் நெற்றியை வருடி அவளை ஆறுதல் படுத்தியவர், "எல்லாம் ஒரு நாள் சரியாயிடும்டா! நீ மட்டும் மனசைத் தளரவிடாம அவன் மனசுல இடம் பிடிக்க முயற்சி பண்ணு!

"அப்புறம், தைரியமா இருக்கணும்! என்ன கஷ்டம் வந்தாலும் கோழையா எந்த முடிவையும் எடுக்க மாட்டேன்னு எனக்கு ப்ராமிஸ் பண்ணு!"

சிறு முறுவலுடன் கை நீட்டிக் கேட்டவரிடம் மறுக்கத் தோன்றாமல் தபு தன் கையை எடுத்து அவர் கரத்தின் மீது வைத்தாள்.

அன்றிரவு அவர் சொர்ணத்திடமும் பேசிவிட்டு விடைபெற, வெளியே சென்றிருந்த அருள், இன்னும் வீடு திரும்பி இருக்கவில்லை!

* * *

நாட்கள் விரைய, மாடியிலிருந்த தன் அறையிலேயே தனிமைச் சிறையிருக்க அவளால் முடியவில்லை.

அவள் எதிரே எதிர்ப்படும் போதெல்லாம், அருள் கடுமையுடன் முறைக்க, தன் இயல்பைத் தொலைத்து பயந்து ஒடுங்கி விலகிச் செல்வது வழக்கமாயிற்று!

**"மணவாழ்க்கை என்பது அழகிய மலர்ச் செடியைப் போல்... அதை அன்பெனும் நீர் வார்த்து பார்த்து பார்த்து ஆசையோடு வளர்க்க வேண்டும்."**

யாரோ எழுதிய வரிகள் இன்று நினைவுக்கு வந்தன.

பரஸ்பரம் பேசப்படும் ம[illegible]ம் மௌனப் புன்னகைகளும், செல்லச் சிணுங்கல்களுமே

JUN 12 2010

... மேம்படுத்துமென்பது காலம் கடந்து புரிவதாய்!

ஆனால், தினமும் வந்து சென்ற வேணி தான் அவளிடம் சில திட்டங்களை ஒரு நாள் கூறினார்.

தபு பயத்துடன் மறுக்க, "இப்படியே இருந்தா அப்புறம் ரொம்பக் கஷ்டம்டா... உன்கிட்ட ஒண்ணு சொல்ல மறந்திட்டேன்... அவன் ரகசியமா டைவர்ஸ் கேஸ் பைல் பண்ணிட்டான் தெரியுமா?" என்றதும் ஊழிக்காற்றில் சிக்கிய படகாய் சிதறி சின்னாபின்னமாகிப் போனது அவள் இதயம்!

"அம்மா! நீங்க சொல்றது?" பிடிப்பின்றி அலைபாய்ந்த விரல்கள் தொய்ந்து அவள் அப்படியே சரிய, உடனே தாங்கிக் கொண்டார் அவர்.

"இதோ பார் தபு! முதல்லே இந்த பயத்தை விடு! இந்த வீட்டுக்கு நீ இன்னும் மருமகதான்! அந்த உரிமை இன்னும் உன் கழுத்தில தாலியாத் தொங்கிட்டிருக்கு!"

"தைரியமா அவனை நெருங்கிப் பழகுடா! நீ என்ன யாரோவா? அவன் தாலி கட்டின மனைவி!

"தெரியாம ஒரு பெரிய தப்பை செஞ்சிட்டே! அதை உணர்ந்து இப்ப திருத்தி அவனை உயிரா விரும்பவும் ஆரம்பிச்சிட்டே! அப்புறம் என்ன...?"

"அதை நாம உணர்த்தணும்! அவன் ரூமிலேயே தங்கு... அவன் என்ன உன்னை விரட்டவா முடியும்? அம்மா இங்கே இருக்கறது உனக்குப் பாதுகாப்பு! அவங்களையே ஒரு கேடயமா உபயோகிச்சிக்கலாம்!

"என்னா, அவங்களுக்கு எதிரா நிச்சயமா அருளால எதுவும் செய்ய முடியாது... நீயும் அவனும் பிரிஞ்சி

...வாழறதைச் சொல்லவும் முடியா...
பான்!

"அதைப் பயன்படுத்திக்கோ! அவனை எப்படியாவது உன்னை விரும்பற மாதிரி மாத்திடு! உன் மேல அவனுக்கிருக்கிற காதல் எவ்வளவு ஆழமானதுன்னு எனக்குத் தெரியும்!

"அது நிச்சயமா உன்னை அவன்கிட்டே சேத்துடும்!" உறுதியுடன் முடித்தார்.

# 45

அன்றிலிருந்து அதற்கான வேலைகளை ஆரம்பித்தாள் அவள்.

ஒரு நாள் அருள், மருத்துவமனையிலிருந்து தன் வீட்டிற்கு வந்தபோது, ஹாலிலேயே அவள் காத்திருப்பது தெரிந்தது.

ஆனால், அவளை ஏறிட்டும் பார்க்காமல் அவன் மேலே செல்ல மேசை மேல் சாப்பாட்டை எடுத்து வைக்க ஆரம்பித்தாள் தபு.

பிறகு கீழிறங்கி வந்தவனின் புருவங்கள் சீற்றத்துடன் உயர, "இதென்ன... புதுப் பழக்கம்.. எனக்கு சாப்பிட்டுக்கத் தெரியும்! மத்தவங்க அவங்க வேலையப் பார்க்கலாம்!" கள்ளென்று அடிக் குரலில் சீறினான்.

"இல்லை... அத்தைதான் உங்களை கவனிச்சிக்கச் சொன்னாங்க!"

JUN 12 2010

மெதுவாகக் கூறிவிட்டு, கருமமே கண்ணாகப் பரிமாற ஆரம்பித்தாள்!

"ம்... இந்த அம்மா வேற... சே! போதும் இன்னியோட இதெல்லாம் நிறுத்திக்க!" பற்களைக் கடித்தான்.

"எதை...?" ஒன்றும் புரியாதவளைப் போல் அவள் விழி விரித்துக் கேட்க, ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தவன், வேகமாக சாப்பிடத் துவங்கினான்.

சிறு குறும்புடன் அவனையே ரசித்தபடி அவள் மெய் மறந்திருக்க, திடீரென்று நிமிர்ந்தவனுக்குள், கடும் ரௌத்ரம் பரவுவதாய்!

"என்ன சிரிப்பு! பரிமாறத்தானே நிக்கறே... அந்த சாம்பாரை எடுத்து ஊத்து!" கோபமாய் இரைந்தான்.

அவள் வேகமாகப் பரிமாறும்போதே, சொர்ணத்தின் குரல் கேட்டது!

"அருள் வந்திட்டியாப்பா? சாப்பிடறியா?" அறைக்குள்ளிருந்தபடியே கேட்டார்.

"ஆமாம்மா! நீங்க தூங்குங்க!" என்றான் அவன்.

"தபு இருக்காளாப்பா?"

அவர் கேட்டதும், "அத்தை நான்தான் அவருக்கு சாப்பாடு போட்டுட்டிருக்கேன்" அறை வாசலில் சென்று குரல் கொடுத்தாள்.

"சரி... சரி... அவனை கவனிச்சிக்கம்மா! இனிமே அவன் உன் பொறுப்பு!"

நிம்மதியுடன் ஒலித்த அவர் குரலில், எரிச்சலடைந்த அருள் அவள் புறம் திரும்பினான்.

"அப்படியே எல்லாத்தையும் எடுத்து என் தலையிலே கொட்டு!"

...ளமாய்க் கூறிவிட்டு சாப்பாடு...

நாள்.

உள்ளூர எழுந்த சிரிப்பு குறும்பாய் பீறிட்டு விழிகளில் தவிய, நமட்டுச் சிரிப்புடன் நின்றிருந்தாள் அவள்.

ஏனோ, அவனுடைய சினம்... இன்று அவளுக்கு ஒரு முரட்டுக் குழந்தையின் அடமாய்!

தினமும், சாப்பிட்டு முடித்ததும் சிறிது நேரம் மாடியிலிருந்த ஹாலில் டி.வி. பார்ப்பதோ, சி.டி.யில் பாட்டு கேட்பதோ அவன் வழக்கம்!

அதை அறிந்திருந்ததால், அவன் சாப்பிட்டு முடித்தவுடனே சமையல்காரம்மாவை அழைத்து, டேபிளைச் சுத்தம் செய்யும்படிப் பணித்துவிட்டு, தபு பாலுடன் மாடிக்கு சென்றாள்.

* * *

அருள், சி.டி.யில் இளையராஜா எண்பதுகளில் அழகாய் இசைத்த பாடல்களில் ஆழ்ந்து, தன்னை மறந்து கண் மூடி ரசித்தபடி சாய்ந்திருந்தான்.

சப்தமின்றி அவன் முன்னாலிருந்த டீப்பாயில் பால் டம்ளரை வைத்தவள், வேகமாக அவனுடைய அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டாள்.

பிறகு உடை மாற்றி நைட்டியுடன் அந்த இரட்டைக் கட்டிலில் படுத்தபோது, இன்று என்ன பிரளயம் காத்திருக்கிறதோவென்ற பயம் வருவதாய்!

ஆனால் வேணியின் வார்த்தைகள் தந்த தைரியமும், அவனை மாற்ற வேண்டுமென்ற உறுதியும், அவளை கண் மூடிக் காத்திருக்க வைத்தன.

JUN 12 2010

சிறிது நேரம் கழித்து ஹாலில் பாடல் சப்தம் நின்று போக, அவனுடைய காலடியோசை அழுத்தமாய் அறையை நெருங்க... அவளுடைய இதயம் முரசாய்!

அறைக்குள் நுழைந்து லைட்டைப் போட்டவன், மறுநொடியே திக்கென்று அதிர்ந்து போனான்.

அவனுடைய படுக்கையில் எழிலோவியமாய் கண் மூடி சயனித்திருந்தாள் தபஸ்யா!

உடனே, ஒரு வித மௌனக் கோபத்தோடு அவளை நெருங்கியவன், ''ஏய்...! இங்கே ஏன் வந்து படுத்திருக்கே?'' சீற்றத்துடன் இரைந்தான்.

அப்போது தான் விழிப்பது போல் சோம்பலாக இமை பிரித்தவள், ''ஏன்.. இது நம்ம ரூம்தானே. நான் உங்க ஒய்ஃப்! அது மறந்திடுச்சா? நான் எங்கே படுக்கறது?'' செல்லமாகச் சிணுங்கினாள்.

''ஏய்... இதெல்லாம் என்கிட்டே வேண்டாம்... அப்படியே தூக்கி வெளியே போட்டுடுவேன்! தெரியுமா?''

''சரி வாங்க... தூக்குங்க... எனக்கும் ஆசையாத்தான் இருக்கு?''

குறும்புடன் கண் சிமிட்டிக் கூறினாள்.

''சீ... உனக்கு வெக்கமா இல்லை. இப்படி சொல்ற துக்கு!'' அருவெறுப்புடன் இடுங்கின அவன் விழிகள்!

''இல்லையே!'' தோளைக் குலுக்கி உதட்டைப் பிதுக்கி விட்டு, ''என் வெட்கப்படணும்? நீங்க என் ஹஸ்பெண்ட் தானே?'' சாதுவாகக் கேட்டாள்.

''ம்... மண்ணாங்கட்டி! ஏண்டி என் ரூமுக்கு வந்தே?''

''அத்தைதான் உனக்கு எதுக்கு இனிமே தனி ரூம்! நீ அருணோட அறையிலேயே படுத்துக்கம்மான்னு சொன்னாங்க... அதான்!''

''ப்ச்... இந்த அம்மா வேற விபரம் புரியாம சே!''

கோபமாய் அலுத்தவன், ''சரி! கீழே போய்ப்படு...!'' என்றான் அதிகாரமாக!

''ஊஹூம்... ஏசி வேற எனக்கு குளிரும்! நான் கட்டிலதான் படுப்பேன்! ஏன்... உங்களுக்கு என்ன பயம்? என்னைத்தான் பிடிக்கலைன்னு ஆயிடுச்சி... அப்புறம் என்ன?

''பக்கத்துல படுத்தா மட்டும் பிடிச்சிடுமா?

''நான் பாட்டுக்கு ஒரு ஓரமாப் படுத்துக்கறேன். எனக்கு பயமில்லைப்பா! வேணிம்மா வேற சொன்னாங்க... என் தம்பி ஒரு ரிஷ்ய சிருங்கர் மாதிரி! அவன் உன்னை திரும்பிக் கூடப் பார்க்க மாட்டான்னு!''

அமர்த்தலாகக் கூறிவிட்டு திரும்பிப் படுத்து கண்களை இறுக மூடிக் கொண்டாள்!

''புல்ஷிட்!'' என்ற வார்த்தைகள் சினத்துடன் ஒலித்த மறுகணமே அவன் கோபமாகப் படுத்ததில் படுக்கையே அதிர்ந்து குலுங்கிற்று!

திடீரென்று ஒரு தலையணை இருவருக்கும் நடுவில் தொப்பென்று போடப்பட்டு. பெரும் சீனச் சுவராய்!

உள்ளுக்குள் ரசித்து சிரித்துபடி உறங்க ஆரம்பித்தவள், கனவுகளுக்குள் நுழைந்தபோது. நடுநிசியாகியிருந்தது.

வெகுநேரம் விட்டத்தைையே வெறித்தபடி விழித்திருந்த அருணும் மெதுவாக நித்திரையில் ஆழ்ந்தான்.

JUN 12 2010

"சந்தோஷம் இல்லாத கணவனோ மனைவியோ யாரென்றால்... என்றோ ஒரு நாள் தன் இணை சொன்ன வார்த்தையை... செய்த தவறை... 365-ஆல் பெருக்கிக் கொள்பவர்தாம்!"

அறிஞர் நொட்டேரியலின் வரிகள் இன்று நிஜமாய்!

## 46

மறுநாள் காலையிலிருந்தே அவனுடைய மாற்றம் தெளிவாகத் தெரிய, எரிச்சலாகிப் போனான் அருள்!

எழுந்ததிலிருந்து ஆதர்ச மனைவியாய் தலை குளித்து விட்டு தன் பின்னோடு நிழலாய்த் தொடர்ந்தவளைத் திரும்பி வெறுப்புடன் எறிட்டான்.

"என், என் பின்னாடியே வர்றே? இப்படியெல்லாம் செஞ்சு என் மனசில இடம் பிடிக்கலாம்... என் கூட வாழ்ந்துடலாம்னு கனவெல்லாம் காணாதே... புரியுதா?

"என்னோட வேலைகளைப் பாத்துக்க எனக்குத் தெரியும்... இந்த நடிப்பெல்லாம் வேண்டாம்!

"இது ஒன்ஸ் ஃபார் ஆல் கட்தான்... அதுவும் ஃபைனல் கட்! புரியுதா?"

உறுமிவிட்டுச் சென்றவனை கண்ணீர் சுமந்த விழிகளுடன் தொடர்ந்தபடி உறைந்து நின்று விட்டாள் அவள்.

எந்தப்புறம் திரும்பினாலும் எல்லாக் கதவுகளும் ஜன்னல்களும் அடைக்கப்பட்டு, சுவாசிக்க வழியின்றி மூச்சு முட்டுவதைப் போல் திணறியது!

உடனே தன் செல்லை எடுத்து ...

...ற்று அவர் வேறு திட்டம் ஒன்றைக் கூறினார்.

அந்த வகையில் முயன்று பார்க்கலாமென்று தோன்றியபோதே, இனம் புரியாக் கவலை வந்தது!

* * *

மறுநாளே, அதை செயல்படுத்தத் துவங்கினான் அவள்.

அவன் மருத்துவமனைக்குக் கிளம்பும்போது, அழகிய காட்டன் புடவையில் தன்னைப் பின் தொடர்ந்து காரில் ஏறியவளை, புரியாமல் நோக்கினான் அருள்!

"என்ன? எதுக்கு என் கூட வரே? அங்கிளைப் பாக்க ஜுமா?" அடிக்குரலில் சீறினான்.

"இல்லை! நானும் ஹாஸ்பிடலுக்கு வர்றேன்.. இன்னியிலருந்து அட்மினிஸ்ட்ரேஷன், இன்டீரியர்னு அங்கே வேற சில மாற்றங்கள் எல்லாம் செய்யப் போறேன்!"

டிரைவரின் முன்பாக ரசாபாசங்கள் செய்ய விருப்பமின்றி, ஜன்னல் வழியே வெளியில் திரும்பியவனுக்குள், எரிதழலாய் கோபத் தனல் பரவுவதாய்!

* * *

அன்றிலிருந்து மருத்துவமனையில் நிறைய மாற்றங்களைச் செய்ய ஆரம்பித்தாள் அவள்.

மருத்துவமனையில் உடன் வந்து தங்குகின்ற அட்டெண்டர்களுக்கு படிப்பதற்காக அங்கு ஒரு சிறு லைப்ரரி அமைக்கும் கோரிக்கையை முதலில் தயார் செய்தாள்.

அது அருளின் பார்வைக்கு வந்தபோது, அவனுக்கே சற்று வியப்புதான்!

JUN 12 2010

இது யாருடைய யோசனை என்று கேட்கும் போதே ''மேடத்துடையது டாக்டர்'' செகரட்டரி பவ்யமாகக் கூறினார்.

''சரி சரி அதெல்லாம் நான் அப்புறம் பாக்கறேன்'' என்றவன் செல்லை எடுத்து அவளுக்கு உடனே தொடர்பு கொண்டான்.

அவள் எடுத்ததும், ''ஏய்... உன் மனசுல நீ என்ன நினைச்சிட்டிருக்கே?'' எரிச்சலாகக் கேட்டான்.

''ம்... உங்களைத் தான்னா நம்புவீங்களா? ஆனா உண்மை அதுதான்!'' குறும்புடன் வந்தது அவள் குரல்!

''ஐ ஹேட் யூ'' கன்னென்று கூறிவிட்டு போனை வைத்து விட்டான் அவன்!

ஆனால் மறு வாரமே மருத்துவமனையில் நிகழ்ந்திருந்த உள் அலங்காரங்கள் மிக அழகாய்... ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலுக்குள் நுழைந்த உணர்வு!

உடனே அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீஸரை அழைத்த போது, எல்லாமே தபஸ்யாவின் திட்டம் என்பது புரிவதாய்!

அதை ஏற்கவும் முடியாமல், பாராட்டவும் மனமின்றித் தவித்தவன், அவளிடம் பேசுவதையே தவிர்க்க ஆரம்பித்தான்.

வீட்டிலும் அவளுடைய அருகாமை வெகுவாய் பாதிக்க, மருத்துவமனையிலும் குறுகிய நாட்களிலேயே அவள் எல்லோர் மனதிலும் இடம் பெற்று விட, அருள் திணறித் தான் போனான்.

வேணியும் இப்போதெல்லாம் தபுவிற்கு சாதகமாகவே பேச சொர்ணத்திற்கு எதுவும் தெரியாததால், மனம் விட்டுப் பேச வழியும் இல்லாது போயிற்று.

* * *



மருத்துவமனையில், லைப்ரரி அமைக்கும் பொறுப்பை ஒரு நிறுவனம் ஏற்க, அதற்கான ஏற்பாடுகளும் நடந்தன!

அப்போதுதான் ஒரு நாள் அவளை அழைத்தான் அருள்!

எதற்காகக் கூப்பிட்டிருப்பானென்ற கேள்வியும் மகிழ்ச்சியுமாக தபு அவனுடைய ரெஸ்ட் ரூமிற்குள் நுழைந்தாள்.

சட்டென்று எழுந்து சென்ற அருள் ஜன்னல் வழியே வெளியே தெரிந்த போக்குவரத்து நெரிசலைப் பார்வையிடத் துவங்கினான்!

''அருள்! எதுக்கு என்னை வரச் சொன்னீங்க?''

மெதுவாகக் கேட்டவளைத் திரும்பி ஏறிட்டும் பார்க்காமல், ''நேபாளத்திலிருந்து செக் அப்புக்காக, கணேஷும் மாயாவும் வராங்க. கணேஷுக்கு திடீர்னு ஏதோ ப்ராப்ளமாம்! அதனால தாஜிலே தங்கிட்டு இங்கே ட்ரீட்மெண்ட் பண்ணிக்கப் போறாரு.

''மாயா கூட நீ இருந்தா அவங்களுக்கு கொஞ்சம் தெம்பா இருக்கும்! இருப்பியா... ஆஞ்சியோகிராம் செய்யலாம்னு இருக்கோம்!

''நம்ம விஷயம் அவங்களுக்குத் தெரிய வேண்டாம்! நீ போகலாம்!''

ஒரு பெருமூச்சுடன் முடித்தவன், கதவு லாக் செய்யப்படும் ஒலியறிந்ததும் மெதுவாகத் தோளைக் குலுக்கியபடித் திரும்பினான்.

எதிர்பாராத விதமாக குறும்புப் புன்னகையுடன் கைகளை மார்புக்குக் குறுக்கே கட்டியபடி [illegible] தபு!

மறு நொடியே பார்வையை திசை மாற்றியவனுடைய முகம், மேலும் இறுகுவதாய்!

''அருள்! நான் உங்க ஒய்ஃப்! என்கிட்டே இதை சொல்ல ஏன் இவ்வளவு தயக்கம்? உரிமையோடவே சொல்லலாமே?''

மென் குரலில் கேட்டபடி அருகே வந்தவள், திடீரென்று அவன் கழுத்தை சுற்றி கைகளைக் கோர்த்து மாலையாக்கி, பாதங்களை நுனியில் பதித்து எம்பி, அவனுடைய கன்னத்தில் மெல்ல முத்தமிட்டாள்.

மறுகணமே கள்வெறி கொண்ட மனதை இயல்பாக அடக்கியவன், வேகமாக அவளைப் பிடித்து ஒதுக்கித் தள்ளிவிட்டு அந்த அறையை விட்டே வெளியேறி விட்டான்.

அவன் வெளியே சென்றதும் அதிர்ந்த கதவு, அவள் இதய ஒலியாய்!

''ஒரு வார்த்தை இன்று நீ சொன்னால் என் வலிகள் போய்விடும். ஒரு பார்வை இன்று நீ பார்த்தால் என் காயங்கள் ஆறிவிடும்!''

இதயம் மௌனமாய் கோரிக்கை விடுக்க, விழியோரங்களில் கண்ணீரின் அரங்கேற்றம்!

''கடவுளே! என்னை மன்னித்துவிடு! நான் பெரும் தவறு செய்து விட்டேன்!'' மறுகியது நெஞ்சம்!

உடனே கிளம்பி கடைக்குச் சென்று, அழகிய குந்தன் வேலைப்பாடுகள் செய்த பட்டுப் புடவையையும், அதற்குப் பொருத்தமாக குந்தன் நகைகளையும் மாயாவிற்காக வாங்கி வைத்தாள் தபஸ்யா!



# 47

மறுநாள் காலையிலேயே மாயாவும் கணேஷும், அவள் தம்பி பசுபதியும் மருத்துவமனைக்கு வந்து விட்டனர்.

பட்டாம்பூச்சியாய் அழகு முறுவலுடன் அந்த லாபியில் சுற்றித் திரிந்த தபுவைப் பார்த்தபோது, மாயாவிற்கே வியப்பாய்!

அவர்களைக் கண்டதும், ''அக்கா...'' வென்று ஓடி வந்து கைகளைப் பிடித்து வரவேற்றவள், ''வாங்க'' என்று கணேஷை வரவேற்று நலம் விசாரித்தாள்.

பிறகு அவர்களை, அருளின் அறைக்கு அழைத்துச் சென்றவள், அவர்கள் பேசட்டுமென்று அருகில் நின்று கொண்டாள்.

கணேஷை அணைத்து அமர வைத்தவன், எல்லா ரிப்போர்ட்களையும் பார்த்துவிட்டு, தபஸ்யாவிடம் திரும்பினான்.

''தபஸ்யா! சங்கர்கிட்ட எல்லாம் சொல்லியிருக்கேன்.. எல்லா டெஸ்ட்டும் எடுக்க ஆரம்பிச்சிடலாம்னு சொல்லு... மாயாவோட துணைக்கு இரு!'' என்றவன் கணேஷிடம் திரும்பினான்.

''கணேஷ் டோண்ட் ஒர்ரி! எல்லாமே ரொட்டீன் டெஸ்ட் தான்... பார்ப்போம்! ஒண்ணும் ப்ராப்ளம் இருக்காதுன்னு தான் நினைக்கிறேன்! ஆல் தி பெஸ்ட்'' என்றபடி எழுந்து கை குலுக்கி விட்டு, சர்ஜரிக்குச் சென்றான்.

JUN 12 2010

* * *

அன்று முழுவதும், கணேஷுக்கு எல்லா பரிசோதனைகளும் செய்யப்பட, தபுவும் அவர்களுடன் கூடவே இருந்தாள்.

டெஸ்டுகள் முடிந்ததும், அவர்களுடன் ஹோட்டலுக்குச் சென்றவளை, நன்றியுடன் கைப்பிடித்துக் கொண்டாள் மாயா.

"தேங்க்யூ தபு! ரொம்ப பயந்திட்டே வந்தேன்... ஆனா நீங்க கூடவே இருந்தது எவ்வளவு தெம்பா இருந்தது தெரியுமா?"

கண்களில் ஒருவித சோகம் தெரிந்தது அவளிடம்!

"அக்கா! கணேஷ் அண்ணாவுக்கு எதுவுமே ஆகாது... கவலைப்படாதீங்க! அருள் எல்லாம் பாத்துப்பாரு!" சிறு முறுவலுடன் ஆறுதல் கூறினாள்.

"தேங்க்யூ தபஸ்யா!

"அந்த நம்பிக்கையிலதான் நான் தைரியமா இருக்கேன்! அருள் சார் அம்மா எப்படி இருக்காங்க?"

"அத்தை நல்லாருக்காங்க... ட்ரீட்மெண்ட் முடிஞ்சி சாப்பிட ஒரு நாள் நம்ம வீட்டுக்கு வரணும்!"

ஆர்வத்துடன் அழைத்தவள், கணேஷிடமும் விடை பெற்று காரில் திரும்பியபோது, ஏதோ புது பலம் வந்திருந்தது.

* * *

மறுநாளே, கணேஷ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அடுத்த நாள் காலையில் 'ஆஞ்சியோகிராம்' செய்வதாக முடிவு செய்திருந்தான் அருள்.



காலையிலேயே கிளம்பி, மருத்துவமனைக்கு வந்த தபு மாயாவுடனே துணையிருந்தாள்.

'ஆஞ்சியோ கிராம்' முடிந்து கணேஷ் அறைக்கு வந்ததும் கூடவே வந்தான் அருள்!

"மாயா! ஒண்ணும் ப்ராப்ளமில்லை! மைல்ட் பிளாக் தான்! மெடிசன்ஸ்லேயே சரி செஞ்சிடலாம்! டயட், வாக்கிங், ஃபாலோ பண்ணணும்! டோண்ட் ஒர்ரி!"

சிறு புன்னகையுடன் அவன் பகர, பெரும் தைரியம் வந்தது மாயாவிற்கு!

"தேங்க்யூ டாக்டர்!"

விழிகள் நன்றியுணர்ச்சியில் கசிந்துருகின!

* * *

மறுநாளே கணேஷ் டிஸ்சார்ஜ் செய்யப்பட பசுபதி மட்டும் ஊருக்குத் திரும்பி விட்டான்.

இருவரும் ஒரு வார ஓய்விற்குப் பிறகு காட்மாண்டுவிற்குக் கிளம்பத் திட்டமிட்டிருந்தனர்.

தினமும் ஹோட்டலுக்குச் சென்று இருவரையும் பார்த்து விட்டு வருவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள் தபு.

ஒருநாள் மட்டும் கணேஷை ஹோட்டலில் விட்டு விட்டு ஷாப்பிங் செய்ய முடிவெடுத்திருப்பதாக மாயா கூறினாள்.

கணேஷ் தனியாக இருக்க வேண்டாமென்றும், தங்கள் வீட்டில் அவரை இருக்க வைத்தால், சொர்ணத்துடன் பேசியபடிப் பொழுது [illegible] கூறினாள் தபு!

JUN 12 2010

அதையே செயல்படுத்தி அன்று காலையிலேயே கணேஷை தன் வீட்டிற்கு அழைத்து வந்தாள் தபு!

எளிமையான மதிய விருந்திற்கு ஏற்பாடு செய்துவிட்டு அவன் மாயாவுடன் செல்ல, சனிக்கிழமை என்பதால், மதியம் சாப்பிட வருவதாகக் கூறியிருந்தான் அருள்.

டிசைனர் புடவைகள், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், கைவினைப் பொருட்கள் என்று வீட்டில் அனைவருக்கும் வாங்கிய மாயா, அவளுக்கும் ஒரு டிசைனர் புடவையைப் பரிசளித்தாள்.

மதியம் வீட்டிற்கு வந்தபோது அருளும் கணேஷும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

"வாங்க! ரெண்டு மணி வரைக்கும் உங்களுக்காகக் காத்திட்டிருந்தோம்... நீங்க வரலை... லேடீஸ் ஷாப்பிங் போனாதான் உலகையே மறந்திடுவாங்களே... ஹஸ்பெண்ட் நினைப்பா இருக்கப் போகுதுன்னு சாப்பிட ஆரம்பிச்சிட்டோம்!"

வெகு நாட்களுக்குப் பிறகு, அருளிடம் இயல்பான கேலியும் குறும்புப் புன்னகையும்! சிறு நம்பிக்கைத் துளி ஒன்று பெரும் தூறலாய் விழிகளில் சிதற, அவனையே ரசித்தபடி ஒரு கணம் உறைந்து நின்று விட்டாள் தபு!

அதை கவனித்த மாயாவின் மனதிலோ, மகிழ்ச்சிச் சாரங்கள்!

"என்ன டாக்டர் சார்! முன்ன மாதிரி இப்பல்லாம் எங்க தபஸ்யாவை நீங்க கவனிக்கிறதில்லை போலருக்கு! பாவம் அவங்க... எவ்வளவு ஏக்கத்தோட நிக்கறாங்க பாருங்க."



குறும்புடன் கேலி செய்ய, சட்டென்று அவன் முகம் இறுகியது!

"ஏன்... அவ என்னைப் பத்தி ஏதாவது சொன்னாளா?" அடக்க முடியாமல் கேட்டு விட்டான்.

"ஆமாம்! நிறைய சொன்னாங்க!"

மாயா கூறியதும், அவன் விழிகள் கூரிய அம்பாய் அவள் மீது பதிந்து ஒற்றைப் புருவம் சீற்றத்தில் உயர்ந்தது.

"டாக்டர்... பொறுமை... பொறுமை! என்ன சொன்னாங்கன்னு இன்னும் நான் சொல்லலையே!

"தன் கணவர் ஒரு சூப்பர் மேனாம்! பறக்க மட்டும் தான் தெரியாதாம்!

"மத்தபடி, ஏழைங்களுக்கு சர்ஜரி பண்றப்ப கன்செஷன் தரதாகட்டும், அநாதை ஆசிரமம் நடத்திறதிலாகட்டும்... மாசத்துக்கு ஒரு முறை இலவச ஆபரேஷன் செய்யறதாகட்டும்... வருஷம் ஒரு தடவை ஏழைங்களுக்கு இலவசமா திருமணம் முடிக்கறதாகட்டும்னு ஒரு பெரிய லிஸ்டே போட்டாங்க!

"கேட்டுக் கேட்டு காதே மரத்துப் போச்சு!"

அவள் முடித்ததும் நிம்மதிப் பெருமூச்சுடன் நிமிர்ந்தவனுக்குள், நேபாளத்தில் இருவரும் இணைந்து சுகித்திருந்த இனிய ஞாபகங்கள்... பனி மூட்டமாய் சிலிர்ப்பாய் சூழத் துவங்கின!

உடனே தலையைக் குலுக்கி அதை விடுவித்தவனுடைய இதயத் தடாகத்தில் பெரும் சலன அலைகள்!

பிறகு அனைவரும் சாப்பிட்டு முடித்து விருந்தினர் அறைக்குச் சென்று அரட்டை அடி[illegible] தெரியாமல் சிறகு கட்டிப் பறந்தது!

JUN 12 2010

அந்தச் சூழலில் இருவருக்குமிடையே நிகழ்ந்து கொண்டிருக்கும் பனிப் போரை அறியாத மாயா, அந்தக் கேள்வியைக் கேட்டு விட்டாள்.

''தபு! எப்போ எங்களுக்கு குட் நியூஸ் சொல்லப் போறீங்க? குட்டி டாக்டரைப் பாக்க அத்தை நாங்கல்லாம் ரொம்ப ஆசையா எதிர்பார்த்திட்டிருக்கோம்!''

ஆர்வத்துடன் அவள் கூற, தபஸ்யா செய்வதறியாது விழிக்க, அருளின் விழிகள் வன்மத்துடன் இடுங்கின!

அவள் உடலும் உள்ளமும் பதறும் போதே, அவன் வெடித்து விட்டான்!

அதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரம், வெறுப்பு, ஏமாற்றப்பட்ட காயம் எல்லாமாக சேர்ந்து வெடித்துச் சிதறி விட்டான்.

''சாரி மாயா... அதுக்கு வாய்ப்பே இல்லை. அதுவும் இவ மூலமா! எங்களுக்கு இன்னும் மூணு மாசத்துல டைவர்ஸ் ஆகப் போகுது!''

ஆழமான குரலில் கூறியவன், ''சாரி...'' என்றபடி எழுந்து வேகமாக வெளியே சென்று விட்டான்.

உடனே விசும்பலுடன் உருக்குலைந்து அழ ஆரம்பித்த தபுவை ஆதரவாக அணைத்துக் கொண்டாள் மாயா!

## 48

பிறகு வெகு நேரம் அவள் அழுது முடிக்கும் வரை காத்திருந்தவள், மெல்ல அவளிடமிருந்து விஷயத்தை கிரகிக்க ஆரம்பித்தாள்.



பொங்கிப் பெருகிய அழுகையின் நடுவே, தபு கூறிய நிகழ்வுகள் இருவரையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்குவதாய்!

''கடவுளே!'' என்றபடி கணேஷ் ஓய்ந்து அமர, மாயாவின் விழிகளிலோ கண்ணீர்ச் சரங்கள்!

இதை எப்படித் தீர்ப்பது... அருளுக்கு அவள் மனதை எப்படிப் புரிய வைப்பது என்ற பெரும் குழப்பம்!

ஆனால், வேணி எவ்வளவோ பேசியும் பலனில்லை என்று அறிந்தபோதே அவனுடைய கோபத்தின் அளவு இமயமாய்த் தெரிவதாய்!

இருவருமே பெரிதும் உடைந்து போனாலும், தபுவை ஆறுதல் படுத்தும் முயறசிகளில் இறங்கினர்.

மறுநாள் மாலையில் கிளம்புவதால், மதியமே சென்று வேணியையும் பார்த்துப் பேசி விட்டு வந்த மாயாவிற்குள், பெரும் வேதனை!

ஆனால் அருளிடம் பேசிய கணேஷ் ஒரு புது உத்தியைக் கையாண்டார்.

''டாக்டர் சார்! தப்பு நடந்தது நடந்துடுச்சி! அவங்களை டைவர்ஸ் பண்ணினப்புறம், நீங்க கட்டாயம் வேற ஒரு பொண்ணைக் கல்யாணம் செஞ்சுக்கணும்!

''உங்களை மாதிரி ஒரு நல்ல மனிதரை இந்த சமுதாயத்துக்கு உருவாக்கித்தரணும்...'' மெதுவாகக் கூறினார்.

''ஹூம்... என் வாழ்க்கை முடிஞ்சிடுச்சி கணேஷ்! இனிமே அது ஒரு பாலை மா[illegible] அதிலே [illegible] துளிர்க்கணும்கிறது எல்லாம் நடக்காது!

JUN 12 2010

"ஆனா நான் ஒரு தீர்க்கமான முடிவெடுத்திட்டேன்! அவளைப் பிரிஞ்சப்புறமும் தனியாத்தான் இருப்பேன்.

"என்னை மருத்துவத் துறைக்கு அர்ப்பணிச்சிடலாம்னு இருக்கேன்! அதை விடப் பெரிய சந்தோஷம் வேற என்ன இருக்கு?"

விரக்தியும் வேதனையுமாகக் கேட்டவனுடைய முகத்தில், காயப்பட்ட வலியின் தடம் அதிகமாய்!

"அது சரிதான் டாக்டர்! ஆனா, உங்களுக்கு அப்புறம்... உங்க குடும்பம் வாரிசில்லாம நின்னுடக் கூடாதே!"

தயக்கத்துடன் கூறிய கணேஷை ஏறிட்டவனுக்குள், மெலிதான சங்கடக் குமிழ்கள் உற்பத்தியாகின!

"ம், பார்ப்போம்" என்றபடி அவன் எழுந்து செல்ல, அந்த வார்த்தைகள் பெரும் வேதமாய்!

பிறகு மாயாவிற்கும் கணேஷிற்கும் உயர்ந்த பரிசளுடன் அந்தக் குடும்பம் விடை கொடுத்தது.

* * *

மாயாவும், கணேஷும் ஊருக்குக் கிளம்பிவிட, அதற்குப் பிறகு தொடர்ந்த தனிமையில் பெரிதும் உடைந்து போனது தபுதான்!

மறுநாள் மாலையே வேணியை பார்க்கச் சென்றவளுக்கு நம்பிக்கையூட்டுவதைப் போல் மாயா கூறிய செய்தி.

கணேஷ் அருணுடன் பேசியதைப் பற்றி மாயா வேணியிடம் கலந்தாலோசித்த பிறகே ஊருக்குக் கிளம்பியிருந்தாள்.



பிறகு வேணியும் அவனிடம் இதையே வற்புறுத்த, தாங்க முடியாமல் வெடித்தான் அவன்!

"அக்கா! அவளைப் பத்தின பேச்சை விடுங்க! வேணும்னா அவ என் குழந்தையை சுமக்க மறுத்து அருவெறுத்து கலைக்க முயன்றதுக்கு, அவளுக்கு ஒரு சரியான பதிலடி குடுக்கலாம்!

"இன்விட்ரோ ஃபெர்டிலைசேஷன் மூலமா, ஒரு வாடகைத் தாயை ஏற்பாடு செஞ்சி... ஒரு குழந்தையைப் பெத்து அவ முகத்தில கரியைப் பூச வேண்டியதுதான்!

"இது அவளுக்கு நான் தரப் போற பெரிய தண்டனை!"

ஒருவித வெறியும் வன்மமுமாய்.

அவன் கூற, உடனே வேணிக்குள் மத்தாப்பூவாய் சிதறியது ஒரு திட்டம்!

அதை அறியாமல் அவன் பேசிக் கொண்டே சென்றான்!

"என் குழந்தையை சுமக்க மறுத்தவ அவ! நீ இல்லேன்னா என்னால முடியாதான்னு ஒரு சவாலா என் குழந்தையை அவகிட்டே காட்டணும்க்கா."

பெரும் வேகம் அவனிடம் தெரிந்தது.

நினைவுகளிலிருந்து கலைந்து நிமிர்ந்தவர், "தபும்மா அருணுக்கு உன் மேல இருந்த பிரியம் கொஞ்சம் கூடக் குறையலைன்றதுதான் என் கணிப்பு!" என்றவர் அவனிடம் பேசியதைக் கூற அவள் முகம் வெளுத்தது.

"தபு நீ தப்பா நினைச்சிக்கலைன்னா நான் ஒண்ணு சொல்லவா? உனக்கு டைவர்ஸ் ஆகட்டும்! [illegible] அவன் வேற ஒரு பொண்ணை[illegible]க்க மாட்டேன்னுட்டான்.

''அதனால அந்த வாடகைத் தாயா உன்னையே மாத்துறேன் நான்! உனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லியே?'' தவிப்புடன் கேட்டார்.

தன்னைத் தவிர வேறு பெண்ணை அவன் மனைவி யாக ஏற்க மறுத்ததும், இந்தத் திட்டமும் சிலிர்ப்பாய்!

உடனே அவளுடைய உயிரில் கலந்தது, ஒரு இனிய பரவச உணர்வு!

விழிகள் மின்மினியாய் ஒளிர, ''இது எனக்கு கிடைக்கப் போற பரிசும்மா! எனக்கு என்ன அப்ஜெக்ஷன் இருக்கப் போகுது!

''ஹூம்... பெக்கர்ஸ் கான்ட் பீ சூசர்ஸ்''னு சொல்லு வாங்க! பிச்சைக்காரங்களுக்கு இதுதான் வேணும்கிற சாய்ஸ் கிடையாது! எது தட்டிலே விழுதோ அதைத்தானே சாப்பிடணும்!''

''நல்லவேளை என் தட்டிலே பெரிய விருந்தே வந்து விழுந்திருக்கு... எப்படி மறுப்பேன்!'' குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

அவளை ஆதரவோடு அணைத்து சமாதானப்படுத்திய வேணிக்கோ, பெரும் பரிதாபமாய்!

இயல்பான இல்லறத்தில் இனிதாக ஜனித்திருக்க வேண்டிய ஒரு சிசு, சோதனைக் குழாயில் செயற்கையாக வளர நேர்ந்திருக்கிறதே வென்ற கவலை!

ஆனால், விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் எவ்வளவு பெரிய இமாலய உயரத்திற்கு உலகம் சென்றிருப்பது புரிவதாய்!

ஆனால், இந்த மூன்று மாதத்திற்குள் எப்படியாவது அவனை சமாதானப்படுத்த முயற்சி செய்ய வேண்டு மென்ற உறுதி அவளிடம்!



# 49

ஒரு நாள் இரவு, பவர் கட்டாகியிருக்க, வேண்டு மென்றே யூ.பி.எஸ். மூலம் லைட்டைப் போடாமல் ஒற்றை மெழுகுவர்த்தியை டீபாயின் நடுவில் ஏற்றி வைத்து அறையில் படுத்தபடிக் கண் மூடிக் காத்திருந்தாள் அவள்.

வேகமாகக் கதவைத் திறந்து உள்ளே வந்தவன், புருவ மத்தியில் சிறு நெறிப்புடன் உள்ளே ஏறிட்டாலும், அந்த அறையின் அழகு ரம்யமாய்...!

இதுவரை ரசிக்காத ஒரு கோலத்தில் தபுவை ஒரு தேவதையாய் அந்த மெல்லிய ஒளி அறிமுகப்படுத்த, உடனே இறுகியது மனது!

ஆனால் வாழ்க்கையில் இந்த சிறிய மாற்றங்களையும், சிறு சிறு சந்தோஷங்களையும் இப்போது ரசிக்கும் நிலை யில் இல்லாததால் பேசாமல் படுத்து விட்டான்.

பிறகு அவனும் உறங்கி விட, வழக்கம் போலத் திரும்பிப் படுத்தவள் உறக்கத்திலேயே அருகில் கிடந்த தலையணை என்று நினைத்து அவனை இறுகப் பிடிக்க, சட்டென்று விலக்கி உதறி எறியப்பட்டாள்.

ஒன்றும் புரியாமல் மலங்க மலங்க விழித்தபடி எழுந்த வளின் மேல் கூர் வாளாய் எறியப்பட்டன வார்த்தைகள்!

''ஏய்... உனக்கு வெக்கமா இல்லை! எனக்கு தான் உன்னைப் பிடிக்கலையே... [illegible] செஞ்சிருக்கேனே!



JUN 12 2010

...கட்டிப் புடிச்சா மயங்கிடுவேன்னு நினைப்பா? இதுக்கு வேற யாரையாவது முயற்சி பண்ணு! என்கிட்டே வேண்டாம்!''

அவனுடைய வார்த்தைகள் கூரிய முள்ளாய் இதயம் தைக்க, அந்தப் பெண் நெஞ்சம் ஊமையாய் அழுதது!

''கடவுளே! அன்று நேபாளத்தில் தெரியாமல் உன்னிடம் வேண்டிக் கொண்டு விட்டேன் கால பைரவரே! என்னை மன்னித்து விடு! என் கணவரின் மனதை மாற்றி என்னை அவருடன் இணைத்து வை!''

பெரும் கோரிக்கையுடன் கன்னத்தில் வேதனையுடன் வழிந்த கண்ணீர் அவன் பெயரெழுதுவதாய்!

உடனே விதிர்ப்புடன் எழுந்தவள், மறுகணமே தன் தலையணை போர்வையுடன் அடுத்த அறைக்குச் சென்று விட்டாள்.

நெஞ்சம் கூனிக் குறுகி கூசிப் படபடக்க, வேதனையுடன் பரிதவித்து நின்றது. அந்தப் பெண்மை!

விழிகளுக்குள் விழுந்த மண்துகளாய் அவன் செயல் உறுத்த இரவு முழுவதும் உறங்காமல் அழுதபடி விழித்திருந்தாள் தபு!

காலையில் வெகு நேரமாகியும் அவள் எழுந்து வராததால் அவளைத் தேடி வந்து விட்டார் நல்லசிவம்!

கடும் காய்ச்சலுடன் அவள் அரற்றியபடிப் படுத்திருந்த கோலம் பதைக்கச் செய்ய, உடனே வேணிக்கு போன் செய்தார்.

காய்ச்சலின் உச்ச வேகத்தில் மீண்டும் பிதற்ற ஆரம்பித்த தபுவிடமிருந்து, மடை திறந்த வெள்ளமாய் நேற்றைய நிகழ்வுகள் சிதறின.

வேதனை... அருளிடமிருந்து ... ஒதுங்... தனறிலிருந்து...
...னாள் தபஸ்யா!

அவன் வீட்டிற்கு வருகின்ற நேரங்களில் சொர்ணத்துடனே பொழுதைக் கழித்தவளுக்கு, அதற்கும் ஒரு முடிவு வந்தது.

* * *

அவர்களுடைய முதல் திருமண நாளுக்கு பத்து நாட்களே இருந்தன.

ஒரு நாளிரவு, ஆழ்ந்த உறக்கத்தில் யாரோ தன்னை அழைப்பதை உணர்ந்து சோம்பலுடன் கண் விழித்தால் எதிரே பதட்டத்துடன் நின்றிருந்தாள் சொர்ணத்தை கவனித்துக் கொள்ளும் நர்ஸ் பிரேமா!

''தபும்மா! அம்மா... நம்மையெல்லாம் விட்டுட்டு!'' முடிக்க முடியாமல் தேம்பினாள்.

வேகமாக எழுந்தவளுக்கு கனவுகள் கலைந்து கண்ணீர் தளும்ப, படிகளில் விரைந்து இறங்கினாள்.

அருள், கலங்கிய முகத்துடன் தாயின் கரத்தை பற்றியபடி இறுகி அமர்ந்திருக்க, மீளாத் துயிலில் ஆழ்ந்திருந்தார் சொர்ணம்!

''அத்தை...''

என்ற அலறலுடன் மயங்கிச் சரிந்தவளை, பிரேமா தாங்கிக் கொள்ள பிறகு நடந்த எல்லாமே ஒரு தீக்கனவாய்!

வேணியும் நல்ல சிவமும் எல்லாக் காரியங்களிலும் பொறுப்பேற்க, பிரமை பிடித்தாற் போலிருந்தாள் தபு!

விநாயகமும் அங்கேயே வந்து தங்கி விட, வேணியும் விநாயகமும் உடனிருந்தது அருளுக்கும் பெரும் ஆறுதலாய்!

JUN 12 2010

ஒரு மனைவி என்ற பெயரில் அவனருகில் நின்று எல்லாக் காரியங்களும் செய்தாலும், உணர்வுகள் மரத்திருந்தன!

தன்னிடம் இந்த வீட்டில் அன்பு செலுத்திய ஒரே ஒரு ஜீவனும் தொலைந்து போனதைப் போல்!

அருளும், தாயின் இழப்பில் மிகவும் உடைந்திருக்க, ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லி தேற்றிக் கொள்ள வழியில்லா ஒரு கொடுமையான நிலை அங்கு!

* * *

அவனுடைய முதல் திருமண நாளும் வர, சொர்ணத்தின் காரியம் முடிந்திராததால், அதுவும் எந்தவிதக் கொண்டாட்டமுமின்றிக் கடந்தது.

அவர்களுடைய விவாகரத்திற்கான கேஸ் குடும்ப கோர்ட்டிற்கு வந்து விட்டதாக ஒரு நாள் வேணியின் மூலமாகத் தெரிவித்தான் அருள்.

எந்தவித உணர்ச்சியுமின்றி, அதை ஏற்க முடியாமல் அவள் துகள் துகளாய் சிதற கோர்ட்டில் தனக்கு அவனுடன்தான் வாழ விருப்பமென்று அடித்துக் கூற வேண்டும் போல்!

ஆனால் அவன் விரும்பியதைக் கொடுத்து விட... அவன் நிம்மதியாக வாழ்வதற்கு தன்னால் முடிந்ததைச் செய்ய மனம் ஏக்கத்துடன் விழைந்ததால், அதையும் அளித்து விட்டு நடைப்பிணமாய் வீடு வந்தாள்.

அவனுடைய வக்கீல் கோர்ட்டில் முதன்மையாய் எடுத்துக் கொடுத்த கருச்சிதைவுக் காரணம் பெரிய சாட்சியாகிவிட, சுலபமாகவே இருவருக்கும் மண விடுதலை கிடைத்தது!

ஆனால் அவள் பிரிந்து சென்ற அன்று... முதல் முதலாகத் தான் ஒரு ஆண் என்பதை மறந்து தனிமையில் உடைந்து சிதறி அழுதான் அருள்!

* * *

விநாயகம்தான் எல்லாவற்றையும் அறிந்ததும் தேற்று வாரின்றி ஓய்ந்து போனார்.

தபு எதையும் உணர வகையின்றி, சிலையாய் உணர்வுகளைத் தொலைத்திருந்தாள்.

தபுவையும், அவனுடைய கோலத்தையும் கண் கொண்டு பார்க்க இயலாமல் ஒரு தந்தையாய் அவர் தவிக்க,வேணியின் மூலமாகத்தான் எல்லா விபரமும் தெரிந்தன!


தன் மகள் அறியாமல் செய்த தவறின் அளவு புரிய, அருளிடம் சென்று பேசுவதற்கே தர்ம சங்கடமாய்!

எதைப் பேசுவது... என் குழந்தையை உன் மகள் சுமக்க விரும்பவில்லையே என்று அவன் கேட்டால்... அது குழந்தையாவெனத் தெரியாமலே அழிக்க மாத்திரைகளை உட்கொண்ட மகளிடம் பரிதாபமே வந்தது!

உடனே அருள்மொழியிடமும் சொர்ணத்திடமும் மானசீகமாக வேண்டிக் கொள்வதைத் தவிர அவரால் வேறு எதுவும் செய்ய இயலாமல் போனது!

ஆனால், இருவரையும் எப்படியாவது சேர்க்க வேண்டுமென்ற உறுதியுடன் வேணியிடம் பேசினார்.

அப்போதுதான் மாயாவும் கணேஷும் கூறியது நினைவு வர, அதற்கான முயற்சிகளில் இறங்கினார் வேணி!



## 50

ஒரு ஞாயிறு அன்று, அருளை வீட்டிற்குச் சென்று வேணி பார்த்தபோது அவன் மிகவும் மெலிந்திருந்தான்!

மெல்லிய தாடியுடன் விழிகளிலிருந்த உயிர்ப்பைத் தொலைத்து இறுகியிருந்தான்!

இன்றுடன் அவனுக்கு டைவர்ஸ் கிடைத்து தபஸ்யா அவனை விட்டுப் பிரிந்து சென்று இரண்டு மாதங்களா யிருந்தன.

நல்லசிவத்தின் கவனிப்பும், வேணியின் அன்புமே அவனை மீட்டிருந்தன!

"அருள்! நீ விரும்பின மாதிரி ஒரு வாடகைத் தாய் கிடைச்சிருக்கா! குழந்தை பிறந்தவுடனே உன்கிட்டே தந்துடறேன்னு சொல்லியிருக்கா! அதான் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்" என்றார் யோசனையாக!

"ஓ! அதைப் பத்தியே மறந்து போயிருச்சிக்கா! தேவையில்லாத ஏதோ நினைவுகள்தான் மனசை போட்டு அறுத்துட்டிருக்கு!" விரக்தியுடன் கூறினான்.

"அருள்! தபுவை மன்னிச்சிடுப்பா! தான் செஞ்ச தப்புக்கு அவ பல மடங்கு அனுபவிச்சிட்டா! ப்ளீஸ்!"

மெல்லிய குரலில் கெஞ்சியவரை ஏறிட்டவன், "அதைப் பத்தி மட்டும் என்கிட்ட பேசாதீங்கக்கா... விட்டுடுங்க... எவ்வளவு பெரிய நம்பிக்கை துரோகம் அது! என் குழந்தையை... சே!" சினத்துடன் முடித்தான்!



"அப்பதான் அவ கர்ப்பம் தரிச்சி இல்லையே அருள்...

நீ ஒரு டாக்டர்... உனக்குத் தெரியுமே."

அவர் முடிப்பதற்குள், "ஒரு வேளை இருந்திருந்தா, அழிந்திருக்கும் இல்லையாக்கா! வேண்டாம்... அப்படி நினைச்சி, தடுக்கணும்னு தானே அவ அப்படி செஞ்சா! அவளைப் பத்திப் பேசாதீங்க!" மிருகமாய் உறுமினான்!

"சரி! உனக்கு எல்லா டெஸ்டும் முடிச்சப்புறம், செமன் டொனேஷன் மட்டும் குடுத்துடு... மத்ததை நான் பாத்துக் கறேன்!"

ஆர்வத்துடன் கூறியவரிடம், "நான் அந்தப் பெண்ணை முதல்லே பாத்து எல்லாம் பேசணும்! அப்புறம்தான் என்னால முடிவெடுக்க முடியும்!" உறுதியாக முடித்து விட்டான் அருள்!

பிறகு என்ன செய்வதென்ற யோசனையுடன் அவர் வீடு சென்றபோது தான், தன் தோழி வடிவின் மகனுடைய நினைவு வந்தது அவருக்கு!

அந்தப் பையனுக்கும் ப்ரச்னை இருப்பதால் டெஸ்ட் ட்யூப் முறையில் அவன் மனைவியை கருத்தரிக்கச் செய்ய எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தார் அவர்.

* * *

அன்றே அவர்களிடம் சென்று பேசியபோது உடனே இந்த நாடகத்தில் நடிக்க இருவருமே ஒப்புக் கொண்டனர்.

அவனுடைய தாய் வடிவிற்கு மூன்று வருடங்களுக்கு முன்பு, அருள்தான் பைபாஸ் சர்ஜரி செய்திருந்தான்.

ஆனால் அப்போது கோபாலுக்கும் வாசுகிக்கும் திரு மணம் நடந்திருக்கவில்லை எ[illegible] JUN 13 2010 கியைப் பார்த்ததில்லை!

வடிவுடன் பேசி எல்லா முடிவுகளையும் சுபமாக எடுத்தபிறகு வாசுகியை அருளிடம் அழைத்துச் சென்றார் வேணி.

அவன் கேட்ட கேள்விகளுக்கு வேணியே எல்லா பதில்களையும் அளித்துவிட, கடைசியில் பரிசோதனைக் குழாய் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள அவளுக்கு சம்மதமாவென்று கேட்டான் அருள்.

அவளும் தலை குனிந்தபடித் தலையசைக்க வேணியிடம் திரும்பினான்!

"அக்கா! இவங்க ஏன் எதுவுமே பேசலை?" யோசனையுடன் கேட்டான்."

"அருள்! இதெல்லாம் ஒரு ஆணுக்கு சுலபம்ப்பா! அவ பொண்ணுதானே! அவங்கப்பாவோட மருத்துவ செலவுக்காக இதுக்கு ஒத்துக்கிட்டா! ரெண்டு லட்சம் போதுமுட்டா! அவ கஷ்டம் அவளுக்கு! விடு... இனிமே நான் பாத்துக்கறேன்...!"

"அப்புறம் இன்னொன்னு. இவளுக்கு கன்சீவ் ஆனப்புறம் நான் பாத்துக்கறேன்! நீ கவலைப்படாதே... குழந்தையை உன் கையில தரவேண்டியது என் பொறுப்பு! ஆனா பிறந்து ஒரு அஞ்சு மாசமாகும்!

"கொஞ்சம் வளத்தப்புறம்தான் தர முடியும்கிறா... சரியா? அவளும் ஒரு தாய்தானே... உடனே குடுக்கறது கஷ்டம்! அப்புறம் குழந்தையும் தாய்ப்பால் இல்லாம கஷ்டப்படும் இல்லியா அதான்!" என்று முடித்தார்.

"சரிக்கா..." என்றபடி இருவருக்கும் விடை கொடுத்தான் அவன்!



# 51

பிறகு, இன் விட்ரோ பெர்டிலைசேஷன் செய்வதற்கான ஏற்பாடுகள் ஜெட் வேகத்தில் நடந்தன!

ஒருபுறம் வாசுகிக்கும் கோபாலுக்கும் ஐ.வி.எஃப். முறையில் பரிசோதனைகள் முடிய, அருளின் விந்தணுக்கள் தபஸ்யாவின் கரு முட்டையுடன் இணைக்கப்பட்டு சோதனைக் குழாயில் வளர ஆரம்பித்தன.

உரிய நேரத்தில் இருவரின் கர்ப்பப்பைக்குள்ளும் பாதுகாப்பான முறையில் கரு வைக்கப்பட, இரு பெண்களும் செயற்கை முறையில் கருத்தரிப்பில் வெற்றிகரமாக சூல் கொண்டனர்.

தனக்குள், அவனுடைய குழந்தையின் சுவாசம் கேட்கத் தொடங்கிய பரவசம் தபுவிற்குள்!

விநாயகமும், மகிழ்ச்சியுடன் பெண்ணிற்கு எல்லா விதத்திலும் துணையிருக்க, அருளிடம் இந்த இனிய செய்தியை உற்சாகத்துடன் கூறினார் வேணி!

அவனுக்கோ, விண்ணைத் தொட்ட பரவசம்!

ஆனாலும் தபஸ்யாவின் நம்பிக்கை துரோகமும், அவளைத் தான் விரும்பிய நாட்களுமே, மனதில் வலம் வந்தன.

தன் குழந்தை என்றதுமே, தபுவின் உருவத்தை சிறிதாக்கிய செப்புச் சிலையாய் ஒரு பெண் குழந்தை, அவனுடைய கற்பனையில் இருந்தது மட்டுமே உண்மையாய்!

இன்று, அது சிதறி சின்னா[illegible]ாகியிருக்க[illegible]த முறுவலொன்று உதடுகளில் [illegible]து!

JUN 13 2010

ஆனால், தன் குழந்தையை சுமக்க மறுத்து அதை சிதைக்க முடிவெடுத்தவளின் மேல், ஒருவித வன்மம் தலை தூக்க, இந்த செய்தி பெரும் வெற்றியாய்!

உடனே சென்று அவளிடம் கூற வேண்டும் போல்!

"நீ மறுத்துச் சென்றாயே... இப்போது பார்... நான் ஒரு குழந்தைக்கு தந்தை! அது வாடகைத் தாயோ சொந்தத் தாயோ.. என் குழந்தையை ஒரு பெண் சுமந்து பெற்றுத் தர சம்மதித்திருக்கிறாள் தெரியுமாவென்று'' முகத்தி லறைந்தாற் போல் கேட்க வேண்டுமென்ற வேகம்!

அவனுடைய செயல் அவனை வெகுவாய் காயப் படுத்தி, அவனுடைய ஆண்மைக்கே பெரும் சவாலாகி ரணப்படுத்தியிருக்க, அதற்காகவே இந்த முறையில் குழந்தை பெற்றுக் கொள்ள வெறியுடன் சம்மதித்திருந் தான் அவன்!

''பொறு மனமே பொறு!''

குழந்தையுடன் சென்று அவளை சந்தித்து தான் வெற்றி பெற்ற செய்தியை... அவள் மறுத்தும் தன்னால் சாதிக்க முடிந்ததை, முகத்திற்கு நேராய் கூறி அவளை அவமானப் படுத்த வேண்டும் என்ற வெறி!

அதற்குள், அவனுடைய எண்ண அலைகளைக் கட்டுப்படுத்தியது வேணியின் குரல்!

''என்ன அருள்? முதல்லே ரொம்ப சந்தோஷப் பட்டே... திடீர்னு இவ்வளவு கோபம் முகத்திலே? என்ன ப்ராப்ளம்?''

தங்கள் திட்டத்தை அவன் அறிந்து கொண்டு விட் டானோவென்ற கவலையுடன் கேட்டார்.

''ஒண்ணுமில்லைக்கா! பழைய குப்பையெல்லாம் மனக கிளறுது... வேண்டாம்... இது நான் சந்தோஷமா இருக்க வேண்டிய தருணம்!



''குழந்தை பிறக்கட்டும். அப்ப என் சவால்லே நான் ஜெயிப்பேன்... ஆனா, மாசா மாசம் ஸ்கேன் பண்ணி ந்தப் பெண்ணை கவனமாப் பாத்துக்கங்கக்கா!'' என்ற ன், மூன்று லட்சம் ரூபாய்க்கு ஒரு செக் எழுதி அவ ரிடம் அளித்தான்!

அதை எடுத்துக் கொண்டு பூஜை அறையில் சொர்ணத் திடம் சென்று வணங்கி விட்டு, வேணி நேரே தபுவைப் பார்க்கச் சென்றார்.

## 52

தபஸ்யாவோ உலகின் உச்ச மகிழ்ச்சியில் இருந்தாள்.

தன் வாழ்க்கைப் புத்தகத்தில் எழுதப்படாத ஒரு கவிதை... தன்னால் மட்டுமே கேட்க முடியாத மௌன மொழி... தனக்கு மட்டுமே புரிபடாத ஒரு சங்கீத சந்தம்.... என நினைத்திருந்த ஒரு வரம் மெய்ப்பட்ட நிலையில், மனம் நிறைந்த நன்றியில் நெகிழ்ந்திருந்தாள்.

திருமணத் தீவில் களித்து இன்பக் கடலினில் குளிக்காமலேயே எடுக்கப்பட்ட முத்து... இன்று முதிர் கருவாய் அவளுள்!

தன்னுடைய வயிற்றை மெதுவாகத் தடவியவளுக் குள், ஒரு சிலிர்ப்பும் இனிய சுகமும் பரவின!

* * *

அழைப்பு மணி ஒலிக்க கதவைத் திறந்த சமையல் காரம்மா, ''வாங்க வாங்க'' என்று வேணியை வரவேற்றாள்.

அவரைக் கண்டதும் பரவ[illegible] எழு[illegible]வ, ''பாத்து... மெதுவா எழுந்திரி[illegible]ம்! [illegible]யும்

செய்யாதடா!" என்றபடி அணைத்து அமர வைத்தார் வேணி!

பிறகு, "இந்தா... உன் புருஷன் உன் வைத்திய செலவுக்குக் குடுத்தது! அவன்தானே எப்படியும் செலவு பண்ணணும்!" குறும்புடன் கூறியபடி அவளிடம் செக்கை அளித்தார்.

சிறு கசந்த முறுவலுடன் அதைப் பெற்றுக் கொண்டவள் மாயாவும் கணேஷும் முதல் நாள் பேசியதைப் பற்றி கூறினாள்.

இருவருமே நேபாளத்திலிருந்து அடிக்கடி அவளுக்கு போன் செய்து பேசுவது வழக்கம்!

இந்த முறை பேசியபோது, தங்கள் வீட்டில் பெரும் விழா ஒன்று நடக்கப் போவதாகவும், அதற்கு அருளை அழைக்க கணேஷ் நேரிலேயே வருவதாகவும் கூறினாள் மாயா!

நேபாளத்தில், வயதானவர்களின் எண்ணிக்கை குறைவு என்பதால், யாராவது ஒருவருக்கு எழுபத்து ஏழு வயது என்றால் ஒரு பெரிய கொண்டாட்டமே நடக்கும்!

எழுபத்தேழு வயது ஏழு மாதம் ஏழு நாட்கள் ஆகி விட்டால், அவர்களுக்கு உறவுகள் ஒன்று சேர்ந்து பெரிய விழாவே நடத்தி விடுவார்கள்!

இதற்கு 'பாஸ்னி' சடங்கு என்று பெயர்!

ஹேமாவதிக்கு அடுத்த வாரம் இந்த விழாவைச் செய்ய இருப்பதால் கணேஷ் நாளை அவளையும் அருளையும் அழைக்க சென்னை வருவதாக மாயா கூற விரக்திப் புன்னகைதான் அவளிடம்!

ஆனால் ஹேமாவதிக்கு அவர்களுடைய விவாகரத்து விவகாரம் தெரியாதென்பதால் அருள் என்ன செய்வாளென்ற தவிப்பு!



பிறகு சாப்பிட்டு விட்டு வேணி விடைபெற்றுச் செல்ல, நிம்மதியுடன் படுக்கையில் சாய்ந்தாள் தபு!

இதயப் பிரதேசத்திற்குள் அருளை எண்ணி, ஒரு ஏக்கக் கவிதை, புலம்பலாய்...!

**உன்னுள்...**
**சேமித்து வைக்கப்பட்டிருந்த...**
**என் நினைவுகளெல்லாம்...**
**இன்று கலைந்து போய்...!**
**ஆனால்...**
**கலையாமல் பத்திரமாக**
**இருக்கிறது...**
**எனக்குள்**
**உன் கரு!**

**நீயில்லாத**
**வெறுமையை...**
**என் இரவுகள்**
**உணர்த்துகின்றன!**
**ஆனால்...**
**நானிருக்கிறேன்**
**நல்துணையாக...**
**என் கருப்பைக்குள்ளிருந்து**
**உன் மழலையின் குரல்!**

**நம் கட்டில்**
**தலையணைகளாய்...**
**உறக்கம் தொலைத்த**

JUN 13 2010

இமைகளாய்...
எதிரெதிர்
துருவங்களாய்...
இணையாதிருக்கிறோம்
நாம்!

உன்னை
குளிர்விக்க...
உன் ஏக்கம்
தெளிவிக்க...
சிரிக்கையில்
சிரித்து
அழுதலில்
நெகிழ்ந்து...
நீயாகவும் நானாகவும்
இன்றி...
நாமாக மாறும்
அற்புத அனுபவம்
தருமா...?
நான் பிரசவிக்கப் போகும்
உன் உயிர் சிசு!

## 53

மறுநாளே அவளைப் பார்க்க வந்த கணேஷ் விழாவிற்கு தபுவையும் அழைத்தார்.



ஆனால், தான் செயற்கை முறையில் கருவுற்றிருக்கும் விபரத்தைக் கூறியதும் மகிழ்ச்சியுடன் வாழ்த்தி விடைபெற்றார்.

ஆனால், இது எதையுமே அறியாத அருளோ, வேறு ஒரு முடிவெடுத்தான்.

உடனே அதை செயல்படுத்த வேணியை அழைத்தான்.

என்ன விபரம் என்றே புரியாமல் அவனுடைய அவசரமான அழைப்புக்கு இணங்கி வீட்டிற்குச் சென்றார் அவர்.

முதலில் தயக்கத்துடன் ஆரம்பித்தவன், பிறகு தெளிவாகவே அவரிடம் பேசினான்.

''அக்கா! ஹேமாவதி பாட்டிம்மாவுக்கு அடுத்த வாரம் நேபாள்லே பாஸ்னி சடங்கு நடத்தறாங்க! அதுக்கு கட்டாயம் போயாகணும்!

''அதோட... எனக்கு டைவர்ஸ் ஆனது அவங்களுக்குத் தெரியாது! பாட்டிம்மாவுக்கு எங்க மேல ரொம்பப் பிரியம்! அதனால, தபுவை... எப்படியாவது நேபாலுக்கு அழைச்சிட்டு வர்றது உங்க பொறுப்பு!

அந்த ஃபங்ஷன் முடிஞ்சதும் ஆசிர்வாதம் வாங்கிட்டுத் திரும்பிடலாம்னு சொல்லுங்க'' தவிப்புடன் பகர்ந்தான்.

உடனே தபுவின் நிலை நினைவுக்கு வர, ''அதெப்படிப்பா முடியும்... இப்ப அவளால வர முடியாதே!'' சட்டென்று உளறி விட்டார்.

''ஏன்க்கா?''

புரியாமல் அவன் கேட்க, ''இல்லை... டைவர்ஸுக்கு அப்புறம் அவ வர ஒத்துப்பா[illegible]னு தெ[illegible]... அதான்!'' மெல்ல சமாளித்தார்.

"ஓ! நீங்கதான் சம்மதிக்க வைக்கணும்... எனக்காக! நேத்து கூட கணேஷ்கிட்ட நான் எதுவும் சொல்லலை! தபு, அவங்கப்பாவைப் பாக்கப் போயிருக்கறதா மட்டும் தான் சொல்லியிருக்கேன்!

"அவரும், நல்ல விஷயத்தை சொல்ல வந்திருக்காரு! அவருக்கு எதுக்கு நம்ம ப்ரச்னை எல்லாம்... இந்த விஷயம் நம்ம குடும்பத்தைத் தவிர மத்தவங்களுக்கு இன்னும் தெரியாதே... அதுதான்!"

தர்ம சங்கடமும், பரிதவிப்பும் விரவித் தெரிந்தன அவன் குரலில்!

ஆனால் எல்லாம் அறிந்த வேணிக்கோ ஒரு மர்மப் புன்னகை மனதிற்குள்!

"ம்... சரி... நான் பேசிப் பாக்கறேன்!" என்றவர் தபுவிடம் இதைக் கூறியதுதான் தவறாகிப் போயிற்று!

அவனுடைய விருப்பத்தை ஏற்று அவள் கிளம்பத் தயாராக, உடனே அவளைத் தடுத்தார் அவர்.

"தபும்மா! இப்ப நீ ஒரு குழந்தையை, அதுவும் உன் ஆசை அருளோட குழந்தையை சுமந்திட்டிருக்கேடா!

"நார்மலாவே இருந்தாலும் ஏர் டிராவல் அலைச்சல் ஒத்துக்குமா... வேண்டாமே! நீ வர மறுத்திட்டேன்னு நான் சொல்லிடறேன்!" என்றார்.

"இல்லைம்மா! ஃப்ளைட்டில்தானே! ஜாக்கிரதையா போயிட்டு வந்திடலாம்! அவரை ஏமாத்த வேண்டாமே.

"என்கிட்டே ரொம்ப நாளைக்குப் பிறகு அவர் கேட்டிருக்கற ஒரு கோரிக்கை இதும்மா! நான் நல்லாத்தானே இருக்கேன்!" பிடிவாதமாகக் கூறினாள்.

ஆனால், வேணி உறுதியாக மறுத்துவிட்டு சென்றுவிட தவித்து அமர்ந்திருந்தாள் தபு!



வெகு நேரத் தீவிர யோசிப்பிற்குப் பிறகும் எந்த முடிவிற்கும் வர இயலவில்லை!

குழந்தையும் முக்கியம்... அருளின் அழைப்பும் தவிர்க்க முடியாதென்ற யோசனையில் அவள் ஆழ்ந்திருந்தபோது, அழைப்பு மணி ஓசை கேட்டது!

சிறிது நேரத்தில் அறைக்குள் வந்த சமையல்காரம்மா அருள் வந்திருப்பதாகக் கூற, விண்ணில் பறப்பது போல் ஒரு உணர்வு!

தாங்க முடியாத பெரும் உற்சாகத்துடன் எழுந்தாள் தபு!

மூன்று மாதங்களுக்குப் பிறகு அவனைப் பார்க்கும் ஆவலில் புலன்கள் சிலிர்க்க, உணர்வுகள் அவனுக்காய் உருக வேகமாக ஓடி வந்தபோது வாசலில் போட்டிருந்த மிதியடியில் கால் தடுக்கி சரிந்து விழ ஆரம்பித்தாள்.

* * *

"தபு!" பதட்டத்துடன் கூவியபடி ஓடி வந்து தூக்கிய விநாயகத்திற்கோ, பெரும் பரிதவிப்பு!

விபரம் அறியாத அருளோ, அசுவாரசியமாக எழுந்தான்!

"அங்கிள்! அவ நேபாளுக்கு வரதானா எனக்குப் பேசச் சொல்லுங்க! இன்னிக்கு டிக்கெட் புக் பண்ணணும்!"

தபுவைத் திரும்பியும் பாராமல், அவன் வெளியேறத் துவங்கினான்.

"கடவுளே! வயித்துப் பிள்ளைக் காரி கீழே விழக் கூடாதே! உடனே வேணி அம்மாவுக்கு போன் போடுங்க."

பதைப்புடன் சமையல்காரம்மா கூறிய வார்த்தைகள் அவனை உலுக்கி நிறுத்த மறுகணம் ஸ்தம்பித்து உறைந்தான் அவன்!

மனம் பல கேள்விகளை நொ[illegible]வ, [illegible]யத்தை யாரோ இறுகப்பற்ற, தேகமே உலுக்கிய உணர்வில் வேகமாகத் திரும்பி அவளிடம் வந்தான்.

JUN 13 2010

விநாயகம் வேணிக்கு போன் செய்ய, வயிற்றைப் பிடித்தபடிக் கதறித் துடித்தவளை ஒரு மருத்துவராய் ஏந்தி உள்ளே எடுத்துச் சென்று கட்டிலில் கிடத்தினான்.

மறு நிமிடமே அவனுடைய செல் ஒலிக்க எடுத்தால், வேணிதான் பேசினார்.

''அருள்! நீ அங்கேதானே இருக்கே... தபு எப்படி இருக்கா?'' பதட்டத்துடன் வினவினார்.

''அவ வயித்தை பிடிச்சிட்டு துடிக்கறா! என் குழந்தை எனக்கு வேணும்னு கதர்றா! நீங்க உடனே வாங்க.. இங்கே என்ன நடக்குது...? இந்தம்மா வேற அவ ப்ரெக்னென்டா இருக்கறதா உளர்றாங்க!''

அவன் முடிப்பதற்குள் குறுக்கிட்டவர், ''அவங்க உளறலை. தபு கர்ப்பமாத்தான் இருக்கா! ஆனா அவ சுமக்கிறது உன் குழந்தையத்தான் அருள்! ப்ளீஸ்... புரிஞ்சிக்க அவ உன்னை உயிரா விரும்பறாப்பா.... நான் உடனே ஆம்புலன்ஸோட வரேன்!'' என்றவர் உடனே வைத்து விட்டார்.

அவனுக்கு இப்போது எல்லாம் புரிவது போல்!

அந்தக் கணமே அவனுக்குள் கோபப் பந்தாய் நிரம்பியிருந்த வெறுப்பும், வன்மமும் சட்டென்று உடைந்தன!

அதுவரை வலுக்கட்டாயமாக சுமந்து வந்த வீம்பும் பிடிவாதமும், ''அவ சுமக்கிறது உன் குழந்தையைத்தான் அருள்!'' என்ற வார்த்தைகளால் எங்கோ சிதறி ஓடின.

'இவள் என் இணை... என் காதல் துணை...' என் வாரிசை சுமப்பவள்...' பெருமிதத்தில் மனம் விம்மியது!

உடனே இரு மனங்களின் தூரம் மெல்லக் குறைய ஆரம்பிக்க, தவறை உணர்ந்து திருந்தி தன் கருவை மடியில் சுமப்பவளை ஒரு பூவாய்த் தாங்க வேட்கை வருவதாய்!

மீட்டான மன வீணையில் உறங்கும் மௌன ராகங்களாய்... அவள் ஞாபகங்கள்!



பல காலமாக அவளுக்கென்று ஏங்கி வாடியிருந்த காதல் இன்று விருட்சமாகியது!

''கடவுளே!'' மெல்ல முனகியவன், அவளருகில் அமர்ந்து ஆதரவாக அவளின் கரத்தைப் பற்ற, எதையும் உணரும் நிலையில் அவள் இல்லை!

வெகு நாட்களுக்குப் பிறகு அவள் மேல் ஒரு விதப் பரிதாபமும், தன் குழந்தைக்கு ஏதும் ஆகிவிடக் கூடாதே வென்ற பரிதவிப்பும்! அவனிடம்!

வேணியும், அவளுமாகச் சேர்ந்துதான் இதை செய்திருக்க வேண்டும் என்பது புரிய, எதிலோ வென்ற ஒரு உணர்வு!

தபு மயங்கியிருக்க, உடனே ரத்த அழுத்தத்தையும், இதயத் துடிப்பையும் பரிசோதித்தவன், உதிரப் போக்கு ஏதும் ஆகியிருக்கிறதாவென்றும் கவனித்தான்.

நல்லவேளையாக பயப்படும்படி ஏதும் நிகழ்ந்திருக்கவில்லை!

* * *

சில நிமிடங்களிலேயே ஆம்புலன்ஸ் வந்துவிட அனைவருமாக அதில் அவளை ஏற்றினர்.

அருள் காரில் ஏறுவதற்கு முன், அவன் கையைப் பற்றி மௌனமாய் அழுத விநாயகத்தை அணைத்துத் தேற்றியவன், அவரையும் காரில் ஏற்றிக் கொண்டு கிளம்பினான்.

தொடர்ந்த நிமிடங்கள் அவனுக்குள் பெரும் பதட்டமாய்... தீக்கனவை விதைப்பதாய்!

அவனுடைய உயிரும் உணர் [illegible] இல்லாத தருணங்கள் அவை!

தபுவின் மனமாற்றமும், தன் குழந்தையை சுமந்து தவிக்கும் அற்புத நேசமும் புரிந்

# 54

மருத்துவமனையில் ஐ.சி.யூ.வில் அனுமதிக்கப்பட்ட தபுவிற்கு எல்லாப் பரிசோதனைகளும் செய்தபோது, கருவிற்கு ஏதும் அபாயம் நேரவில்லை என்பது தெரிந்தது.

அருகிலேயே அவளையே கலக்கத்துடன் பார்த்தபடி அமர்ந்திருந்த அருணுக்கோ, "இந்த ஒரு முறை இவளை மீட்டு என்னிடம் கொடுத்து விடு இறைவா... இனி இவளை என் உயிராய்... என்னில் பாதியாய் தாங்கி இறுதி வரைக் காப்பேன்!" என்ற கண்ணீர்க் கோரிக்கை!

கண்கள் வறண்டு, உடம்பிலிருந்த உயிர்ச் சத்தை எல்லாம் இழந்தாற் போல் இறுகி அமர்ந்திருந்தவன் வேணியின் ஆறுதலால் மட்டுமே உயிர்த்தான்!

"அருண்! குழந்தைக்கு ஏதும் ஆபத்தில்லை... நல்ல வேளை! ஆனா, தபுவுக்குதான் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியலை!"

"முன்னாடி ஒரு தடவை தான் செஞ்ச தப்பு, தன்னை இப்பவும் பழி வாங்கிடுமோன்ற மன உளைச்சல் அவளுக்கு!

"சமீப காலமா அவ ரொம்ப நொந்து உடைஞ்சி போயிருந்தாப்பா!

"எப்படியாவது இந்தக் குழந்தையப் பெத்து உன்கிட்ட தந்துடணும்னு ரொம்ப ஆசைப்பட்டா! இருபத்து நாலு மணி நேரமும் உன் நினைப்புதான்!

"இப்ப, பழைய மாதிரி ஏதாவது நடந்து குழந்தை கலைஞ்சிருச்சோன்ற பயமும், தவிப்பும் தான் மனசில பதிஞ்சிருக்கு!

"நினைவே வர மாட்டேங்குது! சில நேரம் அதிகப் படியான அதிர்ச்சியில மூளை மரத்துப் போய் செயல்பட மறுக்குமே... அந்த நிலை!

"ஒரு டாக்டரா உன்னால அவ நிலைமையைப் புரிஞ்சிக்க முடியும்னு நினைக்கிறேன்! நீ அவளோடவே இரு!

"எப்ப வேணாலும் அவளுக்கு நினைவு வரலாம்... நீ கூட இருக்கறதுதான் ரொம்ப முக்கியம்!

"நீ அவளை மன்னிச்சிட்டே... கர்ப்பம் கலையலைன்னு அவ மனசுல பதிய வச்சி ஒரு தெளிவை உண்டாக்கிட்டாப் போதும்... அவ இயல்பாகிடுவா!"

உணர்ச்சிகள் நிரம்பிய குரலில் நிறுத்தியவரை ஏறிட்டன... அவனுடைய உலர்ந்த விழிகள்!

தன்னுடைய மன மாற்றத்தையும், பரிதவிப்பையும் கண்ணாடியாய் அவன் பார்வை வெளிப்படுத்தியது.

நெகிழ்வுடன் அவனுடைய தலையைக் கோதிவிட்டு அருகில் அமர்ந்து, மௌனமாக தபுவையே பார்த்தபடியிருந்தார் வேணி!

* * *

தொடர்ந்த கணங்கள், அவனைப் பெரிதும் பாதித்து செயலிழக்கச் செய்ய திடீரென்று அரற்ற ஆரம்பித்தாள் தபு!

"அம்மா! எனக்கு என் குழந்தை வேணும்! என் அருள் வேணும்... அவர் என்னை நம்பலையே... என் குழந்தைய அவர்கிட்ட கொடுத்துட்டு, நான் செஞ்ச தப்புக்கு பிராயச்சித்தம் செஞ்சிடறேம்மா! அது மட்டும் முடியலைன்னா நான் செத்துடுவேன்..." பெரும் குரலெடுத்துக் கதறினாள்.

ஐ.சி.யூ.வில் தனியறையில் இருந்ததால், இரு... ஒரு நர்ஸ் மட்டுமே உடனிருந்...

அருளுக்கோ விழிகள் சிவந்து கை முட்டிகள் இறுகி, எதுவுமே செய்ய முடியாத ஒரு இயலாமை கலந்த தவிப்பு!

வேணி அவனிடம் எவ்வளவோ பேசி சமாதானம் செய்தும் அவளுடைய முனகலும், கதறலும் வெகு நேரம் தொடர்ந்தன!

எந்த அளவுக்கு அவள் மனது பாதிக்கப்பட்டிருந்தால், இப்படி எல்லாம் தன் உணர்வின்றிப் புலம்புவாள் என்ற பச்சாதாபத்தில் உருகி, குறுகிப் போனான் அருள்.

* * *

அவள் சிறிது அமைதியடைந்து உறங்க ஆரம்பித்ததும் வேணியிடம் பரிதவிப்புடன் இது பற்றிப் பேசினான்.

''அக்கா! அவளுக்கு எதுவும் ஆகிடக் கூடாது. பழைய தயாவா அவ எனக்கு திரும்பவும் வேணும்... இல்லேன்னா...''

ஒரு பெருமூச்சுடன் அவன் நிறுத்த, மெதுவாக அவன் தோளைப் பற்றி அமர வைத்தார் அவர்.

''அருள்... இப்ப ரெண்டு உயிருமே நமக்கு ரொம்ப முக்கியம்! மெதுவாத்தான் அவளை ஹேண்டில் பண்ணணும்! டிப்ரஷனுக்கும் மருந்து குடுத்திருக்கோம்!''

''ஆழ் மனசிலே பழைய நினைவுகளோட ஆதிக்கம் அதிகமா இருக்கு... அதுவும்... இப்ப நடந்த அதிர்ச்சியான சம்பவம், அவளை ரொம்ப பாதிச்சிருக்கு!

''எதுக்காகவும் அவ தன் குழந்தைய இழக்கத் தயாரா இல்லை! அதோட விளைவுதான் இந்த மனக் குழப்பம் பயம் சஞ்சலமெல்லாம்!''

''அது தெளிஞ்சி, வயித்தில இருக்கிற கரு கலையலை... நல்லாத்தான் இருக்குன்னு அவ ஆழ் மனசும், புலன்களும் நம்பினாப் போதும்.. நார்மலாயிடுவா!''



''ஆனா, இந்த அதிர்ச்சி குழந்தையையும் பாதிக்காம இருக்கணும்!''

கண்கள் கலங்க அவர் முடித்த போது, உறுதியுடன் பேச ஆரம்பித்தான் அருள்.

''இல்லைக்கா! எனக்கு குழந்தை முக்கியமில்லை! என் தயாதான் எனக்கு வேணும்... அவ இருந்தாப் போதும்! என்னால எத்தனையோ வாரிசை உருவாக்க முடியுமே!''

கூறிவிட்டு அவன் முகத்தை மூடி அமர, அவன் மனமும், அது மாறிய விதமும் புரிந்து ''என் ராசய்யா'' என்றபடி வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டார் அவர்!

## 55

தொடர்ந்த இரு நாட்களும், தபஸ்யா தன்னுடைய தீக்கனவுகள், மன உளைச்சல்களிலிருந்து விடுபடவேயில்லை!

ஒவ்வொரு முறையும் அவள் அரை மயக்கத்தில் தன் மனதிலுள்ளவற்றை எல்லாம் வார்த்தைகளாய் கொட்ட, உடைந்து போனது அருள் தான்!

அவனைப் பிரிந்து அவள் அனுபவித்த நரக வேதனையை கல்வெட்டாய் பறை சாற்றின... அவள் வார்த்தைகள்!

தாங்கள் இருவரும் தவறு செய்திருப்பதும்... புரியாமல் ஒருவரை ஒருவர் வாட்டியிருப்பதும் அதிகப்படியான அன்பினாலே என்பதும் புரிந்தன

JUN 13 2010

* * *

இரு நாட்களும் இரு யுகங்களாகியிருக்க, சரியாக சாப்பிடாமல் கண் மூடாமல் அருகிலேயே பிடிவாதமாக அமர்ந்திருந்தான் அருள்.

ஆனால் அவளை, அந்தக் காத்திருப்பை உணர்கின்ற நிலையில் தபு இல்லையென்றாலும், வேணியும், விநாயகமும் அவளைப் புரிந்து நெகிழ்ந்து போயிருந்தனர்.

மூன்றாம் நாள் காலை!

எப்போதும் போல் அவள் முனக ஆரம்பித்து தன்னிலை உணராமலே அரற்ற ஆரம்பித்ததும் ஒரு முடிவுடன் அவ ளருகில் சென்று காதருகில் குனிந்து பேச ஆரம்பித்தான் அருள்!

* * *

"தியா!" அவனுடைய முதல் அழைப்பில் சட்டென்று அவளிடம் ஒரு மாறுதல்!

அவளுடைய அலைப்புறுதலும் அரற்றலும் சற்று குறைந்தாற்போல்!

"தயா...!" அவனுடைய இரண்டாவது அழைப்பு அவளை வெகுவாய் அமைதிப்படுத்துவதாய்!

முகத்திலிருந்து வேதனைக் கோடுகள் மெல்ல விலகி... சிறு உயிர்ப்பும், எதிர்பார்ப்பும் தெரிந்தன.

"தயா! என் தேவதையே... நான் உன்னை மன்னிச் சிட்டேன்மா! தெரியாம நீ செஞ்ச ஒரு தவறுக்காக உன்னை நான் ரொம்ப வாட்டி எடுத்துட்டேன்டா...

"என்னை மன்னிப்பியா? இல்லேன்னா... நான் செத்துடுவேன்! என்னை நீ மன்னிச்சிட்டேன்னா உடனே பழசையெல்லாம் மனசிலிருந்து தூக்கி எறிஞ்சிடணும்!



"எனக்கு இப்ப நீதான் முக்கியம்... குழந்தையில்லை! அது கலைஞ்சாக் கூட நான் கவலைப்படப் போறதில்லை."

அவன் முடிப்பதற்குள் அதை உணர்ந்தாற் போல் சட்டென்று இறுகி விரைத்தது அவள் தேகம்!

உடனே உள்ளூரப் பதறியவன், "தயா... நம்ம குழந்தை நல்லாத்தான் இருக்கு... நீ கீழே விழுந்ததிலே அதுக்கு ஒண்ணும் ஆகலை!" ஆழமான குரலில் முடிப்பதற்குள் "இல்லை நீங்க சொல்றதை நான் நம்ப மாட்டேன். பொய் சொல்றீங்க! என் குழந்தை என்னை விட்டுப் போயிடுச்சி!

"ஒரு தடவை அதை அழிக்க முயற்சி செஞ்ச பாவத்துக்கு என்னைப் பழி வாங்கிடுச்சு!"

திரும்பவும் கதற ஆரம்பித்தவளை, மெதுவாகக் குனிந்து இதழ்களில் அவன் அழுந்த முத்தமிட, சட்டென்று ஓய்ந்தது அவள் சப்தம்!

"தயா! புரிஞ்சிக்கடா! நம்ம குழந்தை நல்லாருக்கு! இன்னும் ஏழே மாசத்துல அழகா உன் கையில் வந்து தவழப் போகுது! எனக்கு என் குழந்தை மட்டும் இல்லை... நீயும் வேணும்டா கண்ணம்மா"

ஏக்கக் குரலில் அவன் முடித்ததும் அதை உணர்ந் தாற்போல், சிறு வெட்க முறுவல், அவள் இதழ்களில்!

மறுகணமே மெல்லத் தேற ஆரம்பித்த தபஸ்யா அன்று மாலையே இயல்பாகிக் கண் விழித்தாள்.

## 56

JUN 13 2010

மறுநாளே டிஸ்சார்ஜ் ஆகி அருணுடன் வீட்டிற்கு வந்த வளை ஒரு தாயுமானவனாய்த் தாங்க ஆரம்பித்தான் அருள்!

விநாயகரும் அவர்களுடனே வந்து தங்கிவிட, மீண்டு வசந்தமாய் மாறியது அந்த இல்லம்!

கோடிப் பூக்கள் மலர்ந்த நந்தவனமாய் நறுமணத்தை ஆகர்ஷித்திருந்தது தபுவின் மனம்!

சரியாக ஒரு வாரம் கழித்து அவன் இயல்பாகிய தருணத்தில் மனம் விட்டுப் பேசத் துவங்கினான் அருள்!

ஒரு நாள் மாலையில் சீக்கிரமே வீடு வந்து சேர்ந்தவன், குளித்துவிட்டுக் கீழே இருந்த சொர்ணத்தின் அறைக்குச் சென்றான்.

அப்போதுதான் எழுந்து நர்ஸ் கொடுத்த பழரசத்தைப் பருகிக் கொண்டிருந்தாள் தபஸ்யா!

அவனைக் கண்டதும் முகம் மத்தாப்பூவாய் மலர்ந்து விகசிக்க, இதழ் விரிந்த முறுவலுடன் வரவேற்றாள்.

அவனைக் கண்டதும், நர்ஸ் கதவை சாத்தி விட்டு வெளியேற அவளருகில் சென்று அமர்ந்தான் அவன்!

மாடி ஏறாமல் கீழே இருந்ததால், அந்த அறையையே தேர்வு செய்திருந்தாள் அவள்.

விருந்தினர் அறையில் தங்கிக் கொள்ளலாம் என்று அவன் கேட்டபோது மறுத்து இங்கேயே இருப்பதாகக் கூறியதும் தபுதான்!

''என்ன... சீக்கிரமே வந்திட்டீங்க?'' சிறு வெட்கம் தெரிந்தது அவள் குரலில்!

''ம்... இனிமே அப்படித்தான்! சீக்கிரம் ரவுண்ட்சை முடிச்சிட்டு என் மனைவியைப் பாக்கணும்னு ஓடி வந்துட்டேன்!''

குறும்புடன் அவளையே ரசித்தபடிக் கூறினான்.

''உங்க செல்லைக் குடுங்க!''



திடீரென்று கேட்டு வாங்கியவள், அந்த ஸ்கிரீன் சேவரின் வால் பேப்பரில் தெரிந்த தன் போட்டோவைக் கண்டதும் சிலிர்த்துப் போனாள்.

''ஏய்... என்ன பாக்கறே?''

அவன் கேட்க,

''இல்லை... என் மேல இருந்த கோபத்துல என் போட்டோவை அழிச்சிருப்பீங்களோன்னு நினைச்சேன்!'' சிணுங்கலாகக் கூறினாள்.

''தெரியலை! ஏனோ அதை மாத்தணும்னே தோணலை.''

''தேங்க்யூ வேந்தா!'' அவள் குரலில் புது குறும்பும், சீண்டலும்! உடனே ஒரு இளஞ்சிரிப்பு அவன் உதடுகளில்!

''ஹாஸ்பிடல்லேருந்து நேரா இங்கேயா வர்றீங்க?''

அவள் ஆர்வத்துடன் கேட்க, ''மண்டு! அப்படியே வந்தா ஏதாவது இன்ஃபெக்ட் ஆயிடாது! குளிச்சிட்டுதான் வரேன்! முதல்லே வந்து வாசலிலே நின்னு பாத்தேன்!

''மேடம், நல்லா ஸ்லீப்பிங் ப்யூட்டி மாதிரித் தூங்கிட்டே இருந்தீங்க! சரியான தூங்கு மூஞ்சி...

''இதிலே அந்த குட்டி தயா வேற எப்படி இருக்குமோ? அது அம்மாவை விடத் தூங்கு மூஞ்சியா இருக்கப் போவுது!''

போலியாக அவன் சலித்துக் கொள்ள, ''ம்... அப்படி எல்லாம் கிடையாது'' என்றாள் தபு சிணுங்கலாக!

''வேற எப்படியாம்?''

உல்லாசத்துடன் அவன் வினவ, ''ம்... இது குட்டி அருள்... தெரியுமா? எனக்கு என் அருள் தான் வேணும்!'' நாணச் சிவப்பலைகள் முகத்தில் விரவிப் பரவ முடித்தாள்.

''ஊஹூம்! எனக்கு குட்டி தயாதான்! அக்கா கிட்ட நான் பேசறேன்'' அருள் வீம்பாக முடித்தான்.

''சாரி லட்சம் கோடி சாரி அருள்... எவ்வளவு சில்லியா, பிடிவாதமா சின்ன வயசு வெறுப்பை [illegible] சுமந்திட்டிருந்திருக்கேன்... இ[illegible] என் [illegible] புரியுது!''

[illegible] தெரிஞ்சிருக்கு... நாம ரெண்டு பேரும் "மேட் ஃபார் ஈச் அதர்"னு! ஆனா எனக்கு புரிய எவ்வளவு நாளாயிடுச்சி.

"ஒரு பெரிய அடி கிடைச்ச பிறகுதான் எல்லாத்தையும் நான் உணர்ந்திருக்கேன்! என்னை மன்னிச்சிடுங்கன்னு கேக்கவே கூசிப் போகுது!"

கெஞ்சுகின்ற குரலில் மன்னிப்பை யாசித்தாள் அவள்.

"ம்... நானும் இதைப்பத்திப் பேசணும்னு உடனே நினைச்சேன்... அக்காதான், ஒரு வாரம் போகட்டும்... உன் ஹெல்த் கொஞ்சம் ஸ்டெபிலைஸ் ஆகட்டும்னு சொன்னாங்க!"

"சாரி தயா! நீ மட்டும் தப்பு செய்யலை.. நானும் தான்! நானும் உன்னை ரொம்ப நோகடிச்சிட்டேன் இல்லை? டைவர்ஸ் அப்ளை பண்ணி, பிடிவாதமா அதை வாங்கி, உன்னைப் பிரிஞ்சி... எவ்வளவு கஷ்டம் குடுத்திட்டேன்."

"அதிலே உன்னை மட்டும் நான் நோகடிக்கலை... என்னையே நான் பனிஷ் பண்ணிக்கிட்டேன்!"

"அம்மா இறந்தப்ப கூட கண் கலங்கி மட்டுமே நின்ன நான், உன்னைப் பிரிஞ்சப்புறம்தான் என் ரூமுக்கு வந்து, தனிமையில் முதல் தடவையா உடைஞ்சு அழுதேன்!

"அப்பக்கூட என் ஈகோவை விட்டு என்னால உன்னை ஏத்துக்க முடியலை" ஒரு பெருமூச்சுடன் முடித்தவனுடைய முகத்தை மெல்ல வருடி ஏந்தினாள் தயா!

"வேண்டாமே... வேற ஏதாவது பேசலாமே? இதனால தான் இந்த விஷயத்தைப் பத்திப் பேசவே நான் பயந்தேன்!" மெதுவாகக் கூறினாள்.

உடனே, அவன் முகம் உல்லாசமாய் குறும்பாய் மாறியது. அவளை மெதுவாகத் தன் மடியில் சரித்தவன், "வேற என்ன செய்யறது...? நீயே சொல்லு... இன்னும் ஒரு வருஷத்துக்குத்தான் ஒண்ணுமே [illegible] குறும்புடன் கண் சிமிட்டிச் சிரித்தான்.

"ச்சீ..." என்றபடி விழி மூடி அவள் வெட்கப்பட, அவனுடைய இதழ்கள் செல்லமாய் சுருங்கி, அவனுக்கு அழைப்பு விடுத்தன.

மெல்லக் குனிந்தவன், அந்த அழகிய இதழ்களைத் தனக்குள் ஏந்த, சிலிர்த்து அவனுள் புதைந்தாள் தயா!

"ஏய்... இப்படியே என்னை ஏமாத்தலாம்னு பாக்காதே! அக்காகிட்ட எல்லாம் சொன்னியாம்... சுய நினைவில்லாத தப்ப கூட உளறினே? நேரா என்கிட்ட சொல்ல மாட்டியா?" ஏக்கத்துடன் வினவினான்.

புரியாமல் நிமிர்ந்தவளுக்குப் பூஞ்சாரலாய் பதில் கிடைக்க, "ம்... வேந்தா... ஐ... லவ்... யூடா... போதுமா?" இழுத்தாற் போலக் கொஞ்சிக் கேட்டபடி, அவன் மார்பில் செல்லமாகப் புதைந்து சிணுங்கினாள் தயா.

சிறு குறும்புடன், "டாவா." "ஏய்... ரொம்பத்தாண்டி துணிச்சல், உனக்கு... ஆனாலும் ஐ லவ் யூக்காக விட்டடறேன்" குறுகுறுப்பாய் முன்னுச்சியில் முத்தமிட்டான்.

## 57

"நான் உள்ளே, வரலாமா?" என்ற கேள்வியுடன் அறைக் கதவு மெலிதாகத் தட்டப்பட சோம்பலுடன் நிமிர்ந்தான் அவன்.

மதுவுண்ட வண்டாய் கிறங்கி [illegible] உடனே பதறி எழ முயன்றவளை [illegible] தடுத்தான்.

"ப்ச்... பேசாம படு தயா... நம்ம வேணியக்காதானே" என்றபடி அவனுடைய இடுப்பை செல்லமாகக் கிள்ளியவன் சாதுவாக வாசலையே பார்த்தான்.

அவன்தான் பாவம். அந்த மெல்லிய ஸ்பரிசத்தால் சிவந்து போன முகத்தையும், கிறங்கி விட்ட கண்களையும் மறைக்கப் படாதபாடு பட வேண்டியிருந்தது.

அவன் தர்ம சங்கடத்துடன் எழ முயலும் போதே உள்ளே வந்த வேணி, "ப்ச்! நான்தானே.. பேசாம படுத்திடுடா! இதைப் பாக்க எத்தனை நாளா ஆசையோடக் காத்திட்டிருந்தேன்! அப்புறம் இன்னொரு குட் நியூஸ்!"

விழிகள் மின்னக் கூறியவரை, என்னவென்பது போல் இருவரும் நோக்கினர்.

"ராசய்யா! ஸ்கேன் ரிப்போர்ட்டுல பாத்தப்பதான் தெரிஞ்சது... ரெண்டு கரு உருவாகியிருக்கு... ரெண்டுமே நல்லா ஃபார்மாகியிருக்கு... ட்வின்ஸ்! போதுமா?"

உற்சாகத்துடன் அவர் கேட்க, இருவரிடமும் ஒரு குறும்புச் சிரிப்பு தடம் பதிப்பதாய்!

"என்ன? ரெண்டு பேரும் உங்களுக்குள்ளே சிரிச்சுக்கறீங்க? இனிமே நாங்கல்லாம் வேறதான்!"

வேண்டுமென்றே அவர் கேலி செய்ய, "அக்கா! நான் குட்டி தயா வேணும்னு கேட்டேன். இவ குட்டி அருள் தான் தனக்கு வேணும்னு பிடிவாதம் பிடிச்சா! இப்ப ரெண்டு பேரும் ஜெயிச்சாச்சு!" குதூகலத்துடன் கூறினான் அருள்.

"பாத்து... ரெண்டுமே குட்டி அருளா இருக்கப் போகுது!"

குறும்புடன் அவர் கூற... "அய்யோ... தாங்காதுப்பா" அருள் உரைக்க,

"எனக்கு வேணும்!" சிணுங்கலாகக் கூறினாள் தயு!

"சரி! சரி.. நான் கிளம்பறேன்! இங்கே நான் இப்ப கொஞ்சம் அதிகப்படிதான்! ஆனா, ஜாக்கிரதை அருள்! இப்ப அவ ரெண்டு உயிரை சுமந்திட்டிருக்கா?"



நமட்டுச் சிரிப்புடன் அவனுக்கு அறிவுறுத்திவிட்டு அவர் விடைபெற அவள் புறம் திரும்பினான் அருள்.

"ரொம்ப சந்தோஷமா இருக்கு தயா!" என்றான் லேசாக மேடிட்ட அவள் வயிறையே ரசித்தபடி!

"என்னையே பாத்துட்டு சாப்பிடாம தூங்காம உக்காந்திருந்தீங்களாமே ஐ.சி.யூ.வில நர்ஸ் சுசீலாதான் சொன்னா! ஏன் அருள்?"

கண்களில் காதலுடன் சிணுங்கலாகக் கேட்டாள் அவள்.

"ம்... ஒரு வேளை நீ என் பேச்சைக் கேக்காம உனக்கு ஏதாவது... அப்புறம் நானும் இருக்க மாட்டேனே... கடைசியா நான் பாத்தது உன் முகமா இருக்கணும்னுதான்..."

எங்கோ பார்த்தபடி வெறித்த விழிகளுடன் அருள் கூற, அவனுடைய உணர்வுகள் புரிந்து, வேகமாக எழுந்தவள் அவன் முகத்தில் சாரலாய் முத்தமிட ஆரம்பித்தாள்.

* * *

வாழ்க்கையை, இனிமை பொங்கி வழியும் சந்தோஷ நீரூற்றாய் மாற்றுவது தன் இணையின் நேசத்தால் மட்டுமே முடியுமென்று இன்று உணர்ந்தாள் அவள்.

"இவ்வளவு பிரியத்தை மனதில் சுமந்தவன், ஏன் அவளைப் பிரிய சம்மதித்தேன்... புரியவில்லையே?"

ஏக்கக் கேள்வி அவனுள்!

ஆனால், இனி வரப் போகின்ற ஒவ்வொரு கணமும் அர்த்தம் மிகுந்ததாய்... புதிய பூவாய்... இனிய காத்திருப்பாய்... வெட்கம் பூசிய தருணங்களாய்... இதமான சுகமாய்... பொருள் பொதிந்த கனவாய்... மாறப் போவதை அக்கணமே புரிந்து சிலிர்த்தது அந்த ஆண்மை!

"நீயன்றி நானில்லை என் [illegible] காதல்... எது இல்லையென் [illegible] உனக்கு நானிருப்பேன் என்பதுதான்!"

JUN 13 2010

யாரோ எழுதிய வரிகள் நினைவுக் கூட்டிற்குள் ததும்பலாய் ஞாபகம் வந்தன.

* * *

பரஸ்பர அன்பு... மாறா நம்பிக்கை... அழகான புரிதல்... இயல்பான விட்டுக் கொடுத்தல்... இன்ப இல்லறத்தின் தாரக மந்திரங்களென்பது இன்று இருவருக்குமே புரிவதாய்!

தன் வாரிசுகளை மகரந்தமாய் சூல் கொண்டு சுமந்திருக்கும் அந்த மலரை ஒரு அற்புத உணர்வுடன் தன் மார்பில் ஏந்தினான் அருள்!

அந்த ஆணை ஒரு தாயுமானவனாய் மாற்றியது, இனிய காதல் தாம்பத்யம்!

ஒருவருக்காக மற்றவர் உருகி நின்று இடைவெளி இனி நம்மிடம் கிடையாது என்ற புரிதலை... ஒட்டுதலை.. நேசத்தை. அந்த ஆதர்ச செய்கை விதைக்க, அவனுள் கரைந்து மெழுகாய் உருகியது அந்தப் பெண்மை!

எவ்வளவு நீர் கிடைத்தாலும் தனக்குள் உறிஞ்சக் காத்திருக்கும் பாலையாய் இருவரும் பரஸ்பர அன்புச் சாரலுக்கு காத்திருந்தனர்.

இனி ஒரு பிரிவில்லை என்பதுபோல் கண் மூடி முறுவலித்து, அவன் மடி சேர்ந்த மலராய் தபஸ்யா சாய்ந்திருந்தாள்.

**"சோலை மலரொளியோ - உனது**
**சுந்தரப் புன்னகைதான்!**
**வாலைக் குமரியடி - கண்ணம்மா!**
**மருவக் காதல் கொண்டேன்!"**

சிலிர்ப்புடன் மெல்ல முணுமுணுத்தன... அவன் இதழ்கள்!

வெளியே... மேகம் வெண்பட்டு மெத்தை விரிக்க, நட்சத்திரங்கள் அதில் ஓய்வெடுத்த நிலவைப் பொறாமையுடன் பார்த்தபடி ரகசியமாக விழிமலர்த்தின!

*